# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1875/44 - 2014 අගෝස්තු 16 වැනි සෙනසුරාදා - 2014.08.16

*1875/44 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி சனிக்கிழமை*

***(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)***


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் பிரிவு 4(2) இன் கீழானபிரசுரிப்பு***

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பிடும்) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள SLFRS 14: ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகள் "SLFRS 15: வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் ஆகிய நியமங்களை நிறுவகம் கடைப்பிடித்துள்ளது. SLFRS 14: ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகள்' இரண்டாயிரத்து பதின்நான்காம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் காலத்திற்கும் SLFRS 15: வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் நியமமானது இரண்டாயிரத்துபதினெட்டாம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் காலத்தை அடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது.

பேரவையின் கட்டளைப்படி,

அருண அல்விஸ்,
செயலாளர்.

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,
இல: 30 A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
2014, பெப்புருவரி 26 ஆந் திகதி

உள்ளடக்கம்

**இலங்கை கணக்கீட்டு நியமம் SLFRS 14**
*ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகள்*

*பந்திகள்*

| | |
|---|---|
| **நோக்கம்** | **1** |
| **நோக்கெல்லை** | **5** |
| **ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கல்** | **9** |
| **முன்னிலைப்படுத்தல்** | **18** |
| **வெளிக்காட்டல்** | **27** |

**பின்னிணைப்புக்கள்**

**A** **வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பதங்கள்**

**B** **பிரயோக வழிகாட்டி**

**C** **அமுலுக்கு வரும் திகதியும் இடைக்கால ஏற்பாடுகளும்**

**D** **தொடர்விளைவாக SLFRS 1 - *இலங்கை கணக்கீட்டு நியமங்களின் முதற்தடவையான கடைப்பிடிப்பு* நியமத்திற்கான திருத்தங்கள்**

## இலங்கை கணக்கீட்டு நியமம் SLFRS 14

*ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகள்*

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 14 – ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகள் (SLFRS 14) பந்திகள் 1 – 36 மற்றும் பின்னிணைப்பு A – C இல் குறிப்பிடப்பட்டுள்ளன. சகல பந்திகளும் சமமான அதிகாரத்தை கொண்டுள்ளன. தடித்த எழுத்துக்களில் உள்ள பந்திகள் பிரதானமான தத்துவங்களை குறிப்பிடுகின்றன. பின்னிணைப்பு Aயில் சாய்வெழுத்துக்களில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள பதங்கள் முதற்தடவையாக நியமத்தில் காணப்படுகின்றவையாகும். ஏனைய பதங்களுக்கான வரைவிலக்கணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான சொல்லகராதியில் தரப்பட்டுள்ளன. இந்த நியமம் அதன் நோக்கம், முடிவுரைகளுக்கான அடிப்படை, இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான முகவுரை மற்றும் நிதியறிக்கையிடலுக்கான கோட்பாட்டுச் சட்டகம் ஆகியவற்றின் கண்ணோட்டத்தில் வாசிக்கப்பட வேண்டும். வெளிப்படையான வழிகாட்டிகள் இல்லாதவிடத்து, கணக்கீட்டு கொள்கைகளை தெரிவுசெய்து பிரயோகிப்பதற்கான அடிப்படையினை LKAS 8 *கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* எனும் நியமம் வழங்கின்றது.

### நோக்கம்

1 இந்த நியமத்தின் நோக்கமானது, உரிமமொன்று பொருட்கள் அல்லது சேவைகளை விகித ஒழுங்குவிதிகளுக்கு (rate regulation) ஆட்பட்ட விலையில் அல்லது விகிதத்தில் வாடிக்கையாளருக்கு வழங்குவதனால் ஏற்படும் ஒழுங்குபடுத்தப்படும் பிற்போடப்பட்ட கணக்கு மீதிகளுக்கு (regulatory deferral account balances) நிதியறிக்கையிடற் தேவைப்பாடுகளை குறிப்பிடுவதாகும்.

2 இந்த நோக்கத்தை அடைதலில் நியமம் கீழ்வருவனவற்றை தேவைப்படுத்துகின்றது:

*(a)* ஒழுங்குபடுத்தப்படும் பிற்போடப்பட்ட கணக்கு மீதிகளுக்கு, அடிப்படையில் இந்த கணக்குகளின் முன்னிலைப்படுத்தலுடன் தொடர்புபட்ட, முன்னர் பொதுவாக ஏற்றுக்கொண்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு (*முன்னைய GAAP*) அமைய பிரயோகிக்கும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு வரையறுக்கப்பட்ட மாற்றங்கள்.

*(b)* கீழ்வரும் வெளிக்காட்டல்களை:

(i) விகித ஒழுங்கு விதியிலிருந்து ஏற்பட்டு உரிமத்தின் நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்த தொகைகளை இனங்கண்டு விபரிப்பவை; அத்துடன்

(ii) ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தப்படும் பிற்போடப்பட்ட கணக்கு மீதிகளிலிருந்து ஏற்படும் எதிர்காலக் காசுப்பாய்வுகளின் தொகை, காலம் மற்றும் நிச்சயமற்றதன்மை ஆகியவற்றை நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துனர் விளங்கிக்கொள்ள உதவுபவை.

3 உரிமம் மேலே பந்தி 2 இல் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட மாற்றங்களுக்கு அமைய SLFRS இனை கடைப்பிக்கும்போது, இந்த நியமத்தின் தேவைப்பாடுகள், அதன் நோக்கெல்லைக்கு உள்ளாக நிதிக்கூற்றுக்களில் ஒழுங்குபடுத்திய பிற்போட்ட கணக்கு மீதிகளை முன்னைய GAAPக்கு அமைய தொடர்ந்து கணக்கிட அனுமதிக்கின்றது.

4 அத்துடன், ஏனைய நியமங்களில் சில விதிவிலக்குகளை அல்லது விலக்களிப்புகளை இந்த நியமம் ஏற்பாடு செய்கின்றது. ஒழுங்குபடுத்திய பிற்போட்ட கணக்கு மீதிகளை அறிக்கையிடுவதற்கு குறிப்பிடப்பட்ட சகல தேவைப்பாடுகள் மற்றும் அந்த மீதிகளுடன் தொடர்புபட்ட ஏனைய நியமங்களில் ஏதும் விதிவிலக்குகள் அல்லது விலக்களிப்புகள் ஆகியவற்றை ஏனைய நியமங்களுக்குப் பதிலாக இந்த நியமம் கொண்டுள்ளது.

## நோக்கெல்லை

**5 கீழ்வரும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் உரிமமொன்று இந்த நியமத்தின் தேவைப்பாடுகளை அதன் *முதலாவது SLFRS நிதிக்கூற்றுக்களில்* பிரயோகிக்க அனுமதிக்கப்படும்:**

(a) **அது *விகிதம்-ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகளை* நடாத்துதல்; அத்துடன்**

(b) **அது முன்னைய GAAP க்கு அமைவாக, ஒழுங்குபடுத்திய பிற்போட்ட கணக்கு மீதிகளாக தகைமைபெறும் தொகைகளை அதன் நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்திருத்தல்.**

**6 உரிமம் இந்த நியமத்தின் தேவைப்பாடுகளை பிரயோகிக்க தெரிவுசெய்ததன் மூலம், அதன் முதலாவது SLFRS நிதிக்கூற்றுக்களில் ஒழுங்குபடுத்திய பிற்போட்ட கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்திருந்தால் மாத்திரமே அதன் பின்னைய காலங்களின் நிதிக்கூற்றுக்களில் அது இந்த நியமத்தின் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும்.**

7 இந்நியமம் விகிதம்-ஒழுங்குபடுத்திய செயற்பாடுகளில் ஈடுபடும் உரிமங்களின் ஏனைய கணக்கீட்டு விடயங்கள்பற்றி குறிப்பிடவில்லை. இந்த நியமத்தின் தேவைப்பாடுகளை பிரயோகிப்பதன் மூலம், ஏனைய நியமங்களுக்கு அமைவாக சொத்துக்களாக அல்லது பரிப்புக்களாக ஏற்பிசைவு செய்தல் அனுமதிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எந்தத்தொகையும் ஒழுங்குபடுத்தற் பிற்போடப்பட்ட கணக்கு மீதிகளாக வகைப்படுத்திய தொகைகளில் உள்ளடக்கப்படமாட்டா.

**8 இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டு, இந்த நியமத்தினை பிரயோகிக்க தேர்வு செய்யும் உரிமமானது, உரிமத்தின் விகிதம்-ஒழுங்குபடுத்திய செயற்பாடுகள் சகலவற்றிலிருந்தும் எழுகின்ற சகல ஒழுங்குபடுத்திய பிற்போடற் கணக்கு மீதிகளுக்கும் அதன் சகல தேவைப்பாடுகளையும் பிரயோகிக்கும்.**

## ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கல்

**LKAS 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் நியமத்தின் பந்தி 11 இலிருந்து தற்காலிக விலக்களிப்பு**

**9 இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டு, இந்த நியமத்தினை பிரயோகிக்க தேர்வுசெய்யும், விகிதம்-ஒழுங்குபடுத்திய செயற்பாடுகளை கொண்டுள்ள உரிமமொன்று ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கான கணக்கீட்டுக் கொள்கையை விருத்தி செய்வதில் LKAS 8 இன் பந்திகள் 10 மற்றும் 12 இனை பிரயோகிக்கும்.**

10 ஒரு உருப்படிக்கு குறிப்பாக பிரயோகிக்கக்கூடிய ஒரு உரிய நியமம் இல்லாதவிடத்து, அந்த உருப்படிக்கான கணக்கீட்டுக் கொள்கையினை விருத்தி செய்வதில் முகாமைக்கு தேவைப்படுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல் மூலங்களை LKAS 8 இன் பந்திகள் 11-12 குறிப்பிடுகின்றது. இந்நியமம் ஒரு உரிமம் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கல் ஆகியவற்றிற்கான அதன் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு LKAS 8 பந்தி 11 இனை பிரயோகிப்பதிலிருந்து விலக்களிக்கின்றது. அதன் தொடர் விளைவாக, தமது முன்னைய GAPP க்கு அமைவாக ஒழுங்குபடுத்தல், பிற்போடல் கணக்கு மீதிகளை ஒன்றில் வேறான உருப்படிகளாகவோ அல்லது பிற சொத்துக்கள் அல்லது பரிப்புக்களின் முன்கொணரற் பெறுமதியின் பகுதியாகவோ ஏற்பிசைவு செய்யும் உரிமங்கள், இந்நியமத்தின் பந்திகள் 18-19 தேவைப்படுத்தப்படும் முன்னிலைப்படுத்தல் மாற்றங்களுக்கு கட்டுப்பட்டு, LKAS 18 பந்தி 11 இன் விலக்களிப்பின் ஊடாக இந்த நியமத்திற்கு அமைய அந்த மீதிகளை தொடர்ந்து ஏற்பிசைவுசெய்ய அனுமதிக்கப்படும்.

## தற்போதைய கணக்கீட்டுக் கொள்கைகளை தொடருதல்

11 **இந்த நியமத்தின் ஆரம்பப் பிரயோகத்தின்போது, உரிமம் பந்திகள் 13-15 இல் அனுமதிக்கப்பட்ட மாற்றங்கள் ஏதுமிருப்பின் அவை தவிர, ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கல் ஆகியவற்றிற்கு அதன் முன்னைய GAPP கணக்கீட்டுக் கொள்கைகளை தொடர்ந்து பிரயோகிக்கும். எனினும், அத்தகைய தொகைகளின் முன்னிலைப்படுத்தல், உரிமத்தின் முன்னைய GAPP முன்னிலைப்படுத்தற் கொள்கைகளில் மாற்றங்களை தேவைப்படுத்தும் இந்த நியமத்தின் முன்னிலைப்படுத்தற் தேவைப்பாடுகளுக்கு இசைவாக இருக்கும். (பார்க்க பந்திகள் 18-19).**

12 உரிமம் பந்திகள் 13-15 இனால் அனுமதிக்கப்பட்ட ஏதும் மாற்றங்கள் இருப்பின், அவை தவிர, பந்தி 11 க்கு அமைய தாபிக்கப்பட்ட கொள்கைகளை பின்னைய காலங்களுக்கு கொள்கை மாறாத அடிப்படையில் பிரயோகிக்கும்.

## கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

**13 உரிமம் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவினை ஆரம்பிக்க ஏதுவாக அதன் கணக்கீட்டுக் கொள்கையை மாற்றாது. உரிமம் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கல் ஆகியவற்றிற்கான அதன் கணக்கீட்டுக் கொள்கைகளை மாற்றக்கூடியதாக இருப்பது, அந்த மாற்றம் குறைந்த நம்பகத் தன்மையோ அல்லது கூடிய நம்பகத் தன்மையோ இன்றி பயன்படுத்துனர் பொருளியற் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நிதிக்கூற்றுக்களை மிகவும் தொடர்புடையதாக ஆக்குவதுடன், அந்த தேவைகளுக்கு குறைந்த தொடர்புடைமையை கொண்டிராதபோது மாத்திரமே. உரிமம் தொடர்புடைமை மற்றும் நம்பகத்தன்மையை LKAS 8 இன் பந்தி 10 இனை பயன்படுத்தி தீர்மானிக்கும்.**

14 இந்நியமம் கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்களுக்கு LKAS 8 இன் பந்தி 10 அல்லது பந்திகள் 14-15 இனை பிரயோகிப்பதிலிருந்து உரிமத்திற்கு விலக்களிக்காது. ஒழுங்கு படுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளுக்கான அதன் கணக்கீட்டுக்கொள்கை மாற்றத்தை நியாயப்படுத்துவதற்கு உரிமம் அந்த மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களை LKAS 8 பந்தி 10 இலுள்ள தேர்வுநிபந்தனைகளை நிறைவுசெய்ய நெருக்கமாக்கும் என்பதனை ஒப்புவிக்க வேண்டும். எனினும், அந்த மாற்றம் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கான அந்தத் தேர்வு நிபந்தனைகளுடன் பூரணமான ஒத்திசைவினை கொண்டிருக்க வேண்டியதில்லை.

15 பந்திகள் 13-14 இந் நியமத்தின் ஆரம்பப் பிரயோகத்தின்போது மேற்கொள்ளும், மற்றும் பின்னைய அறிக்கையிடற் காலங்களில் மேற்கொள்ளும் மாற்றங்கள் இரண்டிற்கும் பிரயோகிக்கப்படும்.

## ஏனைய நியமங்களுடன் இடைத்தொடர்பு

**16 ஏனைய நியமங்களுடனான இந்த நியமத்தின் இடைத்தொடர்புடன் தொடர்புபட்ட குறிப்பான விதிவிலக்குகள், விலக்களிப்புக்கள் அல்லது மேலதிக தேவைப்பாடுகளை இந்த நியமம் கொண்டுள்ளது (பார்க்க பந்திகள் B7-B28). அத்தகைய விதிவிலக்கு, விலக்களிப்பு அல்லது மேலதிக தேவைப்பாடு இல்லாதபட்சத்தில், ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளுக்கு ஏனைய நியமங்கள் அந்த நியமங்களுக்கு அமைய ஏற்பிசைவு செய்யப்படும் சொத்துக்கள், பரிப்புக்கள் வருமானம் மற்றும் செலவுகளில் பிரயோகிக்கப்படும் அதே வகையிலேயே பிரயோகிக்கப்படும்.**

17 சிலசந்தர்ப்பங்களில், நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான முறையில் பிரதிபலிப்பதற்கு ஏதுவாக பந்திகள் 11-12 க்கு அமைவாக தாபிக்கப்பட்ட கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக அளவிட்ட ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிக்கு வேறு நியமத்தினை பிரயோகிக்கவேண்டி ஏற்படலாம். உதாரணமாக, ஊடுசெயல்களும் ஒழுங்குபடுத்தல் பிற்போடல்

கணக்கு மீதிகளும் அறிக்கையிடும் உரிம தொழிற்பாட்டு நாணயமல்லாத நாணயத்தில் தெரிவிக்கப்படும் அந்நிய நாடொன்றில் உரிமம் விகிதம்- ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகளை கொண்டிருக்கலாம். ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளும் அந்த மீதிகளில் அசைவுகளும் (மாற்றங்களும்) LKAS 21 அந்நிய நாணயமாற்று வீதங்களில் மாற்றங்களின் தாக்கங்கள் எனும் நியமத்திற்கு அமைவாக நாணயமாற்றம் செய்யப்படும்.

## முன்னிலைப்படுத்தல் (Presentation)

### முன்னிலைப்படுத்தல் மாற்றங்கள்

18 இந்த நியமம், பந்திகள் 11-12 க்கு அமைய ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் முன்னிலைப்படுத்தற் தேவைப்பாடுகளை பந்திகள் 20-26 இல் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நியமம் பிரயோகிக்கப்படும்போது, ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகள், ஏனைய நியமங்களுக்கு அமைய ஏற்பிசைவு செய்யப்படும் சொத்துக்கள், பரிப்புகளுக்கு மேலாக நிதிநிலைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். இந்த முன்னிலைப்படுத்தற் தேவைப்பாடுகள், ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்வதன் தாக்கத்தை ஏனைய நியமங்களின் நிதியறிக்கையிடற் தேவைப்பாடுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டும்.

19 LKAS 1 நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல் நியமத்திற்கு அமைவாக நிதிநிலைக் கூற்று மற்றும் இலாப நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்த வேண்டிய உருப்படிகளுக்கு மேலாக, இந்த நியமத்தை பிரயோகிக்கும் உரிமமொன்று, பந்திகள் 20-26 க்கு அமைவாக சகல ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகள் மற்றும் அந்த மீதிகளில் அசைவுகளை வெளிக்காட்டும்.

### ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் வகைப்படுத்தல்

**20 உரிமம் நிதிநிலைக் கூற்றில் கீழ்வருவனவற்றிற்கு வேறாக வரிசை உருப்படிகளை வெளிக்காட்டும்:**

**(a) சகல ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகளின் வரவு மீதிகளின் மொத்தத் தொகை;**

**(b) சகல ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகளின் செலவு மீதிகளின் மொத்தத் தொகை.**

**21 உரிமமொன்று அதன் நிதிநிலைக் கூற்றில் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களையும், நடைமுறை மற்றும் நடைமுறையல்லாப் பரிப்புக்களையும் வேறான வகைப்படுத்தல்களாக முன்னிலைப்படுத்தும்போது, அது ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் மொத்தங்களை நடைமுறை மற்றும் நடைமுறையற்றவையாக வகைப்படுத்தாது. பதிலாக, பந்தி 20 இனால் தேவைப்படுத்தப்படும் வேறான வரிசை உருப்படிகள் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை முன்னிலைப்படுத்த முன்னர் உப மொத்தங்களை பயன்படுத்தி ஏனைய நியமங்களுக்கு அமைவாக முன்னிலைப்படுத்தப்படும் சொத்துக்கள், பரிப்புக்களிலிருந்து வேறுபடுத்தி காட்டப்படும்.**

### ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளில் அசைவுகளின் வகைப்படுத்தல்

**22 உரிமமொன்று பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட உருப்படிகள் தொடர்புபட்ட அறிக்கையிடற் காலத்திற்கான சகல ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் நிகர அசைவினை (மாற்றங்களை) இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்றின் ஏனைய முற்றடக்க வருமானப் பிரிவில் ஏற்பிசைவு செய்யும். ஏனைய நியமங்களுக்கு அமைவாக, பின்வருமாறு அமையும் உருப்படிகள் தொடர்புபட்ட நிகர அசைவுக்கு வேறான வரிசை உருப்படிகள் பயன்படுத்தப்படும்:**

**(a) பின்னர் இலாப நட்டத்தில் மீள்வகைப்படுத்தப்படாதவை; மற்றும்**

**(b) பின்னர், குறிப்பிட்ட நிபந்தனைகள் நிறைவு செய்யப்படும்போது இலாப நட்டத்தில் மீள்வகைப்படுத்தப்படுபவை.**

**23 உரிமம் அறிக்கையிடற் காலத்திற்கான, கொள்வனவு செய்யப்பட்ட தொகைகள் போன்ற இலாப நட்டத்தில் பிரதிபலிக்கப்படாத, எஞ்சிய சகல ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் நிகர அசைவினை இலாப நட்ட மற்றும் முற்றடக்க வருமானப் பிரிவில் அல்லது வேறான இலாப நட்டக் கூற்றில் வேறான வரிசை உருப்படியாக முன்னிலைப்படுத்தும். இந்த வேறான வரிசை உருப்படி, ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை முன்னிலைப்படுத்த முன்னர் உப மொத்தங்களை பயன்படுத்தி ஏனைய நியமங்களுக்கு அமைவாக முன்னிலைப்படுத்தப்படும் வருமானம் மற்றும் செலவுகளிலிருந்து வேறுபடுத்தி காட்டப்படும்.**

24 உரிமமொன்று ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்வதன் விளைவாக ஏற்படும் பிற்போடப்பட்ட வரிச் சொத்தினை அல்லது பிற்போடப்பட்ட வரிப் பரிப்பினை ஏற்பிசைவு செய்யும்போது, அந்த உரிமம் பிற்போடப்பட்ட வரிச் சொத்தினை (பரிப்பினை), அது தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகள் மற்றும் அந்த மீதிகளில் அசைவுகளுடன் சேர்த்து, LKAS 12 வருமான வரிகள் நியமத்திற்கு அமைவான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களுக்காக (பரிப்புக்களுக்காக) மற்றும் வரிச் செலவுகளுக்காக (வருமானத்திற்காக) முன்னிலைப்படுத்தப்படும் மொத்தத்தினுள் முன்னிலைப்படுத்துவதற்குப் பதிலாக வேறாக முன்னிலைப்படுத்தும். (பார்க்க பந்திகள்: B9-B12).

25 உரிமம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடொன்றினை அல்லது விற்பனைக் குழுமமொன்றினை SLFRS 5 *விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகளும்* நியமத்திற்கு அமைய முன்னிலைப்படுத்தும்போது, உரிமம் தொடர்புடைய எந்தவொரு ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளையும் அந்த மீதிகளின் நிகரஅசைவினையும் பொருத்தமான இடத்து, விற்பனைக்குழுமம் அல்லது முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாட்டில் முன்னிலைப்படுத்துவதற்குப் பதிலாக ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகள் மற்றும் அந்த மீதிகளில் அசைவுகளில் முன்னிலைப்படுத்தும். (பார்க்க பந்திகள் B19-B22).

26 உரிமம் பங்கொன்றிற்கான வருவாயை LKAS 33 *பங்கொன்றிற்கான வருவாய்* எனும் நியமத்திற்கு அமைய முன்னிலைப்படுத்தும்போது, உரிமம் LKAS 33 இனால் தேவைப் படுத்தப்பட்ட, ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் அசைவுகள் தவிர்ந்த, வருமானத் தொகைகளை பயன்படுத்தி கணிக்கப்படும் அடிப்படை மற்றும் ஐதாக்கப்பட்ட பங்கொன்றிற்கான வருவாயை மேலதிகமாக வெளிக்காட்டும். (பார்க்க பந்திகள் B13-B14).

## வெளிக்காட்டல்கள்

### நோக்கம்

**27 இந்த நியமத்தினை பிரயோகிப்பதற்கு தெரிவுசெய்யும் உரிமம், பயன்படுத்துனர் கீழ்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு ஏதுவான தகவல்களை வெளிக்காட்டும்:**

**(a) உரிமம் அது வழங்கும் பொருட்கள், சேவைகளுக்கு வாடிக்கையாளரிடம் அறவிடக்கூடிய விலைகளை நிர்ணயிக்கும் வீத ஒழுங்குவிதிகளின் தன்மை மற்றும் தொடர்புபட்ட இர்கள்; மற்றும்**

**(b) அதன் நிதிநிலைமை, நிதித் தொழிற்பாடு மற்றும் காசுப் பாய்வுகளில் அந்த வீத ஒழுங்குவிதியின் தாக்கங்கள்.**

28 பந்திகள் 30-36 இல் குறிப்பிட்ட எந்த வெளிக்காட்டலும் பந்தி 27 இன் நோக்கங்களை நிறைவு செய்வதில் தொடர்பற்றவையாக கருதப்படுமிடத்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து அவை தவிர்க்கப்படலாம். பந்தி 27 இன் நோக்கங்களை நிறைவு செய்வதில் பந்திகள் 30-36 க்கு அமைய வழங்கப்படும் வெளிக்காட்டல் போதுமானவையாக இல்லாவிடில், உரிமம் அந்த நோக்கங்களை நிறைவுசெய்வதற்கு அவசியமான மேலதிக தகவல்களை வெளிக்காட்டும்.

29 பந்தி 27 இன் வெளிக்காட்டல் நோக்கத்தினை நிறைவுசெய்வதற்கு, உரிமம் கீழ்வரும் எல்லாவற்றையும் கவனத்திற் கொள்ளும்:

(a) வெளிக்காட்டற் தேவைப்பாடுகளை நிறைவுசெய்யத் தேவையான விபரங்களின் மட்டம்;

(b) வேறுபட்ட தேவைப்பாடு ஒவ்வொன்றிலும் வைக்கவேண்டிய முக்கியத்துவத்தின் அளவு;

(c) மேற்கொள்ளப்படவேண்டிய ஒன்றுசேர்க்கை அல்லது பிரிவுபடுத்தல்களின் அளவு;

(d) வெளிக்காட்டிய கணியரீதியான தகவல்களின் மதிப்பாய்வுக்கு நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துனருக்கு மேலதிக தகவல்கள் தேவைப்படுமா என்பதுபற்றி.

## வீத ஒழுங்குவிதிகளுக்கு ஆளாகும் செயற்பாடுகள் பற்றிய விளக்கம்

30 நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துனருக்கு வீதம்-ஒழுங்குபடுத்திய உரிமச் செயற்பாடுகளின் தன்மை மற்றும் தொடர்புபட்ட இடர்களை மதிப்பிடுவதற்கு உதவும் பொருட்டு, உரிமம் ஒவ்வொரு வகையான வீதம்-ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாட்டிற்கும் கீழ்வருவனவற்றை வெளிக்காட்டும்:

(a) விகித-ஒழுங்குபடுத்தற் செயற்பாட்டின் தன்மை மற்றும் அளவு மற்றும் ஒழுங்கு படுத்தல் விகித நிர்ணய செயன்முறையின் தன்மை பற்றிய சுருக்கமான விபரம்;

(b) விகித ஒழுங்குபடுத்துனர்களை அடையாளம் காணல். விகித ஒழுங்குபடுத்துனர் உறவுமுறைத் தரப்பினராக (LKAS 24 *உறவுமுறைத் தரப்பினர் வெளிக்காட்டல்* நிமயத்தில் பொருள்வரையறை செய்தவாறு) இருப்பின், அந்த உண்மையை எவ்வாறு உறவுமுறை ஏற்பட்டது என்ற விபரத்துடன் உரிமம் வெளிக்காட்டும்;

(c) ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு வரவு மீதியின் ஒவ்வொரு வகுப்பினதும் (அதாவது, கிரய அல்லது வருமான வகை ஒவ்வொன்றினதும்) எதிர்கால மீளப் பெறுகை அல்லது ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதியின் ஒவ்வொரு வகுப்பினதும் எதிர்ப்பதிவு ஆகியன இடர்கள் மற்றும் நிட்சயமற்ற தன்மையினால் எவ்வாறு பாதிப்பிற்கு ஆளாகின்றன என்பதுபற்றி. உதாரணமாக,

(i) கேள்வி இடர் (demand risk) (உதாரணமாக, நுகர்வோர் மனப்பாங்கில் மாற்றங்கள், மாற்று வழங்கல் மூலங்கள் கிடைத்தல் அல்லது போட்டியின் அளவு);

(ii) ஒழுங்குபடுத்தல் இடர் (உதாரணமாக, விகித நிர்ணய விண்ணப்பத்தின் சமர்ப்பிப்பு அல்லது அங்கீகாரம் அல்லது எதிர்பார்க்கப்படும் எதிர்கால ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் பற்றிய உரிமத்தின் மதிப்பீடு); மற்றும்

(iii) ஏனைய இடர்கள் (உதாரணமாக, நாணய இடர் அல்லது ஏனைய சந்தை இடர்கள்).

31 பந்தி 30 இல் கேட்கப்பட்டுள்ள வெளிக்காட்டல்கள் நேரடியாக குறிப்புக்களின் மூலமோ அல்லது நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துவோருக்கு அதே கட்டுறுப்புக்களின்கீழ் ஒரே காலத்தில் கிடைக்கின்ற முகாமை வியாக்கியானம் அல்லது இடர் அறிக்கை போன்ற வேறுசில கூற்றிற்கு இடைத்தொடர்புபடுத்துவதன் மூலமோ நிதிக்கூற்றுக்களில் தரப்படும். தகவல்கள் நேரடியாக அல்லது இடைத்தொடர்பு படுத்துவதன்மூலம் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்படாதவிடத்து, நிதிக்கூற்றுக்கள் பூரணமற்றவையாகும்.

## ஏற்பிசைவுசெய்யப்பட்ட தொகைகள் பற்றிய விளக்கங்கள்

32 உரிமம், ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் மீளப்பெறுகையை எவ்வாறு மதிப்பிட்டது மற்றும் சேதஇழப்பு நட்டம் ஏதுமிருப்பின் அது எவ்வாறு ஒதுக்கப்பட்டது என்பவை அடங்கலாக, ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகள் ஏற்பிசைவு அல்லது

ஏற்பிசைவுவிலக்கல் செய்யப்பட்ட மற்றும் ஆரம்பத்திலும் பின்னரும் அவை அளவிடப்பட்ட அடிப்படைகளை வெளிக்காட்டும்.

33 ஒவ்வொரு வகையான விகிதம்-ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகளை பொறுத்தமட்டில், ஒவ்வொருவகை ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளுக்கும் கீழ்வருவனவற்றை உரிமம் வெளிக்காட்டும்:

(a) வேறு படிவமைப்பு பொருத்தமானதாக இருந்தாற் தவிர, அட்டவணையொன்றில் காலஆரம்பம் மற்றும் இறுதியில் முன்கொணரற் தொகைகளின் கணக்கிணக்கம். அவசிய விபர மட்டத்தை தீர்மானிப்பதில் உரிமம் சுயதீர்ப்பினை மேற்கொள்ளும் போதிலும் (பார்க்க பந்திகள் 28-29), கீழ்வரும் கூறுகள் வழமையாக தொடர்பு பட்டவையாகும்:

(i) நடப்புக் கால நிதிநிலைக் கூற்றில் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளாக ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள்;

(ii) நடப்புக் காலத்தில் மீளப்பெறப்பட்ட (சிலசமயங்களில் காலத்தேய்மானம் செய்யப்பட்டதாக கூறப்படும்) அல்லது எதிர்ப்பதிவு செய்யப்பட்ட மீதிகள் தொடர்பில் இலாப நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள்; மற்றும்

(iii) சேதஇழப்புக்கள், வியாபார இணைப்பின்போது பெற்ற அல்லது சுவீகரித்த உருப்படிகள், விற்பனைசெய்த உருப்படிகள், அந்நிய நாணய மாற்று வீதங்களில் அல்லது கழிவு வீதங்களில் மாற்றங்களின் தாக்கம் போன்ற ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை பாதித்த வேறாக இனம் காணப்பட்ட ஏனைய தொகைகள்.

(b) ஒவ்வொரு வகையான ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளுக்கும் பொருத்தமான, பணத்தின் காலப்பெறுமதியை பிரதிபலிப்பதற்கு பயன்படுத்திய வருமான வீதம் அல்லது கழிவு வீதம் (பொருத்தமான இடத்து பூஜ்ய விகிதம் அல்லது விகிதங்களின் வீச்சம் உட்பட).

(c) ஒவ்வொருவகை ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு வரவுமீதி முன்கொணரற் தொகையினை மீளப்பெறுவதற்கு (அல்லது காலத்தேய்மானம் செய்வதற்கு) அல்லது ஒவ்வொருவகை ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு செலவுமீதியை எதிர்ப்பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எஞ்சியுள்ள காலம்.

34 விகித ஒழுங்குவிதி உரிமத்தின் வருமான வரிச் செலவு (வருமான) தொகை மற்றும் காலத்தை பாதிக்கும்போது உரிமம் ஏற்பிசைவுசெய்த வருமான மற்றும் பிற்போட்ட வரித்தொகைகள் மீது விகித ஒழுங்குவிதி கொண்டுள்ள தாக்கத்தை வெளிக்காட்டும். அத்துடன், வரியீடு மற்றும் அந்தமீதியின் அசைவு தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதி ஏதும் இருப்பின் அதனை வேறாக வெளிக்காட்டும்.

35 விகித ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை கொண்டதும், அவற்றிற்காக இந் நியமத்திற்கு அமைய ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்ததுமான உபகம்பனி, கூட்டுக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில்முயற்சிகளில் கொண்டுள்ள நாட்டத்திற்கு உரிமம் SLFRS 12 *ஏனைய உரிமங்களில் நாட்டங்களின் வெளிக்காட்டல்* நியமத்திற்கு அமைவாக வெளிக்காட்டல்களை தரும்போது, உரிமம் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு வரவு மற்றும் செலவு மீதிகளுக்காக உட்படுத்தப்பட்ட தொகைகள் மற்றும் வெளிக்காட்டப்பட்ட நாட்டங்களுக்காக அந்த மீதிகளில் அசைவுகளையும் வெளிக்காட்டும் (பார்க்க பந்திகள் B25-B28).

36 ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதியை இனியும் முற்றாக மீளப்பெறவோ அல்லது எதிர்ப்பதிவு செய்யவோ முடியாது என உரிமம் முடிவுக்கு வரும்போது, அது அந்த உண்மையையும், அவ்வாறு செய்ய முடியாமைக்கான காரணத்தையும், ஒழுங்கு படுத்தல் பிற்போடல் கணக்கு மீதி எந்தத் தொகையால் குறைவடைந்ததோ அந்தத் தொகையையும் வெளிக்காட்டும்.

## பின்னிணைப்பு A

## பொருள்வரையறை செய்யப்பட்ட பதங்கள்

இந்தப் பின்னிணைப்பானது நியமத்தின் ஒன்றித்த பகுதியாகும்.

| | |
|---|---|
| **முதலாவது SLFRS நிதிக்கூற்றுக்கள்** | உரிமம் SLFRS உடனான ஒத்திசைவை வெளிப்படையாகவும் நிபந்தனைகள் அற்ற விதத்திலும் தெரிவிக்கும் வகையிலான, உரிமம் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை (SLFRS) கடைப்பிடிக்கும் முதலாவது வருடாந்த நிதிக் கூற்றுக்கள் |
| **முதற் தடவைக் கடைப்பிடிப்பாளர்** | முதலாவது **SLFRS நிதிக்கூற்றுக்களை** முன்னிலைப்படுத்தும் உரிமம். |
| **முன்னைய GAAP** | SLFRS இனை கடைப்பிடிப்பதற்கு உடனடியாக முன்னதாக **முதற்தடவைக் கடைப்பிடிப்பாளர்** பயன்படுத்திய கணக்கீட்டு அடிப்படை |
| **விகிதம்-ஒழுங்குபடுத்தப்படும் செயற்பாடுகள்** | உரிமமொன்றின் **விகித-ஒழுங்குபடுத்தலுக்கு** ஆளாகின்ற செயற்பாடுகள் |
| **விகித-ஒழுங்குபடுத்தல்** | விகித ஒழுங்குபடுத்தரின் மேற்பார்வை அத்துடன் / அல்லது அங்கீகாரத்திற்கு உட்பட்ட, பொருட்கள்/ சேவைகளுக்காக வாடிக்கையாளரிடம் அறவிடும் விலையை நிர்ணயிப்பதற்கான வேலைச்சட்டகம் |
| **விகித ஒழுங்குபடுத்துனர்** | உரிமத்தை கட்டுப்படுத்தும் விகிதம் அல்லது விகிதங்களின் வீச்சத்தினை நிர்ணயிப்பதற்கு சட்டவாக்கத்தினால் அல்லது ஒழுங்குவிதியால் அதிகாரம் அளிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாகும். விகித ஒழுங்குபடுத்துனர், வாடிக்கையாளரின் நாட்டம் மற்றும் உரிமத்தின் ஒட்டுமொத்த நிதிசார் இலாபத் தன்மையை உறுதிப்படுத்தும் விதமாக விகிதங்களை நிர்ணயிக்குமாறு சட்டத்தால் அல்லது ஒழுங்குவிதியால் கேட்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் உரிமத்தின் சொந்த ஆளுமைச் சபை உட்பட, ஒரு மூன்றாம் தரப்பு அமைப்பாக அல்லது உரிமத்தின் உறவுமுறைத் தரப்பாக இருக்கலாம். |
| **ஒழுங்குபடுத்தற் பிற் போடல் கணக்கு மீதி** | பிற நியமங்களுக்கு அமைய சொத்தாக அல்லது பரிப்பாக ஏற்பிசைவு செய்யமுடியாத, ஆனால் வாடிக்கையாளருக்கு தாக்கல் செய்யக்கூடிய விகிதத்தை நிர்ணயிப்பதில் விகித ஒழுங்குபடுத்துனர் உட்படுத்துவதன் அல்லது உட்படுத்த எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக பிற்போடலுக்கு தகைமை பெறும் எந்தச் செலவு (அல்லது வருமானக்) கணக்கு மீதி. |

## பின்னிணைப்பு B

### பிரயோக வழிகாட்டல்

இந்தப் பின்னிணைப்பானது நியமத்தின் ஒன்றித்த பகுதியாகும்.

### விகிதம்-ஒழுங்குபடுத்தப்படும் செயற்பாடுகள்

B1 வரலாற்றுரீதியாக விகித ஒழுங்குபடுத்தல் உரிமமொன்றின் சகல செயற்பாடுகளுக்கும் பிரயோகிக்கப்படும். எனினும், சுவீகரிப்புக்கள், பல்துறைப்படுத்தல்கள் (diversification), ஒழுங்குவிதித் தளர்த்தல்கள் (deregulation) ஆகியவற்றின் காரணமான விகித-ஒழுங்கு படுத்தல்கள், உரிமம் கொண்டுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத செயற்பாடுகளின் காரணமாக ஏற்படும் செயற்பாடுகளின் ஒரு பகுதிக்கு மாத்திரமே தற்போது பிரயோகிக்கப்படக்கூடும். இந்த நியமம், உரிமத்தின் வகை அல்லது அதன் தொழிற்துறையை கவனத்திற்கொள்ளாது, விகித ஒழுங்குபடுத்துனரின் செயற்பாடுகளின் மூலம் சட்டரீதியான அல்லது ஒழுங்குவிதி சார்ந்த மட்டுப்படுத்தல்களுக்கு ஆளாகின்ற விகிதம்- ஒழுங்குபடுத்திய செயற்பாடுகளுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்படும்.

B2 உரிமமொன்று இந்த நியமத்தினை சுயமாக ஒழுங்குபடுத்தப்படுகின்ற (self-regulated) அதாவது, ஒரு விகித ஒழுங்குபடுத்துனரால் மேற்பார்வை செய்யப்படும் அல்லது அவர் அங்கீகாரம் தேவைப்படும் விலையிடல் சட்டகத்திற்கு ஆளாகாத செயற்பாடுகளுக்கு பிரயோகிக்கப்படமாட்டாது. இது கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் இந்த நியமத்தை பிரயோகிப்பதிலிருந்து உரிமமொன்றினை தடைசெய்யாது:

(a) உரிமத்தின் சொந்த ஆளுமைச்சபை அல்லது உறவுமுறைத் தரப்பொன்று குறிப்பிடப்பட்ட விலையிடல் வேலைச் சட்டகத்திற்கு உட்பட்டு, வாடிக்கையாளர் நாட்டம் மற்றும் உரிமத்தின் ஒட்டுமொத்த நிதிசார் இலாபத் தன்மையை உறுதிப்படுத்தும் விதமாக விகிதங்களை நிர்ணயிக்கும்போது; அத்துடன்

(b) அந்த வேலைச் சட்டகம், சட்டத்தினால் அல்லது ஒழுங்குவிதியினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அமைப்பொன்றின் மேற்பார்வை அல்லது / அத்துடன் அங்கீகரிப்பிற்கு ஆளாகும்போது.

### தற்போதைய கணக்கீட்டுக் கொள்கைகளை தொடருதல்

B3 இந்த நியமத்தின் தேவைகளுக்காக ஒழுங்குபடுத்திய பிற்போடல் கணக்கு மீதி என்பது, பிற நியமங்களுக்கு அமைய சொத்தாக அல்லது பரிப்பாக ஏற்பிசைவு செய்யமுடியாத, ஆனால் வாடிக்கையாளருக்கு தாக்கல் செய்யக்கூடிய விகிதத்தை நிர்ணயிப்பதில் விகித ஒழுங்குபடுத்துனர் உட்படுத்துவதன் அல்லது உட்படுத்த எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக பிற்போடலுக்கான தகைமை பெறும் செலவு (அல்லது வருமான) கணக்கு மீதி என பொருள்வரையறை செய்யப்பட்டுள்ளது. சில செலவு (வருமான) உருப்படிகள் ஒழுங்குபடுத்தப்பட்ட விகிதங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்கக்கூடும்; உதாரணமாக, தொகைகள் விகித ஒழுங்குபடுத்துனரால் ஏற்றுக்கொள்ளப்படாத அல்லது அவை விகித ஒழுங்குபடுத்தல் நோக்கெல்லைக்கு உட்படாத காரணத்தால். இதன் தொடர்விளைவாக அத்தகைய ஒரு உருப்படி, வேறொரு உரிமத்தால் சொத்தொன்றின் அல்லது பரிப்பின் முன்கொணரற் தொகையில் உட்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டோ அல்லது தேவைப்படுத்தப்பட்டோ இருந்தாலன்றி, வருமானமாக அல்லது இறுக்கப்பட்ட செலவாக ஏற்பிசைவு செய்யப்படும்.

B4 சில சந்தர்ப்பங்களில், முன்னைய GAAP கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக வேறாகவோ அல்லது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் போன்ற வேறு வரிசை உருப்படிகளிலோ ஏற்பிசைவு செய்திருக்கக்கூடிய ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு

மீதிகளை, உரிமம் நிதிநிலைக் கூற்றில் ஏற்பிசைவு செய்வதனை வேறு நியமங்கள் வெளிப்படையாக தடைசெய்கின்றன. எனினும் இந்த நியமத்தின் பந்தி 11 க்கு அமைய உரிமம் அதன் முதலாவது SLFRS நிதிக்கூற்றுக்களில் இந்த நியமத்தினை பிரயோகிக்க தெரிவுசெய்யும்போது, அது ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கு அதன் முன்னைய GAAP கணக்கீட்டு கொள்கைகளை தொடர்ந்தும் பிரயோகிப்பதற்கு ஏதுவாக, LKAS 8 இன் பந்தி 11 இன் விலக்களிப்பை பிரயோகிக்கும். அத்தகைய கணக்கீட்டுக் கொள்கைகள், உதாரணமாக கீழ்வரும் நடைமுறைகளை, உட்படுத்தக்கூடும்:

(a) அனுமதிக்கப்பட்ட கிரயங்களை (அதாவது, ஒழுங்குபடுத்தல் விகிதங்கள் மீளப் பெறுதலை வழங்குமென கருதப்படும் கிரயங்கள்) மீளப்பெறுவதற்கு ஏதுவாக எதிர்காலங்களில் வீதங்களை அதிகரிப்பதற்கான வீத ஒழுங்குபடுத்துனரின் உண்மையான அல்லது எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகளின் காரணமாக உரிமத்திற்கு உரிமையுள்ளபோது, அது ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு வரவு மீதியினை ஏற்பிசைவு செய்தல்;

(b) எதிர்கால வீதங்கள் மூலம் மீளப்பெறுவதற்கு அல்லது எதிர்ப்பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் ஆதனம், பொறி மற்றும் உபகரண மற்றும் அருவச் சொத்து உருப்படிகள் இரண்டினதும் விற்பனையால் அல்லது விலக்கலினால் ஏற்படுகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டத்திற்கு சமமான தொகையை ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு வரவு அல்லது செலவு மீதியாக ஏற்பிசைவு செய்தல்;

(c) அனுமதிக்கப்பட்ட கிரயங்களின் மிகையான அறவீடுகளை (அதாவது, விகித ஒழுங்குபடுத்துனரால் குறிப்பிட்ட மீளப்பெறற் தொகைக்கு மிகையான தொகை) எதிர்ப்பதிவு செய்வதற்கு ஏதுவாக எதிர்காலங்களில் வீதங்களை குறைப்பதற்கான வீத ஒழுங்குபடுத்துனரின் உண்மையான அல்லது எதிர்பார்க்கப்படும் செயற்பாடு காரணமாக உரிமம் தேவைப்படுத்தப்படின், அது ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு செலவு மீதியினை ஏற்பிசைவு செய்தல்;

(d) ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளை கழிவு செய்யாத அடிப்படையில் அல்லது வீது ஒழுங்குபடுத்துனரால் குறிப்பிடும் வட்டி அல்லது கழிவு வீதத்தை பயன்படுத்தும் கழிவீட்டு அடிப்படையில் ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளை அளவிடுதல்.

B5 வீதம் நிர்ணயம் செய்யும் தீர்மானங்களில் விகித ஒழுங்குபடுத்துனர்கள் அனுமதிக்கக் கூடிய கிரய வகைகளுக்கு கீழ்வருவன உதாரணங்களாவதுடன், எனவே, ஒரு உரிமம் இவற்றை ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளில் ஏற்பிசைவு செய்யலாம்:

(i) கனவளவு அல்லது கொள்வனவு விலை முரண்கள்;

(ii) அனுமதிக்கப்பட்ட ‘பசுமைச் சக்தி’ ஆக்கமுனைப்புக் கிரயங்கள் (LKAS 16 *ஆதனம், பொறி மற்றும் உபகரணம்* நியமத்திற்கு அமைவாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தின் பகுதியாக மூலதனப்படுத்திய தொகைக்கு மேற்பட்டவை);

(iii) விகித ஒழுங்குபடுத்தற் தேவைகளுக்காக மூலதன கிரயங்களாக கையாளப்படும் நேரடியாக ஒதுக்கப்பட முடியாத மேந்தலைக் கிரயங்கள் (ஆனால், LKAS 16 க்கு அமைய ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்றின் கிரயத்தில் உட்படுத்தப்பட அனுமதிக்கப்படாதவை);

(iv) செயற்திட்டங்களை இரத்துச் செய்தற் கிரயங்கள்;

(v) புயற் சேத (storm damage) கிரயங்கள்;

(vi) கருதப்படும் வட்டி (நிருமானத்தின்போது பயன்படுத்தப்பட்டு, அது உரிமையாளர் உரிமையாண்மை மூலதனம் மற்றும் கடன்படுகை மீது உரிமத்திற்கு வருமானம் தருகின்ற, அனுமதிக்கப்பட்ட நிதியங்களின் தொகைகள் உள்ளடங்கலாக).

B6 ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகள் வழக்கமாக ஒழுங்குபடுத்தற் தேவையின் பொருட்டு வருமான அல்லது செலவு உருப்படியாக ஏற்பிசைவு செய்யும் காலத்திற்கும், அந்த உருப்படியை நிதியறிக்கைத் தேவைக்காக ஏற்பிசைவு செய்யும் காலத்திற்கும் இடையிலான கால வேறுபாட்டினை பிரதிபலிக்கின்றது. உரிமமொன்று, SLFRS இனை முதற்தடவையாக கடைப்பிடிப்பதனால் அல்லது புதிய அல்லது மீளாக்கப்பட்ட நியமம் ஒன்றினை முதன்முறையாக பிரயோகிப்பதற்காக கணக்கீட்டுக் கொள்கையொன்றினை மாற்றும்போது, புதிய அல்லது மீளாக்கப்பட்ட கால வேறுபாடுகள் ஏற்படக்கூடும். அது புதிய அல்லது மீளாக்கிய ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளை ஏற்படுத்தும். ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக, உரிமம் அதன் கணக்கீட்டுக் கொள்கைகள் மாற்றத்தினை தடைசெய்யும் பந்தி 13 இன் தடையானது, SLFRS தேவைப்படுத்தும் ஏனைய கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்களின் காரணமாக ஏற்படும் புதிய அல்லது மீளாக்கிய ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவினை தடைசெய்யாது. அதற்கான காரணம், அத்தகைய கால வேறுபாடுகளுக்கான ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவானது, பந்தி 11 க்கு அமைய தற்போது பிரயோகிக்கும் ஏற்பிசைவுக் கொள்கைக்கு இசைவாக உள்ளதுடன், அது புதிய கணக்கீட்டுக் கொள்கையின் அறிமுகத்தை பிரதிபலிக்காமை ஆகும். அதேபோல பந்தி 13 ஆனது, SLFRS க்கு மாறிய திகதிக்கு உடனடியாக முன்பதாக இருந்திராத, ஆனால் பந்தி 11 க்கு அமைவாக தாபிக்கப்பட்ட உரிமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இசைவாகவுள்ள கால வேறுபாடுகளிலிருந்து ஏற்படும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவினை தடைசெய்யாது (உதா: புயற்சேதக் கிரயங்கள்).

## ஏனைய நியமங்களின் பிரயோகித்தற்தகவு

B7 இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டு, இந்த நியமத்தின் தேவைப்பாடுகளை பிரயோகிக்க தெரிவுசெய்யும் ஒரு உரிமம் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கு அதன் முந்திய GAAP கணக்கீட்டுக் கொள்கைகளை தொடர்ந்தும் பிரயோகிக்கும். இருந்தபோதிலும், சில சந்தர்ப்பங்களில் நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான முறையில் பிரதிபலிப்பதற்கு ஏதுவாக, ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளுக்கு ஏனைய நியமங்களையும் பிரயோகிக்கவேண்டி ஏற்படலாம் என பந்திகள் 16-17 கூறுகின்றன. இந்த நியமத்தின் தேவைப்பாடுகளுடன் ஏனைய சில நியமங்கள் எவ்வாறு இடைத்தாக்கம் கொண்டுள்ளன என்பதனை கீழ்வரும் பந்திகள் குறிப்பிடுகின்றன. குறிப்பாக, கீழ்வரும் பந்திகள் பிற நியமங்களுக்கான குறிப்பிட்ட விதிவிலக்குகள், அவற்றிலிருந்து விலக்களிப்புகள் மற்றும் பிரயோகிக்க எதிர்பார்க்கின்ற மேலதிக முன்னிலைப்படுத்தல் மற்றும் வெளிக்காட்டற் தேவைப்பாடுகள் ஆகியவற்றை தெளிவுபடுத்துகின்றன.

## LKAS 10 *அறிக்கையிடற் காலத்திற்கு பிந்திய நிகழ்வுகள்* நியமத்தின் பிரயோகம்

B8 ஒரு உரிமம் அதன் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு மற்றும் அளவீட்டில் மதிப்பீடுகளையும் எடுகோள்களையும் பயன்படுத்தவேண்டி ஏற்படலாம். அறிக்கையிடற் கால முடிவுக்கும் நிதியறிக்கைகள் வழங்கலுக்காக அங்கீகரிக்கப்படும் திகதிக்கும் இடையில் இடம்பெறும் நிகழ்வுகளை பிரதிபலிப்பதற்கு அந்த மதிப்பீடுகளும் எடுகோள்களும் செம்மையாக்கம் செய்யப்படவேண்டுமா என்பதனை இனங்காண்பதற்கு உரிமம் LKAS 10 இனை பிரயோகிக்கும்.

**LKAS 12 *வருமான வரிகள்* நியமத்தின் பிரயோகம்**

B9 LKAS 12, சகல தற்காலிக வித்தியாசங்களுக்கும் ஒரு உரிமம், சில வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளுக்கு அமைய, பிற்போடப்பட்ட வரிப்பரிப்பினையும் (சில நிபந்தனைக்கு அமைய) பிற்போடப்பட்ட வரிச்சொத்தினையும் ஏற்பிசைவு செய்யவேண்டுமென தேவைப் படுத்துகின்றது. விகித ஒழுங்குபடுத்தலுக்கு ஆளாகும் உரிமமொன்று ஏற்பிசைவு செய்ய வேண்டிய வருமானவரித் தொகையினை இனங்காண்பதற்கு, விகித ஒழுங்குபடுத்தற் செயற்பாடுகள் உட்பட அதன் சகல செயற்பாடுகளுக்கும் LKAS 12 நியமத்தினை பிரயோகிக்கும்.

B10 சில விகித ஒழுங்குபடுத்தற் திட்டங்களில் உரிமத்தின் வருமான வரிச் செலவுகளின் பகுதியை அல்லது முழுவதையும் மீளப்பெறுவதற்கு ஏதுவாக உரிமம் அதன் எதிர்கால வீதங்களை அதிகரிப்பதனை விகித ஒழுங்குபடுத்துனர் அனுமதிப்பர் அல்லது தேவைப்படுத்துவர். அத்தகைய சந்தர்ப்பங்களில், இது உரிமம் பந்திகள் 11-12 க்கு அமைய தாபிக்கப்பட்ட அதன் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக நிதிநிலைக் கூற்றில் வருமானவரி தொடர்பாக ஒரு ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதி ஏற்பிசைவு செய்யப்படுவதனை விளைவிக்கலாம். வருமானவரி தொடர்பாக இந்த ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதியின் ஏற்பிசைவானது மேலதிக தற்காலிக வேறுபாட்டினை ஏற்படுத்துவதுடன், அதற்காக மேலும் ஒரு பிற்போடப்பட்ட வரித்தொகை ஏற்பிசைவு செய்யப்படும்.

B11 LKAS 12 இன் முன்னிலைப்படுத்தல், வெளிக்காட்டற் தேவைப்பாடுகள் எவ்வாறு இருந்த போதிலும், உரிமமொன்று ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்வதன் விளைவாக பிற்போடப்பட்ட வரிச் சொத்தை அல்லது பிற்போடப்பட்ட வரிப் பரிப்பை ஏற்பிசைவு செய்யும்போது, உரிமம் அந்த பிற்போடப்பட்ட வரித் தொகையினை மொத்த பிற்போடப்பட்ட வரிச் சொத்தில் (பரிப்பில்) உள்ளடக்காது. அதற்குப் பதிலாக, உரிமம் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவினால் ஏற்படும் பிற்போடப்பட்ட வரிச் சொத்தினை (பரிப்பினை) கீழே தரப்பட்டுள்ள ஒரு முறையில் முன்னிலைப்படுத்தும்:

*(a)* ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு வரவுமீதிகள் மற்றும் செலவுமீதிகளுக்காக முன்னிலைப்படுத்தப்படும் வரிசை உருப்படிகளுடன்; அல்லது

*(b)* தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு வரவுமீதிகள் மற்றும் செலவு மீதிகளுக்குப் பக்கத்தில் வேறான வரிசை உருப்படியாக.

B12 அதேபோல, உரிமமொன்று ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்வதனால் ஏற்படும் பிற்போடல் வரிச் சொத்தின் (பரிப்பின்) மாற்றங்களை ஏற்பிசைவு செய்யும்போது, உரிமம் அந்த பிற்போடல் வரி மாற்றத் தொகையினை LKAS 12 க்கு அமைய இலாப, நட்ட மற்றும் பிறமுற்றடக்க வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்தும் வரிச் செலவு (வருமான) வரிசை உருப்படியில் உள்ளடக்கமாட்டாது. அதற்குப் பதிலாக ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்வதால் பிற்போடப்பட்ட வரிச் சொத்தில் (பரிப்பில்) ஏற்படும் மாற்றங்களை கீழே தரப்பட்ட ஒரு வழியில் முன்னிலைப்படுத்தும்:

*(a)* இலாப, நட்ட மற்றும் பிறமுற்றடக்க வருமானக் கூற்றுக்களில் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களுக்காக முன்னிலைப்படுத்தும் வரிசை உருப்படிகளுடன்; அல்லது

*(b)* ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களுக்காக இலாப, நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்திய தொடர்புபட்ட வரிசை உருப்படிகளுக்குப் பக்கத்தில் வேறான வரிசை உருப்படியாக.

## LKAS 33 *பங்கொன்றிற்கான வருமானம்* நியமத்தின் பிரயோகம்

B13 LKAS 33 இன் பந்தி 66 ஆனது சில உரிமங்கள் அவற்றின் இலாப, நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்றுக்களில் தொடரும் தொழிற்பாடுகளிலிருந்தான இலாப அல்லது நட்டம் மற்றும் மேன்னிலை உரிமத்தின் சாதாரண உரிமையாண்மைப் பங்கு தாரருக்கு உரிய இலாபம் அல்லது நட்டம் ஆகிய இரண்டிற்கும் பங்கொன்றிற்கான அடிப்படை மற்றும் ஐதாக்கப்பட்ட வருமானங்களை முன்னிலைப்படுத்துவதனை தேவைப்படுத்துகின்றது. அத்துடன், LKAS 33 இன் பந்தி 68 ஆனது, முடிவுக்குக் கொண்டுவந்த தொழிற்பாட்டை அறிக்கையிடும் உரிமம் முடிவுக்குக் கொண்டுவந்த தொழிற்பாட்டிற்காக பங்கொன்றிற்கான அடிப்படை மற்றும் ஐதாக்கப்பட்ட தொகைகளை இலாப, நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்றில் அல்லது குறிப்புக்களில் வெளிக்காட்டுவதனை தேவைப்படுத்துகின்றது.

B14 LKAS 33 க்கு அமைவாக முன்னிலைப்படுத்தப்படும் ஒவ்வொரு பங்கொன்றிற்கான வருமானத் தொகைக்கும், இந்த நியமத்தினை பிரயோகிக்கும் உரிமம், ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் நிகர மாற்றத்தினை உள்ளடக்காத தொகைகள் தவிர, அதே முறையில் கணிப்பிடப்படும் பங்கொன்றிற்கான மேலதிக அடிப்படை மற்றும் ஐதாக்கிய வருமான தொகைகளை முன்னிலைப்படுத்தும். LKAS 33 இன் பந்தி 73 க்கு இசைவாக, உரிமம் இந்த நியமத்தின் பந்தி 26 தேவைப்படுத்தும் பங்கொன்றிற்கான வருவாயினை முன்னிலைப்படுத்திய சகல காலங்களுக்கும் LKAS 33 இனால் தேவைப்படுத்தப்பட்ட பங்கொன்றிற்கான வருமானத்திற்கு தரப்படும் அதே முக்கியத்துவத்துடன் முன்னிலைப்படுத்தும்.

## LKAS 36 சொத்துக்களின் சேதஇழப்பு நியமத்தின் பிரயோகம்

B15 உரிமத்தின் ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் எந்தவொரு சேதஇழப்பினதும் இனங்காணல், ஏற்பிசைவு, அளவீடு மற்றும் எதிர்ப்பதிவு ஆகியவற்றிற்கு உரிமம் அதன் முந்திய GAAP கணக்கீட்டுக் கொள்கைகளை தொடர்ந்து பிரயோகிப்பதனை பந்திகள் 11-12 தேவைப்படுத்துகின்றன. இதன் தொடர் விளைவாக, பிறம்பான ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளுக்கு LKAS 36 பிரயோகிக்கப்பட மாட்டாது.

B16 எனினும், உரிமமொன்று ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை உட்படுத்திய காசுப் பிறப்பாக்க அலகினை (cash generating unit) சேதஇழப்பிற்காக சோதனை செய்யவேண்டுமென LKAS 36 தேவைப்படுத்தக்கூடும். இந்தச் சோதனையானது காசு பிறப்பாக்க அலகு நன்மதிப்பையும் கொண்டிருப்பதால் அல்லது அந்த காசு பிறப்பாக்க அலகு தொடர்பில் LKAS 36 இல் விபரிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சேதஇழப்புக் காட்டிகளை இனங்கண்டமையால் தேவைப்படலாம். அந்தச் சந்தர்ப்பத்தில் காசுப் பிறப்பாக்க அலகின் மீளப்பெறற்தகு தொகை மற்றும் முன்கொணரற் தொகை ஆகியவற்றை இனங்காண்பதற்கான தேவைப்பாடுகளை LKAS 36 இன் பந்திகள் 74-79 கொண்டுள்ளன. சேதஇழப்புச் சோதனைத் தேவைகளுக்காக, ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகள் எதுவும் காசுப் பிறப்பாக்க அலகின் முன்கொணரற் தொகையில் உட்படுத்தப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்கு உரிமம் அந்தத் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும். LKAS 36 இன் எஞ்சிய தேவைப்பாடுகள் இந்தச் சோதனையின் விளைவாக ஏற்பிசைவு செய்யப்படும் எந்தவொரு சேதஇழப்பு நட்டத்திற்கும் பிரயோகிக்கப்படும்.

## SLFRS 3 *வியாபார இணைப்புக்கள்* நியமத்தின் பிரயோகம்

B17 SLFRS 3 இன் பிரதான அடிப்படையானது, வியாபாரமொன்றின் சுவீகரிப்பாளர் சுவீகரித்த சொத்துக்களையும் ஏற்றுக்கொண்ட பரிப்புக்களையும் சுவீகரிப்புத் திகதியில் அவற்றின் சீர்மதிப்புக்களில் ஏற்பிசைவு செய்வதாகும். SLFRS 3 அதன் ஏற்பிசைவு மற்றும் அளவீட்டுத்

தத்துவங்களுக்கு வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளையே வழங்குகின்றது. இந்த நியமத்தின் பந்தி B18 மேலதிக விதிவிலக்கு ஒன்றினை தருகின்றது.

B18 உரிமமொன்று அதன் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கு அதன் முந்திய GAAP கணக்கீட்டுக் கொள்கையினை தொடர்ந்தும் பிரயோகிப்பதனை பந்திகள் 11-12 தேவைப்படுத்துகின்றது. இதன் தொடர்விளைவாக, ஒரு வியாபாரத்தினை சுவீகரிக்கும் உரிமம் அதன் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் சுவீகரிப்புத்திகதியில் சுவீகரிப்பிற்கு ஆளாகும் உரிமத்தின் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு மற்றும் அளவீட்டிற்கு பந்திகள் 11-12 க்கு அமைய தாபிக்கப்பட்ட அதன் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும். சுவீகரிப்பிற்குள்ளாகும் உரிமத்தின் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகள், சுவீகரிப்பாளரின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் சுவீகரிப்பிற்குள்ளாகும் உரிமம் அந்த மீதிகளை அதன் சொந்த நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்கின்றதா என்பதை அக்கறைப்படுத்தாது, சுவீகரிப்பாளரின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்படும்.

## SLFRS 5 விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகள் நியமத்தின் பிரயோகம்

B19 உரிமமொன்று அதன் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கு அதன் முந்திய கணக்கீட்டுக் கொள்கையை தொடர்ந்தும் பிரயோகிப்பதனை பந்திகள் 11-12 தேவைப்படுத்துகின்றன. இதன் காரணமாக SLFRS 5 இன் அளவீட்டுத் தேவைப்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளுக்கு பிரயோகிக்கப்பட மாட்டாது.

B20 முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகளுக்காக ஒரு தனியான தொகை இலாப, நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக்கூற்றில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டுமென SLFRS 5 இன் பந்தி 33 தேவைப்படுத்துகிறது. முடிவுக்கு வந்த தொழிற்பாடுகளை முன்னிலைப்படுத்தும்போது அந்தப் பந்தியின் தேவைப்பாடுகளை கவனத்திற்கொள்ளாது, இந்த நியமத்தை பிரயோகிக்க தெரிவுசெய்யும் உரிமம், முடிவுக்குவந்த தொழிற்பாட்டின் விகித ஒழுங்குபடுத்தற் செயற்பாடுகளிலிருந்து ஏற்படும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களை SLFRS 5 இன் பந்தி 33 தேவைப்படுத்தும் வரிசை உருப்படிகளில் உள்ளடக்காது. அதற்குப் பதிலாக, முடிவுக்குவந்த தொழிற்பாட்டின் விகித ஒழுங்குபடுத்தற் செயற்பாடுகளிலிருந்து ஏற்படும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களை உரிமம் கீழே தரப்பட்டுள்ள ஏதாவது ஒரு முறையில் முன்னிலைப்படுத்தும்:

(a) இலாப, நட்டம் தொடர்பான ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களை முன்னிலைப்படுத்துவதற்கான வரிசை உருப்படிகளில்; அல்லது

(b) இலாப, நட்டம் தொடர்பான ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களை முன்னிலைப்படுத்துவதற்கான வரிசை உருப்படிக்குப் பக்கத்தில் வேறான ஒரு வரிசை உருப்படியாக.

B21 அவ்வாறே, SLFRS 5 இன் பந்தி 38 இனைக் கணக்கிற்கொள்ளாது, உரிமம் விற்பனைக் குழுமமொன்றினை முன்னிலைப்படுத்தும்போது, அது விற்பனைக் குழுமத்தின் பகுதியாக அமையும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகளின் மொத்தத் தொகையினை SLFRS 5 இன் பந்தி 38 தேவைப்படுத்தும் வரிசை உருப்படிகளில் உள்ளடக்க மாட்டாது. அதற்குப் பதிலாக, உரிமம் விற்பனைக் குழுமத்தின் பகுதியாக அமையும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகளின் மொத்தத் தொகையினை கீழே தரப்பட்டுள்ள ஏதாவது ஒரு முறையில் முன்னிலைப்படுத்தும்:

(a) ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகளுக்காக முன்னிலைப்படுத்தப்படும் வரிசை உரும்படிகளினுள்; அல்லது

(b) ஏனைய ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகளுக்குப் பக்கத்தில் வேறு உருப்படியாக.

B22 உரிமமானது, விற்பனைக் குழுமம் அல்லது முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடு தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை மற்றும் அந்த மீதிகளில் மாற்றங்களை தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு வரிசை உருப்படியில் உட்படுத்துவதற்கு தெரிவுசெய்யுமேயாகில், அவற்றை இந்த நியமத்தின் பந்தி 33 இல் விபரித்த ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு வரிசை உருப்படிகளின் பகுப்பாய்வின் பகுதியாக வேறாக வெளிக்காட்டுதல் அவசியமாகும்.

## SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* மற்றும் LKAS 28 *கூட்டுக் கம்பனிகளிலும் கூட்டுத் தொழில் முயற்சிகளிலும் முதலீடுகள்* ஆகிய நியமங்களின் பிரயோகம்

B23 "ஒரு மேன்நிலை உரிமம் ஒத்த சந்தர்ப்பங்களில் ஒரேவிதமான ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு சீரான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தி ஒன்றித்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கவேண்டும்" என SLFRS 10 இன் பந்தி 19 தேவைப்படுத்துகின்றது. இந்த நியமத்தின் பந்தி 8 ஆனது, இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டதும், இந்த நியமத்தினை பிரயோகிக்க தெரிவுசெய்கின்றதுமான உரிமம் அதன் சகல விகித ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளிலும் இருந்து ஏற்படுகின்ற எல்லா ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளுக்கு அதன் அனைத்து தேவைப்பாடுகளையும் பிரயோகிக்க வேண்டுமென கேட்டுள்ளது. இதன் தொடர்விளைவாக, மேன்நிலை உரிமமொன்று இந்த நியமத்திற்கு அமைய அதன் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்தால், அதன் சகல உபகம்பனிகளிலும் ஏற்படும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளுக்கும் அதே கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்கும். இது, உபகம்பனிகள் அந்த மீதிகளை அவற்றின் சொந்த நிதிக் கூற்றுகளில் ஏற்பிசைவு செய்கின்றதா என்பதனை கணக்கிற்கொள்ளாது, பிரயோகிக்கும்.

B24 அவ்வாறே, உரிமையாண்மை முறையினை பிரயோகிக்கும்போது, "ஒத்த சந்தர்ப்பத்தில் ஒரேவித ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு சீரான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தி உரிமத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்" என LKAS 28 இன் பந்திகள் 35-36 தேவைப்படுத்துகின்றன. இதன் தொடர் விளைவாக, உரிமையாண்மை முறையை பிரயோகித்தலில் ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் முதலீடுசெய்யும் உரிமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இசைவானதாக அமையும் பொருட்டு, கூட்டுக்கம்பனியின் அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் கொள்கைகள் செம்மையாக்கம் செய்யப்படும்.

## SLFRS 12 *பிற உரிமங்களில் கொண்டுள்ள நாட்டங்களின் வெளிக்காட்டல்* நியமத்தின் பிரயோகம்

B25 உரிமம், அறிக்கையிடும் உரிமத்திற்கு பொருண்மையான கட்டுப்பாடற்ற பாத்தியதை உடைய அதன் ஒவ்வொரு உபகம்பனிக்கும், அறிக்கையிடற் காலத்தின்போது உப கம்பனியின் கட்டுப்பாடற்றோர் பாத்தியதைக்கு ஒதுக்கிய இலாபம் அல்லது நட்டத்தை வெளிக்காட்டவேண்டுமென SLFRS 12 இன் பந்தி 12(e) தேவைப்படுத்துகின்றது. இந்த நியமத்திற்கு அமைவாக ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்யும் உரிமமொன்று SLFRS 12 இன் பந்தி 12(e) இனால் வெளிக்காட்டல் தேவைப்படுத்தப்படும் தொகைகளுள் உட்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளில் நிகர மாற்றங்களை (அசைவுகளை) வெளிக்காட்டும்.

B26 உரிமம், அறிக்கையிடும் உரிமத்திற்கு பொருண்மையான கட்டுப்பாடற்ற பாத்தியதை உடைய ஒவ்வொரு உபகம்பனிக்கும், SLFRS 12 இன் பந்தி B10 இல் குறிப்பிடப்பட்ட உபகம்பனி பற்றிய தொகுக்கப்பட்ட நிதித் தகவல்களை வெளிக்காட்ட வேண்டுமென SLFRS 12 இன் பந்தி 12(g) தேவைப்படுத்துகின்றது. அதேபோல, அறிக்கையிடும் உரிமத்திற்கு பொருண்மையான ஒவ்வொரு கூட்டுத் தொழில்முயற்சி மற்றும் கூட்டுக் கம்பனிக்கும் SLFRS 12 இன் பந்திகள் B12-B13 இல் குறிப்பிட்ட தொகுக்கப்பட்ட நிதித்தகவல்களை உரிமம் வெளிக்காட்டவேண்டுமென SLFRS 12 இன் பந்தி 21(b)(ii) தேவைப்படுத்துகின்றது. SLFRS 12 இன் பந்தி 21(c) க்கு அமைவாக தனித்தனியாக பொருண்மையற்ற ஏனைய சகல கூட்டுக்கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகள் ஆகியவற்றிற்கு உரிமம் வெளிக்காட்டவேண்டிய நிதித் தகவல்களின் தொகுப்பினை SLFRS 12 இன் பந்தி B16 குறிப்பிடுகின்றது.

B27 இந்த நியமத்திற்கு அமைய ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்யும் உரிமமொன்று SLFRS 12 இன் பந்திகள் 12, 21, B10, B12, B13, மற்றும் B16 இல் குறிப்பிடப்பட்ட தகவல்களுக்கு மேலதிகமாக, மொத்த ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு வரவு மீதி, மொத்த ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு செலவு மீதி மற்றும் SLFRS 12 இன் அந்த வெளிக்காட்டல் தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு உரிமத்திற்கும் அந்த மீதிகளில் நிகர மாற்றங்களை இலாப, நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டவை மற்றும் பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டவையாக பகுத்து வெளிக்காட்டும்.

B28 உரிமமொன்று ஒரு உபகம்பனிமீது கட்டுப்பாட்டை இழப்பதனால் ஏற்படுகின்றதும், SLFRS 10 பந்தி 25 க்கு அமைய கணிக்கப்படுவதுமான இலாபம் அல்லது நட்டத்தை ஏற்பிசைவு செய்யும்போது, வெளிக்காட்டவேண்டிய தகவல்களை SLFRS 12 இன் பந்தி 19 குறிப்பிடுகின்றது. இந்த நியமத்தை பிரயோகிக்க தெரிவுசெய்யும் உரிமம் SLFRS 12 இன் பந்தி 19 இல் தேவைப்படுத்தப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக, முன்னைய உபகம்பனியில் கட்டுப்பாட்டை இழந்த திகதியில் ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவுவிலக்கல் சம்பந்தமான இலாபம் அல்லது நட்டத்தின் பகுதியையும் வெளிக்காட்டும்.

## பின்னிணைப்பு C

## நடைமுறைக்கு வரும் திகதியும் இடைக்கால ஏற்பாடுகளும்

இந்தப் பின்னிணைப்பானது நியமத்தின் ஒன்றித்த பகுதியாகும்.

## நடைமுறைக்கு வரும் திகதியும் இடைக்கால ஏற்பாடுகளும்

### நடைமுறைக்கு வரும் திகதி

C1 உரிமமொன்றின் முதலாவது வருடாந்த SLFRS நிதிக்கூற்றுக்கள் 2016 ஜனவரி 1ந் திகதி அல்லது அதற்குப்பின்னர் ஆரம்பமாகும் காலத்திற்காக இருப்பின் அந்த உரிமம் இந்த நியமத்தினை பிரயோகிக்கும். இந்தத் திகதிக்கு முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமமொன்று இந்த நியமத்தை முந்திய காலமொன்றிற்கான முதலாவது வருடாந்த SLFRS நிதிக்கூற்றுக்களுக்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்பட வேண்டும்.

## பின்னிணைப்பு D

## SLFRS 1 *இலங்கை கணக்கீட்டு நியமங்களின் முதற்தடவையான கடைப்பிடிப்பு* நியமத்திற்கு பதிற்தாக்கத் திருத்தங்கள்

இந்தப் பின்னிணைப்பு, பேரவை SLFRS 14 *ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு* நியமத்தினை வழங்கியதன் விளைவாக SLFRS 1 இலங்கை கணக்கீட்டு நியமங்களின் முதற்தடவையான கடைப்பிடிப்பு நியமத்திற்கு தேவையான திருத்தங்களை குறிப்பிடுகிறது. திருத்தப்பட்ட பந்திகள் கீழே கோடிட்டும், நீக்கப்பட்ட பந்திகள் குறுக்குக் கோடிட்டும் காட்டப்பட்டுள்ளன. ஒரு உரிமம் இந்தத் திருத்தங்களை, SLFRS 1 இனை பிரயோகிக்கும்போது பிரயோகிக்கும்.

## SLFRS 1 *இலங்கை கணக்கீட்டு நியமங்களின் முதற்தடவையான கடைப்பிடிப்பு*

| பந்தி 39V சேர்க்கப்பட்டுள்ளது |
|---|

39V 2014 ஜீன் மாதம் வழங்கப்பட்ட SLFRS 14 ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகள் நியமம் பந்தி D8B இனை திருத்தியுள்ளது. ஒரு உரிமம் அந்தத் திருத்தத்தினை 2016 ஜனவரி 1ந் திகதியில் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருட காலங்களுக்கு பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமமொன்று SLFRS 14 இனை முந்திய காலமொன்றிற்கு பிரயோகிக்குமேயானால், திருத்தமும் அந்த முந்திய காலத்திற்கு பிரயோகிக்கப்படும்.

| பின்னிணைப்பு Dயில் பந்தி D8B திருத்தப்பட்டுள்ளது. புதிய குறிப்புக்கள் கீழ்க்கோடிட்டும் நீக்கப்பட்டவை குறுக்குக் கோடிட்டும் உள்ளன. |
|---|

D8B சில உரிமங்கள் விகித ஒழுங்குபடுத்தலுக்கு ஆளாகும் தொழிற்பாடுகளில் பயன்படும் அல்லது முன்னர் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரண அல்லது அருவச் சொத்து உருப்படிகளை வைத்திருக்கும். அத்தகைய உருப்படிகளின் முன்கொணரற் தொகை முன்னைய GAAP இன் கீழ் தீர்மானித்த தொகைகளை உள்ளடக்குகின்ற போதிலும், SLFRS களுக்கு அமைய மூலதனப்படுத்தலுக்கு தகைமை பெறாதவையாக இருக்கக்கூடும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முதற்தடவையாக கடைப்பிடிப்போர் SLFRS க்கு மாறிய திகதியில் அந்த உருப்படிகளின் முந்திய GAAP முன்கொணரற் தொகையினை கருதப்படும் கிரயமாக (deemed cost) பயன்படுத்த தெரிவு செய்யலாம். உரிமம் இந்த விதிவிலக்கை பிரயோகிக்கும் பட்சத்தில், அது முழு உருப்படிகளுக்கும் அதனை பிரயோகித்தல் வேண்டும். SLFRS க்கு மாறுகின்ற திகதியில் உரிமம் இந்த விதிவிலக்கு பயன்படுத்தப்படும் ஒவ்வொரு உருப்படிக்கும் LKAS 36 க்கு அமைவாக சேதஇழப்புச் சோதனையை மேற்கொள்ளும். இந்தப் பந்தியின் தேவைகளுக்காக, தொழிற்பாடுகள் விகித ஒழுங்குபடுத்தலுக்கு ஆளாவது, அவை பொருட்கள் அல்லது சேவைகளுக்காக வாடிக்கையாளரிடம் அளவிடக்கூடிய விலைகளை தீர்மானிக்கும் ஒரு வேலைச் சட்டகத்திற்கு ஆட்பட்டதாக இருப்பதுடன், அந்த வேலைச்சட்டகம் ஒரு விகித ஒழுங்குபடுத்துனரின் (SLFRS 14 ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்குகள் நியமத்தில் பொருள்வரையறை செய்தவாறு) மேற்பார்வைக்கு அத்துடன்/அல்லது அங்கீகாரத்திற்கு ஆட்பட்டிருக்கும்போது ஆகும். ~~ஒழுங்குபடுத்தப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குதலில் உரிமம் இறுக்கிய குறித்த கிரயங்களை மீளப்பெறுவதற்காகவும் குறித்த வருமானத்தினை உழைப்பதற்கும் ஏதுவாக வடிவமைக்கப்பட்டு வாடிக்கையாளர்களை கட்டுப்படுத்தும் வீதங்களை நிர்ணயிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் நிர்ணயிக்கப்படும் விலைகளில் (அதாவது, வீதங்களில்) பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு வழங்கும். குறிப்பிடப்பட்ட வருமானம், நிலையானதாக அல்லது உத்தரவாதப்படுத்திய வருமானமாக இருக்கவேண்டியதில்லை. அது ஒரு குறைந்தபட்ச அல்லது வீச்சப் பெறுமதிகளாக இருக்கலாம்.~~

# இலங்கை கணக்கீட்டு நியமம் 15

*வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்*

உள்ளடக்கங்கள் *பந்தி*

**இலங்கை கணக்கீட்டு நியமம் 15**
***வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்***


| | |
|---|---|
| **நோக்கம்** | **1** |
| **நோக்கத்தினை நிறைவு செய்தல்** | **2** |
| **நோக்கெல்லை** | **5** |
| **ஏற்பிசைவு செய்தல்** | **9** |
| **ஒப்பந்தத்தினை அடையாளம் காணுதல்** | **9** |
| **ஒப்பந்தங்களின் இணைத்தல்** | **17** |
| **ஒப்பந்தங்களின் திருத்தங்கள்** | **18** |
| **செயல்நிறைவேற்று கடப்பாடுகளை அடையாளம் காணுதல்** | **22** |
| வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலான வாக்குறுதிகள் | 24 |
| பொருள் மற்றும் சேவை வேறுபாடுகள் | 26 |
| **செயல்நிறைவேற்று கடப்பாடுகளை திருப்தி செய்தல்** | **31** |
| கால அடிப்படையில் திருப்தி செய்யப்படும் செயல்நிறைவேற்று கடப்பாடுகள் | 35 |
| குறித்த காலப் புள்ளியில் திருப்தி செய்யப்படும் செயல்நிறைவேற்று கடப்பாடுகள் | 38 |
| செயல்நிறைவேற்று கடப்பாடு ஒன்றினை முழுமையாகத் திருப்தி செய்யும் செயற்பாட்டின் நிலைமையை அளவிடுதல் | 39 |
| **அளவீடு** | **46** |
| **ஊடுசெயல் விலையினைத் தீர்மானித்தல்** | **47** |
| மாறுபடும் கைமானங்கள் | 50 |
| ஒப்பந்தத்தில் முக்கிய நிதிசார் ஆக்கக்கூறு காணப்படுதல் | 60 |
| பணம் அல்லாத கைமானம் | 66 |
| வாடிக்கையாளருக்கு செலுத்தத்தக்க கைமானம் | 70 |
| **ஊடுசெயல் விலையினை செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்தல்** | **73** |
| தனியான விற்பனை விலைகளில் ஒதுக்கீடு செய்தல் | 76 |
| கழிவீட்டினை ஒதுக்கீடு செய்தல் | 81 |
| மாறுபடும் கைமானத்தினை ஒதுக்கீடு செய்தல் | 84 |
| **ஊடுசெயல் விலைகளிலான மாற்றங்கள்** | **87** |
| **ஒப்பந்தக் கிரயங்கள்** | **91** |
| **ஒப்பந்தத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகரித்த கிரயங்கள்** | **91** |
| **ஒப்பந்தம் ஒன்றினை நிறைவேற்றுவதற்கான கிரயங்கள்** | **95** |
| **காலத் தேய்மானம் மற்றும் சேத இழப்பு** | **99** |

**முன்னிலைப்படுத்தல்** **105**

**வெளிப்படுத்தல்கள்** **110**

**வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்கள்** **113**

வருமானத்தினை வேறுபிரித்தல் 114

ஒப்பந்த மீதிகள் 116

செயல்நிறைவேற்றல் கடமைகள் 119

**மீதமுள்ள செயல் நிறைவேற்றுக் கடமைகளுக்கு ஒதுக்கீடு செய்த ஊடுசெயல் விலை** **120**

**இந்த நியமத்தின் பிரயோகத்திலான முக்கிய தீர்ப்புக்கள்** **123**

செயல்நிறைவேற்றுக் கடமை நிறைவு செய்யப்படும் காலப்பகுதியை தீர்மானித்தல் 124

ஊடுசெயல் விலைகள் மற்றும் செயல் நிறைவேற்றுக் கடமைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளைத் தீர்மானித்தல் 126

**வாடிக்கையாளர் ஒருவரிடம் இருந்து ஒப்பந்தத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான அல்லது நிறைவு செய்வதற்கான கிரயத்திலிருந்து ஏற்பிசைவு செய்யப்படும் சொத்துக்கள்** **127**

**நடைமுறை அளவீடுகள்** **129**

**பின்னிணைப்புக்கள்**

**அ வரைவிலக்கணம் செய்யப்பட்ட பதங்கள்**

**ஆ பிரயோக வழிகாட்டல்**

**இ அமுலுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாற்றம்**

# இலங்கை கணக்கீட்டு நியமம் 15

*வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்*

இலங்கை கணக்கீட்டு நியமம் 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமம் பந்திகள் 1-129 வரை மற்றும் பின்னிணைப்புக்கள் A-C வரை காட்டப்பட்டுள்ளது. சகல பந்திகளும் சமனான அதிகாரத்தைக் கொண்டுள்ளன. **தடித்த எழுத்துக்களில்** உள்ள பந்திகள் பிரதான கோட்பாடுகளைக் குறிப்பிடுகின்றன. பின்னிணைப்பு “A” யில் காட்டப்பட்ட வரைவிலக்கணப்படுத்தப்பட்ட *சரிந்த* எழுத்தில் உள்ள பதங்கள் இந்த நியமத்திலேயே முதன்முதலாக இடம்பெறுகின்றன. ஏனைய பதங்களுக்கான வரைவிலக்கணங்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கான சொற்பதத் தொகுப்பில் வழங்கப்பட்டுள்ளன. இந்த நியமம் அதன் நோக்கங்கள் மற்றும் முடிவுகளுக்கு அடிப்படையான இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகம் ஆகியவற்றுக்காக முன்னுரையுடன் சேர்த்து வாசிக்கப்படுதல் வேண்டும். வெளிப்படையான வழிகாட்டல் இல்லாதவிடத்து பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* நியமம் வழங்குகிறது.

## நோக்கம்

1 இந்த நியமத்தின் நோக்கமானது உரிமம் ஒன்று வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ளும் வருமானங்கள் மற்றும் காசுப்பாய்வுகள் என்பவற்றின் இயல்பு, தொகை, காலப்பகுதி மற்றும் நிச்சயமற்ற தன்மை ஆகியன தொடர்பில் அதன் நிதிக்கூற்றுக்களின் பயனாளர்களுக்கு அறிக்கையிடும் போது பிரயோகிக்க வேண்டிய பயனுள்ள தகவல்களை வழங்குதல் ஆகும்.

## நோக்கத்தினை நிறைவு செய்தல்

2 பந்தி 1 இன் நோக்கத்தினை நிறைவு செய்வதற்காக, இந் நியமத்தின் பிரதான கோட்பாடானது உரிமமானது வாடிக்கையாளருக்கு மாற்றம் செய்யப்படும் பொருட்கள் சேவைகளின் மூலமான வருமானத்தினை, அவ்வாறான பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்தில் இருந்து உரிமம் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கும் கைமானின் பெறுமதியை வெளிக்காட்டக்கூடிய தொகையில் ஏற்பிசைவு செய்தல் வேண்டும்.

3 உரிமம் ஒன்று இந் நியமத்தினைப் பிரயோகிக்கும்போது ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மற்றும் ஏனைய அவசியமான தரவுகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். உரிமமானது நடைமுறை அளவீடுகள் உள்ளடங்கலாக இந்த நியமத்தினை, ஒரே சூழ்நிலையிலான ஒரே இயல்புகளைக் கொண்ட ஒப்பந்தங்களில் கொள்கைமாறாது பயன்படுத்தல் வேண்டும்.

4 இந்த நியமம் வாடிக்கையாளருடனான தனியான ஒப்பந்தத்துக்கான கணக்கீட்டை விதந்துரைக்கிறது. எனினும், ஒரு நடைமுறை அளவீடாக, ஒப்பந்தத் தொகுப்புக்கு இந்த நியமத்தினைப் பிரயோகிப்பதன் விளைவு இந்த நியமத்தினை அத் தொகுப்பினுள் உள்ளடங்கிய தனியான ஒப்பந்தத்தம் ஒன்றுக்கு *(அல்லது செயல்நிறைவேற்று கடப்பாட்டுக்கு)* பிரயோகிப்பதில் இருந்து பொருண்மைத்தன்மை வாய்ந்த விதத்தில் வேறுபடாது என உரிமம் நியாயமாக எதிர்பார்க்குமாயின், உரிமம் இந்த நியமத்தினை ஒத்த இயல்புகளைக் கொண்ட ஒப்பந்தங்களின் தொகுப்பு ஒன்றுக்கு *(அல்லது செயல்நிறைவேற்று கட்டப்பாட்டுக்கு)* பிரயோகிக்க முடியும். ஒப்பந்தத் தொகுப்பு ஒன்றுக்கு கணக்கிடும்போது, உரிமம் ஒப்பந்தத் தொகுப்பின் அளவு மற்றும் கட்டமைப்பை பிரதிபலிக்கக்கூடிய மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை பயன்படுத்தல் வேண்டும்.

**நோக்கெல்லை**

5 உரிமம் ஒன்று பின்வருவன தவிர்ந்த, வாடிக்கையாளர்களுடனான அனைத்து ஒப்பந்தங்களுக்கும் இந் நியமத்தினைப் பயன்படுத்த முடியும்:

a) LKAS 17 *குத்தகைகள்* நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட குத்தகை ஒப்பந்தங்கள்

b) SLFRS 4 *காப்புறுதி ஒப்பந்தங்கள்* நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட காப்புறுதி ஒப்பந்தங்கள்

c) SLFRS 9 *நிதிச் சாதனங்கள்*, SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்*, SLFRS 11 *இணைந்த ஏற்பாடுகள்*, LKAS 27 *வேறான நிதிக்கூற்றுக்கள்* மற்றும் LKAS 28 *துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளிலான முதலீடுகள்* ஆகிய நியமங்களின் நோக்கெல்லைக்கு உட்பட்ட நிதிச் சாதனங்கள் மற்றும் ஏனைய ஒப்பந்த உரிமைகள் அல்லது பொறுப்புக்கள்

d) ஒரே வணிக வரிசையில் உள்ள உரிமங்களுக்கு இடையில் வாடிக்கையாளர்கள் அல்லது சாத்திய எதிர்கால வாடிக்கையாளர்களுக்கான விற்பனையை வசதியளிக்கும் முகமாக மேற்கொள்ளப்படும் பணமல்லாத பரிமாற்றங்கள். உதாரணமாக, இந் நியமம் வாடிக்கையாளர்களது கேள்வியினை வேறுபட்ட குறிப்பிட்ட இடங்களில் நிறைவு செய்வதற்காக குறித்த கால அடிப்படையில் எண்ணெயினைப் பரிமாறிக் கொள்ள இணங்கிக் கொண்ட இரு எண்ணெய் வியாபாரக் கம்பனிகளுக்கு இடையேயான ஒப்பந்தங்களுக்குப் பிரயோகிக்கப்படல் ஆகாது.

6 உரிமம் ஒன்று இந் நியமத்தினை ஒப்பந்தம் ஒன்றின் எதிர்த்தரப்பு ஒரு வாடிக்கையாளராக உள்ளபோது மாத்திரமே (பந்தி 5 இல் குறிப்பிடப்பட்ட ஒப்பந்ததைத் தவிர) பிரயோகிக்க முடியும். வாடிக்கையாளர் என்பது உரிமம் ஒன்றின் சாதாரண நடவடிக்கைகளின் வெளியீடான பொருட்கள் அல்லது சேவைகளைக் கமைானத்துக்காகப் பெற்றுக் கொள்வதற்கான அவ் உரிமத்துடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினரைக் குறிக்கும். உதாரணமாக, ஒப்பந்த எதிர்த்தரப்பு குறித்த உரிமத்துடன் உரிமத்தின் சாதாரண நடவடிக்கைகளின் வெளியீடான பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அல்லாது, ஒப்பந்தத்தின் தரப்பினராக பரஸ்பரம் நடவடிக்கை அல்லது செயன்முறை (சொத்து ஒன்றை, இணைந்த ஏற்பாட்டில் மேம்படுத்தல் போன்ற) ஒன்றின் விளைவான ஏற்படும் இடர்கள் மற்றும் பயன்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுவதற்கான ஒப்பந்தம் ஒன்றின் எதிர்த் தரப்பினர் வாடிக்கையாளர் அல்ல.

7 வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தமானது இந் நியமத்தின் நோக்கெல்லைகளுக்குள் பகுதியளவாகவும் மற்றும் பந்தி 5 இன் நோக்கெல்லைகளுக்குள் பகுதியளவாகவும் உட்பட்டதாக இருக்கலாம்.

(a) வேறொரு நியமம் குறித்த ஒப்பந்தத்தின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாகங்களை எவ்வாறு வேறுபடுத்தல் வேண்டும் மற்றும் / அல்லது ஆரம்பத்தில் அளவிட வேண்டும் என விதந்துரைப்பின், உரிமம் முதலில் அந் நியமங்கள் குறிப்பிடும் வேறுபடுத்தல் மற்றும் / அல்லது ஆரம்ப அளவிடலைப் பிரயோகித்தல் வேண்டும். உரிமம் ஒன்று அந் நியமத்துக்கு இணக்கமான முறையில் ஆரம்ப அளவீடு செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் ஒரு பாகத்தில் (அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாகங்களின்) தொகையினை *ஊடுசெயல் விலையில்* இருந்து விலக்களித்துப் பின்னர், இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட் பட்ட ஒவ்வொரு செயல்நிறைவேற்று கடப்பாட்டு மற்றும் பந்தி 7(b) இனால் அடையாளம் காணப்பட்ட ஒப்பந்தத்தின் ஏனைய பாகங்களதும் மீதமுள்ள ஊடுசெயல் விலைகளின் (ஏதேனும் இருப்பின்) ஒதுக்கீட்டுக்காக பந்திகள் 73-86 இனைப் பயன்படுத்தல் வேண்டும்.

(b) மற்றைய நியமங்கள் குறித்த ஒப்பந்தத்தின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாகங்களை எவ்வாறு வேறுபடுத்தல் வேண்டும் மற்றும் / அல்லது ஆரம்ப அளவிடல் செய்தல் வேண்டும் என விதந்துரைக்காதவிடத்து, உரிமம் வேறுபடுத்தல் மற்றும் / அல்லது ஆரம்ப அளவிடல் செய்தல் நோக்கங்களுக்காக இந் நியமத்தினைப் பயன்படுத்தலாம்.

8 இந் நியமம் வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகரித்த கிரயங்கள் மற்றும் ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்காக ஏற்பட்ட கிரயங்கள் மற்றொரு நியமத்தின் நோக்கெல்லைகளுக்கு உட்படாதவிடத்து அவற்றுக்கான கணக்கீட்டு விதிமுறைகளை விதந்துரைக்கின்றது (பந்தி 91-104 இனைப் பார்வையிடுக). உரிமம் ஒன்று இப்பந்திகளை இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டு அமைந்துள்ள வாடிக்கையாளர் ஒருவருடன் தொடர்பான ஒப்பந்தம் ஒன்று தொடர்பாக ஏற்பட்ட கிரயங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தல் வேண்டும்.

ஏற்பிசைவு

**ஒப்பந்தத்தினை அடையாளம் காணுதல்**

9 **உரிமம் ஒன்று இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டால் மட்டும், வாடிக்கையாளர் ஒருவருடன் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றுக்கு, பின்வரும் மூலப்பிரமாணங்கள் யாவும் நிறைவு செய்யப்பட்டால் மாத்திரமே இக் கணக்கீட்டு நியமத்தினைப் பிரயோகிக்க முடியும்.**

***(a)*** **ஒப்பந்தத்துக்கான தரப்பினர் ஒப்பந்தத்தை அங்கீகரித்து இருப்பதுடன் (எழுத்து மூலம், வாய்மூலம் அல்லது வேறு ஏதேனும் வழக்கமான வியாபார நடைமுறைகள் மூலம்) தொடர்புபட்ட தமது கடப்பாடுகளை நிறைவு செய்ய அர்ப்பணிப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

***(b)*** **மாற்றப்பட வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பாக இரு தரப்பினரதும் உரிமைகளை உரிமம் அடையாளம் காணக் கூடியதாக இருத்தல்**

***(c)*** **மாற்றப்பட வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பாக கொடுப்பனவு நிபந்தனைகளை உரிமம் அடையாளம் காணக் கூடியதாக இருத்தல்**

***(d)*** **ஒப்பந்தம் ஒரு வியாபார ரீதியான கருத்துப்பாட்டினைக் கொண்டிருத்தல் (அதாவது இடர், ஒப்பந்தத்தின் விளைவாக உரிமத்தின் எதிர்வுகூறப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களின் காலப்பகுதி அல்லது தொகை மாற்றமடையக் கூடியதாகக் காணப்படல்), மற்றும்**

***(e)*** **பொருட்கள் அல்லது சேவைகளின் மாற்றல் தொடர்பான பரிமாற்றத்தினால் உரிமம் பெறத்தக்கதாகவுள்ள கைமானத்தினை உரிமம் சேகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படல். கைமானத்தின் தொகை சேகரிக்கப்படுதல் சாத்தியமானதா என்பதை மதிப்பிடும் பொழுது, செலுத்த வேண்டிய கைமானத்துக்கான தொகையினை செலுத்துவதற்கான வாடிக்கையாளரது இயலுமை மற்றும் விருப்பம் ஆகியவற்றினை உரிமம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். உரிமம் பெறத்தக்கதான கைமானத்துக்கான பெறுமதியானது உரிமம் வாடிக்கையாளருக்கு விலைச் சலுகை ஒன்றை வழங்குவதன் காரணமாக ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விலையிலும் பார்க்கக் குறைவானதாகக் காணப்படலாம் (பந்தி 52 இனைப் பார்க்கவும்).**

10 ஒப்பந்தம் என்பது கட்டாயப்படுத்தும் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை உருவாக்கத்தக்க, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தரப்பினரிடையேயான உடன்படிக்கை ஆகும். ஒப்பந்தம் ஒன்றின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கட்டாயப்படுத்தும் தன்மையானது சட்டம்

தொடர்பானதாகும். ஒப்பந்தமானது எழுத்து மூலமானதாகவோ, வாய்மொழி மூலமானதாகவோ அல்லது உரிமத்தின் வழக்கமான வியாபார நடைமுறைகளின் மூலமான உள்ளார்ந்ததாகவோ காணப்படலாம். வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள், சட்ட ஆட்சி எல்லைகள், கைத்தொழிற்துறைகள் மற்றும் உரிமங்களிடையே வேறுபட்டதாகக் காணப்படலாம். மேலும், அவை உரிமம் ஒன்றின் உள்ளே வேறுபடலாம் (உதாரணமாக, அவை வாடிக்கையாளர் வகுப்பு அல்லது உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் இயல்பினைப் பொறுத்து வேறுபடலாம்). உரிமம் ஒன்று வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்கள் கட்டாயப்படுத்தும் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை உருவாக்குகின்றனவா, ஆம் எனில் எப்போது எனத் தீர்மானிக்கும் போது அவ்வாறான நடைமுறைகள் மற்றும் செயன்முறைகளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

11 வாடிக்கையாளர்களுடனான சில ஒப்பந்தங்கள் நிலையான காலப்பகுதியைக் கொண்டிராது இருப்பதுடன், ஏதேனும் ஒரு தரப்பினரால் எந்த நேரத்திலும் திருத்தம் செய்யப்படக் கூடியதாகவோ அல்லது இரத்துச் செய்யப்படக் கூடியதாகவோ இருக்கும். வேறுசில ஒப்பந்தங்கள், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட விதமாக குறித்த கால அடிப்படையில் தன்னிச்சையாக புதுப்பிக்கப்படக் கூடியதாகக் காணப்படலாம். உரிமம் ஒன்று இந் நியமத்தினை ஒப்பந்தத் தரப்பினர் நடைமுறையில் கட்டாயப்படுத்தும் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளைக் கொண்டிருக்கும் ஒப்பந்தக் காலப்பகுதிக்கு (ஒப்பந்த காலம்) பிரயோகித்தல் வேண்டும்.

12 இந்நியமத்தினைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக, முழுமையாக செயற்படுத்தப்படாத ஒப்பந்தம் ஒன்றினை ஒப்பந்தத் தரப்பினர் மற்றைய தரப்பினருக்கு இழப்பீடுகளை வழங்காது இரத்துச் செய்வதற்கான ஏகமனதான உரிமைகளைக் கொண்ட உடன்படிக்கைகளில் ஒப்பந்தம் காணப்படுவதில்லை எனக் கொள்ளப்படுகிறது. ஒப்பந்தம் ஒன்று கீழ்க்குறிப்பிட்ட இரு மூலப்பிரமாணங்கள் திருப்தி செய்யப்பட்டால் அது முற்றாக செயற்படுத்தப்படாத ஒப்பந்தம் எனக் கொள்ளப்படும்:

*a)* உரிமம் உறுதி வழங்கிய பொருட்கள் அல்லது சேவைகளை இன்னமும் வாடிக்கையாளருக்கு மாற்றவில்லை, மற்றும்

*b)* உறுதி வழங்கிய பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான கைமானத்தின் பெறுமதியை உரிமம் இன்னமும் பெற்றுக்கொள்ளவிலை அல்லது பெற்றுக் கொள்வதற்கான கட்டாயப்படுத்தும் உரிமையைக் கொண்டிருக்கவில்லை

13 வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்று அதன் உருவாக்கத்தில் பந்தி 9 இல் குறிப்பிடப்பட்ட மூலப்பிரமாணத்தினை நிறைவு செய்யுமெனில், உரிமம் தரவுகள் மற்றும் சூழ்நிலைகளில் முக்கிய மாற்றம் ஏற்பட்டதற்கான குறிகாட்டிகள் இல்லாதபோது உரிமம் அவ்வாறான மூலப் பிரமாணங்களை மீள மதிப்பீடு செய்தல் ஆகாது. உதாரணமாக, வாடிக்கையாளர் ஒருவரது கைமானத்தின் பெறுமதியைத் தீர்ப்பதற்கான ஆற்றல் முக்கியமான அளவில் குறைவடையும்போது, வாடிக்கையாளருக்கு மாற்றப்படவுள்ள உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் மீதமுள்ள பகுதிக்கான உரிமம் பெறத்தக்கதாகவுள்ள கைமானத்தின் பெறுமதியைப் பெற்றுக் கொள்வது சாத்தியமானதா என்பதை உரிமம் மீள மதிப்பிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

14 வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்று பந்தி 9 இன் மூலப் பிரமாணங்களை நிறைவு செய்யாதவிடத்து, ஒப்பந்தம் பந்தி 9 இன் மூலப் பிரமாணங்களைப் பிற்காலங்களில் நிறைவு செய்கின்றதா என்பதை உரிமம் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தல் வேண்டும்.

15 வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்று பந்தி 9 இன் மூலப் பிரமாணங்களை நிறைவு செய்யாதபோது உரிமம் வாடிக்கையாளரிடம் இருந்து கைமானத்துக்கான தொகையைப்

பெற்றுக் கொண்டால், பின்வரும் நிகழ்வுகளில் ஒன்று இடம்பெற்றிருந்தால் மாத்திரமே உரிமம் அதனை வருமானமாக ஏற்பிசைவு செய்ய முடியும்:

*a)* உரிமம் வாடிக்கையாளருக்கு பொருட்கள் அல்லது சேவையினை மாற்ற வேண்டிய கடப்பாடுகள் ஏதேனும் இல்லாது இருப்பதுடன் வாடிக்கையாளரால் உறுதி வழங்கப்பட்ட கைமானங்களுக்கான பெறுமதி முழுதுமாக அல்லது பிற்காலத்தில் முழுதுமாக பெறப்படுவதுடன் அவை மீளளிக்கப்பட முடியாததாக இருத்தல், அல்லது

*b)* ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் வாடிக்கையாளரிடம் இருந்து பெறப்பட்ட கைமானத்தின் பெறுமதி மீளளிக்கத் தக்கதல்லாது இருத்தல்

16 பந்தி 15 இல் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்று இடம்பெறும் வரையில் அல்லது பிற்காலத்தில் பந்தி 9 இன் மூலப் பிரமாணங்கள் நிறைவு செய்யப்படும் (பந்தி 14 இனைப் பார்வையிடவும்) வரையில் உரிமம் வாடிக்கையாளரிடம் இருந்து பெற்றுக்கொண்ட கைமானத்தின் தொகையினைப் பரிப்பாகக் காட்டுதல் வேண்டும். ஒப்பந்தம் தொடர்பான தரவுகள் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து, ஏற்பிசைவு செய்யப்பட்ட பரிப்பு உரிமத்தின் எதிர்காலத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகளுக்கான கடப்பாடு அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட கைமானத்தின் பெறுமதியின் மீளளிப்பிற்கான கடப்பாட்டினைக் குறிக்கும். இவற்றில் எச் சந்தர்ப்பத்திலும், பரிப்பானது வாடிக்கையாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளப் பட்ட கைமானத்தின் பெறுமதியில் அளவீடு செய்யப்படும்.

**ஒப்பந்தங்களின் இணைத்தல்**

17 கீழ்வருவனவற்றில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மூலப் பிரமாணங்கள் நிறைவு செய்யப்படும்போது, உரிமம் ஒரே வாடிக்கையாளருடன் ஒரே காலப்பகுதியில் அல்லது அண்மித்த காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை இணைத்து அவற்றைத் தனியானதொரு ஒப்பந்தமாகக் கணக்கீடு செய்ய முடியும்.

a) ஒப்பந்தங்கள் ஒரே வர்த்தக் நோக்கத்தில் ஒரு தொகுதியாகப் பேரம் பேசப்பட்டிருத்தல்

b) ஒப்பந்தம் ஒன்றில் செலுத்த வேண்டிய தொகை மற்றைய ஒப்பந்தத்தின் விலை அல்லது செயல்நிறைவேற்றில் தங்கியிருத்தல், அல்லது

c) ஒப்பந்தத்தில் உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் பந்தி 22-30 க்கு இணைவாக தனியான செயல்நிறைவேற்றுக் கடமையாக இருத்தல் (அல்லது சில பொருட்கள் அல்லது சேவைகள் ஒவ்வொரு ஒப்பந்தங்களுக்கும் உறுதியளிக்கப்பட்டிருத்தல்)

**ஒப்பந்தங்களின் திருத்தங்கள்**

18 ஒப்பந்தத் திருத்தம் என்பது ஒப்பந்தத்துக்கான தரப்பினரால் அங்கீகரிக்கப்பட்ட, ஒப்பந்த நோக்கெல்லை அல்லது விலையிலான மாற்றம் ஆகும். சில கைத்தொழிற்துறைகள் மற்றும் சட்ட ஆட்சி எல்லைகளில் ஒப்பந்தத் திருத்தமானது ஒரு மாற்றக் கட்டளை, மாற்றம் அல்லது திருத்தம் எனப்படும். ஒப்பந்தத் தரப்பினரது கட்டாயப்படுத்தும் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளில் மாற்றத்தை அல்லது புதிய உரிமை அல்லது கடப்பாட்டை ஏற்படுத்தும் திருத்தம் ஒன்றை ஒப்பந்தத் தரப்பினர் அங்கீகரிக்கும் பொழுது ஒரு ஒப்பந்தத் திருத்தம் உள்ளதாகக் கருதலாம். ஒப்பந்தத் திருத்தமானது எழுத்து மூலமாகவோ, வாய்மூல இணக்கப்பாடு மூலமாகவோ அல்லது வழக்கமான வியாபார செயன்முறைகளின் நடத்தை மூலமாகவோ அங்கீகரிக்கப்படலாம். ஒப்பந்தத் தரப்பினர் ஒப்பந்தத் திருத்தத்தினை அங்கீகரிக்காதபோது,

உரிமம் ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தின் மீது அதன் திருத்தம் அங்கீகரிக்கப்படும் வரை இக் கணக்கீட்டு நியமத்தினைத் தொடர்ச்சியாகப் பிரயோகித்தல் வேண்டும்.

19 ஒப்பந்தத்துக்கான தரப்பினரிடையே ஒப்பந்தத்தின் நோக்கெல்லை அல்லது விலை தொடர்பான மாற்றம் சார்பாக இணக்கப்பாடின்மை காணப்படினும் அல்லது ஒப்பந்தத்தின் நோக்கெல்லை தொடர்பான மாற்றத்தினை ஒப்பந்தத் தரப்பினர் அங்கீகரித்து ஆனால் அது தொடர்பான விலை மாற்றத்தினைத் தீர்மானித்து இருக்காத போதிலும் கூட ஒப்பந்த மாற்றம் ஒன்று காணப்படும். ஒப்பந்த மாற்றம் ஒன்றின் மூலம் உருவான அல்லது மாற்றப்பட்ட உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் கட்டாயப்படுத்துவனவா என்பதைத் தீர்மானிப்பதில், ஒப்பந்தத்தின் கட்டுறுப்புக்கள் மற்றும் ஏனைய சான்றுகள் உள்ளடங்கலான அனைத்து அவசியமான தரவுகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். ஒப்பந்தத்தின் நோக்கெல்லை தொடர்பான மாற்றத்தினை ஒப்பந்தத் தரப்பினர் அங்கீகரித்து ஆனால் அது தொடர்பான விலை மாற்றத்தினைத் தீர்மானித்திருக்காதபோது, உரிமம் அந்த மாற்றத்தின் மூலம் உருவாகும் அல்லது ஊடுசெயலின் விலை மாற்றத்தினை, மாறும் கைமானத்தினைத் தீர்மானிக்கும் பொழுது பந்தி 50-54க்கு அமைவாகவும் மாறும் கைமானத்தின் வரையறையைத் தீர்மானிக்கும் பொழுது பந்தி 56-58க்கு அமைவாகவும் தீர்மானித்தல் வேண்டும்.

20 பின்வரும் இரண்டு நிலைமைகளும் காணப்படும் போது, உரிமம் ஒப்பந்தத்திலான மாற்றத்தினைப் புதியதொரு ஒப்பந்தமாகக் கணக்கிடல் வேண்டும்.

*a)* வேறுபட்ட உறுதிவழங்கப்பட்ட பொருட்கள் அல்லது வேவைகளின் அதிகரிப்பு காரணமாக ஒப்பந்தத்ததின் நோக்கெல்லை அதிகரித்தல் (பந்தி 26-30க்கு அமைவாக) மற்றும்

*b)* ஒப்பந்தத்தின் விலையானது உறுதி வழங்கப்பட்ட மேலதிக பொருட்கள் அல்லது சேவைகளின் உரிமத்தினது வேறான விற்பனை விலைகளைப் பிரதிபலிக்கக்கூடிய கைமானத் தொகையினால் அல்லது குறித்த ஒப்பந்தத்தின் சூழ்நிலைகளைப் பிரதிபலிக்கக்கூடிய பொருத்தமான விலைகளின் சீராக்கத்தினால் அதிகரித்தல். உதாரணமாக, உரிமமானது புதிய வாடிக்கையாளர் ஒருவருக்கு ஒத்த வகையான பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்யும் போது தாங்க வேண்டிய விற்பனை தொடர்பான கிரயங்களைத் தாங்க வேண்டிய தேவையின்மை காரணமாக உறுதிவழங்கப்பட்ட மேலதிக பொருட்கள் அல்லது சேவைகளின் வேறான விற்பனை விலைகளை வாடிக்கையாளர் பெற்றுக்கொள்ளும் கழிவீடு ஒன்றிற்கு அமைவாகச் சீராக்கம் செய்ய முடியும்.

21 ஒப்பந்தத் திருத்தம் ஒன்று பந்தி 20க்கு அமைவாக தனியானதொரு ஒப்பந்தமாகக் கணக்கிடப்படாதவிடத்து, ஒப்பந்தத் திருத்தத் திகதியில் அதுவரை மாற்றப்படாத உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் ஏதேனும் இருப்பின் (அதாவது மீதமுள்ள உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லத சேவைகள்) அவற்றுக்குப் பின்வருவனவற்றில் பொருத்தமான வழிமுறையில் பிரயோகிக்கப்பட முடியும்.

*(a)* ஒப்பந்தத் திருத்தத் திகதியின்போது அல்லது திருத்தத்துக்கு முன்னர் வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை விட ஒப்பந்தத் திருத்தத்துக்குப் பின்னர் வழங்கப்படும் மீதமுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் வேறுபட்டனவாகக் காணப்படின், உரிமம் ஒப்பந்தத் திருத்தம் ஒன்றினை, ஏற்கனவே உள்ள ஒப்பந்தம் முறிவடைய, புதிய ஒப்பந்தம் ஒன்று உருவாகுவதாகக் கணக்கிட முடியும். மீதமுள்ள செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய கைமானத்தின் தொகையானது (அல்லது பந்தி 22(b)க்கு அமைவான தனியான செயல்நிறைவேற்று கடப்பாட்டில், மீதமுள்ள வேறுபட்ட பொருட்கள் அல்லத சேவைகளுக்காக) பின்வருவனவற்றின் கூட்டுத் தொகையாகும்:

*(i)* ஊடுசெயல் விலை மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட ஆனால் இன்னமும் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படாத, வாடிக்கையாளரால் உறுதி வழங்கப்பட்ட கைமானப் பெறுமதி (ஏற்கனவே வாடிக்கையாளரிடம் இருந்து பெறப்பட்ட தொகைகள் உள்ளடங்கலாக) மற்றும்

*(ii)* ஒப்பந்த மாற்றத்தின் ஒரு பகுதியான உறுதி வழங்கப்பட்ட கைமானப் பெறுமதி

*(b)* மீதமுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் வேறுபட்டவையாகக் காணப்படாமலும், ஒப்பந்தத் திருத்தத் திகதியில் ஏற்கனவே பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டவாறான வேறான செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஒன்றின் பகுதியான உருவாகுவதுமாக உள்ள போது, உரிமம் அந்த ஒப்பந்த மாற்றத்தினை ஏற்கனவேயுள்ள ஒப்பந்தத்தின் ஒரு பகுதி எனக் கொண்டு கணக்கிட முடியும். ஒப்பந்தத் திருத்தத்தின் ஊடுசெயல் விலை மற்றும் செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டினை முழுமையாக நிறைவு செய்தல் தொடர்பான உரிமத்தின் அளவீட்டின் மீதான விளைவானது, வருமானத்தின் மீதான சீராக்கமாக (வருமானத்திலான அதிகரிப்பாகவோ அல்லது குறைவாகவோ) ஒப்பந்தத் திருத்தத் திகதியில் ஏற்பிசைவு செய்யப்படும் (வருமானத்தின் மீதான சீராக்கமானது ஒரு திரண்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

*(c)* மீதமுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் (a) மற்றும் (b) உருப்படிகளின் திரட்டாகக் காணப்படின், உரிமம் ஒப்பந்தத் திருத்தங்களின் விளைவுகளை, மாற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் திருப்தி செய்யப்படாத செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளின் மீது இந்தப் பந்தியின் நோக்கங்களுக்கு உட்பட்ட வகையில் கணக்கிட முடியும்.

**செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளை அடையாளம் காணுதல்**

22 **ஒப்பந்தத்தின் உருவாக்கத்தில், வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றில் உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை மதிப்பிட்டு வாடிக்கையாளருக்கு மாற்றப்பட வேண்டிய ஒவ்வொரு உறுதி வழங்கலுக்குமான செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளை பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றாக அடையாளம் காணுதல் வேண்டும்.**

***(a)*** **தெளிவாகத் தெரிகின்ற பொருள் அல்லது சேவை (அல்லது பொருட்கள் மற்றும் சேவைகளின் தொகுதி) அல்லது**

***(b)*** **வாடிக்கையாளருக்கு ஒரே நடத்தையில் வழங்கப்பட வேண்டிய, ஒரே கணிசமான வகைத்தன்மை கொண்ட தெளிவாகத் தெரிகின்ற பொருட்கள் அல்லது சேவைகளின் தொடர்ச்சி (பந்தி 23 இனைப் பார்வையிடுக)**

23 பின்வரும் நிபந்தனைகள் இரண்டும் நிறைவு செய்யப்பட்டிருப்பின் அது வாடிக்கையாளருக்கு ஒரே நடத்தையில் வழங்கப்பட வேண்டிய, ஒரே கணிசமான வகைத்தன்மை கொண்ட தெளிவாகத் தெரிகிற பொருட்கள் அல்லது சேவைகளின் தொடர்ச்சி எனக் கருதப்படும்:

*(a)* வாடிக்கையாளருக்கு வழங்கப்படுவதற்காக உரிமம் உறுதி வழங்கும், தொடரில் உள்ள ஒவ்வொரு தெளிவாகத் தெரிகிற பொருட்கள் மற்றும் சேவைகள் காலப்போக்கில் நிறைவு செய்யப்படும் செயல்நிறைவேற்று கடப்பாடுகளாக இருப்பதற்காக பந்தி 35 இன் மூலப்பிரமாணங்களைத் திருப்தி செய்தல் வேண்டும், மற்றும்

*(b)* வாடிக்கையாளருக்கு வழங்கப்பட வேண்டிய உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளின் முழுமையான திருப்திப்பாட்டை அளவீடு செய்வதற்காக பந்தி 39-40 க்கு இணக்கமான அதே முறை பயன்படுத்தப்படல் வேண்டும்.

**வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலான உறுதிவழங்கல்கள்**

24 வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தமானது உரிமம் ஒன்று வாடிக்கையாளருக்கு வழங்க உறுதி வழங்கும் பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பாக வெளிப்படையாகக் குறிப்பிடும். எனினும், வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றில் அடையாளம் காணப்பட்ட செயல்நிறைவேற்றுக் கடப்பாடானது, ஒப்பந்தத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுவதில்லை. ஏனெனில், வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தமானது, ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் பொழுதிலான வியாபாரத்தின் வழக்கமான உள்ளார்ந்தமான வியாபார நடைமுறைகள், பிரசுரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் பிரத்தியேகமான கூற்றுக்கள் எவையேனும் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கியதாகக் காணப்பட, அவை உரிமம் வாடிக்கையாளருக்கு மாற்ற வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான செல்லுபடியான எதிர்பார்ப்புக்களை உருவாக்கக்கூடும்.

25 உரிமம் ஒப்பந்தத்தினை நிறைவு செய்வதற்காகக் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய நடவடிக்கைகள் பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றம் செய்வதற்கானதாக அல்லாதவிடத்து, செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகள் அவற்றை உள்ளடக்குவதில்லை. உதாரணமாக, சேவை வழங்குனர் ஒருவர் ஒப்பந்தம் ஒன்றை நிறைவேற்றுவதற்காகப் பல்வேறு நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடும். இந் நடவடிக்கைகளின் பெறுபேறு, அவை மேற்கொள்ளப்படும்போது வாடிக்கையாளருக்கு எந்தவொரு சேவையினையும் மாற்றம் செய்வதில்லை. ஆகவே அவ்வாறான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஆகாது.

**தெளிவாகத் தெரிகின்ற பொருட்கள் மற்றும் சேவைகள்**

26 ஒப்பந்தத்தின் அடிப்படையில், உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம், ஆனால் பின்வருவனவற்றுக்கு மட்டும் வரையறுக்கப்பட முடியாது:

*(a)* உரிமம் ஒன்றினால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருட்கள் (உதாரணமாக, உற்பத்தியாளர் ஒருவரது இருப்புக்கள்)

*(b)* உரிமம் ஒன்றினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் மீள்விற்பனை (உதாரணமாக, மீள்விற்பனையாளர் ஒருவரது வாங்கி விற்றல்)

*(c)* உரிமம் ஒன்றினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் உரிமைகளின் மீள்விற்பனை (உதாரணமாக, பந்தி B34-B38 இல் விபரிக்கப்பட்டவாறாக, முதல்வராக செயற்படும் உரிமம் ஒன்றினால் அனுமதிச்சீட்டு ஒன்று மீள்விற்பனை செய்யப்படல்)

*(d)* ஒப்பந்த ரீதியான இணங்கப்பட்ட செயற்பாடு (செயற்பாடுகள்) ஒன்றினை வாடிக்கையாளருக்காக நிறைவேற்றுதல்

*(e)* வழங்குவதற்குத் தயாராக வைத்திருக்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கல் (உதாரணமாக, கிடைக்கத்தக்கதாக இருக்கும்போது வழங்கப்படத்தக்க மென்பொருள் பிரயோகம் ஒன்றுக்கான பிரத்தியேகமாகக் குறிப்பிட முடியாத மேம்படுத்தல்) அல்லது வாடிக்கையாளர் தீர்மானிக்கும் காலப்பகுதியில் பொருட்கள் அல்லது சேவைகளைக் கிடைக்கும் படியாகச் செய்தல்

*(f)* வாடிக்கையாளருக்குப் பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்கான மற்றொரு தரப்பினரை ஒழுங்கு செய்வதற்கான சேவையினை வழங்குதல் (உதாரணமாக, பந்தி B34-B38 இல் விபரிக்கப்பட்டவாறாக மற்றொரு தரப்பினரின் முகவராக செயற்படல்)

*(g)* வாடிக்கையாளர் தமது வாடிக்கையாளருக்கு வழங்கத்தக்க அல்லது மீள்விற்பனை செய்யத்தக்க பொருட்கள் அல்லது சேவைகளுக்கான உரிமையினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல் (உதாரணமாக, மீள்விற்பனையாளர்களுக்கு உற்பத்தி ஒன்றை விற்பனை செய்யும் உரிமம் ஒன்று, அவ் உற்பத்தியை மீள்விற்பனையாளரிடம் இருந்து கொள்வனவு செய்யும் தரப்பினர் ஒருவருக்கு மேலதிக பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்கு உறுதி வழங்குதல்)

*(h)* வாடிக்கையாளர் சார்பாக சொத்து ஒன்றினை நிர்மாணித்தல், உற்பத்தி செய்தல் அல்லது மேம்படுத்தல்

*(i)* அனுமதிப்பத்திரம் வழங்குதல் (பந்தி B52-B63 இனைப் பார்க்கவும்)

*(j)* மேலதிகப் பொருட்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்வதற்கான தேர்வினை வழங்குதல் (பந்தி B39-B43 இல் குறிப்பிடப்பட்டவாறு, அவ்வாறான தேர்வுகள் வாடிக்கையாளருக்கு பொருண்மையான உரிமைகளை வழங்கும்போது)

27 பின்வரும் இரு மூலப்ரபிமாணங்கள் திருப்தி செய்யப்படும்போது, வாடிக்கையாளர் ஒருவருக்கு உறுதிவழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் தெளிவாகத் தெரியும் தன்மை வாய்ந்ததாகக் கருதப்படும்:

*a)* வாடிக்கையாளர் அப் பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து நேரடியாகவோ அல்லது வாடிக்கையாளருக்கு தயார் நிலையில் கிடைக்கக்கூடிய வளங்களுடன் கூடியதாகவோ பயன்பெறக்கூடிதாக இருத்தல் (பொருட்கள் அல்லது சேவைகளைத் திறமையாகத் தெளிவாகத் தெரியப்படுத்தல்)

*b)* வாடிக்கையாளருக்குப் பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்கான உரிமத்தின் உறுதிவழங்கலானது ஒப்பந்தத்தின் ஏனைய உறுதிவழங்கல்களிலிருந்து வேறுபடுத்தி அடையாளம் காணக்கூடியதாகக் காணப்படல் (ஒப்பந்தத் தருணத்தில் பொருட்கள் அல்லது சேவைகள் தெளிவாகத் தெரியும்படி வேறுபடுத்தப் படக்கூடியதாக இருத்தல்)

28 குறித்த பொருட்கள் அல்லது சேவைகள் பயன்படுத்தப்படக்கூடியதாகவோ, நுகரப்படக்கூடிதாகவோ, எச்சப் பெறுமதியிலும் பார்க்கக் கூடுதலான பெறுமதியில் விற்கப்படக் கூடியதாகவோ அல்லது வேறு வழிகளில் பொருளாதாரப் பயன்பாட்டை வழங்கக் கூடிய வகையில் வைத்திருக்கப்படவோ முடியும் எனில், பந்தி 27க்கு அமைவாக வாடிக்கையாளர் அப் பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து பயன்பெறக்கூடியதாக இருக்கும். சில பொருட்கள் அல்லது சேவைகளுக்கு, வாடிக்கையாளர் குறித்த பொருட்கள் சேவைகளில் இருந்து நேரடியாகப் பயன்பாட்டைப் பெறக்கூடியதாக இருக்கும். ஏனைய சில பொருட்கள் அல்லது சேவைகளுக்கு வாடிக்கையாளர் தயார் நிலையில் கிடைக்கக்கூடிய ஏனைய வளங்களுடன் இணைந்த விதமாகவே பயன்பெறக்கூடியதாக இருக்கும். தயார் நிலையில் கிடைக்கக்கூடிய வளம் என்பது வேறாக விற்கப்படும் (குறித்த உரிமத்தினாலோ அல்லது வேறு உரிமத்தினாலோ) பொருள் அல்லது சேவையினை அல்லது வாடிக்கையாளர் ஏற்கனவே உரிமத்திடம் இருந்து பெற்றுக்கொண்ட (ஒப்பந்தத்தின் அடிப்படையில் உரிமம் ஏற்கனவே மாற்றியிருந்த பொருட்கள் அல்லது சேவைகள் உள்ளடங்கலாக) அல்லது ஏனைய வகையான ஊடுசெயல்கள் அல்லது நிகழ்வுகளில் இருந்தான வளத்தினைக் குறிப்பிடும். பல்வேறு காரணிகள் வாடிக்கையாளர் அப் பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து நேரடியாகவோ அல்லது தயார் நிலையில் கிடைக்கக்கூடிய வளங்களுடன் கூடியதாகவோ பயன்பெறக்கூடியதாக

இருத்தலுக்கான சான்றினை வழங்கக்கூடும். உதாரணமாக, உரிமம் வழக்கமாகவே பொருள் அல்லது சேவை ஒன்றினைத் தனியாக விற்பனை செய்தலானது வாடிக்கையாளர் அப் பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து நேரடியாகவோ அல்லது தயார் நிலையில் கிடைக்கக்கூடிய வளங்களுடன் கூடியதாகவோ பயன்பெறக்கூடிதாக இருத்தலை சுட்டிக்காட்டும்.

29 உரிமம் ஒன்றின் வாடிக்கையாளர் ஒருவருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்கான உறுதி வழங்கல் ஒன்றினை சுட்டிக்காட்டக்கூடிய காரணிகள் (பந்தி 27 (b) க்கு அமைவாக) பின்வருவனவற்றை உள்ளடக்கும், ஆனால் இவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை:

*a)* உரிமமானது வாடிக்கையாளருக்கு உறுதி வழங்கப்பட்ட இணைந்த வெளியீட்டினை வழங்குவதற்காக, ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை ஏனைய பொருட்கள் அல்லது சேவைகளுடன் ஒன்றிணைக்கும் முக்கியமான சேவையினை வழங்குவதில்லை. வேறு சொற்களில் கூறுவதாயின், உரிமமானது வாடிக்கையாளரினால் குறித்துரைக்கப்பட்ட இணைந்த வெளியீடுகளை உற்பத்தி செய்ய அல்லது விநியோகம் செய்வதற்காக பொருள் அல்லது சேவையை உள்ளீடாகப் பயன்படுத்துவதில்லை.

*b)* பொருட்கள் அல்லது சேவைகள் ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட மற்றொரு பொருள் அல்லது சேவையினை முக்கியமான வகையில் மாற்றம் செய்வதில்லை.

*c)* பொருள் அல்லது சேவையானது ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட ஏனைய பொருட்கள் அல்லது சேவைகளுடன் பெருமளவில் தொடர்புபட்டதாகவோ அல்லது தங்கியுள்ளதாகவோ இருப்பதில்லை. உதாரணமாக, உண்மையில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட மற்றைய பொருட்கள் அல்லது சேவைகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தாது குறித்த பொருள் அல்லது சேவையினை வாடிக்கையாளர் கொள்வனவு செய்யாதிருப்பதானது குறித்த பொருள் அல்லது சேவையானது ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட ஏனைய பொருட்கள் அல்லது சேவைகளுடன் பெருமளவில் தொடர்புபட்டதாகவோ அல்லது தங்கியிருப்பதாகவோ இல்லாது இருப்பதனை சுட்டிக்காட்டும்.

30 உறுதியளிக்கப்பட்ட பொருள் அல்லது சேவை ஒன்றானது தெளிவாகத் தெரியாதபோது, வேறான பொருட்கள் அல்லது சேவைகளின் தொகுப்பு தெளிவாகத் தெரியும்படி அடையாளம் காணாத வரையில் உரிமம் அப் பொருட்கள் அல்லது சேவையினை உறுதியளிக்கப்பட்ட ஏனைய பொருட்கள் அல்லது சேவைகளுடன் ஒன்றிணைத்தல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில், உரிமம் ஒப்பந்தம் ஒன்றிலே உறுதியளிக்கப்பட்ட அனைத்துப் பொருட்கள் அல்லது சேவைகள் யாவற்றினையும் ஒரே செயல்நிறைவேற்றுக் கடப்பாடாக கணக்கிடப்படக்கூடும்.

### செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளைத் திருப்தி செய்தல்

31 **உரிமம் ஒன்று வாடிக்கையாளருக்கு உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை (அதாவது சொத்து) மாற்றி செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டினை நிறைவு செய்யும் போதே வருமானத்தினை ஏற்பிசைவு செய்தல் வேண்டும். உதாரணமாக, வாடிக்கையாளர் சொத்தின் கட்டுப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளும்போதே குறித்த சொத்து மாற்றப்பட்டதாகக் கருதப்படும்.**

32 பந்தி 22-30க்கு அடிப்படையான அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டுக்கும் உரிமம் ஒப்பந்தத்தின் உருவாக்கத்திலேயே அது காலப்போக்கில் செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டினைத் திருப்தி செய்கிறதா (பந்தி 35-37க்கு அமைவாக) அல்லது குறித்த ஒரு காலப் புள்ளியில் செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டினைத் திருப்தி செய்கின்றதா (பந்தி 38க்கு அமைவாக) என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும். உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஒன்றினைக் காலப் போக்கில் திருப்தி செய்யாதவிடத்து, செயல்நிறைவேற்றுக் கடப்பாடு குறித்த காலப் புள்ளியில் திருப்தி செய்யப்படும்.

33 பொருட்கள் மற்றும் சேவைகள் தற்காலிக அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுப் பயன்படுத்தப்படினும் (பெரும்பாலான சேவைகளின் விடயத்தில்) அவை சொத்துக்களேயாகும். சொத்து ஒன்றின் கட்டுப்பாடு என்பது சொத்து ஒன்றின் பயன்பாட்டினை நிர்வகிப்பதற்கும் மீதமுள்ள பயன்பாட்டின் பெரும்பாலான பகுதியை பெற்றுக் கொள்வதற்குமான இயலுமையைக் குறிப்பிடும். கட்டுப்பாடு என்பது மற்றொரு உரிமத்தினை சொத்து ஒன்றின் பயன்பாட்டினை நிர்வகிப்பதற்கும் மீதமுள்ள பயன்பாட்டின் பெரும்பாலான பகுதியை பெற்றுக் கொள்வதனைத் தடுப்பதற்கான இயலுமையைக் குறிப்பிடும். சொத்து ஒன்றின் பயன் என்பது பின்வருவன போன்ற பல்வேறு வழிகளில் பெற்றுக் கொள்ளப்படக் கூடிய சாத்தியமான காசுப்பாய்ச்சல்களைக் (உட்பாய்ச்சல்கள் அல்லது வெளிப்பாய்ச்சல்களிலான சேமிப்புக்கள்) குறிப்பிடும்.

*a)* சொத்தினை பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அல்லது சேவைகளை வழங்குவதற்குப் பயன்படுத்தல் (பொதுச் சேவைகள் உள்ளடங்கலாக)

*b)* ஏனைய சொத்துக்களின் பெறமதியை அதிகரிப்பதற்காக சொத்தினைப் பயன்படுத்தல்

*c)* பரிப்புக்களைத் தீர்ப்பதற்காக அல்லது செலவினங்களைக் குறைப்பதற்காக சொத்துக்களைப் பயன்படுத்தல்

*d)* சொத்தினை விற்றல் அல்லது பரிமாற்றல்

*e)* கடன் ஒன்றிற்குப் பிணை வழங்குவதற்காக சொத்தினைப் பயன்படுத்தல், மற்றும்

*f)* சொத்து ஒன்றினை வைத்திருத்தல்

34 வாடிக்கையாளர் சொத்து ஒன்றின் கட்டுப்பாட்டினைப் பெற்றுக் கொள்கிறாரா என்பதை மதிப்பிடும் பொழுது, உரிமம் சொத்தினை மீளக் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கை ஏதேனும் இருப்பின் அதனைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும் (பந்தி B64-B76 இனைப் பார்வையிடவும்).

**காலப்போக்கில் திருப்தி செய்யப்படும் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகள்**

35 பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு மூலப்பிரமாணம் நிறைவு செய்யப்படின், உரிமம் பொருள் அல்லது சேவை ஒன்றின் கட்டுப்பாட்டினைக் காலப்போக்கில் மாற்றுவதன் மூலம் செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஒன்றினை நிறைவு செய்வதுடன் காலப்போக்கில் வருமானத்தை ஏற்பிசைவு செய்து கொள்கிறது.

*a)* வாடிக்கையாளர் உரிமத்தினால் நிறைவேற்றப்படும் நடவடிக்கைகளின் பெறுபேற்றின் பயன்களை உரிமம் செயற்படுத்தும் அதே நேரத்திலேயே பெற்றுக்கொண்டு நுகர்வு செய்தும் கொள்கின்றது. (பந்தி B3-B4 இனைப் பார்வையிடவும்).

*b)* உரிமத்தின் செயற்பாடு சொத்து ஒன்றை உருவாக்க அல்லது மேம்படுத்த அந்த உருவாக்கப்பட்ட அல்லது மேம்படுத்தப்பட்ட சொத்தினை வாடிக்கையாளர் கட்டுப்படுத்திக் கொள்ளுதல் (பந்தி B5 இனைப் பார்வையிடவும்). அல்லது

*c)* உரிமத்தின் செயற்பாடு உரிமத்துக்கு மாற்றீடான பயன்பாட்டைக் கொண்ட சொத்து ஒன்றினை உருவாக்காது இருப்பதுடன் (பந்தி 36 இனைப் பார்வையிடவும்) உரிமம் இற்றைநாள்வரை நிறைவேற்றப்பட்ட செயல்நிறைவேற்றுக்கான கொடுப்பனவுக்கான கட்டாயப்படுத்தும் உரிமையைக் கொண்டிருத்தல் (பந்தி 37 இனைப் பார்வையிடவும்)

36 சொத்து ஒன்று உருவாக்கம் அல்லது மேம்படுத்தலின்போது மற்றொரு தேவைக்காக நேரடியாகத் தயாரான நிலையில் பயன்படுத்துவது ஒப்பந்த ரீதியாக மறுக்கப்பட்டிருப்பின் அல்லது சொத்தின் முழுமையான நிறைவு நிலையில் மற்றொரு தேவைக்காக நேரடியாகத்

தயாரான நிலையில் பயன்படுத்துவது நடைமுறையில் வரையறுக்கப்பட்டிருப்பின், உரிமத்தின் செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மூலம் உருவாக்கப்பட்ட அந்த சொத்து உரிமத்துக்கு மாற்றுப் பயனைக் கொண்டிருப்பதில்லை. சொத்து உரிமத்துக்கு மாற்றுப் பயனைக் கொண்டிருக்கிறதா என்பதற்கான மதிப்பீடானது ஒப்பந்தத்தின் உருவாக்கத்திலேயே மேற்கொள்ளப்படும். பிற்காலத்தில் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளில் மாற்றத்தினை ஏற்படுத்தத்தக்க ஒப்பந்தத் திருத்தங்களை ஒப்பந்தத் தரப்பினர் அங்கீகரிக்காதவிடத்து உரிமம் ஒப்பந்தத்தின் உருவாக்கத்திற்குப் பின்னர் சொத்து உரிமத்துக்கு மாற்றுப் பயனைக் கொண்டிருக்கிறதா என்பதற்கான மதிப்பீட்டை மேற்கொள்ளுதல் ஆகாது. சொத்து உரிமத்துக்கு மாற்றுப் பயனைக் கொண்டிருக்கிறதா என்பதற்கான மதிப்பீட்டுக்கான வழிகாட்டல்கள் பந்தி B6-B8 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

37 பந்தி 35 *(c)* க்கு அமைவாக உரிமம் இற்றை நாள்வரை நிறைவேற்றப்பட்ட செயல்நிறைவேற்றுக்கான கொடுப்பனவுக்கான கட்டாயப்படுத்தும் உரிமையைக் கொண்டிருக்கிறதா என்பதை மதிப்பிடும் பொழுது உரிமம் ஒப்பந்தத்தின் கட்டுறுப்பு மற்றும் ஒப்பந்தத்துக்குப் பிரயோகிக்கத்தக்க ஏதேனும் நட்ட ஏற்பாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். இற்றை நாள்வரை நிறைவேற்றப்பட்ட செயல்நிறைவேற்றுக்கான கொடுப்பனவுக்கான கட்டாயப்படுத்தும் உரிமையானது ஒரு நிலையான தொகையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எனினும், ஒப்பந்தத்தின் காலப்பகுதியில் சகல வேளைகளிலும், உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுதல் தவிர்ந்த வேறு ஏதேனும் காரணங்களுக்காக வாடிக்கையாளர் அல்லது ஒப்பந்தத்தின் வேறு தரப்பினர் ஒப்பந்தத்தினை இரத்துச் செய்யின், உரிமத்தினால் இற்றைநாள்வரை நிறைவேற்றப்பட்ட செயல்நிறைவேற்றுக்கான இழப்பீட்டை வழங்கக்கூடிய தொகையில் காணப்படல் வேண்டும். கொடுப்பனவுக்கான உரிமையின் கட்டாயப்படுத்தும் தன்மை மற்றும் காணப்படும் தன்மை ஆகியவற்றை மதிப்பிடுவதற்கான மற்றும் உரிமத்தின் கொடுப்பனவுக்கான உரிமை உரிமம் இற்றைநாள் வரை நிறைவேற்றிய பெறுபேறுகளுக்கான கொடுப்பனவுக்கான உரிமையை வழங்குமா என்பதை மதிப்பிடுவதற்கான வழிகாட்டல்கள் பந்தி B9-B13 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**குறித்த காலப்புள்ளி ஒன்றில் திருப்தி செய்யப்படும் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகள்**

38 செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஒன்று பந்தி 35-37க்கு இணக்கமான விதத்தில் குறித்த காலப்பகுதி ஒன்றில் திருப்தி செய்யப்படாதவிடத்து, உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டினைக் குறித்த காலப் புள்ளி ஒன்றில் திருப்தி செய்து கொள்ளும். வாடிக்கையாளர் உறுதியளிக்கப்பட்ட சொத்து ஒன்றின் கட்டுப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளும் மற்றும் உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டினைத் திருப்தி செய்து கொள்ளும் காலப்பகுதியைத் தீர்மானித்துக் கொள்வதற்காக உரிமம் பந்தி 31-34 இன் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும், பின்வரும் ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாத கட்டுப்பாட்டு மாற்றத்துக்கான குறிகாட்டிகளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்:

*a)* உரிமம் சொத்துக்கான கொடுப்பனவுக்கான நடைமுறை உரிமையைக் கொண்டிருத்தல்- வாடிக்கையாளர் சொத்துக்காக கொடுப்பனவை செலுத்த வேண்டிய கடப்பாட்டை நடைமுறையில் கொண்டிருப்பின், அது பரிமாற்றத்திற்கான அச் சொத்தின் பயன்பாட்டை நிர்வகிப்பதற்கான மற்றும் சொத்தின் மீதமுள்ள பயன்பாடு முழுவதையும் வாடிக்கையாளர் பெற்றுக் கொண்டுள்ளதைக் குறிக்கும்.

*b)* வாடிக்கையாளர் சொத்தின் மீது சட்டரீதியான உரிமையைக் கொண்டிருத்தல்- சட்டரீதியான உரிமை என்பது சொத்தின் பயன்பாட்டை நிர்வகிப்பதற்கான மற்றும் சொத்தின் மீதமுள்ள பயன்பாடு முழுவதற்கும் அல்லது அச் சொத்தின் பயன்பாட்டிலிருந்து ஏனைய தரப்பினரை விலக்குவதற்கான ஆற்றல் யாருக்கு உள்ளது என்பதைக் குறிக்கும். ஆகவே சொத்து

ஒன்றின் சட்டரீதியான உரிமைகளின் மாற்றம் வாடிக்கையாளர் சொத்தின் கட்டுப்பாட்டைப் பெற்றுக் கொண்டுள்ளதைக் குறிக்கும். வாடிக்கையாளர் கொடுப்பனவை செலுத்தத் தவறக்கூடும் என்பதன் காரணமாக உரிமம் சொத்தின் மீதான முழுமையான உரிமைகளைக் கொண்டிருக்குமெனினும் கூட அந்த உரிமைகள் சொத்தின் மீதான கட்டுப்பாட்டினை வாடிக்கையாளர் பெற்றுக் கொள்வதைத் தடுப்பதில்லை.

*c)* உரிமம் சொத்தின் பௌதீக வைத்திருப்பினை மாற்றியிருத்தல்- சொத்தினைப் பௌதீக ரீதியாக வாடிக்கையாளர் வைத்திருத்தலானது சொத்தின் பயன்பாட்டை நிர்வகிப்பதற்கான மற்றும் சொத்தின் மீதமுள்ள பயன்பாடு முழுவதற்கும் அல்லது அச் சொத்தின் பயன்பாட்டிலிருந்து ஏனைய தரப்பினரை விலக்குவதற்கான ஆற்றலை வாடிக்கையாளர் பெற்றுக் கொண்டுள்ளதைக் குறிக்கும். எனினும் பௌதீக வைத்திருத்தலானது சொத்தின் கட்டுப்பாட்டிற்கு இணையானதாகக் கருதப்பட முடியாது. உதாரணமாக, சில மீள்கொள்வனவு மற்றும் ஒப்படை ஏற்பாடுகளில் உரிமம் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள சொத்துக்களின் பௌதீக வைத்திருத்தலை ஒப்படையாளர் அல்லது வாடிக்கையாளர் கொண்டிருக்கக்கூடும். மாறாக, சில பட்டியலிட்டு-வைத்திருத்தல் ஒப்பந்தங்களில், வாடிக்கையாளர் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள சில சொத்துக்களை உரிமம் பௌதீக ரீதியாக வைத்திருக்கும். பந்திகள் B64–B76, B77–B78 மற்றும் B79–B82 முறையே மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள், ஒப்படை ஏற்பாடுகள் மற்றும் பட்டியலிட்டு-வைத்திருத்தல் ஒப்பந்தங்கள் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குகின்றன.

*d)* வாடிக்கையாளர் சொத்தின் உரிமை தொடர்பான முக்கிய இடர்கள் மற்றும் வெகுமதிகளைக் கொண்டிருத்தல்- சொத்தின் உரிமை தொடர்பான முக்கிய இடர்கள் மற்றும் வெகுமதிகளை வாடிக்கையாளருக்கு மாற்றுதலானது சொத்தின் பயன்பாட்டை நிர்வகிப்பதற்கான மற்றும் சொத்தின் மீதமுள்ள பயன்பாடு முழுவதையும் வாடிக்கையாளர் பெற்றுக் கொண்டுள்ளதைக் குறிக்கும். எனினும் உறுதி வழங்கப்பட்ட சொத்து ஒன்றின் உரிமை தொடர்பான இடர்கள் மற்றும் வெகுமதிகளை மதிப்பிடும்போது, சொத்தின் மாற்றத்துக்கான செயல்நிறைவேற்றுக் கடப்பாடு தவிர்ந்த வேறு செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளை உருவாக்கக்கூடிய இடர்களைத் தவிர்த்தல் வேண்டும். உதாரணமாக, உரிமம் ஒன்று சொத்து ஒன்றின் கட்டுப்பாட்டினை வாடிக்கையாளருக்கு மாற்றியிருக்கக்கூடும் எனினும் அந்த மாற்றப்பட்ட சொத்து தொடர்பான பராமரிப்புக்கான மேலதிக செயல்நிறைவேற்று கடப்பாடுகளை இன்னமும் நிறைவு செய்யாது இருக்கலாம்.

*e)* வாடிக்கையாளர் சொத்தினை ஏற்றுக் கொண்டிருத்தல்- வாடிக்கையாளர் சொத்தை ஏற்றுக்கொண்டிருத்தலானது சொத்தின் பயன்பாட்டை நிர்வகிப்பதற்கான மற்றும் சொத்தின் மீதமுள்ள பயன்பாடு முழுவதையும் வாடிக்கையாளர் பெற்றுக் கொண்டுள்ளதைக் குறிக்கும். சொத்து ஒன்றின் கட்டுப்பாடு மாற்றப்படும் பொழுது வாடிக்கையாளர் ஏற்றல் தொடர்பான ஒப்பந்த நிபந்தனையை மதிப்பீடு செய்வதற்காக, உரிமம் பந்தி B83–B86 இல் உள்ள வழிகாட்டல்களைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஒன்றின் முழுமையான திருப்தி செய்தலுக்கான கட்டத்தை அளவிடல்**

39 பந்தி 35-37க்கு அமைவாகக் காலப்போக்கில் நிறைவு செய்யப்படும் ஒவ்வொரு செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளுக்கும், உரிமம் அப் செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டின் முழுமையான நிறைவு செய்தலுக்கான முன்னேற்ற நிலையினை அளவீடு செய்து வருமானத்தினை ஏற்பிசைவு செய்து கொள்ளுதல் வேண்டும். முன்னேற்ற நிலையினை அளவீடு செய்யும் போதான நோக்கமானது வாடிக்கையாளருக்கு உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளது கட்டுப்பாட்டினை மாற்றுவதற்கான முன்னேற்ற நிலையினை மதிப்பிடல் ஆகும் (அதாவது, உரிமத்தின் செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டினைத் திருப்தி செய்தல்).

40 உரிமம் காலப்போக்கில் நிறைவு செய்யப்படும் ஒவ்வொரு செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளுக்கும் அவற்றின் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளின் திருப்தி செய்தலை அளவிடல் தொடர்பாக ஒரே முறைமையைப் பிரயோகிப்பதுடன் ஒத்த தன்மையான சூழ்நிலைகளிலான ஒத்த தன்மை வாய்ந்த பெறுபேறுகளுக்காக அதே முறைமையைத் தொடர்ச்சியாகப் பிரயோகிக்க முடியும். ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும், காலப்போக்கில் நிறைவு செய்யப்படும் ஒவ்வொரு செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகள் தொடர்பாகவும் அவற்றின் முழுமையான திருப்தி செய்தலுக்கான கட்டத்தினை மீள் அளவீடு செய்து கொள்ளுதல் வேண்டும்.

### *முன்னேற்ற நிலையினை அளவீடு செய்வதற்கான முறைகள்*

41 விருத்திக் கட்டத்தினை அளவீடு செய்வதற்கான பொருத்தமான முறைகள் வெளியீட்டு முறைகள் மற்றும் உள்ளீட்டு முறைகளை உள்ளடக்குகின்றன. உரிமம் ஒன்றின் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகள் தொடர்பாக அவற்றின் முழுமையான திருப்தி செய்தலுக்கான முன்னேற்ற நிலையினை அளவிடுவதற்காக வெளியீட்டு மற்றும் உள்ளீட்டு முறைகளைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்களை பந்திகள் B14–B19 வழங்குகின்றன. விருத்திக் கட்டத்தினை அளவீடு செய்வதற்கான பொருத்தமான முறையைத் தீர்மானிப்பதில், உரிமம் வாடிக்கையாளருக்கு வழங்குவதற்கு உறுதியளித்துள்ள பொருட்கள் அல்லது சேவைகளின் தன்மையினைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

42 முன்னேற்ற நிலையினை அளவீடு செய்வதற்கான முறையைப் பிரயோகிக்கும்போது, உரிமம் முன்னேற்ற நிலையின் அளவீட்டில் இருந்து உரிமம் வாடிக்கையாளருக்கு கட்டுப்பாட்டை மாற்றாத பொருட்கள் அல்லது சேவைகள் ஏதேனும் இருப்பின், அவற்றை விலக்குதல் வேண்டும். இதன் விளைவாக, உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டினை நிறைவு செய்யும் பொது வாடிக்கையாளருக்கு கட்டுப்பாட்டை மாற்றம் செய்யும் பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான முன்னேற்ற நிலையினை உள்ளடக்குதல் வேண்டும்.

43 சூழ்நிலைகள் காலப்போக்கில் மாற்றமடைவதனால், செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டின் வெளியீட்டிலான மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் உரிமம் முன்னேற்ற நிலையின் அளவீட்டினைப் பதிவேற்றம் செய்தல் வேண்டும். அவ்வாறான உரிமத்தின் முன்னேற்ற நிலை மாற்றம் தொடர்பான மாற்றங்கள் LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டிலான மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* நியமத்துக்கு அமைவாக கணக்கீட்டு மதிப்பீட்டிலான மாற்றமாகக் கணக்கிடப்பட வேண்டும்.

### *முன்னேற்ற நிலையின் நியாயமான அளவீடு*

44 உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டின் முழுமையான திருப்தி தொடர்பான முன்னேற்ற நிலையினை நியாயமான முறையில் அளவிட்டுக் கொள்ளக் கூடியதாக இருப்பின் மாத்திரமே திருப்தி செய்யப்பட்ட செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஒன்றின் வருமானத்தை காலப்போக்கில் ஏற்பிசைவு செய்து கொள்ளல் வேண்டும். முன்னேற்ற நிலையினை நியாயமாக அளவீடு செய்வதற்குப் பொருத்தமான முறையைப் பிரயோகிப்பதற்கு அவசியமான நம்பகமான தகவல்கள் காணப்படாதவிடத்து உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாடு தொடர்பான முன்னேற்ற நிலையினை நியாயமான முறையில் அளவீடு செய்து கொள்ள முடியாது.

45 சில சந்தர்ப்பங்களில் (உதாரணமாக ஒப்பந்தம் ஒன்றின் ஆரம்பக் கட்டங்களில்), உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஒன்றின் வெளியீட்டினை நியாயமாக அளவீடு செய்து கொள்ள முடியாது இருக்கலாம். ஆனால் உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டினை நிறைவு செய்து கொள்வதற்கு ஏற்பட்ட கிரயத்தினை மீளப்பெறுவதற்கு எதிர்பார்க்கலாம். அவ்வாறான சூழ்நிலைகளில், உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளின் நிறைவு செய்தல் தொடர்பாக நியாயமான அளவீட்டினை மேற்கொள்ளும் வரையில், ஏற்பட்ட கிரயங்களின் அளவுக்கு மாத்திரம் வருமானத்தினை ஏற்பிசைவு செய்த கொள்ளுதல் வேண்டும்.

**அளவீடு**

46 **செயல்நிறைவேற்றுக் கடப்பாடு நிறைவு செய்யப்படும்போது, (அல்லது எடுத்துக்காட்டாக) அச் செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஊடுசெயல் விலையின் தொகையினை (இது பந்தி 56-58க்கு அமைவாக தடுக்கப்பட்ட மாறும் கைமானத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்காது) வருமானமாக ஏற்பிசைவு செய்து கொள்ளுதல் வேண்டும்.**

**ஊடுசெயல் விலையினைத் தீர்மானித்தல்**

47 **ஊடுசெயல் விலையினைத் தீர்மானிக்கும்போது உரிமம் ஒப்பந்தத்தின் கட்டுறுப்புக்கள் மற்றும் வழக்கமான வியாபார நடைமுறைகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஊடுசெயல் விலை என்பது உரிமம் வாடிக்கையாளருக்கு மாற்றுவதற்கு உறுதி வழங்கிய பொருட்கள் அல்லது சேவைகளின் பரிமாற்றம் தொடர்பாக உரிமம் உரிமை கொள்ளக்கூடியதாக எதிர்பார்க்கும் மூன்றாம் தரப்பினர் தொடர்பாக சேகரிக்கப்படும் தொகைகள் தவிர்ந்த (உதாரணமாக, சில விற்பனை வரிகள்) கைமானப் பெறுமதி ஆகும். ஓப்பந்தம் ஒன்றில் வாடிக்கையாளருக்கு உறுதி செய்யப்பட்ட கைமானமானது நிலையான தொகைகளையோ, மாறும் தொகைகளையோ அல்லது இரண்டையுமோ உள்ளடக்கலாம்.**

48 வாடிக்கையாளர் ஒருவரால் உறுதியளிக்கப்ட்ட கைமானத்தின் தன்மை, காலப்பகுதி மற்றும் தொகை ஆகியன உடுசெயல் விலையின் மதிப்பீட்டில் தாக்கம் செலுத்தும். ஊடுசெயல் விலையினைத் தீர்மானிக்கும் போது உரிமம் பின்வருவனவற்றின் விளைவகளைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்:

(*a*) மாறும் கைமானம் (பந்திகள் 50-55 மற்றும் 59 ஐப் பார்வையிடுக)

(*b*) மாறும் கைமானத்தின் தடுக்கப்பட்ட மதிப்பீடுகள் (பந்திகள் 56-58 ஐப் பார்வையிடுக)

(*c*) ஒப்பந்தத்தில் முக்கியமான நிதியிடல் ஆக்கக்கூறு ஒன்று காணப்படல் (பந்திகள் 60-65 ஐப் பார்வையிடுக)

(*d*) பணமல்லாத கைமானம் (பந்திகள் 66-69 ஐப் பார்வையிடுக)

(*e*) வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய கைமானம் (பந்திகள் 70-72 ஐப் பார்வையிடுக)

49 ஊடுசெயல் விலையினைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, ஏற்கனவேயுள்ள ஒப்பந்தத்துக்கு அமைவாக உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் வாடிக்கையாளருக்கு மாற்றம் செய்யப்படும் எனவும் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படவோ, புதுப்பிக்கப்படவோ அல்லது திருத்தப்படவோ மாட்டாது எனக் கொள்ளுதல் வேண்டும்.

**மாறுபடக்கூடிய கைமானம்**

50 ஒப்பந்தம் ஒன்றில் உறுதியளிக்கப்பட்ட கைமானமானது மாறுபடக்கூடிய தொகை ஒன்றினை உள்ளடக்கி இருப்பின், உரிமம் அந்தக் கைமானத்தினை வாடிக்கையாளர் ஒருவருக்கு உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் பரிமாற்றத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் உரிமத்துக்குக் கிடைக்கத்தக்க தொகையில், அக் கைமானத்தினை மதிப்பிடும்.

51 கைமானத்தின் தொகையானது கழிவுகள், தள்ளுபடிகள் மீளளிப்புக்கள், கடன்கள், விலைச் சலுகைகள், ஊக்குவிப்புக்கள், பெறுபேற்று உபகாரக் கொடுப்பனவுகள், தண்டப் பணம் மற்றும் அது போன்ற ஏனைய காரணங்களினால் வேறுபடலாம். அத்துடன், உரிமத்தின் பெறத்தக்க தொகையானது எதிர்கால நிகழ்வு ஒன்றின் இடம்பெறுகை அல்லது இடம்பெறாமை மீது உறுமுரிமை வாய்ந்த தன்மை காரணமாகவும் உறுதியளிக்கப்பட்ட கைமானம் வேறுபடலாம். உதாரணமாக, பொருள் அல்லது சேவை ஒன்று திரும்பலுக்கான உரிமையுடன் விற்கப்பட்டால் அல்லது பிரத்தியேகமான சாதனை மட்டம் ஒன்று அடையப்படும் கட்டத்தில் வழங்கப்படுவதற்கான நிலையான தொகை ஒன்று உறுதியளிக்கப்பட்டிருந்தால், கைமானத்தின் தொகை மாறுபடலாம்.

52 வாடிக்கையாளர் ஒருவரினால் உறுதி வழங்கப்பட்ட மாறுபடும் தன்மை ஒப்பந்தத்தில் வெளிப்படையாகக் கூறப்படலாம். ஒப்பந்தத்தின் கட்டுறுப்புக்களுக்கு மேலதிகமாக, பின்வரும் சூழ்நிலைகள் கட்டுறுப்புக்கள் காணப்படின், உறுதியளிக்கப்பட்ட கைமானமானது மாறுபடும்:

*(a)* உரிமம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட தொகையினை விடக் குறைவான தொகை ஒன்றினைக் கைமானமாக ஏற்றுக் கொள்ளத்தக்கவாறான உரிமத்தின் வழக்கமான வியாபார நடைமுறைகள், பிரசுரிக்கப்பட்ட கொள்கைகள் அல்லது பிரத்தியேகமான கூற்றுக்களில் இருந்து வாடிக்கையாளர் செல்லுபடியான எதிர்பார்ப்பு ஒன்றினைக் கொண்டிருத்தல். அதாவது, உரிமம் விலைச் சலுகை ஒன்றினை வழங்கும் என்னும் எதிர்பார்ப்பு. சட்ட விதிமுறைகள், கைத்தொழிற்துறை அல்லது வாடிக்கையாளரைப் பொறுத்து, இந்த முனைவானது ஒரு கழிவு, தள்ளுபடி, மீளளிப்பு அல்லது கடன் எனக் குறிப்பிடப்படலாம்.

*(b)* வாடிக்கையாளருடன் ஒப்பந்தத்தினை ஏற்படுத்தும்போது, வாடிக்கையாளருக்கு ஒரு விலைச் சலுகையை வழங்குவதற்கான உரிமத்தின் ஈடுபாட்டினை அடையாளம் காட்டக்கூடிய ஏனைய உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள்

53 உரிமம் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள் தொடர்பான சிறந்த மதிப்பீட்டினை வழங்கக் கூடியது எனக் கருதத்தக்க பொருத்தமான முறைகளின் அடிப்படையில் பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம் மாறுபடக்கூடிய கைமானத்தின் தொகையினை மதிப்பீடு செய்து கொள்ளும்.

*(a)* எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி – எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி என்பது சாத்தியமான கைமானத் தொகைகளின் வீச்சின் நிகழ்தகவு நிறைவேற்றப்பட்ட தொகைகளின் கூட்டுத் தொகையாகும். எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியானது, உரிமம் ஒரேவகையான இயல்புகளைக் கொண்ட பல எண்ணிக்கைகளிலான ஒப்பந்தங்களைக் கொண்டிருப்பின், மாறும் கைமானத்தின் அண்ணளவான மதிப்பீடாகக் காணப்படலாம்.

*(b)* மிகவும் சாத்தியமான தொகை – மிகவும் சாத்தியமான தொகை என்பது சாத்தியமான கைமானத் தொகைகளின் வீச்சில் மிகவும் உயர்வாக சாத்தியமான ஒரு தனித்த தொகையாகும் (அதாவது, ஒப்பந்தத்தின் மிகப் பொருத்தமான வெளியீட்டுக்கான தனித்த தொகை). மிகவும் சாத்தியமன தொகையானது, ஒப்பந்தம் இரண்டே இரண்டு சாத்தியமான விளைவுகளைக் கொண்டிருப்பின், மாறும் கைமானத்தின் அண்ணளவான மதிப்பீடாகக் காணப்படலாம் (உதாரணமாக, உரிமம் செயல்நிறைவேற்று உபகாரக் கொடுப்பனவைப் பெறுதல் அல்லது பெறாது விடுதல்)

54 உரிமம் உரிமை கொண்டுள்ள ஒப்பந்தம் ஒன்றின் மாறுபடத்தக்க கைமானத்தின் தொகை தொடர்பான நிச்சயமற்ற தன்மையின் விளைவை மதிப்பிடும் போது உரிமம் நிலைத்த தன்மை வாய்ந்த வகையில் ஒரே முறையினை ஒப்பந்தம் முழுமையாகவும் தொடர்ச்சியாகப் பிரயோகித்தல் வேண்டும். மேலும், உரிமம் தமக்கு நியாயமாகக் கிடைக்கத்தக்க அனைத்துத் தகவல்களையும் (வரலாற்று, தற்போதைய மற்றும் எதிர்வுகூறப்பட்ட) கருத்தில் கொண்டு, நியாயமான எண்ணிக்கையிலான சாத்தியமான கைமானத் தொகைகளை அடையாளம் காணும். மாறுபடத்தக்க கைமானத்தின் தொகையினை மதிப்பீடு செய்வதற்காக உரிமம் பயன்படுத்தும் தகவலானது சாதாரண சூழ்நிலைகளில் உரிமத்தின் முகாமைத்துவம் கையகப்படுத்தல் மற்றும் விலை பிரேரித்தல் நிகழ்வுகளில் மற்றும் உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலைகளை உருவாக்கும்போது பயன்படுத்தும் தகவல்களுக்கு ஒத்ததாக இருக்கும்.

***மீளளிப்புக்கான பரிப்புக்கள்***

55 உரிமம் வாடிக்கையாளர் ஒருவரிடம் இருந்து கைமானம் ஒன்றைப் பெற்றுக் கொண்டு, அதன் சில பகுதியை அல்லது முழுமையாக மீளளிப்பதற்காக எதிர்பார்பைக் கொண்டிருக்குமெனில்,

உரிமம் மீளளிப்புக்கான பரிப்பு ஒன்றை உரிமம் ஏற்பிசைவு செய்யும். மீளளிப்புக்கான பரிப்பானது பெறப்பட்ட (பெறப்படத்தக்க) கைமானத்தின் தொகையில் உரிமம் உரிமை கொள்ளத்தக்கது என எதிர்பார்க்கப்பட முடியாத தொகையில் (ஊடுசெயல் விலையில் உள்ளடக்கப்படாத தொகையில்) அளவிடப்படும். மீளளிப்புக்கான பரிப்பு (அது தொடர்பாக ஊடுசெயல் விலையில் ஏற்படத்தக்க மாற்றம் மற்றும் அதன் மூலமான ஒப்பந்தம் செய்யும் தன்மை) அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் சூழ்நிலைகளிலான மாற்றங்கள் என பதிவேற்றம் செய்யப்படல் வேண்டும். திருப்பி அனுப்புவதற்கான உரிமைகள் அற்ற விற்பனை தொடர்பான மீளளிப்புக்காக பரிப்பு ஒன்றிற்குக் கணக்கு வைப்பதற்காக, உரிமம் பந்தி B20-B27 இல் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களைப் பின்பற்றும்.

***மாறுபடத்தக்க கைமானத்தின் வரையறைக்குள்ளாகும் மதிப்பீடுகள்***

56 மாறுபடத்தக்க தொகையுடன் தொடர்புபட்ட நிச்சயமற்ற தன்மை பிற்காலத்தில் தீர்க்கப்பட்டதும் ஏற்பிசைவு செய்யப்பட்ட திரண்ட வருமானத்தில் ஒரு முக்கியத்தன்மை வாய்ந்த மீளப்பெறல் ஏற்படாத சூழ்நிலைக்கான உயர்வான நிகழ்தகவு மட்டத்தில் பந்தி 53க்கு இணக்கமாக மதிப்பிடப்பட்ட மாறுபடத்தக்க கைமான தொகை ஒன்றின் சில அல்லது முழுமையான பகுதிகளையும் உரிமம் ஊடுசெயல் விலையினுள் உள்ளடக்கும்.

57 மாறுபடத்தக்க தொகையுடன் தொடர்புபட்ட நிச்சயமற்ற தன்மை பிற்காலத்தில் தீர்க்கப்பட்டதும் ஏற்பிசைவு செய்யப்பட்ட திரண்ட வருமானத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த மீளப்பெறல் ஏற்படாத சூழ்நிலைக்கான நிகழ்தகவு உயர்வானதா என்பதை மதிப்பீடு செய்யும்போது, உரிமம் வருமானத்தின் மீளப்பெறலின் சாத்தியத்தன்மை மற்றும் தாக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும். தாக்கம் மற்றும் சாத்தியத்தன்மையின் மீது அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய காரணிகள் பின்வருவனவாகக் காணப்படலாம், ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை.

*(a)* கைமானத்தின் தொகையானது உரிமத்தின் கட்டுப்பாட்டுக்கு வெளியான காரணிகளில் பெருமளவில் தொடர்புபட்டுள்ளது. அவ்வாறான காரணிகள் சந்தையின் தளம்பல்கள், மூன்றாம் தரப்பினரது தீர்ப்புக்கள் அல்லது நடத்தைகள், காலநிலை மற்றும் உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் பழுதடைதலுக்கான பாரிய இடர்

*(b)* கைமானத் தொகை தொடர்பான நிச்சயமற்ற தன்மை நீண்ட காலத்துக்கு தீர்க்கப்பட முடியாது இருக்கக்கூடிய எதிர்பார்ப்பு

*(c)* ஒத்த தன்மை வாய்ந்த ஒப்பந்தங்களிலான உரிமத்தின் அனுபவம் (அல்லது வேறு சான்றுகள்) வரையறுக்கப்பட்டவையாக, அல்லது அவ்வாறான அனுபவங்கள் (அல்லது வேறு சான்றுகள்) வரையறுக்கப்பட்ட எதிர்வுகூறல் பெறுமதியைக் கொண்டிருத்தல்

*(d)* உரிமம் ஒத்த தன்மை வாய்ந்த ஒப்பந்தங்களில், ஒத்த சூழ்நிலைகளில் பாரிய வீச்சிலான விலைச் சலுகைகளை வழங்கும் அல்லது ஒப்பந்தக் கொடுப்பனவுக் கட்டுறுப்புக்களை மாற்றும் வழக்கத்தைக் கொண்டிருத்தல்

*(e)* ஒப்பந்தமானது பாரிய எண்ணிக்கைகளிலான மற்றும் விசாலமான வீச்சிலான சாத்தியமான கைமானத் தொகைகளைக் கொண்டிருத்தல்

58 உரிமம் ஒன்று புலமைச் சொத்து ஒன்றின் அனுமதிப்பத்திரத்துக்கான பரிமாற்றத்தில் உறுதிவழங்கப்பட்ட விற்பனை அடிப்படையிலான அல்லது பயன்பாட்டு அடிப்படையிலான இறைகள் தொடர்பான கைமானத்தினை கணக்கீடு செய்யும் பொழுது பந்தி B63 இனைப் பிரயோகித்தல் வேண்டும்.

***மாறுபடும் கைமானத்தின் மீள் மதிப்பீடு***

59 ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும், உரிமம் அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் உள்ள சூழ்நிலைகளை உண்மையான முறைகள் மற்றும் அறிக்கையிடல் காலப் பகுதியில் இடம்பெற்ற மாற்றங்கள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகவும், மதிப்பிடப்பட்ட ஊடுசெயல் விலைகளை (மாறும் கைமானத்தின் மதிப்பீடு வரையறைகளுக்கு உள்ளானதா என்பது தொடர்பான மதிப்பீட்டைப் பதிவேற்றம் செய்தல் உள்ளடங்கலாக) பதிவேற்றம் செய்தல் வேண்டும். ஊடுசெயல் விலைகளிலான மாற்றங்களுக்கு உரிமம் பந்திகள் 87-90க்கு இணக்கமான முறையில் கணக்கீட்டை மேற்கொள்ளல் வேண்டும்.

***ஒப்பந்தத்தில் ஒரு முக்கிய நிதியிடல் ஆக்கக்கூறு ஒன்று காணப்படுதல்***

60 வாடிக்கையாளர் அல்லது உரிமத்துக்கு, வாடிக்கையாளருக்கு பொருட்கள் அல்லது வேவையை மாற்றுவதற்கான ஒரு முக்கியமான நிதியிடல் நன்மையை வழங்கும் காலப் பகுதிகளிலான கொடுப்பனவுகள் ஓப்பந்தத் தரப்பினரால் இணங்கப்பட்டிருப்பின் (வெளிப்படையாகவோ அல்லது உள்ளார்ந்தமாகவோ) ஊடுசெயல் விலையைத் தீர்மானித்தலில், கைமானத்தின் உறுதியளிக்கப்பட்ட தொகையினை பணத்தின் காலப் பெறுமதிக்கு சீராக்குதல் வேண்டும். அவ்வாறான சூழ்நிலைகளில், ஒப்பந்தமானது ஒரு முக்கிய நிதியிடல் ஆக்கக்கூற்றைக் கொண்டுள்ளது. ஒப்பந்தத்துக்கு நிதியிடுவதற்கான உறுதிவழங்கல் வெளிப்படையாகவா அல்லது உள்ளார்ந்தமாகவா ஒப்பந்தத் தரப்பினரால் இணங்கிக் கொள்ளப்பட்டுள்ள கட்டுறுப்புக்கள் என்பதைக் கருத்தில் கொள்ளாது, முக்கிய நிதியிடல் ஆக்கக்கூறு காணப்படலாம்.

61 கைமானத்தின் உறுதி வழங்கப்பட்ட தொகையை முக்கிய நிதியிடல் ஆக்கக்கூறுக்காக சீராக்கும்போது, அதன் நோக்கமானது, உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு மாற்றும்போது, அவர் பணமாகச் செலுத்தியிருப்பின் (அதாவது, பண விற்பனை விலை) செலுத்தியிருக்கக்கூடிய தொகைகளை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய விலையில் உரிமம் வருமானத்தை ஏற்பிசைவு செய்தல் ஆகும். ஒப்பந்தம் ஒன்று முக்கியத் தன்மை வாய்ந்த நிதியிடல் ஆக்கக்கூறு ஒன்றைக் கொண்டுள்ளதா மற்றும் அவ்வாறான நிதியிடல் ஆக்கக்கூறு ஒப்பந்தத்திற்கு முக்கியத் தன்மை வாய்ந்ததா என்பதை மதிப்பீடு செய்யும் பொழுது, உரிமம் ஒன்று பின்வரும் இரண்டும் உள்ளடங்கலான அவசியமான அனைத்துத் தரவுகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளும்.

(a) உறுதியளிக்கப்பட்ட கைமானத்தின் தொகை மற்றும் உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் பண விற்பனை விலை ஆகியவற்றுக்கு இடையில் வேறுபாடுகள் எவையேனும் இருப்பின், அவ் வேறுபாடுகள் மற்றும்

(b) பின்வரும் இரண்டினதும் இணைந்த விளைவு:

   (i) உரிமம் வாடிக்கையாளருக்கு உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுதல் மற்றும் அப் பொருட்கள் அல்லது சேவைகளுக்காக வாடிக்கையாளர் கொடுப்பனவை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் காலப்பகுதிகளுக்கு இடையிலான கால வேறுபாட்டின் எதிர்பார்க்கப்பட்ட அளவு

   (ii) பொருத்தமான சந்தையில் காணப்படும் தற்போதைய வட்டி வீதங்கள்

62 பந்தி 61 இல் குறிப்பிடப்பட்ட கணிப்பீட்டைக் கருத்தில் கொள்ளாது, பின்வரும் காரணிகளில் ஏதேனும் ஒன்று காணப்படின், வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்று முக்கிய நிதியிடல் ஆக்கக்கூறு ஒன்றைக் கொண்டிருப்பதில்லை:

(a) வாடிக்கையாளர் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக முன்கூட்டியே கொடுப்பனவை மேற்கொண்டிருக்க, பொருட்கள் அல்லது சேவைகளின் மாற்றத்துக்கான காலப்பகுதி வாடிக்கையாளரின் விருப்பத்தில் முடிவு செய்யப்படல்

(b) வாடிக்கையாளரால் உறுதி வழங்கப்பட்ட கைமானத்தின் தொகையின் கணிசமான பகுதி மாறும் தொகையாக இருக்க, கைமானத்தின் தொகை அல்லது காலப்பகுதி மாற்றமடைவதைத் தீர்மானிக்கக்கூடிய எதிர்கால நிகழ்வு ஒன்றின் இடம்பெறுகை அல்லது இடம்பெறாத் தன்மையானது கணிசமான அளவில் உரிமத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத போது (உதாரணமாக, ஒப்பந்தமானது விற்பனை அடிப்படையிலான இறையாக இருத்தல்)

(c) உறுதியளிக்கப்பட்ட கைமானம் மற்றும் பொருட்கள் அல்லது சேவைகளின் பண விலை (பந்தி 61 இல் விபரிக்கப்பட்டவாறு) ஆகியவற்றுக்கு இடையில் ஏற்படும். வேறுபாடானது உரிமம் அல்லது வாடிக்கையாளருக்கு நிதியிடல் தவிர்ந்த ஏனைய காரணங்களினால் ஏற்பட, அத் தொகைகளுக்கு இடையிலான வேறுபாடு அதற்காள காரணத்தின் விகிதாசாரமாகக் காணப்படல். உதாரணமாக, கொடுப்பனவு கட்டுறுப்புக்கள் உரிமம் அல்லது வாடிக்கையாளருக்கு மற்றைய தரப்பினர் ஒப்பந்தத்தின் படியான கடப்பாடுகளில் ஒருசிலவற்றை அல்லது அனைத்தையும் முறைப்படி நிறைவேற்றத் தவறுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளில் இருந்து பாதுகாப்பு வழங்கக்ககூடும்.

63 ஒரு நடைமுறை விடயமாக, உரிமம் ஒன்று ஒப்பந்தத்தின் ஆரம்பத்திலேயே வாடிக்கையாளருக்கு உரிமப் பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றம் செய்தல் மற்றும் பொருட்கள் அல்லது சேவைகளுக்காக வாடிக்கையாளர் கொடுப்பனவை மேற்கொள்ளுவதற்கு இடையேயான காலப்பகுதியானது ஒரு வருடம் அல்லது அதற்குக் குறைவாகக் காணப்படும் என உரிமம் எதிர்பார்க்குமாயின், கைமானத்தின் உறுதிவழங்கிய தொகையை முக்கிய நிதியிடல் ஆக்கக் கூறுகளுக்காக சீராக்க வேண்டிய தேவையில்லை.

64 முக்கிய நிதியீட்ட ஆக்கக்கூறு ஒன்றுக்காக கைமானத்தின் உறுதி வழங்கப்பட்ட தொகையினை சீராக்கும்போது பந்தி 61 இன் நோக்கங்களைத் திருப்தி செய்வதற்காக, உரிமம் ஒப்பந்த ஆரம்பத்தில் உரிமத்துக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான தனியான ஊடுசெயல் ஒன்றிலே பிரதிபலிக்கப்பட்டிருக்கக்கூடிய கழிவு வீதம் ஒன்றினைப் பயன்படுத்தல் வேண்டும். இந்த வீதமானது ஒப்பந்தத்தில் நிதியீட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் தரப்பினரது கடன்சார் தகவல்களையும், ஒப்பந்தத்தில் மாற்றப்படும் சொத்துக்கள் உள்ளடங்கலான உரிமத்துக்கு வாடிக்கையாளரினால் வழங்கப்பட்ட ஏதேனும் பிணைகள் அல்லது பாதுகாப்புக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துதல் வேண்டும். உரிமம் உறுதிவழங்கப்பட்ட கைமானத்தின் பெயரளவுப் பெறுமதியினை பொருட்கள் அல்லது சேவைகள் வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் போது வாடிக்கையாளர் பணமாகச் செலுத்தும் விலைக்குக் கழிவிடுவதற்கான வீதத்தினை அடையாளம் காண்பதன் மூலம் அந்த வீதத்தினைத் தீர்மானிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஓப்பந்தத்தின் ஆரம்பத்திற்குப் பின்னர், உரிமம் வட்டி வீதங்களிலான மாற்றங்கள் அல்லது ஏனைய சூழ்நிலைகளிலான மாற்றங்கள் (வாடிக்கையாளரது கடன் இடரிலான மதிப்பீட்டு மாற்றம் முதலானவை) காரணமாகக் கழிவு வீதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தல் ஆகாது.

65 உரிமம் நிதியீட்டத்தின் விளைவுகளை (வட்டி வருமானம் அல்லது வட்டிச் செலவினங்கள்) வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானங்களிலிருந்து வேறாக முற்றடக்க வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்தும். வட்டி வருமானம் அல்லது வட்டிச் செலவினங்கள் வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றிற்கான கணக்கீட்டின்போது *ஒப்பந்தச் சொத்து* (வருமதி) அல்லது ஒப்பந்தப் பரிப்பு ஒன்று ஏற்பிசைவு செய்யப்பட்ட அளவில் மாத்திரம் ஏற்பிசைவு செய்யப்படும்.

**பணமல்லாத கைமானங்கள்**

66 வாடிக்கையாளர் பணம் தவிர்ந்த வேறு வடிவங்களில் கைமானத்தை உறுதி வழங்கும் ஒப்பந்தம் ஒன்றில் ஊடுசெயல் விலையினைத் தீர்மானிப்பதற்காக உரிமம் அந்த பணமல்லாத கைமானத்தினை (அல்லது பணமல்லாத கைமானத்துக்கான உறுதி வழங்கலை) சீர்மதிப்பில் அளவிடுதல் வேண்டும்.

67 உரிமம் பணமல்லாத கைமானத்தின் சீர்மதிப்பினை நியாயாமான முறையில் அளவிட முடியாத போது, உரிமம் கருதுபொருளினை மறைமுகமான முறையில் கைமானத்துக்கான பரிமாற்றாக வாடிக்கையாளருக்கு (அல்லது வாடிக்கையாளர் வகுப்புக்கு) உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் தயார்நிலை விற்பனை விலைகளைக் கொண்டு மதிப்பிடும்.

68 பணமல்லாத கைமானத்தின் சீர்மதிப்பு கைமானத்தின் தோற்றப்பாட்டின் காரணமாக வேறுபடலாம் (உதாரணமாக, உரிமம் வாடிக்கையாளரிடம் இருந்து பெறத்தக்கதாகவுள்ள பங்கு ஒன்றின் விலையில் ஏற்படும் மாற்றம்). வாடிக்கையாளரிடம் இருந்து பெறத்தக்கதாகவுள்ள கைமானத்தின் சீர்மதிப்பு அதன் தோற்றப்பாடு தவிர்ந்த ஏனைய காரணங்களால் வேறுபடும் பொழுது (உதாரணமாக, உரிமத்தின் செயற்பாடு காரணமாக சீர்மதிப்பு வேறுபடலாம்), உரிமம் பந்திகள் 56-58 இன் தேவைப்பாடுகளைப் பிரயோகிக்கும்.

69 உரிமம் ஒப்பந்தத்தைத் திருப்தி செய்வதற்காக வாடிக்கையாளர் பொருட்கள் அல்லது சேவைகளுக்குப் பங்களிப்பு செய்யின் (உதாரணமாக, மூலப்பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஊழியர்), உரிமம் அவ்வாறான பொருட்கள் அல்லது சேவைகளுக்கான கட்டுப்பாட்டைப் பெற்றுக் கொள்கிறதா என்பதை மதிப்பிடும். அவ்வாறெனின், பெறப்பட்ட பொருட்கள் அல்லது சேகைளை உரிமம் வாடிக்கையாளரிடம் இருந்து பெறப்பட்ட கைமானமாகக் கணக்கிடல் வேண்டும்.

**வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டிய கைமானம்**

70 வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய கைமானமானது உரிமம் வாடிக்கையாளருக்கு (அல்லது வாடிக்கையாளரிடம் இருந்து பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்யும் வேறு தரப்பினருக்கு) செலுத்தும் அல்லது செலுத்த எதிர்பார்க்கும் பணத் தொகையை உள்ளடக்கும். வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய கைமானமானது மேலும் உரிமத்துக்குப் பரிப்பாகவுள்ள தொகைகளுக்கு எதிராகப் பிரயோகிக்கக்கூடிய கடன் அல்லது வேறு உருப்படிகளையும் (உதாரணமாக கூப்பன் அல்லது உறுதிச் சீட்டு) உள்ளடக்கலாம். வாடிக்கையாளருக்கான கொடுப்பனவானது வேறுபட்ட பொருள் அல்லது சேவை ஒன்றுக்கான பரிமாற்றாக வாடிக்கையாளர் உரிமத்துக்கு மாற்றுவதாக இல்லாதவிடத்து (பந்தி 50-58 இல் குறிப்பிடப்பட்டவாறாக), உரிமம் வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய தொகைகளுக்கு ஊடுசெயல் விலைகளில் ஒரு குறைப்பாக, அதன் மூலமாக ஒரு வருமானமாகக் கணக்கிடப்படும். வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய கைமானத்தின் மாறும் தொகை ஒன்றினை உள்ளடக்கியிருப்பின், உரிமம் ஊடுசெயல் விலையினை (மாறும் கைமானத்துக்கான மதிப்பீடு தலையீடுகளுக்கு உட்பட்டதா என்பது உள்ளடங்கலாக) பந்தி 50-58க்கு அமைவாகத் தீர்மானித்துக் கொள்ளும்.

71 வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய கைமானமானது வாடிக்கையாளரிடம் இருந்தான தனித்துவமான பொருள் அல்லது சேவை ஒன்றுக்கான கொடுப்பனவாகக் காணப்படின், உரிமம் அப் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான கொள்வனவை ஏனைய வழங்குனர்களிடமிருந்தாக கொள்வனவுக்குக் கணக்கீடு செய்யும் அதே முறையிலேயே கணக்கிடப்படும். வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய கைமானத் தொகையானது உரிமம் வாடிக்கையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் பொருட்கள் அல்லது சேவைகளின் சீர்மதிப்பிலும் அதிகமாகக் காணப்படுமிடத்து, அந்த மேலதிகத்தை உரிமம் ஊடுசெயல் விலையில் ஒரு

குறைப்பாகக் கணக்கிடப்படும். வாடிக்கையாளரிடம் இருந்த கிடைக்கும் பொருட்கள் அல்லது சேவைகளின் சீர்மதிப்பை உரிமம் நியாயாமான முறையில் அளவிட முடியாத போது, உரிமம் வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டிய முழுமையான கைமானத்தையும் ஊடுசெயல் விலையின் குறைப்பாகக் கணக்கிடும்.

72 அவ்வாறாக, வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய கைமானம் ஊடுசெயல் விலையின் குறைப்பாகக் கணக்கிடப்படின், உரிமம் பின்வரும் நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்று நிகழும்போது அல்லது அதன் பின்னர் வருமானத்தில் குறைவை ஏற்பிசைவு செய்யும்:

(a) உரிமம் வாடிக்கையாளருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றம் செய்யும்போது வருமானத்தை ஏற்பிசைவு செய்தல், மற்றும்

(b) உரிமம் கைமானத்துக்கு கொடுப்பனவை மேற்கொள்ளும்போது அல்லது மேற்கொள்வதற்கு உறுதி வழங்கும்போது (கொடுப்பனவு எதிர்கால நிகழ்வு ஒன்றில் தங்கியிருப்பினும் கூட). இந்த உறுதி வழங்கலானது உரிமத்தின் வழக்கமான வியாபார நடைமுறைகளில் உள்ளார்ந்தமானதாகக் காணப்படலாம்.

**ஊடுசெயல் விலையை செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்தல்**

73 **ஊடுசெயல் விலையை ஒதுக்கீடு செய்வதற்கான நோக்கமானது, உரிமம் ஊடுசெயல் விலையினை ஒவ்வொரு பெறுபேற்று கடப்பாடுகளுக்கும் உரிமம் வாடிக்கையாளருக்குப் பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றம் செய்யும் பரிமாற்றத்தின்போது உரிமை கொள்ளத்தக்கதாக எதிர்பார்க்கக்கூடிய கைமான தொகைகளைக் காட்டக்கூடிய வகையில் ஒதுக்கீடு செய்வதாகும்.**

74 இந்த ஒதுக்கீட்டு நோக்கத்தினை நிறைவு செய்வதற்காக, ஊடுசெயல் விலையினை பந்திகள் 81-83 (கழிவீடுகளை ஒதுக்கீடு செய்வதற்காக) மற்றும் பந்திகள் 84-86 (மாறுபடும் தொகைகளை உள்ளடக்கிய கைமானங்களை ஒதுக்கீடு செய்வதற்காக) இல் விசேடமாகக் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் ஒப்பந்தத்தில் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு பெறுபேற்று கடப்பாடுகளுக்கும் சார்பளவான நிலைத்த விலை அடிப்படையில் பந்தி 76-80க்கு அமைவாக ஒதுக்கீடு செய்யும்.

75 ஒப்பந்தம் ஒன்று ஒரேயொரு செயல்நிறைவேற்று கடப்பாட்டை மாத்திரம் கொண்டிருப்பின் பந்திகள் 76-86 பிரயோகிக்கப்படுவதில்லை. எனினும், உரிமம் பந்தி 22(ஆ)க்கு அமைவான முறையில் தனியார் செயல்நிறைவேற்று கடப்பாடாக அடையாளம் காணப்பட்ட தனித்துவமான பொருட்கள் அல்லது சேவைகளின் தொடரான மாற்றல் ஒன்றுக்கான உறுதி வழங்கியிருப்பதுடன் உறுதி வழங்கப்பட்ட கைமான மாறுபடும் தொகைகளை உள்ளடக்கி இருக்கும்போது பந்திகள் 84-86 பிரயோகிக்கப்படலாம்.

**நிலைத்த விற்பனை விலைகளின் அடிப்படையிலான ஒதுக்கீடு**

76 ஊடுசெயல் விலையினை ஒவ்வொரு செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கும் ஒரு சார்பளவான நிலைத்த விற்பனை விலைகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்காக உரிமம் ஒப்பந்தத்திலுள்ள ஒவ்வொரு செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்குமான தனித்தன்மை வாய்ந்த பொருட்கள் அல்லது சேவைகளுக்கான ஒப்பந்தத்தின் ஆரம்பத்திலேயே நிலைத்த விலைகளைத் தீர்மானித்துக் கொண்டு அந்த நிலைத்த தன்மையான விற்பனை விலைகளின் அடிப்படையின் விகிதாசாரத்தில் ஊடுசெயல் விலைகளை ஒதுக்கீடு செய்து கொள்ளும்.

77 நிலைத்த விற்பனை விலை என்பது உறுதி வழங்கிய பொருட்கள் அல்லது சேவைகளை உரிமம் வாடிக்கையாளருக்கு வேறாக விற்பனை செய்யும் விலை ஆகும். நிலைத்த விற்பனை விலைக்கான ஒரு மிகச்சிறந்த சான்றாக உரிமம் ஒத்த தன்மையான வாடிக்கையாளர்களுக்கு

ஒத்த சந்தைச் சூழ்நிலைகளில் பொருட்கள் அல்லது சேவைகளை வேறாக விற்பனை செய்யும் போது அவதானிக்கக்கூடிய விலைகள் ஆகும். பொருள் அல்லது சேவை ஒன்றுக்கான ஓப்பந்தக் குறிப்பு விலை அல்லது பட்டியல் விலையானது அப் பொருள் அல்லது சேவைக்கான நிலைத்த விலையாகக் காணப்படலாம் (ஆனால் அவ்வாறு இல்லை எனவும் எடுகோள் கொள்ளப்படலாம்).

78 நிலைத்த விலையானது நேரடியாக அவதானிக்கப்பட முடியாத போது, உரிமம் நிலைத்த விலையினை பந்தி 73 இன் ஒதுக்கீட்டு நோக்கங்களைத் திருப்தி செய்யும் ஊடுசெயல் விலைகளின் ஒதுக்கீட்டின் போதான தொகைகளில் மதிப்பிட்டுக் கொள்ளும். தனித்த விற்பனை விலைகளை மதிப்பிடும்போது உரிமம் நியாயமான முறையில் தமக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள அனைத்துத் தகவல்கள் மற்றும் சூழ்நிலைகளை (சந்தை சூழ்நிலைகள், உரிமம் தொடர்பான பிரத்தியேகக் காரணிகள் மற்றும் வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளர் வகுப்புக்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கலாக) கருத்தில் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யும்போது உரிமம் அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளின் பயன்பாட்டை உச்சப்படுத்துவதுடன் ஒத்த சூழ்நிலைகளிலான மதிப்பீட்டு முறைகளை நிலைமாறாத வகையில் பிரயோகிக்கும்.

79 பொருள் அல்லது சேவை ஒன்றின் தனியான விற்பனை விலையினை மதிப்பிடுவதற்கான பொருத்தமான முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும், ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை:

(a) சீராக்கப்பட்ட சந்தை மதிப்பீட்டு அணுகுமுறை – உரிமம் அது பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்யும் சந்தையை ஆய்வு செய்து அந்த பொருட்கள் அல்லது சேவைகளுக்காக வாடிக்கையாளர் ஒருவர் செலுத்த விரும்பும் விலையை மதிப்பீடு செய்ய முடியும். அந்த அணுகுமுறை ஒத்த தன்மை வாய்ந்த பொருட்கள் அல்லது சேவைகளுக்கான போட்டியாளர்களது விலைகள் தொடர்பான குறிப்பீடுகளை உள்ளடக்கி, உரிமத்தின் கிரயம் மற்றும் இலாப எல்லைகளை பிரதிபலிக்கக்கூடிய அவசியமான சீராக்கங்களை மேற்கொள்ளுதலை உள்ளடக்கலாம்.

(b) எதிர்பார்க்கப்பட்ட கிரயத்துடன் இலாப எல்லை – உரிமம் பெறுபேற்று கடப்பாடு ஒன்றைத் திருப்தி செய்வதற்கான அதன் எதிர்பார்க்கப்பட்ட கிரயத்தினை மதிப்பிட்டு அதனுடன் பொருள் அல்லது சேவைக்கான பொருத்தமான இலாப எல்லையை சேர்க்க முடியும்.

(c) மீதமுள்ள தொகை அணுகுமுறை – உரிமம் நிலைத்த விற்பனை விலையை மொத்த ஊடுசெயல் விலையில் இருந்து ஒப்பந்தத்தில் உறுதி வழங்கப்பட்ட ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் அவதானிக்கக்கூடிய நிலைத்த விற்பனை விலைகளின் கூட்டுத் தொகையைக் கழிப்பதன் மூலம் நிலைத்த விற்பனை விலையை மதிப்பிட முடியும். எனினும், பந்தி 78க்கு அமைவாக உரிமம் ஒன்று பொருள் அல்லது சேவைக்கான பின்வரும் அடிப்படைகளில் ஏதேனும் ஒன்று நிறைவு செய்யப்பட்டால் மாத்திரமே நிலைத்த விற்பனை விலைகளை மதிப்பிடுவதற்காக மீதமுள்ள தொகை முறையைப் பயன்படுத்த முடியும்:

(i) உரிமம் ஒரே வகையான பொருட்கள் அல்லது சேவைகளை வேறுபட்ட வாடிக்கையாளர்களுக்கு பல்வகைத் தன்மையான வீச்சுக்களில் விற்பனை செய்தல் அல்லது

(ii) உரிமம் குறித்த பொருள் அல்லது சேவைக்கு இன்னமும் விலையை உருவாக்கிக் கொள்ளாது இருப்பதுடன் இதற்கு முன்னர் அந்தப் பொருள் அல்லது சேவை தனியான அடிப்படையில் விற்பனை செய்யப்படவில்லை (அதாவது விற்பனை விலை நிச்சயமில்லை)

80 இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் பெருமளவில் உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் தனித்த தன்மையான விற்பனை விலைகளை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டு முறைகளின் சேர்க்கை பயன்படுத்தப்பட வேண்டி ஏற்படலாம். உதாரணமாக, உரிமம் பெருமளவில் மாறுபடக்கூடிய அல்லது நிச்சயமற்ற தனியான விலைகளைக் கொண்ட உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் திரண்ட விற்பனை விலையை மதிப்பிடுவதற்காக மீதமுள்ள தொகை அணுகுமுறையைப் பயன்படுத்துவதுடன் அவ்வாறு மீதமுள்ள தொகை அணுகுமுறையில் மதிப்பிடப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் தனித்த விலைகளை மதிப்பிடுவதற்காக மற்றொரு முறையைப் பயன்படுத்தக்கூடும். உரிமம் ஒப்பந்தத்தில் உள்ள ஒவ்வொரு பொருட்கள் அல்லது சேவைகளின் தனியான விலைகளை மதிப்பிடுவதற்காக வெவ்வேறு முறைகளின் சேர்க்கையைப் பயன்படுத்தும்போது, அவ்வாறு மதிப்பிடப்பட்ட தனித்த தன்மையான விலைகளில் ஊடுசெயல் விலையினை ஒதுக்கீடு செய்தல் பந்தி 73 இன் ஒதுக்கீட்டு நோக்கத்துடன் மற்றும் பந்தி 78 இன் தனியான விற்பனை விலைகளை மதிப்பீடு செய்வதற்கான நோக்கத்துடன் இணக்கமாக தன்மையானதாக இருக்குமா என்பதனை ஆய்வு செய்தல் வேண்டும்.

**கழிவீட்டை ஒதுக்கீடு செய்தல்**

81 ஒப்பந்தம் ஒன்றின் உறுதி வழங்கப்பட்ட கைமானத்தை விட அவ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் தனித்த விற்பனை விலையானது அதிகமாகக் காணப்படின், வாடிக்கையாளர் பொருட்களைத் தொகுதியாகக் கொள்வனவு செய்வதன் மூலம் கழிவீடு ஒன்றைப் பெற்றுக் கொள்கிறார். உரிமம் பந்தி 82க்கு அமைவாக முழுமையான கழிவீடும் ஒரு சில பொருட்கள் அல்லது சேவைகளுக்கு மாத்திரமானது, முழுமையான ஒப்பந்தப் செயல்நிறைவேற்று கடப்பாட்டுக்கானது அல்ல என்பதற்கான அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளைக் கொண்டுள்ளபோது தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் உரிமம் கழிவீட்டினை முழுமையான செயல்நிறைவேற்று கடப்பாட்டுக்கும் விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும். அவ்வாறான சூழ்நிலைகளிலான கழிவீட்டின் விகிதாசார ஒதுக்கீடானது உரிமம் ஊடுசெயல் விலையினை ஒவ்வொரு செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கும் தொடர்புபட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் சார்பளவான நிலைத்த விற்பனை விலைகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதன் விளைவு ஆகும்.

82 பின்வரும் மூலப்பிரமாணங்கள் அனைத்தும் திருப்தி செய்யப்பட்டால் மாத்திரம் உரிமம் கழிவீட்டினை ஒரு சில பொருட்கள் அல்லது சேவைகளுக்கு மாத்திரமாக, முழுமையான ஒப்பந்தப் செயல்நிறைவேற்று கடப்பாட்டுக்காக அல்லாது ஒதுக்கீடு செய்யும்:

a) உரிமம் வழக்கமாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தனித்தன்மையான பொருட்கள் அல்லது சேவைகளை (அல்லது ஒவ்வொரு தனித்தன்மையான பொருட்கள் சேவைகளின் தொகுதியை) தனியான முறையில் விற்பனை செய்தல்

b) மேலும் உரிமம் வழக்கமாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட சிலவகையான தனித்தன்மையான பொருட்கள் அல்லது சேவைகளை அவற்றின் ஒவ்வொரு தொகுதிகளிலுமுள்ள நிலைத்த விற்பனை விலைகளில் கழிவிடப்பட்டு விற்பனை செய்தல், மற்றும்

c) பந்தி 82(ஆ) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பொருட்கள் அல்லது சேவைகளுக்குத் தாக்கல் செய்யக்கூடிய கழிவீடுகள் ஒப்பந்தத்தின் கழிவீட்டுக்கு கணிசமான வகையில் சமமாகக் காணப்படுவதுடன் ஒவ்வொரு பொருட்கள் அல்லது சேவைகளின் தொகுதியின் பகுப்பாய்வு ஒப்பந்தத்தின் மொத்தக் கழிவீடும் சொந்தமானதாகக் காணப்படும் செயல்நிறைவேற்று கடப்பாடு (அல்லது கடப்பாடுகள்) தொடர்பான அவதானிக்கக்கூடிய சான்றுகளை வழங்குதல்

83 கழிவீடு ஒன்று ஒப்பந்தத்தில் உள்ள ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கு பந்தி 82க்கு அமைவாக ஒதுக்கீடு செய்யப்படின், உரிமம் பந்தி 79(இ)க்கு

அமைவாக நிலைத்த விற்பனை விலைகளை மதிப்பிடுவதற்காக மீதமுள்ள தொகை அணுகுமுறையைப் பயன்படுத்துவதற்கு முன்னர் கழிவீடுகளை ஒதுக்கீடு செய்யும்.

**மாறும் கைமானத்தை ஒதுக்கீடு செய்தல்**

84 ஒப்பந்தம் ஒன்றில் உறுதி வழங்கப்பட்ட மாறும் கைமானமானது ஒப்பந்தத்தின் முழுமையான பகுதிகளுக்குமோ அல்லது குறித்த சில பகுதிகளுக்கு மாத்திரமோ, பின்வரும் ஏதேனும் ஒருமுறையில் சுமத்தக்கூடியதாக இருக்கலாம்:

(*a*) ஒப்பந்தத்தில் உள்ள ஒரு சில செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கு மாத்திரம், அனைத்துக்கும் அல்ல (உதாரணமாக, உபகாரக் கொடுப்பனவானது உரிமம் குறித்த காலப்பகுதியினுள் பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதில் தங்கியிருத்தல்), அல்லது

(*b*) பந்தி 22(ஆ)க்கு அமைவாக ஒரு தனித்த செயல்நிறைவேற்று கடப்பாட்டை உருவாக்கக்கூடிய வேறுபட்ட பொருட்கள் சேவைகளை தொடராக வழங்குவதற்கு உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் ஒரு சில, ஆனால் அனைத்தும் அல்ல (உதாரணமாக, இரண்டு வருட சுத்திகரிப்பு சேவை ஒப்பந்தம் ஒன்றின் இரண்டாம் வருடத்துக்கான உறுதி வழங்கப்பட்ட கைமானமானது குறித்த பணவீக்க சுட்டி ஒன்றின் நகர்வின் அடிப்படையில் அதிகரிக்கும்)

85 பின்வரும் மூலப்பிரமாணங்கள் திருப்தி செய்யப்பட்டால், உரிமம் மாறுபடும் தொகையை (மற்றும் பிற்காலத்திலான அத் தொகையின் மாற்றங்கள்) முழுமையான ஒரு செயல்நிறைவேற்று கடப்பாட்டுக்கு அல்லது பந்தி 22(ஆ)க்கு அமைவாக தனித்த செயல்நிறைவேற்று கடப்பாட்டை உருவாக்கும் வேறுபட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கு ஒதுக்கீடு செய்யும்:

(*a*) மாறுபடும் தொகையின் கட்டுறுப்பானது உரிமம் செயல்நிறைவேற்று கடப்பாட்டைத் திருப்தி செய்வதற்கான அல்லது வேறுபட்ட பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்கான முயற்சிகளில் (அல்லது செயல்நிறைவேற்று கடப்பாட்டைத் திருப்தி செய்யும் அல்லது வேறுபட்ட பொருட்கள் சேவைகளை மாற்றும் பிரத்தியேகமான வெளியீடு ஒன்றில்) பிரத்தியேகமாக தொடர்புபடுதல், மற்றும்

(*b*) கைமானத்தின் மாறுபடும் தொகையை செயல்நிறைவேற்று கடப்பாட்டுக்கு அல்லது வேறுபட்ட பொருட்கள் சேவைகளுக்கு பந்தி 73 இன் ஒதுக்கீட்டு நோக்கங்களுக்கு இணக்கமான வகையில் ஒப்பந்தத்தின் அனைத்து செயல்நிறைவேற்று கடப்பாடுகள் மற்றும் கொடுப்பனவு நிபந்தனைகளைக் கருத்தில் கொள்ளும்போது முழுமையாக ஒதுக்கீடு செய்தல்

86 பந்தி 85 இன் மூலப்பிரமாணங்களைத் திருப்தி செய்யாத ஊடுசெயல் விலைகளின் மீதமுள்ள தொகையினை ஒதுக்கீடு செய்வதற்காக பந்திகள் 73-83 இல் உள்ள ஒதுக்கீட்டுத் தேவைப்பாடுகள் பிரயோகிக்கப்படலாம்.

**ஊடுசெயல் விலையிலான மாற்றங்கள்**

87 ஒப்பந்ததம் ஒன்றின் உருவாக்கத்துக்குப் பின், ஊடுசெயல் விலைகள் நிச்சயமற்ற நிகழ்வுகளின் உருவாக்கம் அல்லது உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் பரிமாற்றத்தில் இருந்த உரிமம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் கைமான தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளிலான மாற்றங்கள் உள்ளடங்கலான பல்வேறு காரணங்களால் மாற்றமடையலாம்.

88 உரிமம் ஊடுசெயல் விலைகளிலான பிற்கால மாற்றங்களுக்கு முரணாக, ஒப்பந்த உருவாக்கத்தில் காணப்பட்ட அடிப்படையிலேயே செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கான ஒதுக்கீட்டை மேற்கொள்ளலாம். அதன் விளைவாக, உரிமம் ஒப்பந்த உருவாக்கத்துக்குப் பின்னரான நிலைத்த விற்பனை விலைகளிலான மாற்றங்களைப் பிரதிபலிக்கத்தக்க வகையில்

ஊடுசெயல் விலைகளை மீள் ஒதுக்கீடு செய்யாது. திருப்தி செய்யப்பட்ட பெறுபேற்று கடப்பாடு ஒன்றுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகள் ஊடுசெயல் விலைகள் மாற்றமடையும் காலப்பகுதியில் ஒரு வருமானமாக அல்லது வருமானத்தில் ஒரு குறைப்பாக ஏற்பிசைவு செய்யப்படும்.

89 உரிமம் மாறுபடும் கைமானத்தை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான பந்தி 85 இன் மூலப்பிரமாணங்கள் திருப்தி செய்யப்பட்டால் மாத்திரமே ஊடுசெயல் விலையிலான மாற்றத்தினை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆனால் அனைத்துக்கும் அல்லாத வகையில் செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கு அல்லது பந்தி 22(ஆ)க்கு அமைவான ஒரு தனியான செயல்நிறைவேற்று கடப்பாடாக உள்ள உறுதி வழங்கப்பட்ட தனித்தன்மையான பொருட்கள் அல்லது சேவைகளின் தொடர்களுக்கு ஒதுக்கீடு செய்யும்.

90 உரிமம் பந்தி 18-21க்கு அமைவான ஒப்பந்தத் திருத்தம் ஒன்றின் விளைவாக எற்படும் ஊடுசெயல் விலையிலான மாற்றம் ஒன்றிற்குக் கணக்கீட்டை மேற்கொள்ளும். எனினும், ஒப்பந்தத் திருத்தம் ஒன்றுக்குப் பின்னான ஊடுசெயல் விலை மாற்றம் ஒன்றின்போது, ஊடுசெயல் விலை மாற்றத்தினை ஒதுக்கீடு செய்ய பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு பொருத்தமான முறையினைப் பிரயோகிப்பதற்காக பந்தி 87-89 இனைப் பிரயோகிக்கும்.

*(a)* உரிமம் ஊடுசெயல் விலையிலான மாற்றத்தை, திருத்த்ங்களுக்கு முன்னர் ஊடுசெயல் விலையிலான மாற்றமானது திருத்தத்துக்கு முன்னர் உறுதி வழங்கப்பட்ட மாறும் கைமானத்தின் மீது சுமத்தக்கூடியதாக இருப்பதுடன், அத் திருத்தம் பந்தி 21(ஆ) க்கு அமைவாக கணக்கீடு செய்யப்பட்டிருப்பின், விலை மாற்றம் மாறும் கைமான மீது சுமத்தக்கூடிய அளவுக்கு மாத்திரம் ஒப்பந்தத்தில் அடையாளம் காணப்பட்ட செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்யும்.

*(b)* பந்தி 20க்கு அமைவாக திருத்தம் ஒரு தனியான ஒப்பந்தமாகக் கணக்கீடு செய்யப்படும் ஏனைய சகல சந்தர்ப்பங்களிலும், உரிமம் ஊடுசெயல் விலையிலான மாற்றத்தை திருத்தம் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்யும் (அதாவது, திருத்ததுக்குப் பின்னர் உடனடியாக நிறைவு செய்யப்படாதுள்ள அல்லது பகுதியளவில் நிறைவு செய்யப்பட்ட செயல்நிறைவேற்று கடப்பாடுகள்)

## ஒப்பந்தக் கிரயங்கள்

### ஒப்பந்தம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகரித்த கிரயங்கள்

91 உரிமம் ஒன்று வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகரித்த கிரயங்களில், உரிமம் அக் கிரயங்களை மீளப் பெற முடியும் எனக் கருதுமிடத்து, சொத்து ஒன்றினை ஏற்பிசைவு செய்து கொள்ளும்.

92 ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகரித்த கிரயங்கள் என்பது வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்படத்தக்க, ஒப்பந்தம் பெறப்படாவிட்டால் ஏற்படாத கிரயங்கள் ஆகும்.

93 ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதுடன் தொடர்புபடாத ஒப்பந்தம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான கிரயங்கள் ஓப்பந்தம் பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதைக் கருத்தில் கொள்ளாது வாடிக்கையாளர் மீது வெளிப்படையாகச் சுமத்தப்படக் கூடியதாக இல்லாதவிடத்து அவை ஏற்படும்போது செலவினங்களாக ஏற்பிசைவு செய்யப்படும்.

94 நடைமுறை விடயம் ஒன்றாக, உரிமம் ஒப்பந்தம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகரித்த கிரயங்களை ஏனைய சந்தர்ப்பங்களில் உரிமம் ஏற்பிசைவு செய்திருக்கக்கூடிய சொத்துக்கான

காலம் ஒரு வருடம் அல்லது அதற்குக் குறைவாக இருப்பின் அவை ஏற்படும்போது செலவினமாக ஏற்பிசைவு செய்ய முடியும்.

**ஒப்பந்தம் ஒன்றை நிறைவு செய்வதற்கான கிரயங்கள்**

95 **வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றை நிறைவு செய்தல் தொடர்பாக ஏற்படும் கிரயங்கள் மற்றொரு நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டதாக இல்லாதபோது (உதாரணமாக, LKAS 2 இருப்புக்கள், LKAS 16 ஆதனம், பொறி உபகரணங்கள், அல்லது LKAS 38 அருவச் சொத்துக்கள்), பின்வரும் மூலப்பிரமாணங்கள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டிருப்பின் மாத்திரம் ஒப்பந்தத்தினை நிறைவு செய்வதற்கான கிரயங்களில் இருந்து உரிமம் சொத்து ஒன்றினை ஏற்பிசைவு செய்யும்.**

*(a)* **கிரயங்கள் உரிமத்தினால் பிரத்தியேகமாக அடையாளம் காணப்படத்தக்க ஒப்பந்தம் அல்லது எதிர்பார்க்கப்பட்ட ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருத்தல் (உதாரணமாக, ஏற்கனவேயுள்ள ஒப்பந்தம் ஒன்றின் புதுப்பித்தலின் கீழ் வழங்கப்படவுள்ள சேவைகள் தொடர்பான கிரயங்கள் அல்லது இன்னமும் அங்கீகாரம் அளிக்கப்படாத ஒப்பந்தம் ஒன்றின் கீழ் மாற்றப்படவுள்ள சொத்து ஒன்றினை வடிவமைப்பதற்கான கிரயங்கள்),**

*(b)* **எதிர்காலத்தில் செயல்நிறைவேற்று கடப்பாடுகளை நிறைவு செய்வதற்காக (அல்லது திருப்தி செய்வதற்காகத் தொடர்ச்சியாக) பயன்படுத்தப்படத்தக்க வளங்களினை உருவாக்கும் அல்லது மேம்படுத்தும் கிரயங்கள், மற்றும்**

*(c)* **மீளப்பெறத்தக்கதாக எதிர்பார்க்கப்படும் கிரயங்கள்**

96 வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றை நிறைவு செய்வதற்காக ஏற்படும் மற்றொரு நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட கிரயங்களுக்கு உரிமம் குறித்த மற்றைய நியமத்துக்கு அமைவாகக் கணக்கீட்டை மேற்கொள்ளும்.

97 ஒப்பந்தம் ஒன்றுடன் (அல்லது ஒரு பிரத்தியேக எதிர்பார்க்கப்பட்ட ஒப்பந்தத்துடன்) நேரடியாகத் தொடர்புபடும் கிரயங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

*(a)* நேர்க்கூலி (உதாரணமாக, வாடிக்கையாளருக்கு உறுதி வழங்கப்பட்ட சேவையை மேற்கொள்ளும் ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் கூலிகள்)

*(b)* நேர் மூலப்பொருட்கள் (உதாரணமாக, வாடிக்கையாளருக்கு உறுதி வழங்கப்பட்ட சேவையை வழங்குவதற்கான வழங்கல்கள்)

*(c)* ஒப்பந்தம் அல்லது ஒப்பந்த நடவடிக்கைகளுடன் நேரடியாகத் தொடர்புபடும் கிரயங்களின் ஒதுக்கீடுகள் (உதாரணமாக, ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைக் கிரயம், ஒப்பந்தத்தினை நிறைவு செய்வதற்காக பயன்படுத்தப்படும் பொறிகள் மற்றும் உபகரணங்களின் காப்புறுதி மற்றும் பெறுமானத் தேய்வு)

*(d)* ஒப்பந்தத்தின் கீழ் வாடிக்கையாளர் மீது வெளிப்படையாக சாட்டுதல் செய்யப்படக்கூடிய கிரயங்கள்

*(e)* உரிமம் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதன் காரணமாக மாத்திரம் ஏற்படும் ஏனைய கிரயங்கள் (உதாரணமாக, உப ஒப்பந்ததாரருக்கான கட்டணங்கள்)

98 உரிமம் பின்வரும் கிரயங்களை அவை ஏற்படும்போது செலவினங்களாக ஏற்பிசைவு செய்தல் வேண்டும்:

*(a)* பொதுவான மற்றும் நிர்வாகக் கிரயங்கள் (அக் கிரயங்கள் வெளிப்படையாக ஒப்பந்த வாடிக்கையாளர் மீது சாட்டுதல் செய்யப்பட முடியாதவிடத்து, அவ்வாறான சூழ்நிலைகளில் உரிமம் அக் கிரயத்தினை பந்தி 97க்கு அமைவாக மதிப்பீடு செய்யும்),

*(b)* விரயமான மூலப் பொருட்கள், ஒப்பந்த விலையில் பிரதிபலிக்கப்படாத ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கான கூலி மற்றும் ஏனைய வளங்களின் கிரயம்

*(c)* நிறைவு செய்யப்பட்ட (அல்லது பகுதியளவில் நிறைவு செய்யப்பட்ட) ஒப்பந்தத்தின் பெறுபேற்று கடப்பாடுகள் தொடர்பான கிரயங்கள் (அதாவது கடந்தகால பெறுபேறுகள் தொடர்பான கிரயங்கள்), மற்றும்

*(d)* நிறைவு செய்யப்பட்ட செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கானதா அல்லது நிறைவு செய்யப்படாத செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கானதா (அல்லது பகுதியளவில் நிறைவு செய்யப்பட்ட செயல்நிறைவேற்று கடப்பாடுகளுக்கு உரியதா) என உரிமத்தினால் தீர்மானிக்கப்பட முடியாத கிரயங்கள்

**காலத் தேய்மானம் மற்றும் சேத இழப்பு**

99 பந்தி 91 அல்லது 95க்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட சொத்து ஒன்று சொத்துடன் தொடர்புபட்ட பொருட்கள் அல்லது சேவைகளினுடைய வாடிக்கையாளருக்கான மாற்றலுக்கு ஏற்ற நிலைத்த தன்மையான வகையில் ஒரு முறையான அடிப்படையில் காலத் தேய்மானம் செய்யப்படும்.

100 உரிமம் சொத்து தொடர்பான பொருட்கள் அல்லது சேவைகளின் மாற்றலுக்கான எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியிலான முக்கிய மாற்றங்களைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் காலத் தேய்மான அட்டவணையினைப் புதுப்பிக்க வேண்டும். அவ்வாறான மாற்றம் LKAS 8 நியமத்துக்கு இணக்கமான வகையில் கணக்கீட்டு மதிப்பீடு ஒன்றிலான மாற்றமாகக் கணக்கிடப்பட வேண்டும்.

101 உரிமம் சேத இழப்பு நட்டத்தினை இலாப நட்டக்கூற்றில் பந்தி 91 அல்லது 95க்கு அமைவாக, சொத்தின் கொண்டுசெல்கைப் பெறுமதி பின்வரும் பெறுமதியை விஞ்சி நிற்கும் அளவில் ஏற்பிசைவு செய்யும்.

*(a)* சொத்து தொடர்புபடும் பொருட்கள் அல்லது சேவைகளின் பரிமாற்றத்தில் இருந்து உரிமம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் மீதமுள்ள கைமானத் தொகையில் இருந்து

*(b)* செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படாத, அந்தப் பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கலில் நேரடியாகத் தொடர்புபட்ட கிரயங்கள் (பந்தி 97 இனைப் பார்க்க) கழித்த தொகை

102 உரிமம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் கைமானத் தொகையைத் தீர்மானிப்பதற்காக பந்தி 101 இனைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக, உரிமம் ஊடுசெயல் விலைகளைத் தீர்மானிப்பதற்கான கோட்பாடுகளைப் பயன்படுத்தி (பந்தி 56-58 இன் மாறுபடும் கைமானத்தின் இடர்பாடான மதிப்பீடுகள் தொடர்பான தேவைப்பாடுகள் தவிர்ந்த) வாடிக்கையாளர் கடன் இடரினைப் பிரதிபலிக்கக்கூடிய விதமாக தொகையினை சீராக்கும்.

103 பந்தி 91 அல்லது 95க்கு இணக்கமாக ஏற்பிசைவு செய்யப்பட்ட சொத்து ஒன்றுக்கான சேத இழப்பினை ஏற்பிசைவு செய்வதற்கு முன்பதாக உரிமம் குறித்த ஒப்பந்தம் தொடர்பாக மற்றொரு நியமத்துக்கு அமைவாக (உதாரணமாக, LKAS2, LKAS 16 மற்றும் LKAS 38) ஏற்பிசைவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான சேத இழப்பினை ஏற்பிசைவு செய்து கொள்ளல் வேண்டும். பந்தி 101 இன் சேத இழப்புப் பரிசோதனையைப் பிரயோகித்த பின்னர் உரிமம் பந்தி 91 அல்லது 95க்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான பெறப்பட்ட கொண்டுசெல்லல் பெறுமதியை அது தொடர்புபடும் காசு உருவாக்கும் அலகின் தொகையினுள் அக் காசு உழைக்கும் அலகின் மீது LKAS 36 *சொத்துக்களின் சேத இழப்பு* நியமத்தினைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக உள்ளடக்கும்.

104 உரிமம் சேத இழப்புக்கான கட்டுறுப்புக்கள் தொடர்ந்தும் காணப்படாதபோது அல்லது முன்னேற்றமடைந்துள்ளபோது பந்தி 101 க்கு அமைவாக முன்னைய காலப்பகுதிகளில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பு நட்டங்களின் சில அல்லது முழுமையான பகுதிகளினை மீள்பெறுகையினை இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யும். சொத்தின் அதிகரித்த கொண்டுசெல்லல் பெறுமதி முன்னைய காலங்களில் சேத இழப்புக்கள் ஏற்பிசைவு செய்யப்படாதிருந்திருப்பின் காணப்பட்டிருக்கக்கூடிய தொகையினை விட (சேத இழப்பிலிருந்தான நிகர பெறுமதி) அதிகரித்தல் ஆகாது.

**முன்னிலைப்படுத்தல்**

105 ஒப்பந்தத்திற்காக யாரேனும் ஒரு தரப்பினர் செயற்பட்டிருந்தால், உரிமம் ஒப்பந்தத்தினை உரிமத்தின் பெறுபேறு மற்றும் வாடிக்கையாளரின் பெறுபேறு ஆகியவற்றின் அடிப்படையில் நிதிசூழ்நிலைக்கூற்றில் ஒரு ஒப்பந்த சொத்தாக அல்லது ஒப்பந்தப் பரிப்பாக முன்னிலைப்படுத்தல் வேண்டும். உரிமம் கைமானத்துக்கான நிபந்தனையற்ற உரிமைகளை வருமதிகளாக வேறாக முன்னிலைப்படுத்தும்

106 வாடிக்கையாளர் ஒருவர் கைமானத்தைக் கொடுப்பனவு செய்யின், அல்லது உரிமம் பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு மாற்றுவதற்கு முன்பதாக உரிமம் கைமானத்துக்காக தொகை ஒன்றுக்கு நிபந்தனையற்ற உரிமையினைக் கொண்டிருப்பின் (அதாவது வருமதி), உரிமம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதும் அல்லது கொடுப்பனவு நிலுவையான உள்ளபோது (எது முதலில் இடம்பெறுகிறதோ) அந்த ஒப்பந்தத்தினை ஒரு ஒப்பந்தப் பரிப்பாக முன்னிலைப்படுத்தும். ஒப்பந்தப் பரிப்பு என்பது உரிமம் வாடிக்கையாளரிடம் இருந்து பெற்றுக்கொண்ட கைமானம் (அல்லது நிலுவையான உள்ள கைமானத்தின் தொகை) காரணமாக வாடிக்கையாளருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்காகக் கொண்டுள்ள கடப்பாடு ஆகும்.

107 வாடிக்கையாளர் கைமானத்தை செலுத்தும் முன் அல்லது கைமானத்துக்கான கொடுப்பனவு வருமதியாக ஏற்படுமுன் உரிமப் பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு மாற்றல் செய்வதை நிறைவேற்றுமெனில், உரிமம் வருமதியாகக் காட்டப்பட்ட தொகைகளை தவிர்ந்த ஒப்பந்தத்தின் மீதமான பகுதியை ஒரு ஒப்பந்தச் சொத்தாக முன்னிலைப்படுத்தும். ஓப்பந்த சொத்து என்பது உரிமம் வாடிக்கையாளருக்கு மாற்றல் செய்த பொருட்கள் அல்லது சேவைகளின் காரணமாக உரிமம் பெறத்தக்கதாகவுள்ள கைமானத்தின் உரிமை ஆகும். உரிமம் ஒப்பந்த சொத்தினை SLFRS 9 நியமத்துக்கு அமைவான வகையில் சேத இழப்புக்களுக்கான மதிப்பீட்டுக்கு உட்படுத்தும். ஓப்பந்த சொத்துக்கான சேத இழப்பு SLFRS 9 நியமத்துக்கு உட்பட்ட வகையில் நிதிச் சொத்து ஒன்றுக்கான அதே அடிப்படைகளில் மதிப்பிடப்பட்டு, முன்னிலைப்படுத்தப்பட்டு வெளிக்காட்டப்படும் (பந்தி 113(b) இனையும் பார்க்கவும்).

108 வருமதி என்பது கைமானத்துக்கான உரிமம் ஒன்றின் நிபந்தனையற்ற உரிமை ஆகும். கைமானத்துக்கான உரிமையானது அக் கைமானத்துக்கான கொடுப்பனவு நிலுவையாகக் காட்டப்படுவதற்குக் காலம் கடத்தல் அவசியமாக உள்ளபோது மாத்திரம் நிபந்தனையற்றதாகக் காணப்படும். உதாரணமாக, உரிமம் ஒன்று தற்போது கொடுப்பனவுக்கான உரிமையினைக் கொண்டிருப்பின், அத் தொகை எதிர்காலத்தில் மீளளிக்கப்படக்கூடியதாக இருப்பினும் கூட, அதனை ஒரு வருமதியாக ஏற்பிசைவு செய்யும். உரிமம் வருமதியை LKAS 9 நியமத்துக்கு அமைவாகக் கணக்கீட்டை மேற்கொள்ளும். வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றில் இருந்தான வருமதி ஒன்றுக்கான முதன்முறை ஏற்பிசைவில், LKAS 9 நியமத்தின் படியான வருமதியின் மதிப்பீடு மற்றும் அது தொடர்பாக வருமானம் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகை ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு செலவினமாக முன்னிலைப்படுத்தப்படும் (உதாரணமாக, ஒரு சேத இழப்பு நட்டம்).

109 இந் நியமம் "ஒப்பந்த சொத்து" மற்றும் "ஒப்பந்தப் பரிப்பு" ஆகிய கட்டுறுப்புக்களைப் பயன்படுத்துகிறது. ஆனால், உரிமங்கள் அக் கட்டுறுப்புக்களுக்கான மாற்றீடான பதங்களைத் தமது நிதிநிலைமைக் கூற்றுக்களில் பயன்படுத்துவதைத் தடுக்கவில்லை. உரிமம் ஒன்று ஒப்பந்த சொத்துக்கான மாற்றீடான விபரணம் ஒன்றினைப் பயன்படுத்தின், உரிமம் வருமதிகள் மற்றும் ஒப்பந்த சொத்துக்கள் ஆகியவற்றிடையேயான தெளிவான வேறுபாட்டினை நிதிக் கூற்றுக்களின் பயனாளர்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் போதிய தகவல்களை வழங்குதல் வேண்டும்.

## வெளிக்காட்டல்கள்

**110 வெளிக்காட்டல் தேவைப்பாடுகளின் நோக்கமானது, உரிமம் ஒன்று நிதிக் கூற்றுக்களின் பயனாளர்கள் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்தில் இருந்து உருவாகும் வருமானங்கள் மற்றும் காசுப் பாய்ச்சல்களின் இயல்பு, தொகை காலப்பகுதி மற்றும் வருமானத்தின் நிச்சயமற்ற தன்மை ஆகியன தொடர்பாக போதிய தகவல்களை வெளிக்காட்டுதல் ஆகும். இந்த நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக, உரிமம் பின்வருவன தொடர்பான அளவுசார் மற்றும் தரம்சார் தகவல்களை வெளிக்காட்டல் வேண்டும்.**

***(a)*** **வாடிக்கையாளர்களுடனான அதன் ஒப்பந்தங்கள் (பந்தி 113-122 இனைப் பார்வையிடுக)**

***(b)*** **அவ் ஒப்பந்தங்கள் தொடர்பாக இந்த நியமத்தினைப் பிரயோகிக்கும் போதான முக்கிய தீர்ப்புக்கள் மற்றும் அவ்வாறான தீர்ப்புக்களிலான மாற்றங்கள் (பந்தி 123-126 இனைப் பார்வையிடுக), மற்றும்**

***(c)*** **பந்தி 91 அல்லது 95க்கு அமைவான முறையில் வாடிக்கையாளருடன்னான ஒப்பந்தத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான அல்லது நிறைவேற்றுவதற்கான கிரயத்திலிருந்து ஏற்பிசைவு செய்யப்பட்ட ஏதேனும் சொத்துக்கள்**

111 உரிமம் வெளிக்காட்டல் நோக்கங்களைத் திருப்தி செய்வதற்கு அவசியமான விபரங்களின் மட்டங்கள் மற்றும் ஒவ்வொரு வேறுபட்ட தேவைப்பாடுகளுக்கும் எந்தளவு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளும். முக்கியமற்ற பாரியளவு தகவல்களின் உள்ளடக்கல் அல்லது கணிசமான முறையில் வேறுபட்ட இயல்புகளைக் கொண்ட தகவல்களின் ஒன்றுதிரட்டல் ஆகியவற்றின் காரணமாக, தகவல்கள் மறைக்கப்படாதிருக்கும் வகையில் உரிமம் வெளிக்காட்டல்களை ஒன்றுதிரட்டவோ அல்லது பிரித்துக் காட்டவோ முடியும்.

112 உரிமம் மற்றொரு நியமத்துக்கு அமைவாகத் தகவல்களை வழங்கியிருப்பின், இந்த நியமத்துக்கு அமைவாக வெளிக்காட்டல்களை மேற்கொள்ள வேண்டியதில்லை.

**வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்கள்**

113 பின்வரும் தொகைகள் வேறு நியமங்களுக்கு அமைவாக முற்றடக்க வருமானக் கூற்றில் தனியாக முன்னிலைப்படுத்தப்படாதவிடத்து, உரிமம் அறிக்கையிடல் காலப்பகுதிக்காக அவற்றை வெளிக்காட்டல் வேண்டும்:

(*a*) வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானங்கள், உரிமம் இதனை ஏனைய வருமான மூலங்களிலிருந்து தனியாக வெளிக்காட்டல் வேண்டும், மற்றும்

(*b*) உரிமம் வாடிக்கையாளர்களுடன் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களிலிருந்து உருவாகும் வருமதிகள் அல்லது ஒப்பந்த சொத்துக்களில் ஏற்பிசைவு செய்யப்படும் ஏதேனும் பெறுமதியழிவுகள், இதனை உரிமம் ஏனைய ஒபப்ந்தங்களிலான பெறுமதியழிவுகளிலிருந்து தனியாக ஏற்பிசைவு செய்யும்.

**வருமானங்களைப் பிரித்தல்**

114 வருமானங்கள் மற்றும் காசுப் பாய்ச்சல்களின் இயல்பு, தொகை, காலம் மற்றும் நிச்சயமற்ற தன்மை ஆகியன பொருளாதாரக் காரணிகளால் தாக்கமமையும் தன்மையைக் காட்டக்கூடிய வகையில் உரிமம் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்த ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமானங்களை பிரித்து ஏற்பிசைவு செய்யும். வருமானத்தைப் பிரிப்பதற்குப் பயன்படுத்துவதற்கான வகைகளைத் தெரிவு செய்யும்போது உரிமம் பந்திகள் B87-B89 இல் உள்ள வழிகாட்டல்களைப் பிரயோகிக்கும்.

115 மேலும், உரிமம் LKAS 8 தொழிற்படும் கூறுகள் நியமத்தினைப் பிரயோகிக்குமெனில், உரிமம் நிதிக்கூற்றுக்களின் பயனாளர்கள் பிரித்து வெளிக்காட்டப்பட்ட வருமானங்கள் (பந்தி 114க்கு அமைவாக) மற்றும் ஒவ்வொரு அறிக்கையிடத்தக்க ஆக்கக்கூறுகளுக்காகவும் வெளிக்காட்டப்பட்ட வருமானத் தகவல்கள் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பினை விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் போதிய தகவல்களை வெளிக்காட்டல் வேண்டும்.

**ஒப்பந்த மீதிகள்**

116 உரிமம் ஒன்று பின்வரும் விடயங்களினை வெளிக்காட்டல் வேண்டும்:

(*a*) தனியாக முன்னிலைப்படுத்தப்படாதவிடத்து அல்லது வெளிக்காட்டப்படாதவிடத்து, வருமதிகளின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான ஒப்பந்த சொத்துக்கள் மற்றும் ஒப்பந்தப் பரிப்புக்கள்

(*b*) காலப்பகுதியின் ஆரம்பத்தில் ஒப்பந்தப் பரிப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டு அறிக்கையிடல் காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமானம்

(*c*) முன்னைய காலப்பகுதிகளில் திருப்தி செய்யப்பட்ட (அல்லது பகுதியளவில் திருப்தி செய்யப்பட்ட) செயல்நிறைவேற்று கடப்பாடுகளில் இருந்து அறிக்கையிடல் காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமானம் (உதாரணமாக, ஊடுசெயல் விலைகளிலான மாற்றங்கள்)

117 உரிமம் தமது செயல்நிறைவேற்று கடப்பாடுகளின் காலப்பகுதி (பந்தி 119 (அ) இனைப் பார்வையிடுக) அதற்காக கொடுப்பனவுக்கான காலப்பகுதியுடன் (பந்தி 119 (ஆ) இனைப் பார்வையிடுக) தொடர்புபடும் முறையினை மற்றும் அக் காரணிகள் ஒப்பந்த சொத்துக்கள் மற்றும் ஒப்பந்தப் பரிப்புக்கள் மீது கொண்டுள்ள விளைவுகள் ஆகியவற்றை விளக்குதல் வேண்டும். வழங்கப்படும் விளக்கம் தரம்சார் தகவல்களைக் கொண்டிருக்கும்.

118 உரிமம் அறிக்கையிடல் காலப்பகுதியில் ஒப்பந்த சொத்துக்கள் மற்றும் ஒப்பந்தப் பரிப்புக்களில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் தொடர்பான விளக்கம் ஒன்றினை வழங்குதல் வேண்டும். இந்த விளக்கமானது அளவுசார் மற்றும் தரம்சார் தகவல்களை உள்ளடக்கி இருத்தல் வேண்டும். உரிமத்தின் ஒப்பந்த சொத்துக்கள் மற்றும் ஒப்பந்தப் பரிப்புக்களில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் தொடர்பான உதாரணங்கள் பின்வருவனவற்றில் எவற்றையேனும் உள்ளடக்கியிருக்கலாம்:

*(a)* வணிகச் சேர்க்கைகளின் காரணமான மாற்றங்கள்

*(b)* தொடர்புபட்ட ஒப்பந்த சொத்து அல்லது ஒப்பந்தப் பரிப்புக்களில் தாக்கம் செலுத்தக்கூடிய, முன்னேற்ற நிலைமையின் அளவீட்டுச் சீராக்கங்கள், ஊடுசெயல் விலையின் மதிப்பீட்டிலான மாற்றம் (மாறும் கைமானத்தின் அளவீடு வரையறைகளுக்கு உட்பட்டதா என்பதற்கான மதிப்பீட்டிலான மாற்றங்கள் உள்ளடங்கலாக) அல்லது ஒரு ஒப்பந்தத் திருத்தம் ஆகியன உள்ளடங்கலான திரண்ட சேர்க்கை சீராக்கங்கள்

*(c)* ஒப்பந்த சொத்துக்களின் பெறுமதியழிவுகள்

*(d)* கைமானத்துக்கான உரிமை நிபந்தினையற்றதாக ஆவதற்கான காலக் கட்டமைப்பிலான மாற்றம் (அதாவது, ஒப்பந்த சொத்த ஒன்று வருமதியாக மீள்வகைப்படுத்தப்படுவதற்கான), மற்றும்

*(e)* செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஒன்று நிறைவு செய்யப்படுவதற்கான காலக் கடைப்பிலான மாற்றம் (அதாவது, ஒப்பந்தப் பரிப்பு ஒன்றிலிருந்தான வருமானத்தனி ஏற்பிசைவு)

**செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகள்**

119 உரிமம் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில், பின்வருவன தொடர்பான தகவல்கள் உள்ளடங்கலாக, அதன் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளைப் பற்றிய தகவல்களை உரிமம் வெளிப்படுத்தும்:

*(a)* உரிமம் அதன் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளை வழக்கமான முறையில் திருப்தி செய்யும்போது (உதாரணமாக, கப்பலில் பொருட்களை ஏற்றும்போது, விநியோகத்தின் போது, சேவைகளை வழங்கும் போது அல்லது சேவை நிறைவேற்றப்படும்போது), பட்டியலிட்டு வைத்திருக்கும் ஒப்பந்தங்கள் உள்ளடங்கலான செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளின்போது

*(b)* முக்கியமான கொடுப்பனவு கட்டுறுப்புகள் (உதாரணமாக, கொடுப்பனவு வழக்கமான முறையில் சென்மதியாகும்போது, ஒப்பந்தத்தில் ஒரு கணிசமான நிதியிடல் ஆக்கக்கூறு உள்ளதா, கைமானப் பெறுமதி மாறுபடக்கூடியதா மற்றும் 56-58 பந்திகளுக்கு இணக்கமான வகையில் மாறுபடத்தக்கதான கைமானப் பெறுமதி மதிப்பீடு வழக்கமான முறையில் வரையறைக்கு உட்பட்டதா முதலிய தகவல்கள்)

*(c)* பொருட்கள் சேவைகளின் மாற்றலை மேற்கொள்வதற்காக மற்றொரு தரப்பினரை ஒழுங்குபடுத்த வேண்டிய செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டை முக்கியத்துவப் படுத்திக்காட்டி (உரிமம் ஒரு முகவராகத் தொழிற்படின்), உரிமம் மாற்றுவதற்கு உறுதியளித்திருக்கும் பொருட்கள் அல்லது சேவைகளின் தன்மை

*(d)* திரும்பல்கள், பண மீளளிப்புக்களுக்கான கடப்பாடுகள், மற்றும் பிற அவ்வாறான கடப்பாடுகள், மற்றும்

*(e)* உத்தரவாதங்களின் வகைகள் மற்றும் தொடர்புடைய கடப்பாடுகள்.

**மீதமுள்ள செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட ஊடுசெயல் விலை**

120 உரிமம் தனது மீதமுள்ள செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகள் பற்றிய பின்வரும் தகவல்களை வெளிப்படுத்தும்:

(*a*) அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் நிறைவேற்றப்படாதுள்ள (அல்லது பகுதியளவில் நிறைவேற்றப்பட்ட) திருப்தியற்ற செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகள் ஒதுக்கப்பட்ட ஊடுசெயல் விலையின் திரண்ட தொகை

(*b*) பந்தி 120 (அ) க்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையினை உரிமம் வருமானம் என எப்போது ஏற்பிசைவு செய்யும் என்பது தொடர்பானதொரு விளக்கம். இதனை உரிமம் கீழ்கண்ட வழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலமாக வெளிப்படுத்தும்.

(i) மீதமுள்ள செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளின் காலப்பகுதிக்கு மிகப் பொருத்தமான நேரப்பட்டிகளைப் பயன்படுத்தி ஒரு அளவுசார் அடிப்படையில்

(ii) பண்புசார் தகவல்களைப் பயன்படுத்தி

121 ஒரு நடைமுறை விடயமாக, பின்வரும் கட்டுறுப்புகளில் ஏதேனும் ஒன்று திருப்தி செய்யப்பட்டால், உரிமம் பந்தி 120 இல் வேண்டப்பட்ட தகவலை வெளிக்காட்டத் தேவையில்லை:

(*a*) செயல்நிறைவேற்றுக் கடப்பாடானது, ஒரு வருடம் அல்லது அதற்குக் குறைவான அசலான எதிர்பார்த்த காலப்பகுதியைக் கொண்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இருத்தல், அல்லது

(*b*) உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளைத் திருப்தி செய்வதன் மூலம் பந்தி ஆ16க்கு இணக்கமாக வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்.

122 உரிமம் பந்தி 121 இன் நடைமுறை விடயங்களை பிரயோகிக்கிறதா மற்றும் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான எந்தவொரு கைமானமும் ஊடுசெயல் விலைகளினுள் சேர்க்கப்படவில்லை, எனவே, 120 ஆவது பந்தியின் படியான தகவல்களை வெளிக்காட்டவில்லை என்னும் விடயத்தினைப் பண்புசார் ரீதியாக வெளிக்காட்டல் வேண்டும். உதாரணமாக, ஊடுசெயல் விலைகளின் மதிப்பீட்டுப் பெறுமதியானது, வரையறைக்குட்பட்ட எந்தவொரு மாறும் கைமானங்களின் மதிப்பீட்டுத் தொகைகளையும் உள்ளடக்கியிருத்தல் ஆகாது. (56-58 பந்திகளைப் பார்க்கவும்).

**இந் நியமத்தின் பிரயோகத்திலான முக்கிய தீர்ப்புக்கள்**

123 உரிமம் இந் நியமத்தைப் பிரயோகிக்கும்போது மேற்கொண்ட வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானத்தின் அளவு மற்றும் காலப்பகுதியை கணிசமாகப் பாதிக்கத்தக்க தீர்ப்புகள் மற்றும் தீர்ப்புக்களிலான மாற்றங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தல் வேண்டும். குறிப்பாக, உரிமம் பின்வரும் இரண்டையும் தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட தீர்ப்புகள் மற்றும் தீர்ப்புக்களிலான மாற்றங்கள் ஆகியவற்றை விளக்குதல் வேண்டும்.

(*a*) செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளின் திருப்திப்படுத்தலின் காலப்பகுதி (பந்திகள் 124-125) மற்றும்

(*b*) செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஊடுசெயல் விலைகள் மற்றும் தொகைகள் (பந்தி 126 இனைப் பார்வையிடவும்)

**செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளைத் திருப்தி செய்யும் காலப்பகுதியைத் தீர்மானித்தல்**

124 காலப்போக்கில் உரிமம் திருப்தி செய்யும் செயல்திறன் கடப்பாடுகளுக்கு, உரிமம் கீழ்க்கண்டவற்றை வெளிப்படுத்த வேண்டும்:

(*a*) வருமானத்தை ஏற்பிசைவு செய்யப் பயன்படுத்தப்படும் முறைகள் (உதாரணமாக, பயன்படுத்தபப்ட்ட வெளியீட்டு முறைகள் அல்லது உள்ளீட்டு முறைகள் மற்றும் அந்த முறைகள் பிரயோகிக்கப்பட்ட முறை)

(*b*) பயன்படுத்தப்பட்ட முறைகள் ஏன் பொருட்கள் சேவைகளின் மாற்றல் தொடர்பாக உண்மைத்தன்மையான வெளிப்பாட்டை மேற்கொள்ளும் எனக் கொள்ளப்படுகிறது என்பதற்கான ஒரு விளக்கம்.

125 காலப்பகுதியில் திருப்தி செய்யப்பட்ட செயல்திறன் கடப்பாடுகளுக்காக உரிமம், ஒரு வாடிக்கையாளர் வாக்குறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை எப்போது பெற்றுக் கொள்கிறார் என்பதை மதிப்பீடு செய்வதில் பயன்படுத்தும் முக்கிய சுயதீர்ப்புக்களை வெளிப்படுத்தல் வேண்டும்.

**ஊடுசெயல் விலை மற்றும் செயல்திறன் கடப்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளைத் தீர்மானித்தல்**

126 உரிமம் கீழ்க்காணும் அனைத்திற்கும் பயன்படுத்தப்படும் முறைகள், உள்ளீடுகள் மற்றும் அனுமானங்களைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும்:

(*a*) மாறுபடும் கைமானத்தினை மதிப்பிடல், பணத்தின் காலப் பெறுமானத்திற்காக கைமானத்தை சீராக்கல் மற்றும் பணமல்லாத கைமானத்தை அளவிடல் முதலிய ஆனால் அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத, ஊடுசெயல் விலைகளைத் தீர்மானித்தல்

(*b*) மாறுபடும் கைமானத்தின் மதிப்பீடானது வரையறைக்கு உட்பட்டதா என்பதைத் தீர்மானித்தல்

(*c*) உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் நிலைத்த விற்பனை விலைகளை மதிப்பிடல் மற்றும் ஒப்பந்தத்தின் குறித்த பகுதிகளுக்கு கழிவீடுகள் மற்றும் மாறுபடும் கைமானப் பெறுமதிகள் ஆகியவற்றை ஒதுக்கீடு செய்தல் உள்ளடங்கலான ஊடுசெயல் விலைகளின் ஒதுக்கீடு, மற்றும்

(*d*) திரும்பல்கள், பண மீளளிப்புக்கள் மற்றும் பிற ஒத்த தன்மையான கடப்பாடுகளை அளவிடுதல்.

**வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றை பெற்றுக்கொள்ள அல்லது நிறைவு செய்வதற்கான கிரயங்களிலிருந்து ஏற்பிசைவு செய்யப்பட்ட சொத்துக்கள்**

127 ஒரு உரிமம் பின்வரும் இரண்டையும் விவரிக்கும்:

(*a*) வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றை பெற்றுக்கொள்ள அல்லது நிறைவு செய்வதற்கான கிரயங்களின் தொகையைத் தீர்மானிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்ப்புகள் (பந்திகள் 91 அல்லது 95க்கு இணக்கமாக) மற்றும்

(*b*) ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்துக்கும் காலத் தேய்மானப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் முறைகள்

128 ஒரு உரிமம் பின்வருவனவற்றை முழுமையாக வெளிப்படுத்த வேண்டும்:

*(a)* பிரதான வகைப்படுத்தலின் கீழ் (உதாரணமாக, வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான கிரயங்கள், ஒப்பந்த முன் கிரயங்கள் வாடிக்கையாளர்களிடம் ஒப்பந்தம் பெறுவதற்கு, மற்றும் நிலைநிறுத்தியதற்கான கிரயங்கள் வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றை பெற்றுக்கொள்ள அல்லது நிறைவு செய்வதற்கான கிரயங்களிலிருந்து ஏற்பிசைவு செய்யப்பட்ட சொத்துக்களின் இறுதி மீதி (பந்திகள் 91 அல்லது 95க்கு இணக்கமாக) மற்றும்

*(b)* அறிக்கையிடும் காலத்துக்கு ஏற்பிசைவு செய்யப்பட்ட காலத் தேய்மானம் மற்றும் சேதம் இழப்பு தொகைகள்

**நடைமுறை விடயமுறைகள்**

129 ஒரு உரிமம் பந்தி 63 அல்லது பந்தி 94 இல் நடைமுறை விடய முறைகளைப் பயன்படுத்த விரும்பினால் (ஒரு குறிப்பிடத்தக்க நிதியிடல் ஆக்கக்கூறு ஒன்று இருப்பதை பற்றி) நடைமுறை உகந்த பயன்படுத்த தேர்வுசெய்தால் (ஒரு ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான அதிகரித்த கிரயங்களை பற்றி), உரிமம் அந்த உண்மையை வெளிக்காட்ட வேண்டும்.

## பின்னிணைப்பு A

## வரையறுக்கப்பட்ட கட்டுறுப்புக்கள்

இப் பின்னிணைப்பு இந்த நியமத்தின் முக்கிய ஒருங்கிணைந்த பகுதி ஆகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தம் | அமுல்படுத்தத்தக்க உரிமைகள் மற்றும் கடமைகளை உருவாக்கத்தக்க, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர் இடையேயான ஒரு உடன்படிக்கை. |
| ஒப்பந்த சொத்துக்கள் | உரிமத்தினால் ஒரு மாற்றத்தில் வாடிக்கையாளருக்கு பொருள்கள் அல்லது சேவைகள் மாற்றப்பட்டதற்கு ஈடாக உரிமத்துக்கு கைமானம் தொடர்பாக, உரிமையானது காலக்கடத்தாறு தவிர்ந்த வேறு ஏதேனும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக உள்ளபோது உரிமத்துக்குக் காணப்படத்தக்க உரிமை (உதாரணமாக, உரிமத்தின் எதிர்கால செயற்திறன்) |
| ஒப்பந்தக் கடமை | ஒரு வாடிக்கையாளரிடம் இருந்து உரிமம் பெற்றுக் கொண்ட (அல்லது பெற்றுக் கொள்ள வேண்டியுள்ள) கைமானத்துக்காக வாடிக்கையாளருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்காகக் கொண்டுள்ள கடப்பாடு |
| வாடிக்கையாளர் | கைமானம் ஒன்றினை ஈடாக வழங்கி, உரிமம் ஒன்றின் சாதாரண செயற்பாடுகளின் வெளியீடாகவுள்ள பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக உரிமத்துடன் ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ள தரப்பினர். |
| வருவாய் (Income) | கணக்கீட்டுக் காலப்பகுதியில் உட்பாய்ச்சல்கள், சொத்துக்களின் அதிகரிப்பு அல்லது உரிமத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தக் கூடியவாறான பரிப்புக்களின் குறைப்பு ஆகிய வடிவில் இடம்பெறும், உரித்துக்களின் பங்குபற்றுனர்களது பங்களிப்புக்கள் தவிர்ந்த ஏனைய பொருளாதார நன்மைகள் |
| செயல் நிறைவேற்று கடப்பாடுகள் | ஒரு வாடிக்கையாளருடனான ஒப்பந்தத்தில் வாடிக்கையாளருக்கு பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றை மாற்றுவதற்காக வழங்கப்படும் வாக்குறுதி:<br>*(a)* ஒரு தனித்துவம் வாய்ந்த பொருள் அல்லது சேவை (அல்லது பொருட்கள் அல்லது சேவைகளின் தொகுதி)<br>*(b)* கணிசமாக ஒத்த தன்மையான மற்றும் குறிப்பிட்ட தொடரில் வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் தனித்துவமான பொருட்கள் அல்லது சேவையின் தொடர் |
| வருமானம் | உரிமத்தின் சாதாரண செயற்பாடுகளின் போக்கில் ஏற்படும் வருவாய். |
| **தனித்த விற்பனை விலை** (பொருள் அல்லது சேவையின்) | உரிமம் உறுதியளித்த பொருள் அல்லது சேவை ஒன்றினை தனியான வகையில் வாடிக்கையாளர் ஒருவருக்கு விற்கத்தக்க விலை |
| ஊடுசெயல் விலை (வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தத்துக்காக) | ஒரு வாடிக்கையாளருக்கு உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதன் மூலம் உரிமம்பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் மூன்றாம் தரப்பின் சார்பாக சேகரிக்கப்பட்ட தொகைகள் தவிர்ந்த கைமானத்தின் தொகை |

## பின்னிணைப்பு B

### பிரயோக வழிகாட்டல்

*இப் பின்னிணைப்பு இந்த நியமத்தின் முக்கிய ஒருங்கிணைந்த பகுதி ஆகும். இது பந்திகள் 1-129 இன் பிரயோகம் பற்றி விவரிப்பதுடன் இந் நியமத்தின் ஏனைய பாகங்களுக்கு ஈடான சமமான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.*

B1 இந்தப் பிரயோக வழிகாட்டல் பின்வரும் வகைகளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது:

*(a)* காலப்போக்கில் நிறைவு செய்யப்படும் செயல்நிறைவேற்று கடப்பாடுகள் (பந்திகள் B2-B13)

*(b)* ஒரு செயல் நிறைவேற்று கடப்பாட்டின் முழுமையான திருப்தி தொடர்பான கட்டத்தை அளவிடுவதற்கான முறைமைகள் (பந்திகள் B14-B19)

*(c)* திருப்புவதற்கான உரிமையுடன் கூடிய விற்பனை (பந்திகள் B20-B27)

*(d)* உத்தரவாதங்கள் (பந்திகள் B28-B33)

*(e)* முதல்வர் எதிர் முகவர் தொடர்பான விடயங்கள் (பந்திகள் B34-B38)

*(f)* மேலதிக பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வாடிக்கையாளர் தெரிவுகள் (பந்திகள் B39-B43)

*(g)* வாடிக்கையாளர்களது பயன்படுத்தப்படாத உரிமைகள் (பந்திகள் B44-B47)

*(h)* மீளளிக்கப்படாத வெளிப்படையான கட்டணங்கள் (மற்றும் அது தொடர்பான சில கிரயங்கள்) (பந்திகள் B48-B51)

*(i)* உரிமப்பத்திர வழங்கல் (பந்திகள் B52-B63)

*(j)* மறுகொள்முதல் ஒப்பந்தங்கள் (பந்திகள் B64-B76)

*(k)* ஒப்படை ஒப்பந்தங்கள் (பந்திகள் B77-B78)

*(l)* பட்டியலிட்டு வைத்திருக்கும் ஒப்பந்தங்கள் (பந்திகள் B79-B82)

*(m)* வாடிக்கையாளர் ஏற்பு (பந்திகள் B83-B86) மற்றும்

*(n)* திரட்டப்படாத வருமானத்தின் வெளிக்காட்டல் (பந்திகள் B87-B89)

### காலப்போக்கில் திருப்தி செய்யப்படும் செயல் நிறைவேற்று கடப்பாடுகள்

B2 பந்தி 35க்கு அமைவாக, பின்வரும் மூலப்பிரமாணங்களில் ஏதேனும் ஒன்று நிறைவு செய்யப்பட்டால் செயல் நிறைவேற்று கடப்பாடு காலப்போக்கில் திருப்தி செய்யப்படும்:

(a) உரிமத்தின் செயல் நிறைவேற்றுதலை உரிமம் செயற்பாட்டை மேற்கொள்ளும் போதே வாடிக்கையாளர் பெற்றுக்கொண்டு அதே நேரத்தில் நுகர்வு செய்தல் (பந்திகள் B3-B4 இனைப் பார்வையிடுக)

(b) உருவாக்கம் அல்லது மேம்படுத்தலில் வாடிக்கையாளர் கட்டுப்படுத்தத் தக்க வகையில் உரிமத்தின் செயற்பாடு சொத்து ஒன்றை உருவாக்குதல் அல்லது மேம்படுத்துதல் (உதாரணமாக, குறைவேலை) (பந்தி B5 இனைப் பார்வையிடுக) அல்லது

(c) உரிமத்தின் செயற்பாடு உரிமத்துக்கு மாற்றுப் பயன்பாடுள்ள சொத்து ஒன்றை உருவாக்காது இருப்பதுடன் (பந்திகள் B6-B8 இனைப் பார்வையிடுக) உரிமம் இற்றை நாள் வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்றுக்கான கொடுப்பனவுக்காக அமுல்படுத்தக் கூடிய உரிமை ஒன்றைக் கொண்டிருத்தல் (பந்திகள் B9-B13 இனைப் பார்வையிடுக)

**உரிமத்தின் செயல் நிறைவேற்றுதலைப் பெற்றுக்கொண்டு அதே நேரத்தில் நுகர்தல் (பந்தி 35(a))**

B3 சில வகையான செயல் நிறைவேற்று கடப்பாடுகளுக்கு, உரிமத்தின் செயல் நிறைவேற்றுகையை உரிமம் செயற்பாட்டை மேற்கொள்ளும் போதே வாடிக்கையாளர் பெற்றுக்கொண்டு அதே நேரத்தில் நுகர்வு செய்தமைக்கான மதிப்பீடானது நியாயமான முறையில் காணப்படும். உதாரணங்களாக உரிமத்தினால் வழங்கப்படும் போதே பெற்றுக் கொள்ளப்படுதல் நேரடியாக அடையாளம் காணப்படத்தக்க சுத்திகரித்தல் சேவை முதலான மீண்டெழும் சேவைகளை உள்ளடக்கலாம்.

B4 ஏனைய வகையான செயல் நிறைவேற்று கடப்பாடுகளில் உரிமம் வாடிக்கையாளர் உரிமத்தின் செயற்பாட்டிலிருந்தான செயல் நிறைவேற்றுதலை ஒரே நேரத்தில் பெற்றுக் கொண்டு நுகர்வு செய்கிறாரா என்பதை இனம் காண முடியாது இருக்கலாம். அவ்வாறான நிலைமைகளில், மீதமாகவுள்ள வாடிக்கையாளருக்கான செயல் நிறைவேற்று கடப்பாட்டை மற்றொரு உரிமம் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளபோது, குறித்த உரிமமானது, இற்றை நாள் வரைத் தாம் நிறைவு செய்த அதே சேவையினை மற்றொரு உரிமம் கணிசமான அளவில் மீள மேற்கொள்ளத் தேவையில்லை எனக் கருதும்போது, செயல் நிறைவேற்று கடப்பாடு காலப் போக்கில் நிறைவு செய்யப்படுவதாகக் கருதப்படலாம். குறித்த உரிமமானது, இற்றை நாள் வரைத் தாம் நிறைவு செய்த அதே சேவையினை மற்றொரு உரிமம் கணிசமான அளவில் மீள மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை எனத் தீர்மானிக்கும்போது, உரிமம் பின்வரும் இரு எடுகோள்களையும் மேற்கொள்ளும்.

(a) உரிமம் மீதமுள்ள செயல் நிறைவேற்று கடப்பாடுகளை மற்றொரு உரிமத்துக்கு மாற்றுவதை சாதாரண நிலைமைகளில் தடுக்கக்கூடிய சாத்தியமான ஒப்பந்தத் தடைகள் அல்லது நடைமுறை வரையறைகளைப் புறக்கணித்தல், மற்றும்

(b) செயல் நிறைவேற்று கடப்பாடானது மற்றொரு உரிமத்துக்கு மாற்றப்படுவதாக இருப்பின், மீதமுள்ள செயல் நிறைவேற்று கடப்பாட்டை நிறைவு செய்யும் மற்றொரு உரிமம் தற்போது உரிமத்தினால் கட்டுப்படுத்தப்படும் எந்த சொத்துக்களினதும் நலன்களைக் கொண்டிருக்காது என்னும் அனுமானம்

**சொத்து உருவாக்க அல்லது நிலைநிறுத்தப்பட்டதும் வாடிக்கையாளர் கட்டுப்படுத்தல் (பந்தி 35(b))**

B5 பந்தி 35 (ஆ) க்கு அமைவாக சொத்து உருவாக்க அல்லது மேம்படுத்தப்பட்டதும் வாடிக்கையாளரால் கட்டுப்படுத்தப்படுகிறதா என்பதை தீர்மானிப்பதற்காக உரிமம் பந்திகள் 31-34 மற்றும் 38 இல் குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகளை பிரயோகித்தல் வேண்டும். உருாக்கப்படும் அல்லது மேம்படுத்தப்படும் சொத்து (உதாரணமாக சொத்து குறைவேலை) பௌதீகத் தன்மையானதாகவோ அல்லது பௌதீகத் தன்மையற்றதாகவோ காணப்படலாம்.

**உரிமத்தின் செயல் நிறைவேற்றுதல் மாற்றுப் பயன்பாடுள்ள சொத்து ஒன்றை உருவாக்காதிருத்தல் (பந்தி 35 (c))**

B6 பந்தி 36க்கு இணக்கமாக சொத்து ஒன்று உரிமத்துக்கு மாற்றுப் பயன்பாட்டைக் கொண்டுள்ளதா என்பதை மதிப்பிடுவதில், மற்றொரு வாடிக்கையாளருக்கு விற்றல் முதலான குறித்த சொத்தை நேரடியாக மற்றொரு தேவைக்குப் பயன்படுத்துதல் தொடர்பாகக் காணப்படக்கூடிய ஒப்பந்தத் தடைகள் அல்லது நடைமுறை வரையறைகளின் விளைவுகள் பற்றிக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். உரிமம் வாடிக்கையாளருடனான ஒப்பந்தை இரத்துச் செய்வதற்கான சாத்தியத் தன்மையானது அது குறித்த சொத்தை நேரடியாக மற்றொரு தேவைக்குப் பயன்படுத்த முடியுமா என்பதை மதிப்பிடுவதற்கான பொருத்தமான கைமானம் அல்ல.

B7 உரிமம் சொத்தை நேரடியாக மற்றொரு தேவைக்குப் பயன்படுத்துதல் தொடர்பாகக் காணப்படக்கூடிய ஒப்பந்தத் தடைகள் உரிமத்துக்கு மாற்றுப் பயன்பாட்டைக் கொண்டிருக்காது இருத்தல் கணிசமானதாகக் காணப்படும். உரிமம் சொத்தை நேரடியாக

மற்றொரு தேவைக்குப் பயன்படுத்தும்போது வாடிக்கையாளர் உறுதியளிக்கப்பட்ட சொத்து மீதான தமது உரிமைகளை அமுல்படுத்தக் கூடியதாக இருப்பின், ஒப்பந்தத் தடைகள் கணிசமானவையாக இருக்கும். மாறாக, உதாரணமாக, உரிமம் சொத்தினை ஒப்பந்தம் தொடர்பாக சாதாரண நிலைமைகளில் ஏற்படக்கூடிய கிரயங்களின்றி, ஒப்பந்தத்தை மீறாத வகையில் மற்றொரு வாடிக்கையாளருக்கு மாற்றக்கூடிய சொத்துக்களுக்காக பிரதியீடு செய்யக் கூடியதாக இருப்பின், ஒப்பந்தத் தடைகள் கணிசமானவையாக இருக்காது.

B8 உரிமம் சொத்தை மற்றொரு பயன்பாட்டுக்காக மாற்றும்போது கணிசமான பொருளாதார நட்டங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படின் உரிமம் சொத்தை நேரடியாக மற்றொரு தேவைக்குப் பயன்படுத்துதல் தொடர்பாக நடைமுறை வரையறைகள் காணப்படுவதாகக் கொள்ளப்படும். கணிசமான பொருளாதார நட்டங்கள் உரிமம் சொத்துக்காக மீள்வலைகளை மேற்கொள்வதற்கான கிரயங்கள் அல்லது சொத்தை கணிசமான நட்டத்தில் விற்றல் காரணமாக ஏற்படலாம். உதாரணமாக, வாடிக்கையாளருக்குத் தனித்துவமான வடிவமைப்பு விதந்துரைகள் அல்லது தூரமான அமைவிடங்கள் காரணமாக உரிமம் சொத்தை மாற்றுப் பயன்பாட்டுக்காக மாற்றுவதற்கான நடைமுறை வரையறைகளைக் கொண்டிருக்கும்.

**இற்றைநாள்வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்றுகான கட்டணத்துக்கான உரிமை (பந்தி 37(c))**

B9 பந்தி 37க்கு இணங்க, உறுதி வழங்கப்பட்ட செயல் நிறைவேற்றுகான உரிமத்தின் செயற்பாட்டுத் தவறுகை தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக வாடிக்கையாளர் அல்லது மற்றொரு தரப்பினர் ஒப்பந்தத்தை இரத்துச் செய்யும் சந்தர்ப்பத்தில், உரிமம் குறைந்தபட்சம் இற்றை நாள் வரை நிறைவு செய்யப்பட்ட அதன் செயற்பாடுகளுக்கு ஈடு வழங்கக்கூடிய கொடுப்பனவு ஒன்றுக்கான உரித்தினைக் கொண்டிருப்பின், உரிமம் இற்றைநாள் வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்றுக்கான கொடுப்பனவுக்காக உரிமையினைக் கொண்டிருக்கும். இற்றைநாள் வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்றுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு என்பது ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதால் உரிமத்துக்கு ஏற்படக்கூடிய எதிர்கால இலாபங்களையன்றி, குறித்த செயல் நிறைவேற்றுதலை நிறைவு செய்வதற்காக மாற்றப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனை விலைக்கு அண்மித்த ஒரு தொகை ஆகும் (உதராணமாக, செயல் நிறைவேற்று கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உரிமத்துக்கு ஏற்பட்ட கிரயங்கள் மற்றும் நியாயமானதொரு இலாப எல்லை). நியாயமான இலாப எல்லை ஒன்றுக்கான இழப்பீடானது ஒப்பந்தம் உறுதியளிக்கப்பட்ட வகையில் நிறைவு செய்யப்பட்டிருப்பின் பெறப்பட்டிருக்கக்கூடியதாக எதிர்பார்க்கப்பட்ட இலாபத்துக்கு சமமாக இருக்க வேண்டியதில்லை, ஆனால் உரிமம் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு இழப்பீட்டுத் தொகைக்கு உரித்தானதாகக் காணப்படும்.

*(a)* வாடிக்கையாளரால் (அல்லது மற்றொரு தரப்பினால்) ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட முன்னர், ஒப்பந்தத்தின் படி உரிமம் எதிர்பார்த்த இலாபத்தின் உரிமம் நிறைவு செய்த செயல் நிறைவேற்று கடப்பாட்டின் விகிதாசாரப் பரப்பை பிரதிபலிக்கத்தக்க ஒரு பகுதி அல்லது

*(b)* ஒத்த வகையான ஒப்பந்தங்களில் உரிமம் மேற்கொள்ளும் இலாப எல்லைகளை (அல்லது அது போன்ற ஒப்பந்தங்களுக்கான உரிமத்தின் வழக்கமான இலாப எல்லை) விட குறித்த ஒப்பந்தத்துக்கான இலாப எல்லை உயர்வாகக் காணப்படின், ஒத்த வகையான ஒப்பந்தங்களுக்காக மூலதனக் கிரயத்தின் மீதானதோர் நியாயமான திரும்பல்

B10 இற்றைநாள் வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்றுகைக்கான கொடுப்பனவுக்கான உரிமத்தின் உரிமையானது ஒரு நிகழ்கால நிபந்தனையற்ற உரிமையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. பல சந்தர்ப்பங்களில், உரிமம் செயல் நிறைவேற்று கடப்பாட்டை முழுமையாக நிறைவேற்றயிருப்பின் அல்லது இணங்கப்பட்ட ஒரு செயல்நிறைவேற்றல் மட்டத்திலேயே கட்டணத்துக்கான நிபந்தனையற்ற உரிமையைக் கொண்டிருக்கும். இற்றைநாள் வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்றுகான கொடுப்பனவுக்கான உரிமையினை உரிமம் கொண்டுள்ளதா என்பதை மதிப்பிடுவதில், உறுதி வழங்கப்பட்ட செயல் நிறைவேற்றுகான உரிமத்தின் செயற்பாட்டுத் தவறுகை தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக வாடிக்கையாளர் அல்லது மற்றொரு தரப்பினர்

ஒப்பந்தத்தை இரத்துச் செய்யும் சந்தர்ப்பத்தில், இற்றைநாள் வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்றுகான கொடுப்பனவைக் கோருவதற்கான அல்லது நிறுத்தி வைப்பதற்காகதொரு அமுல்படுத்தக்கூடிய உரிமையைக் கொண்டுள்ளதா என்பதை உரிமம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

B11 சில ஒப்பந்தங்களில் வாடிக்கையாளர் ஒப்பந்தத்தின் ஆயுட்காலத்தில் குறிப்பிட்ட சில காலங்களில் மாத்திரம் ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உரிமையைக் கொண்டிருப்பார் அல்லது ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் எந்த உரிமையையும் கொண்டிருப்பதில்லை. ஒரு வாடிக்கையாளர் குறித்த காலப்பகுதியில் ஒப்பந்தத்தை முடிவு செய்வதற்கான உரிமையின்றி முடிவு செய்யின், (வாடிக்கையாளர் வாக்குறுதி அளித்த அவரது கடமைகளை செய்யத் தவறுதல் உள்ளடங்கலாக) உரிமம் வாடிக்கையாளருக்கு உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு தொடர்ந்தும் வழங்கி, பொருட்கள் சேவைகளின் மாற்றத்துக்கான உறுதியளிக்கப்பட்ட கைமானக் கட்டணங்களைக் கோருவதற்கான உரிமையை ஒப்பந்தம் (அல்லது ஏனைய சட்டங்கள்) வழங்குகிறது. அந்த சூழ்நிலைகளில், உரிமம் ஒப்பந்தத்தின் படியாக தனது செயல் நிறைவேற்றுதலைத் தொடர்ந்து நிறைவேற்றி வாடிக்கையாளரிடம் இருந்து கட்டணங்களைப் பெற்றுக் கொள்ளத்தக்க உரிமை காரணமாக, உரிமம் இற்றைநாள் வரை நிறைவு செய்த செயல் நிறைவேற்று கட்ப்பாடுகளுக்கான கொடுப்பனவுக்கான (உறுதியளிக்கப்பட்ட கொடுப்பனவை வழங்குதல் உட்பட) உரிமையினைக் கொண்டுள்ளது.

B12 இற்றைநாள் வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்றுகைக்கான கொடுப்பனவைக் கோருவதற்கான அமுல்படுத்தக்கூடிய உரிமை காணப்படுதலை மதிப்பிடுவதில், உரிமம் ஒப்பந்தக் கட்டுறுப்புக்கள் மற்றும் ஒப்பந்தக் கட்டுறுப்புக்களை விஞ்சிநிற்கக் கூடிய சட்டநியதி அல்லது வழக்குத் தீர்ப்புக்களைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். இது பின்வருவன தொடர்பான மதிப்பீடுகளை உள்ளடக்கும்.

*(a)* உரிமை வாடிக்கையாளருடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்காவிடினும் கூட, இற்றைநாள் வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்றுகைக்கான கொடுப்பனவுக்கான உரிமையை வழங்கக்கூடிய ஏதேனும் சட்டம், நிர்வாக நடைமுறைகள் அல்லது சட்ட வழக்குத் தீர்ப்புக்கள்

*(b)* ஒத்த தன்மை வாய்ந்த ஒப்பந்தங்களிலான இற்றைநாள்வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்றுகைக்கான கொடுப்பனவுக்கான உரிமை தொடர்புபட்ட சட்ட வழக்குத் தீர்ப்புக்கள் சட்டநியதிப் படியான செல்லுபடியான விளைவுகளைக் கொண்டிருக்கவில்லை என அடையாளம் காட்டுதல் அல்லது

*(c)* கொடுப்பனவுக்கான உரிமையினை அமுல்படுத்துவதில்லை என்னும் உரிமத்தினது வியாபார வழக்கத்தின் விளைவாக, சட்டச் சூழலில் அந்த உரிமை அமுல்படுத்தப்பட முடியாது போதல். எனினும், வாடிக்கையாளருடனான ஒப்பந்தத்தில் கொடுப்பனவுக்கான உரிமை அமுல்படுத்தக் கூடியதாகக் காணப்படின், உரிமம் ஒத்த தன்மை வாய்ந்த ஒப்பந்தங்களில் கொடுப்பனவுக்கான உரிமையினை விட்டுக் கொடுக்கிறது என்னும் விடயத்தைக் கருத்தில் கொள்ளாது, கொடுப்பனவுக்கான உரிமையினைத் தொடர்ந்தும் வைத்திருக்கும்.

B13 ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு அட்டவணையானது இற்றை நாள் வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்று கடப்பாடுகளுக்காக கொடுப்பனவுக்கான உரிமையை என்பதை போதியளவுக்கு அடையாளம் காட்டுவதில்லை. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு அட்டவணையானது வாடிக்கையாளரால் வழங்கப்படத்தக்க கைமானத்தின் காலம் மற்றும் தொகையை குறிப்பிடினும் கூட, கொடுப்பனவு அட்டவணையானது இற்றை நாள் வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்று கடப்பாடுகளுக்காக கொடுப்பனவுக்கான உரிமை தொடர்பான போதிய சான்றுகளை வழங்குவதில்லை. உதாரணமாக, உரிமம் ஒப்பந்தத்தின் செயல் நிறைவேற்று கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுதல் தவிர்ந்த ஏனைய காரணங்களினால் வாடிக்கையாளரிடம் பெறப்பட்ட பணம் மீளளிக்கப்பட வேண்டும் என குறிப்பிட முடியும்.

**செயல் நிறைவேற்று கடப்பாடு ஒன்றின் முழுமையான திருப்தி செய்தல் தொடர்பான முன்னேற்றப் படிகளை அளவிடுவதற்கான முறைகள்**

B14 உரிமத்தின் காலப்போக்கிலான **செயல் நிறைவேற்று** கடப்பாடு ஒன்றின் முழுமையான திருப்தி செய்தல் தொடர்பான முன்னேற்றப் படிகளை அளவிடுவதற்கான முறைகள் பந்திகள் 35-37க்கு அமைவாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

(*a*) வெளியீட்டு முறைகள் (பந்திகள் B 15- B 17 இனைப் பார்வையிடுக) மற்றும்

(*b*) உள்ளீட்டு முறைகள் (பந்திகள் B 18- B 19 இனைப் பார்வையிடுக)

**வெளியீட்டு முறைகள்**

B15 வெளியீட்டு முறைகள் வருமானத்தினை வாடிக்கையாளருக்கு மாற்றப்பட்ட பொருட்கள் சேவைகளின் பெறுமதியை ஒப்பந்தத்தில் உறுதி வழங்கப்பட்ட மீதமுள்ள பொருட்கள் சேவைகளின் சார்பானதாக நேரடியான அளவிடும் அடிப்படைகளில் ஏற்பிசைவு செய்கின்றது. வெளியீட்டு முறைகள் இற்றை நாள் வரை நிறைவு செய்யப்பட்ட செயல் நிறைவேற்றல் தொடர்பான அளவைகள், அடையப்பட்ட செயல் நிறைவேற்றல்கள் தொடர்பான மதிப்பீடுகள், சாதனை மட்டங்கள், முடிவடைந்த காலம் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் அல்லது விநியோகிக்கப்பட்ட அலகுகள் முதலிய முறைகளை உள்ளடக்கும். உரிமம் அதன் முன்னேற்றப் படிகளை அளவிடுவதற்காக வெளியீட்டு முறையைப் பிரயோகிப்பதா என்பதை மதிப்பிடுவதில் தெரிவு செய்யப்பட்ட வெளியீடு உரிமத்தின் செயல் நிறைவேற்று கடப்பாட்டின் நிறைவேற்றல் தொடர்பாக உண்மைத்தன்மை வாய்ந்த செயல் நிறைவேற்றல்களை வெளிப்படுத்துமா என்பதைக் கவனித்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட வெளியீடு வாடிக்கையாளருக்கு மாற்றப்பட்ட சில வகையான பொருட்களையும் சேவைகளையும் அளவிடத் தவறினால், வெளியீட்டு முறையானது உரிமத்துக்கு உண்மைத்தன்மை வாய்ந்த செயல் நிறைவேற்றுதலை வழங்காது. உதாரணமாக, வெளியீட்டின் அளவீடுகளில் சேர்க்கப்படாத வாடிக்கையாளரால் கட்டுப்படுத்தப்படும் குறைவேலை அல்லது முடிவுறா வேலைகளை உருவாக்கியுள்ளபோது, உற்பத்தி செய்யப்பட்ட அல்லது விநியோகிக்கப்பட்ட அலகுகளை அடிப்படையாகக் கொண்ட வெளியீட்டு முறைகள், வெளியீட்டு முறையானது உரிமத்துக்க்கு உண்மைத்தன்மை வாய்ந்த செயல் நிறைவேற்றுதலை வழங்காது.

B16 நடைமுறை விடயம் ஒன்றாக, உரிமம் ஒன்று வாடிக்கையாளரிடமிருந்து இற்றை நாள் வரை நிறைவு செய்திருந்த செயல் நிறைவேற்று கடப்பாட்டுக்கு இணக்கமான கைமாளத்துக்கான உரிமையை கொண்டிருப்பின், (உதாரணமாக, ஒவ்வொரு உரிமத்துக்கு சேவை வழங்கப்பட்ட ஒவ்வொரு மணி நேரத்திற்கும் விற்பனைப் பட்டியலிடத்தக்க ஒரு சேவை ஒப்பந்தம்), அந்த உரிமம் பெற்றுக் கொள்ளத்தக்க உரிமையின் அளவிற்கு வருமானத்தை ஏற்பிசைவு செய்யும்.

B17 வெளியீட்டு முறைகளின் பிரதிகூலமானது, முன்னேற்றத்தை அளவிட பயன்படுத்தப்படும் வெளியீடுகள் நேரடியாக அவதானிக்கத்தக்கவையாக இல்லாதிருப்பதுடன், உரிமம் அவற்றைப் பிரயோகிக்கத் தேவையான தகவல்கள் கட்டணம் இன்றிக் கிடைக்காமல் இருத்தல் முதலானவை ஆகும். எனவே ஒரு உள்ளீட்டு முறை தேவைப்படலாம்.

**உள்ளீட்டு முறைகள்**

B18 உள்ளீட்டு முறைகள் வருமானத்தை, உரிமம் ஒரு செயல் நிறைவேற்று கடமையைத் திருப்தி செய்யும் வகையில் மேற்கொள்ளும் முயற்சிகள் அல்லது உள்ளீடுகளை முழுமையான செயல் நிறைவேற்று கட்டப்பாடுகளையும் பூர்த்தி செய்வதற்கான வளத் தேவைப்பாட்டின் சார்பாகக் கொண்ட அடிப்படையில் ஏற்பிசைவு செய்யும். (உதாரணமாக, நுகரப்பட்ட வளங்கள், செலவிடப்பட்ட ஊழியர் மணி, ஏற்பட்ட கிரயங்கள், செலவிடப்பட்ட நேரம் அல்லது பயன்படுத்தப்பட்ட இயந்திரம் மணித்தியாலம்). உரிமத்தின் முயற்சிகள் அல்லது உள்ளீடுகள் செயற்பாட்டுக் காலம் முழுவதும் சமமாக செலவிடப்படுவதாக இருந்தால், உரிமம் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் வருமானத்தை ஏற்பிசைவு செய்தல் பொருத்தமானதாக இருக்கலாம்.

B19 உள்ளீட்டு முறைகளின் குறைபாடானது, ஒரு உரிமத்தின் உள்ளீடுகள் மற்றும் வாடிக்கையாளருக்கான பொருட்கள் அல்லது சேவைகள் கட்டுப்பாட்டின் பரிமாற்றம் ஆகியவற்றுக்கு இடையில் நேரடித் தொடர்பு இருக்காமை ஆகும். எனவே, உரிமம்

உள்ளீட்டு முறையிலிருந்து பந்தி 39 இன்படி முன்னேற்றத்தை அளவிடும் நோக்கத்துக்கு ஏற்ப, வாடிக்கையாளருக்கு பொருட்கள் அல்லது சேவைகளின் கட்டுப்பாட்டை மாற்றும் செயற்பாட்டுடன் தொடர்பற்ற உள்ளீடுகளை விலக்குதல் வேண்டும். உதாரணமாக, கிரய அடிப்படை உள்ளீட்டு முறையைப் பயன்படுத்தும்போது, முன்னேற்ற நடவடிக்கைகளிலான சீராக்கம் பின்வரும் சூழ்நிலைகளில் தேவைப்படலாம்:

*(a)* ஏற்பட்ட கிரயம் உரிமம் செயல் நிறைவேற்று கடமைகளைத் திருப்திப்படுத்துவதில் பங்களிக்காதபோது. உதாரணமாக, ஒப்பந்த விலையில் பிரதிபலிக்கப்படாத, உரிமத்தின் கணிசமான வினைத்திறனின்மைகளால் ஏற்படக் கூடிய கிரயங்களின் அடிப்படையில் உரிமம் வருமானத்தை ஏற்பிசைவு செய்யாது, (உதாரணமாக, செயல் நிறைவேற்று கடமையைப் பூர்த்தி செய்ய ஏற்படும் பொருள் விரயங்கள், ஊழிய மற்றும் ஏனைய வள விரயங்கள்).

*(b)* ஏற்படும் கிரயம் உரிமம் செயல் நிறைவேற்று கடமையைத் திருப்திப்படுத்துவதிலான முன்னேற்றத்திற்கு விகிதாசாரமுறையில் இல்லாதபோது. அந்த சூழ்நிலைகளில், உரிமத்திற்கு ஏற்பட்ட கிரயத்தின் அளவுக்கு வருமானத்தை ஏற்பிசைவு செய்யும் வகையில் உள்ளீட்டு முறையை சீராக்குதல் ஆகும. உதாரணமாக, ஒரு உரிமம் செயல் நிறைவேற்று கடப்பாடுகளை நிறைவு செய்வதற்காக பயன்படுத்தப்படும் உள்ளீடுகள் சார்பான எதிர்பார்க்கை அளவில் வருமானத்தை ஏற்பிசைவு செய்தல் ஆகும். இதற்காகப் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(i) பொருள் தனித்துவமானதாக இன்மை

(ii) வாடிக்கையாளர் சேவைகளைப் பெறுவதற்கு முன் பொருட்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவார் என்னும் எதிர்பார்ப்பு

(iii) செயல் நிறைவேற்று கடமையைப் பூர்த்தி செய்வதற்கான மொத்த எதிர்பார்க்கப்படும் கிரயங்களுடன் ஒப்பிடுமிடத்து, மாற்றம் செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் கணிசமானதாக இருத்தல்

(iv) உரிமம் பொருட்களை ஒரு மூன்றாம் தரப்பிடம் இருந்து கொள்முதல் செய்வதுடன், அது கணிசமான வடிவமைத்தல் மற்றும் பொருள் உற்பத்தியில் ஈடுபடவில்லை (ஆனால் நிறுவனம் பந்திகள் B34-B38 க்கு ஏற்ப ஒரு முதல்வராக செயற்படுகிறது).

**திருப்புவதற்கான உரிமையுடனான விற்பனை**

B20 சில ஒப்பந்தங்களில், உரிமம் ஒரு வாடிக்கையாளருக்கு பொருட்களுக்கான கட்டுப்பாட்டை மாற்றித் தருவதுடன், வாடிக்கையாளருக்குப் பல்வேறு காரணங்களுக்காக (பொருள் தொடர்பான அதிருப்தி) அவற்றைத் திருப்பி அனுப்பிப் பின்வருவனவற்றில் ஏதேனும் சேர்க்கையினைப் பெற்றுக் கொள்ளும் உரிமையையும் வழங்கும்:

*(a)* செலுத்தப்பட்ட கைமானத்தின் முழுமையான அல்லது பகுதியளவு மீளளிப்பு

*(b)* உரிமத்தின் பெயரில் கடன் வைக்கப்பட்ட அல்லது வைக்கப்படும் தொகைக்கு எதிரானதொரு செலவு

*(c)* மாற்றீடாக மற்றொரு பொருள்.

B21 திரும்பல் உரிமையுடன் கூடிய பொருட்களின் மாற்றத்துக்குக் கணக்கீடு மேற்கொள்வதற்காக (மற்றும் கட்டண மீளளிப்பு நிபந்தனையுடன் வழங்கப்படும் சில சேவைகளுக்காக), உரிமம் பின்வருவனவன அனைத்தையும் ஏற்பிசைவு செய்யும்:

*(a)* மாற்றப்பட்ட பொருட்களுக்கான வருமானத்தை உரிமம் எதிர்பார்க்கும் உரிமையின் அளவில் (எனவே, திரும்பி வரக்கூடும் என எதிர்பார்க்கப்படும் பொருட்களுக்கு வருமானம் ஏற்பிசைவு செய்யப்படமாட்டாது)

(*b*) மீளளிப்புப் பொறுப்பு, மற்றும்

(*c*) மீளளிப்பு பொறுப்பை தீர்க்கும்போது வாடிக்கையாளரிடம் இருந்த பொருட்களை மீளப் பெறுவதற்கான உரிமையைக் காட்டக்கூடிய ஒரு சொத்து (மற்றும் விற்பனைக் கிரயம் மீதான தொடர்புடைய சீராக்கம்)

B22 திரும்பத்தகு காலத்தில் ஒரு பொருள் திரும்பி வரும்போது அதனை ஏற்கத் தயாராகவுள்ள உரிமத்தின் வாக்குறுதியானது பண மீளளிப்புக்காக கடப்பாட்டுக்கு மேலதிகமாக ஒரு செயல் நிறைவேற்று கடப்பாடாகக் கணக்கு வைக்கப்படல் ஆகாது.

B23 உரிமம் ஒன்று பந்திகள் 47-72 இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை (பந்திகள் 56-58 இல் குறிப்பிடப்பட்ட மாறும் கைமானத்துக்கான வரையறையுள்ள மதிப்பீடுகளிற்கான தேவைப்பாடுகள் உள்ளடங்கலாக) உரிமம் உரிமை கொள்ளத்தக்கதாக எதிர்பார்க்கக்கூடிய கைமானத்தின் தொகையை தீர்மானிப்பதற்காகப் பிரயோகிக்கும். உரிமம் உரிமையை எதிர்பார்க்காது பெறப்பட்ட (அலலது பெறத்தக்க) தொகைகளுக்கு, உரிமம், வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் பரிமாற்றப்படும்போது வருமானத்தை ஏற்பிசைவு செய்யாது, அவ்வாறு பெறப்பட்ட (அல்லது பெறத்தக்க) தொகையை ஒரு பரிப்பாக ஏற்பிசைவு செய்யும். அதன் பின்னர், ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும், உரிமம் பரிமாற்றப்பட்ட பொருட்களுக்கு ஈடாக உரிமை பெற எதிர்பார்க்கும் தொகைக்கு அதன் மதிப்பீட்டை மேற்கொண்டு, அதற்கேற்ற வகையில், ஊடுசெயல் விலை மற்றும் வருமானத் தொகை ஆகியவற்றை ஏற்பிசைவு செய்யும்.

B24 உரிமம் ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தின் முடிவிலும், மீளளிப்புத் தொகையிலான மாற்றம் தொடர்பான எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில், மீளளிப்புக்காக பரிப்பின் தொகையினை புதுப்பிக்க வேண்டும். உரிமம் தொடர்புபட்ட சீராக்கங்களை வருமானமாக (அல்லது வருமானத்திலான குறைப்பாக) ஏற்பிசைவு செய்தல் வேண்டும்.

B25 ஒரு வாடிக்கையாளருக்கு பணத்தை மீளளிப்பு செய்வதற்கான பரிப்பைத் தீர்க்கும்போது வாடிக்கையாளர்களிடமிருந்து பொருட்களை மீட்டெடுப்பதற்கான உரிமை தொடர்பாக உரிமம் ஏற்பிசைவு செய்யும் சொத்தானது, ஆரம்பந்தில் குறித்த பொருட்களின் முன்னைய கொண்டு செல்லல் பெறுமதியில் இருந்து (உதாரணமாக, இருப்புக்கள்) பொருட்களை மீளப் பெறுவதற்கான கிரயங்களைக் (உதாரணமாக, திருப்பி அனுப்பப்பட்ட பொருட்களின் பெறுமதியில் ஏற்பட்டிருக்கக்கூடிய சாத்தியமான இழப்புக்கள் காரணமாக உரிமத்துக்கு ஏற்படத்தக்க நட்டங்கள்) கழித்த பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படல் வேண்டும். ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தின் முடிவிலும், உரிமம் திருப்பப் பெறத்தக்க பொருட்களின் எதிர்பார்ப்புக்களிலான மாற்றங்கள் காரணமாக சொத்து மதிப்புக்களில் ஏற்பட்த்தக்க மாற்றங்களைப் புதுப்பித்தல் வேண்டும். உரிமம் மீளளிப்புப் பரிப்புக்களை சொத்துக்களில் இருந்து தனியாக முன்னிலைப்படுத்தல் வேண்டும்.

B26 ஒரே வகையான, தரமான, நிலைமையிலான மற்றும் விலையான பொருள்களில், ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை வாடிக்கையாளர்கள் மாற்றீடு செய்யும்போது, (உதாரணமாக, ஒரு நிறம் அல்லது அளவுக்குப் பதிலாக மற்றொன்றை) அது இந்த நியமத்தின் பிரயோக நோக்கங்களுக்காகத் திரும்பல் என்று கருதப்படுவதில்லை.

B27 வாடிக்கையாளர் ஒருவர் தொழிற்படு நிலையிலுள்ள பொருள் ஒன்றுக்கு மாற்றாகப் தொழிற்பாட்டுப் பழுதுள்ள பொருள் ஒன்றைத் திருப்பி அனுப்பும் ஒப்பந்தங்கள்,பந்திகள் B28-B33 இல் குறிப்பிடப்பட்ட உத்தரவாதங்களுக்கான வழிகாட்டல்களுக்கு அமைவாக மதிப்பிடப்படல் வேண்டும்.

**உத்தரவாதங்கள்**

B28 உற்பத்திகளின் (பொருட்கள் அல்லது சேவைகள்) விற்பனை தொடர்பாக உத்தரவாதங்களை (ஒப்பந்தம், சட்டம் அல்லது உரிமத்தின் வழக்கமான வணிக நடைமுறைகளுக்கு ஏற்ப) வழங்குதல் உரிமங்களுக்கு சாதாரணமானதாகும். உத்தரவாதத்தின் தன்மை கைத்தொழில்கள் மற்றும் ஒப்பந்தங்களிடையே கணிசமாக வேறுபடலாம். சில உத்தரவாதங்கள் உற்பத்திகளானவை விசேடமாக இணங்கப்பட்ட

வகையில் வடிவமைக்கப்பட்டமையால் ஒப்பந்தத் தரப்பினர் எதிர்பார்த்த வகையில் குறிப்பிட்ட விதமாகத் தொழிற்படும் என்னும் உத்தரவாத்தை வாடிக்கையாளர்களுக்கு உறுதியளிக்கிறது. ஏனைய உத்தரவாதங்கள் உற்பத்திகள் இணங்கப்பட்ட நியமங்களுக்கு அமைவாக உள்ளமை தொடர்பான உறுதிப்பாட்டுக்கு மேலதிகமாக, சேவை வழங்கல் தொடர்பான உத்தரவாதத்தை வழங்கும்.

B29 ஒரு வாடிக்கையாளர் உத்தரவாதத்தைத் தனியாகக் கொள்வனவு செய்வதற்கான தெரிவைக் கொண்டிருந்தால் (உதாரணமாக, உத்தரவாதம் தனியாக விலையிடப்பட்டால் அல்லது தனியான பேரம் பேசலுக்கு உட்பட்டதெனில்), உத்தரவாதம் என்பது ஒரு தனியான சேவை ஆகும், ஏனெனில் உரிமம் வாடிக்கையாளருக்கு ஒப்பந்தத்தில் விவரிக்கப்பட்ட செயல்திறன் கொண்ட உற்பத்திக்கு மேலதிகமாகவே சேவையை வழங்குவதாக உறுதியளிக்கிறது. அவ்வாறான சூழ்நிலைகளில், உரிமம் உறுதியளித்த உத்தரவாதத்தினை பந்திகள் 22-30க்கு இணக்கமாக ஒரு செயல் நிறைவேற்றுக் கடப்பாடாக கணக்கு வைத்து பந்திகள் 73-86க்கு இணக்கமாக ஊடுசெயல் விலையின் ஒரு பகுதியை செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டுக்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

B30 வாடிக்கையாளர் உத்தரவாதத்தைத் தனியாகக் கொள்வனவு செய்வதற்கான தெரிவைக் கொண்டிராதபோது, உறுதியளிக்கப்பட்ட உத்தரவாதம் அல்லது உத்தரவாதத்தின் ஒரு பகுதி, வாடிக்கையாளருக்கு உற்பத்திகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விவரக்குறிப்புகளுக்கு இணக்கமானவை என்பதற்கு மேலதிகமாக ஒரு சேவையை வழங்கும் சந்தர்ப்பம் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் உரிமம் குறித்த உத்தரவாதத்தினை LKAS 37 *ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்* நியமத்துக்கு இணங்க கணக்கு வைத்தல் வேண்டும்.

B31 உத்தரவாதமானது வாடிக்கையாளருக்கு உற்பத்திகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விவரக்குறிப்புகளுக்கு இணக்கமானவை என்பதற்கு மேலதிகமாக ஒரு சேவையை வழங்குகின்றனவா என்பதைத் தீர்மானிப்பதற்காக, உரிமம் பின்வரும் காரணிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்:

(*a*) சட்டத்தின் படி உத்தரவாதம் அவசியமானதா – உரிமம் உத்தரவாதத்தை வழங்குதல் சட்டத் தேவைப்பாடாக இருந்தால், அந்த சட்டத்தின் இருக்கும் தன்மையானது உறுதியளிக்கப்பட்ட உத்தரவாதமானது ஒரு செயல் நிறைவேற்றுக் கடப்பாடு அல்ல எனக் குறித்துக் காட்டுகிறது. ஏனெனில் அது போன்ற தேவைப்பாடுகள் குறைபாடுள்ள பொருட்களைக் கொள்வனவு செய்யும் இடரிலிருந்து வாடிக்கையாளர்களைப் பாதுகாக்க பொதுவாக தேவைப்படுகின்றன.

(*b*) உத்தரவாத காப்புக் காலத்தின் அளவு - நீண்ட கால பாதுகாப்புக் காலம் காணப்படின், அது பெரும்பாலும் செயல் நிறைவேற்றுக் கடப்பாடாக இருக்கும். ஏனெனில் இது வாடிக்கையாளருக்கு உற்பத்திகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விவரக்குறிப்புகளுக்கு இணக்கமானவை என்தற்கு மேலதிகமாக ஒரு சேவையை வழங்கும்.

(*c*) உரிமம் வழங்குவதாக உறுதியளிக்கும் கருமத்தின் தன்மை – உற்பத்திகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விவரக்குறிப்புகளுக்கு இணக்கமானவையாக இருப்பதற்காக உரிமம் குறிப்பிட்ட கருமம் ஒன்றை நிறைவு செய்தல் அவசியமானதாக இருந்தால், (உதாரணமாக, ஒரு குறைபாடுள்ள தயாரிப்புக்கான திரும்பல் கப்பற் சேவை), அந்தப் பணிகள் செயல் நிறைவேற்றுக் கடப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதில்லை.

B32 உறுதியளிக்கப்பட்ட உத்தரவாதம் அல்லது உத்தரவாதத்தின் ஒரு பகுதி, வாடிக்கையாளருக்கு உற்பத்திகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விவரக்குறிப்புகளுக்கு இணக்கமானவை என்பதற்கு மேலதிகமாக ஒரு சேவையை வழங்கினால், அவ்வாறு உறுதியளிக்கப்பட்ட சேவையானது ஒரு செயல் நிறைவேற்றுக் கடப்பாடு ஆகும். எனவே, உரிமம் உற்பத்தி மற்றும் சேவைக்கு ஊடுசெயல் விலையை ஒதுக்கீடு செய்தல் வேண்டும். உரிமம் ஒரு உறுதிப்பாட்டு வகை உத்தரவாதம் மற்றும் சேவை வகை உத்தரவாதம் இரண்டையுமே வழங்கி, ஆனால் அவை இரண்டுக்கும் நியாயமான முறையில் தனித்தனியாகக் கணக்கு வைக்க முடியாதபோது உரிமம் இரு உத்தரவாதங்களையும் ஒரே செயல் நிறைவேற்றுக் கடப்பாடாகக் கருதி ஒன்றாகக் கணக்கு வைக்கும்.

B33 உரிமம் ஒன்றின் உற்பத்திகள் தீங்கு அல்லது சேதம் விளைவித்தால், இழப்பீடு செலுத்த வேண்டியது ஒரு சட்டத் தேவைப்பாடாக உள்ள போது, அது ஒரு செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை ஏற்படுத்துவதில்லை. உதாரணமாக, ஒரு உற்பத்தியாளர் விற்கும் பொருட்களை உத்தேசிக்கப்பட் விதமாகப் பயன்படுத்தும்போது வாடிக்கையாளருக்கு ஏற்படும் எந்தவொரு சேதங்களுக்கும் (உதாரணமாக, தனிநபர் சொத்துக்களுக்கான இழப்புக்கள்) உற்பத்தியாளர் மீது பொறுப்பை சுமத்தும் சட்டப் பிராந்திய அதிகார எல்லைக்குள் உரிமம் ஒன்று வியாபாரம் செய்யக்கூடும். அதேபோல, காப்புரிமை, பதிப்புரிமை, வர்த்தகக்குறி அல்லது உரிமத்தின் உற்பத்திகளால் ஏற்படும் ஏனைய மீறல்கள் ஆகியவற்றின் கோரல்களிலிருந்து எழும் பரிப்புக்கள் மற்றும் சேதங்களுக்காக இழப்பீடு வழங்கும் ஒரு உறுதிப்பாடு செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை ஏற்படுத்துவதில்லை. அவ்வாறான கடப்பாடுகளுக்காக உரிமம் LKAS 37 நியமத்துக்கு அமைவாகக் கணக்கு வைக்கும்.

**முதல்வர் மற்றும் முகவர் தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டியவை**

B34 வாடிக்கையாளருக்கு பொருட்களை அல்லது சேவைகளை வழங்குவதில் மற்றொரு தரப்பினர் தொடர்புபட்டால், உரிமமானது உறுதி வழங்கலின் தன்மை குறிப்பிட்ட பொருட்கள் அல்லது சேவைகளை தாமே வழங்குவதற்கான செயல் நிறைவேற்றுக் கடப்பாடா (அதாவது உரிமமே முதல்வராகுதல்) அல்லது அந்தப் பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கு பிற தரப்பினரை ஏற்பாடு செய்வதா (அதாவது உரிமம் ஒரு முகவராகுதல்) என்பதைத் தீர்மானித்தல் வேண்டும்.

B35 வாடிக்கையாளருக்கு உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் மாற்றப்பட முன்னர் உரிமம் அவற்றைக் கட்டுப்படுத்தக் கூடியதாகக் காணப்படின், உரிமம் ஒரு முதல்வராகும். எவ்வாறாயினும், சட்டப்பூர்வமான உரித்து வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் முன்பு, அந்த நேரத்தின் போதாக மாத்திரம் உற்பத்திகளுக்கான சட்டபூர்வமான உரிமையினை உரிமம் பெற்றுக் கொண்டால், உரிமம் ஒரு முதல்வராக செயற்படுவது அவசியமானதல்ல. ஒப்பந்தத்தில் முதல்வராக இருக்கும் உரிமம் ஒன்று ஒரு செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை தானாகவே திருப்தி செய்யலாம் அல்லது மற்றொரு தரப்பினரைக் (உதாரணமாக, ஒரு உப ஒப்பந்ததாரர்) கொண்டு அதன் சார்பாக செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டின் சில அல்லது அனைத்துப் பகுதிகளையும் திருப்தி செய்து கொள்ள முடியும். முதல்வராகவுள்ள உரிமம் தானாகவே செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டைத் திருப்தி செய்கின்றபோது, அந்த உரிமம் மாற்றம் செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கு ஈடாகப் உரிமை பெற்றுக் கொள்ளப்பட எதிர்பாக்கும் முழுமையான தொகையையும் வருமானமாக ஏற்பிசைவு செய்யும்.

B36 பொருள் அல்லது சேவை வழங்குவதற்கான ஏற்பாட்டை மற்றொரு தரப்பினர் ஊடாக மேற்கொள்வது உரிமத்தின் செயல் நிறைவேற்றுக் கடப்பாடு எனின், உரிமம் ஒரு முகவர் ஆகும். ஒரு முகவராக செயற்படும் உரிமம் தனது செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டைத் திருப்தி செய்யும்போது, உரிமம் குறித்த பொருள் அல்லது சேவையை வாடிக்கையாளருக்கு மாற்றுவதற்காக ஏற்பாடு செய்வதற்காகக் கிடைக்கத்தக்கதாகவுள்ள எந்தவொரு கட்டணம் அல்லது தரகுத் தொகையை வருமானமாக ஏற்பிசைவு செய்யும். உரிமம் பெறும் கட்டணம் அல்லது தரகுத் தொகை என்பது வாடிக்கையாளருக்கு மாற்றப்பட்ட பொருள் அல்லது சேவைக்கு ஈடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட கைமானப் பெறுமதியில், மற்றைய தரப்பினருக்கு குறித்த பரிமாற்றம் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகைகள் கழிக்கப்பட்ட நிகர தொகை ஆகும்.

B37 உரிமம் ஒரு முகவராக இருப்பதை அடையாளம் காட்டத்தக்க குறிகாட்டிகள் (வாடிக்கையாளருக்கு மாற்றப்பட முன் பொருள் அல்லது சேவையைக் கட்டுப்படுத்த முடியாது இருப்பதற்கான) பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

*(a)* ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு மற்றொரு தரப்பு முதன்மையான பொறுப்பைக் கொண்டிருத்தல்

(*b*) ஒரு வாடிக்கையாளரால் பொருள்களை வாங்குவதற்காகக் கட்டளையிடப்பட முன்பாகவோ, அதற்கு பின்பாகவோ, கப்பல் போக்குவரத்தின் போதோ அல்லது திரும்பலின் போதோ உரிமத்துக்கு இருப்புத் தொடர்பான இடர்கள் காணப்படாமை.

(*c*) பிற தரப்பினரின் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலைகளை நிர்ணயிப்பதில் உரிமம் உரிமையினைக் கொண்டிராமை, அதன் காரணமாக அந்தப் பொருட்கள் அல்லது சேவைகளில் உரிமம் இருந்து பெறக்கூடிய நன்மை குறைவாக உள்ளமை.

(*d*) உரிமத்தின் கைமானமானது ஒரு தரகுக்கூலி வடிவில் உள்ளமை மற்றும்

(*e*) மற்றைய தரப்பினர் உரிமத்துக்கு பொருள் அல்லது சேவையை மாற்றியமையினால் பெறப்பட வேண்டிய கைமானம் தொடர்பாக ஏற்படும் கடன் இடர் உரிமத்துக்குக் காணப்படாமை

B38 உரிமத்தின் செயல் நிறைவேற்றுக் கடப்பாடுகள் மற்றும் ஒப்பந்த உரிமைகள் ஆகியன ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் உரிமம் வாக்குறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு மாற்றுவதற்கான செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டைத் திருப்தி செய்ய வேண்டிய கட்டாயம் இனி இல்லை (உரிமம் இனிமேலும் முதல்வராக செயற்படவில்லை) என மற்றொரு உரிமம் கருதிக் கொள்ளுமாயின், அந்த உரிமம் அந்த வருமானத்தை ஏற்பிசைவு செய்தல் ஆகாது. அதற்கு பதிலாக உரிமம் செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை திருப்தி செய்து வருமானத்தை ஏற்பிசைவு செய்து கொள்வதா அல்லது குறித்த தரப்பினருக்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொள்வதா (உரிமம் முகவராக தொழிற்படுவதா) என்பதை மதிப்பிடல் வேண்டும்.

**மேலதிகப் பொருட்கள் சேவைகளுக்கான வாடிக்கையாளர் தேர்வு**

B39 மேலதிகப் பொருட்கள் அல்லது சேவைகளை இலவசமாகவோ அல்லது கழிவிலோ பெற்றுக் கொள்வதற்கான வாடிக்கையாளரின் விருப்பம் விற்பனை ஊக்குவிப்புக்கள், வாடிக் கையாளர் வெகுமதிப் புள்ளி வழங்கல்கள், ஒப்பந்த புதுப்பித்தல் தெரிவுகள் அல்லது எதிர்காலப் பொருட்கள் அல்லது சேவைகளிலான கழிவுகள் முதலான வேறுபட்ட வடிவங்களில் காணப்படலாம்.

B40 ஒரு ஒப்பந்தத்தில், உரிமம் வாடிக்கையாளர் மேலதிக பொருள்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்வதற்கான தெரிவினை வழங்கினால், அந்தத் தெரிவானது வாடிக்கையாளர் வேறு வகைகளில் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு கணிசமான உரிமையை வழங்குகிறது என்றால் மாத்திரமே (உதாரணமாக குறித்த வாடிக்கையாளர் வகுப்புக்கு அப் பூகோளப் பிராந்தியத்தில் அந்த சந்தையில் பொருட்கள் சேவைகளுக்காக வழங்கப்படும் கழிவுக்கு அதிகமான கழிவினை வழங்கல்) ஒப்பந்தத்தில் ஒரு செயல் நிறைவேற்றுக் கடப்பாடு ஏற்படுகிறது. ஒப்பந்தம் வாடிக்கையாளருக்கு ஒரு கணிசமான உரிமையினை வழங்கினால், வாடிக்கையாளர் உரிமத்துக்கு எதிர்காலப் பொருட்கள் சேவைகள் தொடர்பாக முன்கூட்டியே கொடுப்பனவை மேற்கொள்கின்றார். உரிமம் எதிர்காலத்தில் குறித்த பொருட்கள் அல்லது சேவைகள் மாற்றப்பட்ட பின்னர் அல்லது குறித்த தெரிவு காலாவதியானதும் அதற்கான வருமானத்தை ஏற்பிசைவு செய்யும்.

B41 ஒரு வாடிக்கையாளர் பொருட்கள் சேவைகளுக்கான சந்தை விலைக்கு ஈடான விலையில் மேலதிகப் பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கான தெரிவினைக் கொண்டிருந்தால், குறித்த தெரிவானது முந்தைய ஒப்பந்தத்தில் நுழைவதன் மூலமே செயல்படுத்தப்பட முடியும் எனினும் கூட அது வாடிக்கையாளருக்கு கணிசமான உரித்தினை வழங்குவதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில், உரிமம் சந்தைப்படுத்தல் சலுகை ஒன்றினை வழங்கியுள்ளது எனக்கருதி, உரிமம் இந்த நியமத்துக்கு இணக்கமாக, வாடிக் கையாளர் மேலதிக பொருட்கள் அல்லது சேவைகளுக்காக தெரிவினை செயற்படுத்தும்போது மாத்திரம் கணக்கு வைத்தல் வேண்டும்.

B42 பந்தி 74 ஆனது உரிமம் ஊடுசெயல் விலைகளை செயல் நிறைவேற்றுக் கடப்பாடுகளுக்கு ஒரு சார்பளவான நிலைத்த விற்பனை விலைகளில் ஒதுக்கீடு செய்வதைத்

தேவைப்படுத்துகிறது. மேலதிகப் பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளரின் விருப்பத் தெரிவில் கொள்வனவு செய்வதற்கான நிலைத்த விற்பனை விலைகள் நேரடியாக அவதானிக்கப்பட முடியாவிடில், உரிமம் அதனை மதிப்பிடல் வேண்டும். அந்த மதிப்பீடு பின்வருவன சீராக்கப்பட்ட, வாடிக்கையாளர் விருப்பத் தெரிவினை செயற்படுத்தும் போது பெறத்தக்க கழிவினைப் பிரதிபலித்தல் வேண்டும்:

*(a)* வாடிக்கையாளர் விருப்பத் தேர்வை செயற்படுத்தாமல் பெறத்தக்க ஏதேனும் கழிவுகள்

*(b)* அந்த விருப்பத் தேர்வு செயற்படுத்தப்படுவதற்கான நிகழ்தகவு

B43 ஒரு வாடிக்கையாளர் எதிர்காலப் பொருட்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்வதற்கான கணிசமான உரிமை ஒன்றை வைத்திருக்க, அந்தப் பொருட்கள் அல்லது சேவைகள் அசல் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை ஒத்திருப்பதுடன் அசல் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப வழங்கப்படுமாயின், உரிமம் விருப்பத் தெரிவின் நிலைத்த விலைகளை மதிப்பிடுவதற்கான நடைமுறை மாற்று வழியாக, குறித்த தெரிவுக்கான பொருட்கள் அல்லது சேவைகளுக்காக வழங்கப்பட் எதிர்பார்க்கும் பொருட்கள் அல்லது சேவைகள் மற்றும் தொடர்புபட்ட எதிர்பார்த்த பெறுமதி ஆகியவற்றுக்காக ஊடுசெயல் விலையினை ஒதுக்கீடு செய்யும். வழக்கமாக அவ்வாறான தெரிவு வகைகள் ஒப்பந்த புதுப்பித்தல்களுக்கானவை ஆகும்.

**வாடிக்கையாளர்களது பயன்படுத்தப்படாத உரிமைகள்**

B44 பந்தி 106 இன்படி, ஒரு வாடிக்கையாளரிடமிருந்து ஒரு முற்பணம் பெறப்பட்டதும், உரிமம் மாற்றப்பட வேண்டிய அல்லது பொருட்கள் சேவைகளை எதிர்காலத்தில் மாற்றம் செய்யத் தயார்ப்படுத்துவதற்கான செயல் நிறைவேற்றுக் கடப்பாடுகள் தொடர்பாக, பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணத்தின் தொகையில் பரிப்பு ஒன்றினை ஏற்பிசைவு செய்யும். உரிமம் அந்தப் பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றி, செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டைத் திருப்தி செய்யும்போது குறித்த பரிப்பினை ஏற்பிசைவு நீக்கும்.

B45 ஒரு வாடிக்கையாளரது மீளப்பெற முடியாத வைப்பானது வாடிக்கையாளர் ஒரு பொருள் அல்லது சேவையைப் பெறுவதற்கான உரிமையை வழங்குகிறது (அத்துடன் உரிமம் பொருட்கள் அல்லது சேவையை வழங்குவதற்காக தயார்ப்படுத்தல் நிலையில் இருக்கும் பொறுப்பை ஏற்படுத்துகிறது). எனினும், வாடிக்கையாளர்கள் அவர்களது ஒப்பந்த உரிமைகள் அனைத்தையும் பயன்படுத்துவதில்லை. அந்தப் பயன்படுத்தப்படாத உரிமைகள் பெரும்பாலும் முறிப்பு (breakage) எனக் குறிப்பிடப்படுகிறது.

B46 ஒப்பந்தப் பொறுப்புகளிலான முறிப்புத் தொகை ஒன்றுக்கு உரிமம் உரித்துடையதாக எதிர்பார்க்கப்படுமானால், அந்த உரிமம் எதிர்பார்க்கப்பட்ட முறிப்புத் தொகையை வாடிக்கையாளரால் செயற்படுத்தப்படும் உரிமைகளின் நடத்தை விகிதத்தில் வருமானமாக ஏற்பிசைவு செய்யும். முறிப்புத் தொகை ஒன்றுக்கு உரிமம் உரித்துடையதல்லாததாக எதிர்பார்க்கப்படுமானால், வாடிக்கையாளர் மீதமுள்ள உரிமையை செயற்படுத்துவதற்கான வாய்ப்பு தொலைவானதாகும்போது எதிர்பார்க்கப்பட்ட முறிப்புத் தொகையை வருமானமாக ஏற்பிசைவு செய்யும். உரிமம் முறிப்புத் தொகைக்கான உரித்தைக் கொண்டுள்ளதா என்பதைத் தீர்மானிக்க, மாறுபடும் கைமானத்தின் வரையறையுள்ள மதிப்பீடுகள் தொடர்பான பந்திகள் 56-58 இன் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

B47 உரிமம் மற்றொரு தரப்பினருக்கு கொடுக்க வேண்டிய, வாடிக்கையாளரது பயன்படுத்தப்படாத உரிமைகள் தொடர்பாகப் பெறப்பட்ட ஏதேனும் கைமானத்துக்காக உரிமம் பரிப்பு ஒன்றினை (வருமானத்தை அல்ல) ஏற்பிசைவு செய்தல் வேண்டும். உதாரணமாக, அரச உரிமம் ஒன்று தொடர்புபட்ட கோரப்படாத சொத்துரிமை சட்டங்களுக்கு இணங்க பரிப்பை ஏற்பிசைவு செய்தல்.

**மீளளிக்கப்படாத முற்கட்டணம் (மற்றும் சில தொடர்புபட்ட கிரயங்கள்)**

B48 சில ஒப்பந்தங்களில், உரிமம் வாடிக்கையாளரிடம் இருந்து ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் அல்லது அதன் அண்மைக் கட்டத்தில் மீளளிக்கத் தக்கதல்லாத முற்கட்டணம் ஒன்றை

வசூலிக்கும். உதாரணமாக, சுகாதாரக் கழக உறுப்புரிமை ஒப்பந்தங்களிலான இணைதல் கட்டணம், தொலைத்தொடர்பு ஒப்பந்தங்களிலான செயல்படுத்தல் கட்டணங்கள், சில சேவை ஒப்பந்தங்களிலான ஒழுங்கமைத்தல் கட்டணங்கள் மற்றும் சில விநியோக ஒப்பந்தங்களிலான தொடக்கக் கட்டணங்கள் முதலியன.

B49 இத்தகைய ஒப்பந்தங்களில் செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை அடையாளம் காண, உரிமம் குறித்த கட்டணம் வாக்குறுதியளிக்கப்பட்ட பொருள் அல்லது சேவையை மாற்றுவதுடன் தொடர்புடையதா என்பதை மதிப்பீடு செய்ய வேண்டும். பல சந்தர்ப்பங்களில், மீளளிக்கப்படாத முற்கட்டணங்கள் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான, ஒப்பந்தத்தின் தொடக்கத்திலான அல்லது அதற்கு அண்மையான நடவடிக்கை ஒன்றைச் செயல்படுத்துவதற்கு அவசியமாக இருப்பினும், அந் நடவடிக்கை வாக்குறுதியளிக்கப்பட்ட பொருள் அல்லது சேவையை வாடிக்கையாளருக்கு மாற்றுவதில் முடிவடைதில்லை. (பந்தி 25 ஐப் பார்க்கவும்). அதற்கு பதிலாக, முற்கட்டணமானது, எதிர்கால பொருட்கள் அல்லது சேவைகளுக்கான ஒரு முன்கூட்டிய கட்டணமாக அமைய, அது அந்த எதிர்கால பொருட்கள் அல்லது சேவைகள் வழங்கப்படும்போது வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும். வாடிக்கையாளர் ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கான விருப்பத் தெரிவினை உரிமம் வழங்கியிருக்க, அந்த விருப்பத் தெரிவு வாடிக்கையாளருக்கு பந்தி B40 இல் குறிப்பிடப்பட்டவாறு கணிசமான உரிமை ஒன்றை வாடிக்கையாளருக்கு வழங்குமெனில், வருமான ஏற்பிசைவுக் காலம் ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட காலத்துக்கு அப்பாலும் நீடிக்கும்.

B50 மீளளிக்கப்படாத முற்கட்டணம் ஒரு பொருள் அல்லது சேவையுடன் தொடர்புபட்டிருந்தால், உரிமம், பந்திகள் 22-30 க்கு இணங்க குறித்த பொருள் அல்லது சேவையை ஒரு தனித்த செயல் நிறைவேற்றுக் கடப்பாடாக கணக்கு வைப்பதா என்பதை மதிப்பிடல் வேண்டும்.

B51 உரிமம் ஒப்பந்தத்தை நிலைநிறுத்துவதற்காக ஏற்படும் செலவினங்களுக்கான இழப்பீடாக (அல்லது பந்தி 25 இல் விவரிக்கப்பட்டபடி ஏனைய நிர்வாகப் பணிகள்) ஒரு மீளளிக்கப்படாத முற்கட்டணத்தை வசூலிக்கக்கூடும். அந்த நிலை நிறுத்தல் நடவடிக்கைகள் ஒரு செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை நிறைவு செய்யவில்லை என்றால், உரிமம் பந்தி 19க்கு இணங்க, முன்னேற்றக் கட்டத்தை அளவிடும்போது, அந்த நிலைநிறுத்தல் நடவடிக்கைகளைப் புறக்கணிக்கும். அது ஏனெனில், நிலைநிறுத்தல் நடவடிக்கைகளின் கிரயங்கள், வாடிக்கையாளருக்கான பொருட்கள் அல்லது சேவைகளின் மாற்றத்தை வெளிப்படுத்தவில்லை என்பதாலாகும். ஒரு ஒப்பந்தத்தை நிலைநிறுத்தலுக்கான கிரயங்கள், பந்தி 95க்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்படத்தக்க சொத்து ஒன்றினை விளைவாகத் தந்திருக்கின்றதா என்பதை உரிமம் மதிப்பிடல் வேண்டும்.

**உரிமை அனுமதியளித்தல்**

B52 ஒரு உரிமை அனுமதியானது, உரிமம் ஒன்றின் புலமைச் சொத்து ஒன்றுக்கான வாடிக்கையாளரது உரித்தினை உருவாக்குகிறது. அனைத்து புலமைச் சொத்துக்களினதும் உரிமை அனுமதிப் பத்திரம் பின்வருவனவற்றினை உள்ளடக்கலாம், ஆனால் அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல.

(*a*) மென்பொருள் மற்றும் தொழில்நுட்பம்

(*b*) அசையும் படங்கள், இசை மற்றும் இதர வடிவங்களிலான ஊடகங்கள் மற்றும் பொழுதுபோக்கு

(*c*) அங்கீகார உரிமம் மற்றும்

(*d*) ஆக்கவுரிமைகள், வர்த்தகக் குறிகள் மற்றும் பதிப்புரிமை.

B53 ஒரு வாடிக்கையாளருக்கு உரிமை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான ஒரு வாக்குறுதிக்கு மேலதிகமாக, ஒரு உரிமம் பிற பொருட்கள் அல்லது சேவைகளின் மாற்றலை வாடிக்கையாளருக்கு உறுதியளிக்கலாம். அந்த வாக்குறுதிகள் வெளிப்படையாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவையாகவோ, உரிமத்தின் வழக்கமான வணிக

நடைமுறைகளாக உள்ளார்ந்தமானதாகவோ, பிரசுரப்படுத்தப்பட்ட கொள்கைகளாகவோ அல்லது பிரத்தியேக கூற்றுக்களாகவோ இருக்கலாம் (பந்தி 24 ஐப் பார்க்கவும்). மற்ற வகையான ஒப்பந்தங்களைப் போல, ஒரு வாடிக்கையாளருடனான ஒப்பந்தம் பிற பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கான வாக்குறுதிக்கு மேலதிகமாக, ஒரு உரிமை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான வாக்குறுதியையும் கொண்டிருக்கும் போது உரிமம் ஒவ்வொரு செயல் நிறைவேற்றுக் கடப்பாடுகளையும் அடையாளம் காண்பதற்காகப் பந்திகள் 22-30 இனைப் பிரயோகிக்கும்.

B54 பந்திகள் 26-30க்கு அமைவாக உரிமை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான வாக்குறுதியானது ஒப்பந்தத்தில் வாக்குறுதியளிக்கப்பட்ட பிற பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து வேறுபட்டதானதாக இல்லாவிடில், உரிமமானது உரிமை அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான வாக்குறுதியையும், வாக்குறுதியளிக்கப்பட்ட பிற பொருட்கள் மற்றும் சேவைகளையும் ஒரே செயல் நிறைவேற்றுக் கடப்பாடாக கணக்கு வைத்தல் வேண்டும். ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் உரிமை அனுமதிப்பத்திரம் வழங்கலில் இருந்து வேறுபடாத சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்கள் பின்வருமாறு:

*(a)* ஒரு உருவமுள்ள பொருளின் ஒருங்கிணைந்த முக்கிய பகுதியான அதன் ஆக்கக்கூறு ஒன்றை உருவாக்குவதற்கான உரிமை அனுமதிப்பத்திரம் மற்றும் வாடிக்கையாளர் ஒரு தொடர்புடைய சேவையுடன் இணைத்து மட்டுமே பயனடையத்தக்க உரிமை

*(b)* அனுமதிப்பத்திரம் ஒன்று (உரிமை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதன் மூலம், உள்ளடக்கத்தை அணுகுவதற்கான அனுமதியை வாடிக்கையாளருக்கு வழங்கத்தக்க இணையவழி சேவை).

B55 உரிமை அனுமதி தனியானதான அல்லாதபோது, செயல் நிறைவேற்றுக் கடப்பாடானது (உறுதியளிக்கப்பட்ட உரிமை அனுமதிப்பத்திரம் உள்ளடங்கலாக) காலப் போக்கில் திருப்தி செய்யப்படுமா அல்லது குறித்த காலப் புள்ளி ஒன்றில் திருப்தி செய்யப்படுமா என்பதைத் தீர்மானிப்பதற்காக உரிமம் பந்திகள் 31-38 இனைப் பிரயோகிக்கும்.

B56 உரிமை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான உறுதியானது, ஒப்பந்தத்தில் வாக்குறுதியளிக்கப்பட்ட பிற பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து வேறுபட்டதாக இருந்தால், அதன்படி உரிமை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான உறுதிமொழி ஒரு தனித்த செயல் நிறைவேற்றுக் கடப்பாடாக உள்ள போது, வாடிக்கையாளருக்கு உரிமை அனுமதிப்பத்திரம் மாற்றப்படுவது காலப்போக்கிலா அல்லது ஒரு குறித்த காலப் புள்ளியிலா என்பதை உரிமம் தீர்மானிக்க வேண்டும். இதனைத் தீர்மானிப்பதில், வாடிக்கையாளருக்கு உரிமை அனுமதிப் பத்திரம் வழங்கும் உறுதிப்பாட்டின் தன்மையானது வாடிக்கையாளருக்குப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றை வழங்குகிறதா என்பதை உரிமம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்:

*(a)* உரிமை அனுமதிப்பத்திரத்தின் காலப்பகுதி முழுமையாக உரிமத்தின் புலமைச் சொத்தினை அவ்வாறே அணுகுவதற்கான உரிமை, அல்லது

*(b)* உரிமை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காலப்பகுதியில் இருக்கின்றவாறாக உரிமத்தின் புலமைச் சொத்தினைப் பயன்படுத்துவதற்கான உரிமை.

**உரிமத்தின் வாக்குறுதியின் தன்மையை தீர்மானித்தல்**

B57 ஒரு உரிமை அனுமதித்தினுடைய உரிமை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான உறுதிமொழியானது, வாடிக்கையாளருக்கு புலமைச் சொத்தை அணுகுவதற்கான அல்லது பயன்படுத்துவதற்கான உரிமையை வழங்குகிறதா என்பதை தீர்மானிப்பதற்காக, உரிமமானது வாடிக்கையாளர் புலமைச் சொத்தின் பயன்பாட்டை நிர்வகித்து, உரிமை அனுமதிப்பத்திரத்தினால் அனுமதிக்கப்பட்ட ஒரு காலப் புள்ளியில் உரிமை அனுமதிப் பத்திரத்துடன் தொடர்புபட்ட சொத்தின் மீதமுள்ள கணிசமான பயன்பாடு முழுவதையும் பெற்றுக் கொள்ள முடியுமா என்பதைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளர் உரிமை கொண்ட புலமைச் சொத்தின் மீதான உரிமையானது உரிமை அனுமதிப்பத்திரக்

காலப் பகுதியில் மாற்றமடைந்தால், வாடிக்கையாளர் புலமைச் சொத்தின் பயன்பாட்டை நிர்வகித்து, உரிமை அனுமதிப்பத்திரத்தினால் அனுமதிக்கப்பட்ட ஒரு காலப் புள்ளியில் உரிமை அனுமதிப் பத்திரத்துடன் தொடர்புபட்ட சொத்தின் கணிசமான பயன்பாடு முழுவதையும் பெற்றுக் கொள்ள முடியாது. உரிமம் புலமைச் சொத்துடன் தொடர்ச்சியாக ஈடுபட்டு இருக்கும்போது, வாடிக்கையாளர் உரிமை கொண்டுள்ள புலமைச் சொத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டால், புலமைச் சொத்தானது மாற்றமடையும் (அத்துடன், வாடிக்கையாளர் உரிமை அனுமதிப் பத்திரத்தைக் கட்டுப்படுத்தும் காலம் தொடர்பான உரிமத்தின் மதிப்பீட்டையும் பாதிக்கும்). இத்தகைய சந்தர்ப்பங்களில், உரிமை அனுமதிப்பத்திரமானது, புலமைச் சொத்துக்களை அணுகுவதற்கான உரிமையினை வாடிக்கையாளருக்கு வழங்குகிறது. (பந்தி B58 ஐ பார்க்கவும்). இதற்கு மாறாக, உரிமை அனுமதிப்பத்திரத்தினால் வாடிக்கையாளருக்கு புலமைச் சொத்தின் மீது வழங்கப்பட்ட உரிமை மாறாது காணப்படின், வாடிக்கையாளர் உரிமை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காலப் புள்ளியில், புலமைச் சொத்தின் பயன்பாட்டை நிர்வகித்து, உரிமை அனுமதிப்பத்திரத்தினால் அனுமதிக்கப்பட்ட ஒரு காலப் புள்ளியில் உரிமை அனுமதிப்பத்திரத்துடன் தொடர்புபட்ட சொத்தின் மீதமுள்ள கணிசமான பயன்பாடு முழுவதையும் பெற்றுக் கொள்ள முடியும் (பந்தி B61 ஐ பார்க்கவும்). இவ்வாறான நிலைமைகளில், உரிமத்தினால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் அதன் சொந்த சொத்தை மாத்திரமே (அதாவது, தொடர்புபட்ட புலமைச் சொத்து) மாற்றும். இது உரிமம் எதிர்கால உரிமை அனுமதிப்பத்திரங்களை விங்குவதற்கான இயலுமையைப் பாதிக்கும். எனினும், அந்த நடவடிக்கைகள் உரிமை அனுமதிப்பத்திரம் வழங்கும் அல்லது வாடிக்கையாளர் கட்டுப்படுத்தும் எதனையும் பாதிப்பதில்லை.

B58 ஒரு உரிமை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான உரிமத்தின் வாக்குறுதியின் தன்மையானது, பின்வரும் மூலப் பிரமாணங்கள் செய்யப்பட்டிருப்பின், உரிமத்தின் புலமைச் சொத்தினை அணுகுவதற்கான உரிமையை வழங்குவதற்கான ஒரு வாக்குறுதியாகும்:

*(a)* உரிமமானது வாடிக்கையாளர் உரிமை கொண்டுள்ள புலமைச் சொத்தினைக் கணிசமாகப் பாதிக்கத்தக்க வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என ஒப்பந்தம் தேவைப்படுத்துதல் அல்லது வாடிக்கையாளர் நியாயமாக எதிர்பார்த்தல் (பந்தி B59 இனைப் பார்க்கவும்),

*(b)* உரிமை அனுமதிப்பத்திரத்தால் வழங்கப்பட்ட உரிமைகள் பந்தி B58 (அ) இல் அடையாளம் காணப்பட்ட உரிமத்தின் நடவடிக்கைகளால் நேர் அல்லது எதிர்மறையான விளைவுகளுக்கு உள்ளாகுதல், மற்றும்

*(c)* அந்த நடவடிக்கைகள் நிகழ்ந்தால் அது வாடிக்கையாளர்களுக்கு ஒரு பொருள் அல்லது சேவையை மாற்றுவதில் விளைவை ஏற்படுத்துவதில்லை (பந்தி 25 இனைப் பார்க்கவும்)

B59 உரிமமானது வாடிக்கையாளர் உரிமை கொண்டுள்ள புலமைச் சொத்தினைக் கணிசமாகப் பாதிக்கத்தக்க வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என வாடிக்கையாளர் நியாயமாக எதிர்பார்த்தலை அடையாளம் காட்டக் கூடிய காரணிகள் உரிமத்தின் வழக்கமாக வணிக நடைமுறைகள், பிரசுரப்படுத்தப்பட்ட கொள்கைகள் அல்லது பிரத்தியேக கூற்றுக்கள் முதலானவற்றை உள்ளடக்கும். தீர்க்கமாகத் தீர்மானிக்கப்பட முடியாவிடினும் கூட, வாடிக்கையாளர் உரிமை கொண்ட புலமைச் சொத்து தொடர்புபட்ட, உரிமம் மற்றும் வாடிக்கையாளருக்கு இடையிலான பகிரப்பட்ட பொருளாதார நலன்கள் (உதாரணமாக, விற்பனை அடிப்படையிலான இறை) ஒன்றின் காணப்படுதலானது, உரிமம் புலமைச் சொத்தினைக் கணிசமாகப் பாதிக்கத்தக்க வகையிலான நடவடிக்கைகளை உரிமம் மேற்கொள்ளும் என வாடிக்கையாளர் நியாயமாக எதிர்பார்த்தலை அடையாளம் காட்டக் கூடும். அவ்வாறான அணுகுகையைப் பெறத்தக்க வகையில் செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை நிறைவு செய்வதற்கான உரிமத்தின் முன்னேற்ற நிலைமையை அளவிடுவதற்கான பொருத்தமான முறையைத் தெரிவு செய்வதற்காக உரிமம் பந்திகள் 39-45 இனைப் பிரயோகிக்க முடியும்.

B60 பந்தி B58 இல் உள்ள மூலப் பிரமாணங்கள் நிறைவேற்றப்பட்டால், உரிமமானது உரிமை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வாக்குறுதியினை காலப் போக்கில் திருப்தி செய்யப்படும் செயல் நிறைவேற்றுக் கடப்பாடாகக் கணக்கு வைக்கும். ஏனெனில், உரிமம் தனது சொத்துக்கான அணுகுகையை வழங்கும் செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை நிறைவு செய்யும் அதே நேரத்தில், வாடிக்கையாளர் அதன் நன்மையைப் பெற்று நுகர்வு செய்வார் (பந்தி 35 (a) இனைப் பார்க்கவும்).

B61 பந்தி B58 இன் மூலப் பிரமாணங்கள் நிறைவேற்றப்படாவிட்டால், உரிமத்தின் வாக்குறுதியானது, வாடிக்கையாளருக்கு உரிமை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காலப் புள்ளியில் புலமைச் சொத்து உள்ளவாறான நிலைமையில் (வடிவம் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மையில்) உரிமத்தின் புலமைச் சொத்தினைப் பயன்படுத்துவதற்கான உரிமையினை வழங்குதல் ஆகும். இதன் கருத்தானது, வாடிக்கையாளர் புலமைச் சொத்தின் பயன்பாட்டை நிர்வகித்து, உரிமை அனுமதிப்பத்திரம் உரிமையை அனுமதிக்கும் ஒரு காலப் புள்ளியில் உரிமை அனுமதிப் பத்திரத்துடன் தொடர்புபட்ட சொத்தின் மீதமுள்ள கணிசமான பயன்பாடு முழுவதையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதாகும். உரிமமானது உரிமை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வாக்குறுதியினை குறித்த காலப் புள்ளியில் திருப்தி செய்யப்படும் செயல் நிறைவேற்றுக் கடப்பாடாகக் கணக்கு வைக்கும். உரிமை அனுமதிப் பத்திரம் வாடிக்கயையாளருக்கு மாற்றப்படும் காலப்பகுதியினைத் தீர்மானிப்பதற்காக, உரிமம் பந்தி 38 இனைப் பிரயோகிக்கும். இருப்பினும், உரிமத்தின் புலமைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையை வழங்கும் உரிமை அனுமதிப் பத்திரங்களில், அந்த உரிமத்தின் புலமைச் சொத்துக்களில் இருந்து வாடிக்கையாளர் பயன்பெறும் காலத்தின் ஆரம்பத்திற்கு முன்னர் வருமானத்தை ஏற்பிசைவு செய்தல் ஆகாது. உதாரணமாக, மென்பொருள் ஒன்றின் உரிமை அனுமதிப்பத்திரக் காலம் வாடிக்கையாளர் ஒருவர் மென்பொருளை உடனடியாகப் பயன்படுத்தத்தக்க வகையில் உரிமம் குறியீட்டு வாசகத்தை வழங்குவதற்கு (அல்லது கிடைக்கத்தக்கதாக செய்வதற்கு) முன்னரே ஆரம்பித்திருப்பின், உரிமம் குறியீட்டு வாசகம் வழங்கப்படுவதற்கு முன்னர் வருமானத்தை ஏற்பிசைவு செய்தலாகாது.

B62 உரிமை அனுமதிப்பத்திரம் ஒன்று புலமைச் சொத்தின் அணுகைக்கான உரிமையை வழங்குகிறதா அல்லது உரிமத்தின் புலமைச் சொத்தைக் பயன்படுத்துவதற்கான உரிமையை வழங்குகிறதா என்பதைத் தீர்மானிக்கும் போது பின்வரும் காரணிகளைப் புறக்கணிக்க வேண்டும்.

*(a)* நேரம், பூகோளப் பிராந்தியம் அல்லது பயன்பாட்டு வரையறைகள் - அந்த வரையறைகளானவை, உரிமம் செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை குறித்த காலப் புள்ளியிலா அல்லது காலப் போக்கிலா நிறைவேற்றுகிறது என்பதை வரையறுக்காது, வாக்குறுதி அளிக்கப்பட்ட உரிமை அனுமதிப்பத்திரத்தின் அம்சங்களை சொற் பொருள் விளக்கம் அளிக்கின்றன.

*(b)* புலமைச் சொத்துக்கான செல்லுபடியான ஆக்கவுரிமையைக் கொண்ட, அனுமதியற்ற பாவனையில் இருந்து அந்த ஆக்க உரிமையைப் பாதுகாக்கத்தக்க உரிமத்தினால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் - ஆக்கவுரிமையைப் பாதுகாப்பதற்கான வாக்குறுதி ஒரு செயல் நிறைவேற்றுக் கடப்பாடு ஆகாது. ஏனென்றால் ஆக்கவுரிமையைப் பாதுகாப்பதற்கான செயற்பாடு, உரிமத்தின் புலமைச் சொத்துக்களின் மதிப்பைப் பாதுகாப்பதுடன், மாற்றப்பட்ட உரிமை அனுமதிப்பத்திரமானது ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட உரிமை அனுமதிப்பத்திரத்துக்கான குறிப்புரைகளை திருப்தி செய்கின்றது என்னும் உத்தரவாதத்தை வாடிக்கையாளருக்கு வழங்குகின்றது.

**விற்பனை அடிப்படையிலான அல்லது பயன்பாட்டு அடிப்படையிலான இறைகள்**

B63 56-59 பந்திகளின் தேவைப்பாடுகளுக்கு ஆனபோதிலும், உரிமமானது புலமைச் சொத்து ஒன்றின் உரிமை அனுமதிப்பத்திரத்தின் பரிமாற்றத்துக்கு ஈடாக வாக்குறுதி வழங்கப்பட்ட விற்பனை அடிப்படையிலான அல்லது பயன்பாட்டு அடிப்படையிலான இறைக்கான வருமானத்தை பின்வரும் நிகழ்வுகள் அல்லது அதற்குப் பின்னர் ஏற்பிசைவு செய்யும்.

*(a)* பிற்பட்ட கால விற்பனை அல்லது பயன்பாடு ஏற்படல், மற்றும்

*(b)* விற்பனை அடிப்படையிலான அல்லது பயன்பாட்டு அடிப்படையிலான இறைகள் வாக்குறுதி வழங்கப்பட்ட செயல் நிறைவேற்றுக் கடப்பாடுகளில் சில அல்லது அனைத்தும் திருப்தி செய்யப்படுதல் (அல்லது பகுதியளவில் திருப்தி செய்யப்படல்).

**மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள்**

B64 மீள் கொள்வனவு ஒப்பந்தம் என்பது உரிமம் ஒரு சொத்தை விற்று, சொத்தை மீள கொள்வனவு செய்வதற்கான (அதே ஒப்பந்தத்தில் அல்லது வேறு ஒப்பந்தத்தில்) வாக்குறுதியை வழங்கும் அல்லது விருப்பத் தெரிவினை வைத்திருக்கும் ஒப்பந்தமாகும். மீள்கொள்வனவு செய்யப்படும் சொத்தானது முதலில் வாடிக்கையாளருக்கு விற்கப்பட்ட சொத்தாகவோ, கணிசமான அளவில் அதனை ஒத்த சொத்தாகவோ அல்லது முதலில் விற்கப்பட்ட சொத்தை ஒரு மூலக்கூறாகக் கொண்ட மற்றொரு சொத்தாகவோ காணப்படலாம்.

B65 மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் பொதுவாக மூன்று வடிவங்களில் வருகின்றன:

*(a)* சொத்தை மீள்கொள்வனவு செய்வதற்கான உரிமத்தின் கடப்பாடு (முன்னோக்கிய)

*(b)* சொத்தை மீள்கொள்வனவு செய்வதற்கான உரிமத்தின் உரிமை (அழைப்பு விருப்பத் தேர்வு)

*(c)* வாடிக்கையாளர் கோரிக்கையில் சொத்துக்களை மீளக் கொள்வனவு செய்வதற்கான உரிமத்தின் கடப்பாடு (ஒரு வைப்புத் தேர்வு விருப்பம்).

**முன்னோக்கிய அல்லது அழைப்பு விருப்பத் தேர்வு**

B66 உரிமம் சொத்தினை மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு அல்லது உரிமையைக் கொண்டுள்ள போது (ஒரு முன்னோக்கிய அல்லது ஒரு அழைப்பு விருப்பத் தேர்வு), வாடிக்கையாளர் சொத்தின் கட்டுப்பாட்டைப் பெற்றுக் கொள்வதில்லை. ஏனெனில், வாடிக்கையாளர் சொத்தினைப் பௌதீக வைத்திருப்பினும், சொத்தின் பயன்பாட்டை நெறிப்படுத்தி, மீதமுள்ள நன்மைகளின் கணிசமான அளவு முழுவதையும் பயன்படுத்துவதற்கான திறனைக் குறைவாகக் கொண்டிருப்பார். இதன் விளைவாக, உரிமம் அந்த ஒப்பந்தத்தை பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றில் கணக்கு வைக்கும்.

*(a)* சொத்தின் அசல் விற்பனை விலையிலும் குறைவான விலையில் உரிமம் சொத்தை மீள்கொள்வனவு செய்ய முடியும் எனில், LKAS 17 *குத்தகைகள்* நியமத்துக்கு இணக்கமாக, அல்லது

*(b)* சொத்தின் அசல் விற்பனை விலைக்கு சமமான அல்லது அதிகமான விலையில் உரிமம் சொத்தை மீள்கொள்வனவு செய்ய முடியும் அல்லது மீள்கொள்வனவு செய்ய வேண்டும் எனில், பந்தி B68 க்கு இணக்கமாக, ஒரு நிதியீட்ட ஏற்பாடாக

B67 விற்பனை விலைகளுடன் மீள்கொள்வனவு விலையை ஒப்பிடுகையில், உரிமம் பணத்தின் காலப் பெறுமதியைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

B68 மீள்கொள்வனவு ஒப்பந்தமானது ஒரு நிதியீட்ட ஏற்பாடு எனில், உரிமம் வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட எந்தவொரு கருதுபொருளுக்கும் சொத்துக்களையும் நிதிப் பரிப்புகளையும் ஏற்பிசைவு செய்யும். வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட கைமானத்தின் பெறுமதிக்கும் வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய கைமானத்தின் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசத்தை வட்டி மற்றும் அவசியமெனில், செயற்படுத்துகை அல்லது வைத்திருத்தல் கிரயங்களாக ஏற்பிசைவு செய்யும்.

B69 விருப்பத் தேர்வு பயன்படுத்தப்படாது காலாவதி ஆகினால், உரிமம் பரிப்பினை ஏற்பிசைவு நீக்கி வருமானத்தை ஏற்பிசைவு செய்யும்.

**வைப்புத் தேர்வு விருப்பம்**

B70 வாடிக்கையாளரின் கோரிக்கையில், சொத்தின் அசல் விற்பனையை விட குறைவான ஒரு விலையில் சொத்துக்களை மீள்கொள்வனவு செய்வதற்கான ஒரு கடப்பாட்டை உரிமம் கொண்டிருந்தால் (வைப்புத் தேர்வு விருப்பம்) உரிமம் ஒப்பந்த ஆரம்பத்தில் வாடிக்கையாளர் அந்த உரிமையை செயற்படுத்துவதற்கான கணிசமான பொருளாதார ஊக்கப்பாடு காணப்படுகின்றதா என்பதை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளர் அந்த உரிமையைப் பயன்படுத்துதலானது, குறிப்பிட்ட சொத்தினை குறித்த காலத்துக்குப் பயன்படுத்துவதற்கான உரிமைக்கான கைமானத்தை வாடிக்கையாளர் விளைதிறனான வகையில் செலுத்துவதில் விளைவுபெறும். ஆகவே, வாடிக்கையாளர் அந்த உரிமையை செயற்படுத்துவதற்கான கணிசமான பொருளாதார ஊக்கப்பாடு காணப்பட்டால், உரிமம் அந்த உடன்படிக்கையை LKAS 17 நியமத்துக்கு இணக்கமாக குத்தகையாக கணக்கு வைக்கும்.

B71 வாடிக்கையாளர் தனது உரிமைகளை நிறைவேற்றுவதற்கு கணிசமான பொருளாதார ஊக்கமளிப்பு உள்ளதா என்பதை தீர்மானிக்க, உரிமமானது, மீள்கொள்வனவு திகதியிலான எதிர்பார்த்த சந்தைப் பெறுமதி மற்றும் மீள்கொள்வனவு விலை ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு மற்றும் உரிமை முடிவடையும் வரையான கால அளவு உட்பட பல்வேறு காரணிகளை கருத்தில் கொள்ளும். உதாரணமாக, மீள்கொள்வனவு விலையானது சொத்தின் சந்தைப் பெறுமதியை கணிசமாக அதிகரித்துக் காணப்படும் என எதிர்பார்க்கப்பட்டால், இது வாடிக்கையாளர் தனது உரிமைகளை நிறைவேற்றுவதற்கு கணிசமான பொருளாதார ஊக்கமளிப்பைக் கொண்டிருக்கிறார் என்பதைக் குறிக்கிறது.

B72 வாடிக்கையாளர் சொத்தின் அசல் விற்பனை விலையிலும் குறைவானதொரு விலையில் தன் உரிமையைப் பயன்படுத்துவதற்கு கணிசமான பொருளாதார ஊக்கப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை எனில், உரிமம் அதனை பந்திகள் B20-B27 இல் விபரிக்கப்பட்டது போன்று திருப்பி அனுப்பும் உரிமையுடன் கூடிய பொருள் ஒன்றின் விற்பனையாகக் கணக்கு வைக்கும்.

B73 சொத்தின் மீள்கொள்வனவு விலையானது அசல் விற்பனை விலைக்கு சமமாகவோ அல்லது அதிகமாகவோ இருப்பதுடன், சொத்து எதிர்பார்க்கப்பட்ட சந்தைப் பெறுமதியிலும் அதிகமாக இருக்கும் போது, அந்த ஒப்பந்தமானது ஒரு நிதியீட்டு ஏற்பாடாக இருப்பதுடன், பந்தி B68 இல் குறிப்பிடப்பட்டவாறு கணக்கு வைக்கப்படும்.

B74 சொத்தின் மீள்கொள்வனவு விலையானது அசல் விற்பனை விலைக்கு சமமாகவோ அல்லது அதிகமாகவோ இருப்பதுடன், சொத்து எதிர்பார்க்கப்பட்ட சந்தைப் பெறுமதிக்கு சமமாக அல்லது குறைவாக இருக்க, வாடிக்கையாளர் தமது உரிமையினை செயற்படுத்துவதற்கான கணிசமான பொருளாதார ஊக்கப்பாட்டைக் கொண்டிராதபோது, உரிமம் அதனை பந்திகள் B20-B27 இல் விபரிக்கப்பட்டது போன்று திருப்பி அனுப்பும் உரிமையுடன் கூடிய உற்பத்திப் பொருள் ஒன்றின் விற்பனையாகக் கணக்கு வைக்கும்.

B75 விற்பனை விலைகளுடன் மீள்கொள்வனவு விலையை ஒப்பிடுகையில், உரிமம் பணத்தின் காலப் பெறுமதியைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

B76 விருப்பத் தேர்வு பயன்படுத்தப்படாது காலாவதி ஆகினால், உரிமம் பரிப்பினை ஏற்பிசைவு நீக்கி வருமானத்தை ஏற்பிசைவு செய்யும்.

**ஒப்படை ஏற்பாடுகள்**

B77 உரிமம் இறுதி வாடிக்கையாளருக்கு விற்பனை செய்வதற்காக மற்றொரு தரப்பினருக்கு (ஒரு முகவர் அல்லது விநியோகஸ்தர்) பொருட்களை விநியோகம் செய்யும்போது, குறித்த தரப்பினர் அந்த நேரத்தில் பொருட்களின் கட்டுப்பாட்டை பெற்றிருக்கின்றனரா என்பதை மதிப்பீடு செய்ய வேண்டும். மற்றொரு தரப்பு, உரிமத்தினால் வழங்கப்பட்ட பொருட்கள், மற்றைய தரப்பினர் கட்டுப்பாட்டைப் பெற்றுக் கொண்டிராவிட்டால், அவர்கள் ஒப்படை அடிப்படையில் பொருட்களை விற்பனைக்காக வைத்திருக்க முடியும். அதன்படி, ஒப்படை

அடிப்படையில் பொருட்களை விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டால், உரிமம் பொருட்களின் விநியோகத்தின் போதே வருமானத்தை ஏற்பிசைவு செய்ய முடியாது.

B78 ஏற்பாடு ஒன்று ஒப்படை ஏற்பாடு என்பதற்கான குறிகாட்டிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும், ஆனால் இவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை:

*(a)* பொருட்கள் முகவரது வாடிக்கையாளர் ஒருவருக்கு விற்கப்படுதல் போன்ற ஒரு குறித்த நிகழ்வு நிகழும் வரை அல்லது குறிப்பிட்ட காலம் காலாவதியாகும் வரை பொருட்கள் உரிமத்தினால் கட்டுப்படுத்தப்படுதல்,

*(b)* உரிமம் பொருட்களை திருப்பி அனுப்புமாறோ அல்லது மூன்றாம் தரப்பினருக்கு (அதாவது மற்றொரு முகவர் போன்ற) மாற்றிக் கொள்ள முடியும், மற்றும்

*(c)* முகவர் பொருளுக்கான கொடுப்பனவை செலுத்த வேண்டிய நிபந்தனையற்ற கடப்பாட்டைக் கொண்டிராமை (வைப்பு ஒன்றை வழங்க வேண்டித் தேவைப்பட்டாலும் கூட).

**பட்டியலிட்டு வைத்திருக்கும் ஏற்பாடுகள்**

B79 பட்டியலிட்டு வைத்திருக்கும் ஏந்பாடு என்பது உரிமம் வாடிக்கையாளர் ஒருவரது பெயரில் பொருட்களை விற்பனைப் பட்டியலிட்டு எதிர்காலத்தில் பொருட்கள் வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் வரை பௌதீகரீதியாகத் தன்னுடன் வைத்திருப்பதற்கானதொரு ஒப்பந்தம் ஆகும். உதாரணமாக, ஒரு வாடிக்கையாளர் வாடிக்கையாளரின் களஞ்சிய இடப் பற்றாக்குறை அல்லது உற்பத்தி வரிசையிலான தாமதங்கள் காரணமாக, அத்தகைய ஒப்பந்தத்தில் ஈடுபடுமாறு உரிமத்தைக் கோரலாம்

B80 வாடிக்கையாளர் பொருட்களின் கட்டுப்பாட்டை எப்போது பெற்றுக் கொள்கிறார் (பந்தி 38 இனைப் பார்க்கவும்) என்பதை மதிப்பீடு செய்வதன் மூலம் உரிமம் பொருட்களை மாற்றுவதற்கான அதன் செயல் நிறைவேற்றுக் கடப்பாடுகளை எப்போது திருப்தி செய்கின்றது என்பதைத் தீர்மானிக்கும். சில ஒப்பந்தங்களில், ஒப்பந்தத்தின் விதிமுறைகளைப் பொறுத்து (விநியோகம் மற்றும் கப்பற்படுத்தல் விதிமுறைகள் உள்ளடங்கலான) பொருட்கள் வாடிக்கையாளரது ஸ்தலத்திற்கு விநியோகிக்கப்படும் போது அல்லது பொருள் கப்பலில் ஏற்றப்படும் போதினில் கட்டுப்பாடு மாற்றப்படுகிறது. எனினும், சில ஒப்பந்தங்களில், பொருளானது இன்னமும் உரிமத்தின் பௌதீக உடைமைக்குள் இருந்தாலும், வாடிக்கையாளர் அதன் கட்டுப்பாட்டைப் பெற்றுக் கொள்கிறார். அந்த நிலைமையில், வாடிக்கையாளர் பௌதீகரீதியாகப் பொருளைப் பெற்றுக் கொள்ளும் தனது உரிமையைப் பயன்படுத்துவதில்லை எனத் தீர்மானித்து இருப்பினும் கூட, வாடிக்கையாளர் அப் பொருட்களின் பயன்பாட்டை நிர்வகித்து அதன் மீதமுள்ள பயன்பாட்டின் கணிசமான முழு அளவைப் பெற்றுக் கொள்ளும் இயலுமையைக் கொண்டிருக்கும். இதன் விளைவாக, அந்த உரிமம் பொருட்களைக் கட்டுப்படுத்தாது. அதற்கு பதிலாக, உரிமப் பொருட்கள் மீதான பாதுகாவலர் சேவைகளை வாடிக்கையாளருக்கு வழங்குகிறது

B81 பட்டியலிட்டு வைத்திருக்கும் ஏற்பாட்டில், ஒரு பொருளின் மீதான கட்டுப்பாட்டை வாடிக்கையாளர் பெற்றிருப்பதற்கு, பந்தி 38-ல் உள்ள தேவைகளைப் பிரயோகிப்பதற்கு மேலதிகமாக, பின்வரும் அனைத்து மூலப் பிரமாணங்களும் நிறைவு செய்ய வேண்டும் :

*(a)* பட்டியலிட்டு வைத்திருப்பதற்காக காரணமானது கணிசமானதாக இருத்தல் (உதாரணமாக, வாடிக்கையாளர் குறித்த ஏற்பாட்டைக் கோரியிருத்தல்)

*(b)* உற்பத்தி வாடிக்கையாளருக்கு சொந்தமானவை எனத் தனியாக அடையாளம் காணத்தக்கதாக இருத்தல்

*(c)* தற்போது பொருள் வாடிக்கையாளருக்கு பௌதீகரீதியாக மாற்றுவதற்குத் தயாராக இருத்தல்

(*d*) உரிமம் உற்பத்திகளை பயன்படுத்துவதற்கு அல்லது மற்றொரு வாடிக்கையாளருக்கு அதை திசைமுகப்படுத்தும் இயலுமையைக் கொண்டு இருக்காமை.

B82 உரிமமானது விற்பனைப் பட்டியலிட்டு வைத்திருத்தல் என்னும் அடிப்படையில் ஒரு பொருளின் விற்பனை வருமானத்தை ஏற்பிசைவு செய்யுமாயின், உரிமம் பந்திகள் 73-86 க்கு இணக்கமாக ஊடுசெயல் விலையின் ஒரு பகுதியை உரிமம் ஒதுக்கீடு செய்ய வேண்டிய மீதமுள்ள செயல் நிறைவேற்றுக் கடப்பாடுகளை (உதாரணமாக, பாதுகாப்பில் வைத்திருக்கும் சேவை) கொண்டுள்ளதா என்பதை பந்திகள் 22-30 இன் படி கருத்தில் கொள்ளும்.

**வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளல்**

B83 பந்தி 38 (உ)க்கு அமைவாக, வாடிக்கையாளர் ஒரு சொத்தை ஏற்றுக்கொள்வது, வாடிக்கையாளர் சொத்து கட்டுப்பாட்டை பெற்றுக் கொண்டதைக் குறிக்கலாம். வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளல் விதிமுறைகள் ஒரு வாடிக்கையாளர் ஒப்பந்தத்தை இரத்து செய்ய, அல்லது பொருள் அல்லது சேவை ஒப்புதல் அளிக்கப்பட்ட குறிப்புரை நியமங்களை திருப்தி செய்யவில்லையெனில், உரிமம் பரிகார நடவடிக்கை எடுப்பதைத'தேவைப்படுத்த அனுமதிக்க வேண்டும். வாடிக்கையாளர் பொருள் அல்லது சேவையின் கட்டுப்பாட்டை பெற்றுக் கொள்வது எப்போது என்பதை மதிப்பீடு செய்யும் போது உரிமம் அத்தகைய பிரிவுகளை கருத்தில் கொள்ளும்.

B84 ஒப்பந்தத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட குறிப்புரை நியமங்களுக்கு அமைவாக பொருள் அல்லது சேவையின் கட்டுப்பாடு வாடிக்கையாளருக்கு மாற்றிக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை உரிமம் திடமாகத் தீர்மானிக்கக் கூடியதாக இருப்பின், வாடிக்கையாளர் ஏற்றுக் கொள்ளல் என்பது வாடிக்கையாளர் பொருள்களின் கட்டுப்பாட்டை நோக்குடன் பெற்றுக் கொண்டாரா என்பது தொடர்பான உரிமத்தின் தீர்மானத்தினைப் பாதிக்காத ஒரு வழக்க நடைமுறை மாத்திரமே ஆகும். உதாரணமாக, வாடிக்கையாளர் ஏற்றுக் கொள்ளலானது குறிப்பிட்ட அளவு மற்றும் எடை ஆகிய பண்புகளை நிறைவு செய்தலை அடிப்படையாகக் கொண்டிருந்தால், அந்த அடிப்படைகள் திருப்தி செய்யப்பட்டதா என்பதை வாடிக்கையாளரது ஏற்றுக் கொள்ளல் உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளும் முன்னராகவே தீர்மானிக்க முடியும். ஒத்த வகையான பொருட்கள் அல்லது சேவைகளுடன் தொடர்புபட்ட ஒப்பந்தங்களுடன் உள்ள அனுபவமானது, வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் பொருள் அல்லது சேவையானது, ஏற்றுக்கொள்ளப்பட்ட விவரக்குறிப்புக்களுக்கு இணக்கமானதாகும் என்பதற்கான சான்றுகளை வழங்கலாம். வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்வதற்கு முன்பே வருமானம் ஏற்பிசைவு செய்யப்பட்டிருந்தால், உரிமம் மீதமுள்ள செயல் நிறைவேற்றுக் கடப்பாடுகள் இன்னமும் இருக்கிறதா (உதாரணமாக, உபகரணங்களின் பொருத்துதல்) என்பதைக் கருத்தில் கொண்டு, அவ்வாறு இருப்பின், அவற்றுக்குத் தனியாகக் கணக்கு வைப்பதா என்பதை மதிப்பிடல் வேண்டும்.

B85 எவ்வாறாயினும், ஒப்பந்தத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட குறிப்புரை நியமங்களுக்கு அமைவாக பொருள் அல்லது சேவையின் கட்டுப்பாடு வாடிக்கையாளருக்கு மாற்றிக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை உரிமம் திடமாகத் தீர்மானிக்கக் கூடியதாக இல்லாவிடின், வாடிக்கையாளர் ஏற்றுக் கொள்ளலை உறுதியளிக்கும் வரை வாடிக்கையாளர் பொருள்களின் கட்டுப்பாட்டை நோக்குடன் பெற்றுக் கொண்டாரா என்பதைத் தீர்மானிக்க முடியாது. அது ஏனென்றால் அந்த சூழ்நிலையில், வாடிக்கையாளர் அப் பொருட்களின் பயன்பாட்டை நிர்வகித்து அதன் மீதமுள்ள பயன்பாட்டின் கணிசமான முழு அளவைப் பெற்றுக் கொள்ளும் இயலுமையைக் கொண்டிருப்பார் என்பதைத் தீர்மானிக்க முடியாது.

B86 உரிமம் வாடிக்கையாளருக்கு சோதனை அல்லது மதிப்பீட்டு நோக்கங்களுக்காக பொருட்களை வழங்க, வாடிக்கையாளர் சோதனைக் காலம் முடிவடையும் வரை எந்தவொரு கைமானத்தையும் செலுத்த வேண்டிய ஈடுபாட்டைக் கொண்டிருக்காதபோது, வாடிக்கையாளர் பொருட்களை ஏற்றுக்கொள்ளும் வரை அல்லது சோதனை அல்லது மதிப்பீட்டுக் காலம் முடிவடையும் வரை பொருட்களின் கட்டுப்பாடு வாடிக்கையாளருக்கு மாறுவதில்லை.

**வெளிக்காட்டல்கள் மற்றும் பிரிக்கப்பட்ட வருமானம்**

B87 பந்தி 114 ஆனது, வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்களில் இருந்தான வருமானங்களை, அவற்றின் தன்மை, அளவு, நேரம் மற்றும் வருமானம் மற்றும் காசுப் பாய்வுகளின் நிச்சயமற்ற தன்மை ஆகியன பொருளாதாரக் காரணிகளால் தாக்கமடையும் முறையை சித்தரிக்கக்கூடிய வகைப்படுத்தல்களின் கீழ் வகுத்துக் காட்டுவதைத் தேவைப்படுத்துகின்றன. இதன் விளைவாக, இந்த வெளிக்காட்டலின் நோக்கங்களுக்காக உரிமம் வருமானத்தை எந்த அளவுக்கு பிரித்துக் காட்டுகின்றது என்பது, வாடிக்கையாளர்களுடனான உரிமத்தின் ஒப்பந்தம் தொடர்பான உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை சார்ந்துள்ளது. சில உரிமங்கள் பந்தி 114 இன் நோக்கத்தை திருப்தி செய்ய, ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். பிற உரிமங்கள் வருமானத்தை பிரித்துக் காட்டுவதற்கு ஒரு வகையை மட்டுமே பயன்படுத்தி நோக்கத்தை திருப்தி செய்யலாம்.

B88 வருமானத்தைப் பிரிப்பதற்கான வகையை (அல்லது வகைகளை) தேர்ந்தெடுக்கும்போது, உரிமமானது, பின்வருவன அடங்கலாக உரிமத்தின் வருமானம் பற்றிய தகவல்கள் பிற நோக்கங்களுக்காக வழங்கப்பட்டுள்ள முறையைக் கவனத்தில் கொள்ள வேண்டும் :

*(a)* நிதிக்கூற்றுக்களுக்குப் புறம்பாக முன்னிலைப்படுத்தப்பட்ட வெளிக்காட்டல்கள் (உதாரணமாக, உழைப்பு வெளியீடுகள், ஆண்டு அறிக்கைகள் அல்லது முதலீட்டாளர் விளக்கக்காட்சிகள்)

*(b)* பிரதம செயற்பாட்டுத் தீர்மானம் மேற்கொள்பவர்களால் தொழிற்பாட்டுப் பிரிவுகளின் நிதிசார் பெறுபேறுகளை கிரமமாக மதிப்பீடு செய்வதற்காக மீளாய்வு செய்யப்படும் தகவல்கள்

*(c)* உரிமத்தின் நிதிப் பெறுபேறுகளை மதிப்பிடுவதற்கு அல்லது வள ஒதுக்கீட்டு முடிவுகளை எடுக்க உரிமம் அல்லது உரிமத்தின் நிதிக் கூற்றுக்களின் பயனாளர்களால் பயன்படுத்தப்படும் பந்தி B88 (a) மற்றும் (b) ஆகியவற்றில் அடையாளம் காணப்பட்ட தகவல்களின் வகைகளை ஒத்த மற்றைய தகவல்கள்

B89 பொருத்தமான வகைகளுக்கான உதாரணங்கள் பின்வருவனவற்றினை உள்ளடக்கும், ஆனால் அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவையல்ல.

*(a)* பொருள் அல்லது சேவை வகை (உதாரணமாக, முக்கிய உற்பத்தி வரிசைகள்)

*(b)* பூகோளப் பிராந்தியம் (உதாரணமாக, நாடு அல்லது பிராந்தியம்)

*(c)* சந்தை அல்லது வாடிக்கையாளர் வகை (உதாரணமாக, அரசு மற்றும் அரசு அல்லாத வாடிக்கையாளர்கள்)

*(d)* ஒப்பந்த வகை (உதாரணமாக, நிலையான விலை மற்றும் நேரம் மற்றும் பொருட்கள் ஒப்பந்தங்கள்)

*(e)* ஒப்பந்த காலம் (உதாரணமாக, குறுகிய கால மற்றும் நீண்ட கால ஒப்பந்தங்கள்)

*(f)* பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்கான நேரம் (உதாரணமாக, வாடிக்கையாளர்களுக்கு மாற்றப்படும் பொருட்கள் அல்லது சேவைகளிலிருந்து வருமானம் ஒரு காலப் புள்ளியில் மாற்றப்படும் மற்றும் மாற்றப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளிலிருந்தான வருமானம் காலப்போக்கில் மாற்றப்படுதல்)

*(g)* விற்பனை வழி (உதாரணமாக, நேரடியாக வாடிக்கையாளர்களுக்கு விற்கப்படும் பொருட்கள் மற்றும் இடைநிலையாளர்கள் ஊடாக விற்கப்படும் பொருட்கள்).

## பின்னிணைப்பு C

**அமுலுக்கு வரும் திகதி *மற்றும் நிலைமாறுகை***

*இப் பின்னிணைப்பானது SLFRS 15 நியமத்தின் ஒரு ஒருங்கிணைந்த முக்கிய பகுதியாக உள்ளதுடன் நியமத்தின் ஏனைய பகுதிகளுக்கு சமமான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.*

**அமுலுக்கு வரும் திகதி**

C1 உரிமம் ஒன்று இந் நியமத்தை 01 சனவரி 2017 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டு அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் நியமத்தை முன்கூட்டியே பிரயோகிப்பின், அது அந்த விடயத்தை வெளிப்படுத்தல் வேண்டும்.

**நிலைமாறுகை**

C2 பந்திகள் C3-C8 இல் குறிப்பிடப்பட்ட நிலைமாறுகைத் தேவைப்பாடுகளுக்காக

*(a)* ஆரம்பப் பிரயோகத் திகதி என்பது, உரிமம் இந்த நியமத்தை முதன்முதலாகப் பிரயோகிக்கும் அறிக்கையிடல் காலப்பகுதியின் ஆரம்பம் ஆகும், மற்றும்

*(b)* ஒரு நிறைவுசெய்யப்பட்ட ஒப்பந்தம் என்பது, உரிமம் LKAS 11 நிர்மாண ஒப்பந்தங்கள், LKAS 18 வருமானம் மற்றும் தொடர்புடைய வியாக்கியானங்கள் ஆகியவற்றிற்கு இணங்க அடையாளம் காணப்பட்ட பொருட்களையும் அல்லது சேவைகளை மாற்றியுள்ள ஒப்பந்தமாகும்.

C3 உரிமம் பின்வரும் இரண்டு முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி இந்த நியமத்தைப் பிரயோகிக்கும்.

*(a)* பந்தி C5 இல் குறிப்பிடப்பட்ட நடைமுறை விடயங்களுக்கு உட்பட்ட வகையில், LKAS 8 கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வழுக்கள் நியமத்துக்கு அமைவாக முன்னிலைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு முன்னைய அறிக்கையிடல் காலப்பகுதிக்கும் முற்கால விளைவுள்ள வகையில், அல்லது

*(b)* C7-C8 பந்திகளுக்கு இணங்க, ஆரம்பப் பிரயோகத் திகதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டவாறாக இந் நியமத்தின் பிரயோகத்தின் ஆரம்பத்தில் திரண்ட விளைவுடன் முற்கால விளைவுள்ள வகையில்.

C4 LKAS 8 நியமத்தின் 28வது பந்தியின் தேவைகளைக் கருத்தில் கொள்ளாது, இந்த நியமம் முதன்முதலாகப் பிரயோகிக்கப்படும்போது, உரிமம் இந் நியமம் முதன்முதலாகப் பிரயோகிக்கப்பட்ட ஆண்டுக்காலத்தைத் தொடர்ந்து வரும் அடுத்த முதலாவது ஆண்டுக்கு (அடுத்து வரும் ஆண்டு) LKAS 8 நியமத்தின் 28(f) பந்தியினால் தேவைப்படுத்தப்படும் அளவுசார் தகவல்களை மாத்திரம் முன்னிலைப்படுத்தும். இது உரிமம் பந்தி C3 (அ) க்கு அமைவாக முற்கால விளைவுள்ள வகையில் நியமத்தைப் பிரயோகித்திருப்பின் மாத்திரமே முன்னிலைப்படுத்தப்படும். உரிமம் இத் தகவலைத் தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கும் முன்னிலைப்படுத்தலாம். எனினும் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமில்லை

C5 உரிமம் பந்தி C3 (அ) க்கு அமைவாக முற்கால விளைவுள்ள வகையில் நியமத்தைப் பிரயோகிக்கும் போது, பின்வரும் ***அனுகூலமான*** நடைமுறைகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் பயன்படுத்தலாம்:

(*a*) நிறைவுசெய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு, உரிமம் அதே ஆண்டுக்குள் ஆரம்பித்து முடிவடையும் ஒப்பந்தங்களை மீள்கூற்று செய்ய வேண்டிய அவசியமில்லை

(*b*) மாறும் கைமானத்தைக் கொண்ட நிறைவுசெய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு, உரிமம் ஒப்பீட்டு அறிக்கையிடல் காலங்களில் மாறும் கைமானப் பெறுமதியினை மதிப்பிடுவதற்குப் பதிலாக, ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்ட திகதியிலான ஊடுசெயல் விலையைப் பயன்படுத்தலாம். அத்துடன்,

(*c*) ஆரம்பப் பிரயோகத்துக்கு முன்னர் முன்னிலைப்படுத்தப்பட்ட அனைத்து அறிக்கையிடல் காலங்களுக்கும், உரிமம் மீதமுள்ள செயல்நிறைவேற்றுக் கடமைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஊடுசெயல் விலை மற்றும் உரிமம் அத் தொகையை எ***ப்***போது வருமானமாக ஏற்பிசைவு செய்ய எதிர்பார்க்கிறது என்னும் விளக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தத் தேவையில்லை (பந்தி 120 ஐப் பார்க்கவும்)

C6 உரிமம் பயன்படுத்தும் C5 இல் உள்ள எந்தவொரு ***அனுகூலமான*** நடைமுறை விடயத்துக்கும் உரிமம் அனைத்து அறிக்கையிடல் காலங்களிலும் அனைத்து ஒப்பந்தங்களுக்கும் அதனை நிலைமாறாது பிரயோகிக்க வேண்டும். மேலும் உரிமம் பின்வரும் அனைத்துத் தகவல்களையும் வெளிப்படுத்த வேண்டும்

(*a*) பயன்படுத்தப்பட்ட ***அனுகூலமான*** நடைமுறை விடயங்கள் மற்றும்

(*b*) நியாயமான சாத்தியமான அளவிற்கு, ஒவ்வொரு ***அனுகூலமான*** நடைமுறை விடயத்தையும் பயன்படுத்தும்போது ஏற்படத்தக்க மதிப்பிடத்தக்க தாக்கத்தின் அளவுசார் மதிப்பீடு.

C7 உரிமம் பந்தி C3(ஆ)க்கு அமைவாக முற்கால விளைவுள்ள வகையில் இந் நியமத்தைப் பிரயோகிக்கத் தெரிவு செய்யின், ஆரம்பத்தில் இந்த நியமத்தைப் பிரயோகிப்பதன் விளைவின் திரண்ட தாக்கத்தை, ஆரம்பப் பிரயோகம் உள்ளடங்கலான ஆண்டுக் காலப் பகுதியின் ஆரம்ப நிறுத்திவைத்த இலாப மீதியின் மீது (அல்லது பொருத்தமான வகையில் இந்த நிலைமாற்ற வழிமுறையின் கீழ் உரிமம் ஆரம்பப் பிரயோகத் திகதியில் நிறைவு செய்யப்படாது காணப்படுகின்ற ஒப்பந்தங்களுக்கு மாத்திரமே அந் நியமத்தை முற்கால விளைவுள்ள வகையில் (உதாரணமாக, 31 திசம்பரை ஆண்டு முடிவாகக் கொண்ட உரிமத்துக்கு - 2017 ஜனவரி 1 ஆம் திக*தி)* ***ஏற்பிசைவு செய்யும்***

C8 உரிமம் பந்தி C3(ஆ)க்கு அமைவாக முற்கால விளைவுள்ள வகையில் இந் நியமத்தைப் பிரயோகித்தால், ஆரம்பப் பிரயோகத் திகதியை உள்ளடக்கிய அறிக்கையிடல் காலப் பகுதிகளுக்குப் பின்வரும் இரு மேலதிக வெளிப்படுத்தல்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும்:

(*a*) மாற்றத்துக்கு ***மு***ன்னர் நடைமுறையில் இருந்த LKAS 11, LKAS 18 நியமங்கள் மற்றும் தொடர்புபட்ட வியாக்கியானங்களுடன் ஒப்பிடுமிடத்து, இந்த நியமத்தின் பிரயோகத்தின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஒவ்வொரு வரிசை உருப்படிகளும் தாக்கமடைந்துள்ள தொகை.

(*b*) C8 (a) வில் அடையாளம் காணப்பட்ட முக்கிய மாற்றங்களுக்கான காரணங்கள் தொடர்பான ஒரு விளக்கம்

**SLFRS 9 நியமத்துடனான குறிப்புரைகள்**

C9 உரிமம் ஒன்று இந்த நியமத்தைப் பயன்படுத்தும் அதேவேளை SLFRS 9 நிதிச் சாதனங்கள் நியமத்தை இன்னமும் பயன்படுத்தாது இருப்பின், SLFRS 9 நியமம் தொடர்பான குறிப்புரைகள் யாவும் LKAS 39 நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவு மற்றும் அளவீடு நியமத்துடனான குறிப்புரைகள் என மாற்றி வாசிக்கப்படுதல் வேண்டும்.

**ஏனைய நியமங்களை மீளப் பெறல்**

C10 இந் நியமம் பின்வரும் நியமங்களை விஞ்சி நிற்கிறது.

(a) LKAS 11 நிர்மாண ஒப்பந்தங்கள்

(b) LKAS 18 வருவானம்

(c) IFRIC 13 வாடிக்கையாளர் இறை நிகழ்ச்சித்திட்டங்கள்

(d) IFRIC 15 மெய்ச் சொத்துக்களின் நிர்மாணங்களுக்கான ஒப்பந்தங்கள்

(e) IFRIC 18 வாடிக்கையாளர்களிடம் இருந்தான சொத்துக்களை மாற்றல், மற்றும்

(f) SIC-31 Revenue விளம்பர சேவை உள்ளடங்கலான பண்டமாற்று ஊடுசெயல்கள்

**பின்னிணைப்பு D**

**ஏனைய நியமங்களுக்கான திருத்தங்கள்**

*இப் பின்னிணைப்பானது SLFRS 15 கணக்கீட்டு நியமம் முடிவு செய்யப்பட்டபோது, மேற்கொள்ளப்பட ஏனைய நியமங்களிலான திருத்தங்களை விவரிக்கிறது. திருத்தப்பட்ட பந்திகள் நீக்கப்பட்ட உரை மூலம் காட்டப்பட்டுள்ளதுடன் புதிய உரைகள் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.*

**ஏனைய நியமங்களில் பின்வரும் குறிப்புரைகள் திருத்தப்பட்டிருக்கின்ற முறையினை இந்த அட்டவணை காட்டுகிறது**

| தற்போதுள்ள குறிப்பு | உள்ளடக்கப்பட்ட பகுதி | பந்தி | திருத்தப்பட்ட குறிப்புரை |
|---|---|---|---|
| LKAS 18 வருமானம் அல்லது LKAS 18 | SLFRS 4 | பந்திகள் 4(a) மற்றும் (c), B18(h) மற்றும் உருப்படி 1.16 அட்டவணையின் பந்தி IG2 | SLFRS 15 வாடிக்கையாளர்கள் உடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானங்கள் அல்லது SLFRS 15 |
| | LKAS 16 | பந்தி 68A | |
| | LKAS 39 | பந்தி AG2 | |
| | LKAS 40 | பந்தி 3 (b) | |
| | IFRIC 12 | தகவல் குறிப்பிலான அட்டவணைக் குறிப்பு 2 | |
| LKAS 11 நிர்மாண ஒப்பந்தங்கள் அல்லது LKAS 11 | SIC-32 | பந்தி 6 | |

**SLFRS 1 இலங்கை கணக்கீட்டு நியமங்களின் முதன்முறைப் பின்பற்றுகை**

பந்தி 39X சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரை அடிக்கோடிடப்பட்டுள்ளது.

**அமுலாகும் திகதி**

.......

39X SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமமானது, ஜீன் 2014 இல் வெளியிடப்பட்டது. பந்தி D24 மற்றும் அதனுடன் தொடர்புடைய தலைப்புக்கள் நீக்கப்பட்டதுடன், D34-D35 ஆகிய பந்திகள் மற்றும் தொடர்புடைய தலைப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும்போது உரிமம் இத் திருத்தங்களைப் பிரயோகிக்கும்.

| |
|---|
| பின்னிணைப்பு D இல், பந்தி D24 மற்றும் அதனுடன் தொடர்புடைய தலைப்புக்கள் நீக்கப்பட்டதுடன், D34-D35 ஆகிய பந்திகள் மற்றும் தொடர்புடைய தலைப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரை அடிக்கோடிடப்பட்டுள்ளது. |

**வருமானம்**

D34 முதன்முறை பின்பற்றுனர், SLFRS 15 இன் பந்தி C5 இல் உள்ள நிலைமாறல் ஏற்பாடுகளைப் பிரயோகிக்க முடியும். இந்தப் பந்திகளிலான முதன்முறைப் பிரயோகத் திகதி தொடர்பான குறிப்புரைகள் SLFRS அறிக்கையிடல் காலப்பகுதியின் ஆரம்பம் என வியாக்கியானம் செய்யப்படுதல் வேண்டும். முதன்முறை SLFRS பின்பற்றுனர் ஒருவர் அந்த நிலைமாறல் ஏற்பாடுகளைப் பிரயோகிக்கத் தேர்வு செய்தால், முடிவு செய்தால், SLFRS 15 நியமத்தின் பந்தி C 6 இனையும் பிரயோகித்தல் வேண்டும்.

D35 அறிக்கையிடப்படும் முந்திய கணக்கீட்டு காலப்பகுதிகளில் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தங்களை முதன்முறை பின்பற்றுனர் மீள்கூற்று மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தம் முந்தைய என்பது முன்னைய பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு (GAAP) இணக்கமாக உரிமம் அடையாளம் காணப்பட்ட அனைத்து பொருட்களையும் சேவைகளையும் மாற்றல் செய்துள்ள ஒரு ஒப்பந்தம் ஆகும்.

**SLFRS 3 வணிக இணைப்புக்கள்**

| |
|---|
| பந்தி 56 திருத்தப்பட்டிருப்பதுடன், பந்தி 64K சேர்க்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட உரை கோடிட்டு வெட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், புதிய உரை அடிக்கோடிடப்பட்டுள்ளது. |

**உறுமுரிமைப் பரிப்புக்கள்**

56 ஆரம்ப ஏற்பிசைவிற்கு பின்னர், மற்றும் பரிப்பானது தீர்க்கப்படுகின்ற, இரத்துச் செய்யப்படுகின்ற அல்லது காலாவதியாகின்ற வரையில், சுவீகரிப்பவர் பின்வரும் பெறுமதிகளில் எது உயர்வானதோ அதில் வணிக இணைப்பில் ஏற்பிசைவு செய்யப்பட்ட உறுமுரிமைப் பரிப்பினை மதிப்பிட வேண்டும்:

(a) LKAS 37 நியமத்திற்கமைய ஏற்பிசைவு செய்யப்படும் தொகை;

(b) ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையில் இருந்து, பொருத்தமாக இருப்பின், ~~LKAS 18 *வருமானம்*~~ நியமத்திற்கு SLFRS 15 *வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமத்தின் கோட்பாடுகளுக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமானத்தின் திரண்ட வருமானப் பெறுமதியைக் கழித்த தொகை.

இத் தேவைப்பாடானது LKAS 39 நியமத்திற்கு அமைய கணக்கீடு செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்குப் பிரயோகிக்கப்படுவதில்லை

....

**அமுலுக்கு வரும் திகதி**

...

64K SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* 2014, ஜீன் மாதம் வெளியிடப்பட்டது. திருத்தப்பட்ட பந்தி 56. உரிமம் SLFRS 15 இனைப் பிரயோகிக்கும் போது இத் திருத்தத்தைப் பிரயோகிக்கும்.

**SLFRS 4 காப்புறுதி ஒப்பந்தங்கள்**

| |
|---|
| பந்தி 41G சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரை அடிக்கோடிடப்பட்டுள்ளது. |

**அமுலுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாற்றம்**

...

41G SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமமானது, ஜீன் 2014 இல் வெளியிடப்பட்டது. திருத்தப்பட்ட பந்திகள் 4(a) மற்றும் (c), B7, B18(h), B21 மற்றும் பந்தி IG2 இன் அட்டவணையின் 1.16 ஆம் உருப்படி. உரிமம் SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இத் திருத்தங்களைப் பிரயோகிக்கும்.

| |
|---|
| பின்னிணைப்பு B இல் பந்திகள் B7 மற்றும் B21 திருத்தப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட உரை கோடிட்டு வெட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், புதிய உரை அடிக்கோடிடப்பட்டுள்ளது. |

**பொருள் மூலமான கொடுப்பனவுகள்**

...

B7 பந்தி B6 இல் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பங்களிற்கு இந்த SLFRS நியமத்தினைப் பிரயோகித்தலானது, குறித்த ஒப்பந்தம் இந்த நியமத்தின் நோக்கெல்லைக்குட்படாததாகக் காணப்படும் போது பிரயோகிக்கத்தக்க ஏனைய நியமங்களைப் போலல்லாது அழுத்தமற்றதாகக் காணப்படும்:

*(a)* ...

*(b)* LKAS 18 SLFRS 15 நியமம் பிரயோகிக்கப்பட்டால், சேவை வழங்குனர் (ஏனைய குறித்த மூலப்பிரமாணங்களுக்கு அமைய) ~~நிறைவேற்றப்பட்ட கட்டத்தினை அடிப்படையாக வைத்தே~~ வாடிக்கையாளருக்கு சேவையினை மாற்றும் பொழுதே வருமானமாக ஏற்பிசைவு செய்ய முடியும். சேவை வழங்குனர் தொடர்ந்தும் (i) ஒப்பந்தங்கள் பந்தி 14 இனால் தடுக்கப்பட்ட நடைமுறைகளில் தொடர்புபடாத போது நடைமுறையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளை தொடர்ந்தும் பின்பற்றவும் (ii) பந்திகள் 22-30 களில் அனுமதிக்கப்பட்டால் கணக்கீட்டுக் கொள்கைகளை மேம்படுத்தவும் அனுமதிக்கும் இந்த SLFRS நியமத்தின் கீழ் இந்த அணுகுமுறையானது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

*(c)* ...

**காப்புறுதி ஒப்பந்தத்திற்கான உதாரணங்கள்**

...

B21 பந்தி B19 இல் விபரிக்கப்பட்ட ~~ஒப்பந்தங்கள் நிதிச்சொத்துக்களை அல்லது நிதிப்பரிப்புக்களை உருவாக்காதவிடத்து, LKAS 18~~ SLFRS 15 ~~பிரயோகிக்கப்படும். SLFRS 15 இன் கீழ்~~ சேவை ~~வழங்குதலினுடன் ஈடுபட்டதான கொடுக்கல் வாங்கல்களுடன் ஒன்றிணைந்ததான வருமானம் கொடுக்கல் வாங்கல்களின்~~ வெளியீடு நம்பகரமான முறையில் மதிப்பீடு செய்ய முடியுமெனில், கொடுக்கல் வாங்கல்களின் முடிவுறு நிலையில் குறிப்பிடுகின்றவாறு உரிமம் வாடிக்கையாளருக்கு உறுதி வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை உரிமம் எதிர்பார்க்கும் உரித்துக்களுக்கு சமமான பெறுமதியில் மாற்றம் செய்து அதன் பெறுபேற்றுக் கடப்பாடுகளை நிறைவு செய்கின்ற போது (அல்லது அதனை ஒத்த) ஏற்பிசைவாகின்றது.

**SLFRS 9 நிதிச் சாதனங்கள்**

| |
|---|
| பந்திகள் 3.1.1, 5.1.1 மற்றும் 5.4.5 ஆகியன திருத்தப்பட்ட பந்திகள் மற்றும் பந்திகள் 5.1.2, 5.4.1A மற்றும் 8.1.5 ஆகியன சேர்க்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட உரைகள் குறுக்குக் கோடு மூலம் வெட்டப்பட்டும், புதிய உரைகள் அடிக் கோடிட்டும் காட்டப்பட்டுள்ளன. |

**3.1 நிதிச் சொத்துக்களின் ஆரம்ப ஏற்பிசைவு**

**3.1.1.** உரிமமொன்று அதன் நிதிநிலைமைக்கூற்றில் நிதிச் சொத்தொன்றினை ஏற்பிசைவு செய்வது அந்த உரிமம் நிதிச் சாதனத்தின் ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளுக்கு ஒரு தரப்பாக வரும்போது மாத்திரமேயாகும். (LKAS 39 பந்தி AG34 மற்றும் AG35 ஆகியவற்றைப் பார்க்கவும்). உரிமம் முதன்முதலாக நிதிச் சொத்துக்களை ஏற்பிசைவு செய்யும் போது, அது 4.1-4.5 பந்திகளுக்கு அமைவாக அவற்றை வகைப்படுத்தி, பந்தி 5.1.1-5.1.2 ஆகியவற்றின் படி அளவிடல் வேண்டும்.

**…………**

**5.1. ஆரம்ப அளவீடு**

**5.1.1. பந்தி 5.1.2 இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட வியாபார வருமதிகள் தவிர, ஆரம்ப ஏற்பிசைவில், உரிமம் நிதிச் சொத்துக்களை தன் சீர்மதிப்புடன், இலாப நட்டங்கள் ஊடாக சீர்மதிப்பில் அளவிடப்படாத நிதிச் சொத்துக்களாயின், நேரடியாக நிதிச் சொத்துக்களை கையகப்படுத்துவதற்காக சாட்டப்படத்தக்க ஊடுசெயல் கிரயங்களைக் கூட்டிய பெறுமதியில் மதிப்பீடு செய்ய வேண்டும்.**

**……**

5.1.2. பந்தி 5.1.1 இன் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொள்ளாது, ஆரம்ப ஏற்பிசைவில், உரிமம் கணிசமான நிதியிடல் ஆக்கக்கூறு இல்லாத வியாபார வருமதிகளை அவற்றின் ஊடுசெயல் விலைகளில் உரிமம் அளவிட முடியும் (SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமத்துக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டபடி)

**5.4. நயங்கள் மற்றும் நட்டங்கள்**

5.4.1. இலாபங்கள் மற்றும் நட்டங்களில் மாத்திரம் பங்கிலாபம் ஏற்பிசைவு செய்யப்படுவது:

(a) உரிமம் பங்கிலாபத்தைப் பெறும் உரிமை நிலைநிறுத்தப்படும் போது,

(b) பங்கிலாபத்துடன் தொடர்புடைய பொருளாதார நலன்களின் உட்பாய்ச்சல் உரிமத்துக்கு பாய்வடைவதற்கான சாத்தியக்கூறு காணப்படும் போது, மற்றும்

*(c)* பங்கிலாபத் தொகை நம்பகமாக அளவிடக்கூடியதாக உள்ள போது.

**உரிமையாண்மைச் சாதனங்களிலான முதலீடுகள்**

…

5.4.5 உரிமம் பந்தி 5.4.4 இல் ஒரு தேர்வில் ஈடுபட்டால், அது அந்த முதலீட்டிலிருந்தான இலாபம் அல்லது நட்டத்தை பந்தி 5.4.1.A க்கு அமைவாக ~~LKAS 18 வருமானம் நியமத்துக்கு அமைவாக உரிமம் பங்கிலாபத்தைப் பெற்றுக் கொள்ளும் உரிமை தோற்றுவிக்கப்படும் போது~~ ஏற்பிசைவு செய்து கொள்ளும்.

8.1. **அமுலுக்கு வரும் திகதி**

8.1.5. SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்*, 2014 ஜ'ன் மாதம் வெளியிடப்பட்டது, பந்திகள் 3.1.1, 5.1.1, 5.4.5 மற்றும் B5.12 திருத்தப்பட்டதுடன் பந்தி C16 மற்றும் தொடர்புடைய தலைப்புக்கள் நீக்கப்பட்டுள்ளது. பந்திகள் 5.1.2 மற்றும் 5.4.1.A, அத்துடன் பின்னிணைப்பு A இலான சொற்பத விளக்கம் ஒன்று ஆகியன புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

பின்னிணைப்பு A இல் ஒரு சொற்பொருள் விளக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரை அடிக்கோடிடப்பட்டுள்ளது.

**பங்கிலாபங்கள்** உரிமையாண்மை சாதனங்களை வைத்திருப்பவர்களுக்காக, அவர்கள் வைத்திருக்கும் மூலதன வகையின் விகிதத்திற்கேற்ப இலாபங்கள் பகிரப்படும்.

பின்னிணைப்பு B இல், பந்தி B5.12 திருத்தப்பட்டது. நீக்கப்பட்ட உரை மூலம் வெட்டப்பட்டுள்ளதுடன் புதிய உரை அடிக்கோடிடப்பட்டுள்ளது.

**நயங்கள் மற்றும் நட்டங்கள்**

B5.12 உரிமம் விற்பனைக்கென வைத்திராத உரிமையாண்மைச் சாதனம் ஒன்றின் முதலீட்டின் சீர்மதிப்பிலான மாற்றத்தை ஏனைய முற்றடக்க வருமானத்தில் முன்னிலைப்படுத்தக் கூடியவாறான மீளப்பெற முடியாத தெரிவு ஒன்றை மேற்கொள்வதற்கு பந்தி 5.4.4. அனுமதிக்கிறது. இத் தேர்வானது, ஒவ்வொரு தனித்தனியான முதலீட்டு சாதனங்களாக (அதாவது ஒவ்வொரு பங்காக) மேற்கொள்ளப்படும். ஏனைய முற்றடக்க வருமானத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட தொகைகள் பின்னர் இலாபநட்டங்களுக்கு மாற்றப்படலாகாது. இருப்பினும், உரிமம் திரண்ட இலாபம் அல்லது நட்டத்தை உரிமையாண்மைக்கு மாற்றலாம். அத்தகைய முதலீடுகளில் இருந்தான பங்கிலாபங்கள், குறித்த பங்கிலாபம் முதலீட்டின் கிரயம் அல்லது அதன் பகுதி ஒன்றின் மீளப் பெறக்கூடிய தெளிவாகப் பிரதிபலிக்கப்படாதவிடத்து, ~~LKAS 18~~ ~~நியமத்துக்கு~~ பந்தி 5.4.5 க்கு அமைவாக இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படலாம்.

பின்னிணைப்பு C இல், பந்தி C16 மற்றும் தொடர்புபட்ட தலைப்புக்கள் நீக்கப்பட்டுள்ளது.

**SLFRS 9 நிதிச் சாதனங்கள்**

பந்திகள் 3.1.1, 5.1.1 மற்றும் 5.7.6 ஆகியன திருத்தப்பட்ட பந்திகள் மற்றும் பந்திகள் 5.1.3, 5.7.1A மற்றும் 7.1.4 ஆகியன சேர்க்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட உரைகள் வெட்டப்பட்டும், புதிய உரைகள் அடிக் கோடிட்டும் காட்டப்பட்டுள்ளன.

**3.1 நிதிச் சொத்துக்களின் ஆரம்ப ஏற்பிசைவு**

**3.1.1.** உரிமமொன்று அதன் நிதிநிலைமைக்கூற்றில் நிதிச் சொத்து அல்லது நிதிப்பரிப்பு ஆகிய ஒன்றினை ஏற்பிசைவு செய்வது அந்த உரிமம் நிதிச் சாதனத்தின் ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளுக்கு ஒரு தரப்பாக வரும்போது மாத்திரமேயாகும். (LKAS 39 பந்தி பி.வ34 மற்றும் பி.வ 35 ஆகியவற்றைப் பார்க்கவும்). உரிமம் முதன்முதலாக நிதிச் சொத்துக்களை ஏற்பிசைவு செய்யும் போது, அது 4.1-4.5 பந்திகளுக்கு அமைவாக அவற்றை வகைப்படுத்தி, பந்தி 5.1.1-5.1.2 ஆகியவற்றின் படி அளவிடல் வேண்டும்.

...

**4.2 நிதிப் பரிப்புக்களை வகைப்படுத்துதல்**

**4.2.1** உரிமமானது கீழ்வருவன தவிர்ந்த அனைத்து நிதிப்பரிப்புக்களையும் விளைவு வட்டிவீத முறையினை உபயோகித்து பிற்காலத்தில் காலத்தேய்மானம் செய்யப்பட்ட கிரயத்தில் அளவிடும் பரிப்புக்களாக வகைப்படுத்தும்:

(a) ...........

(c) நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள் பின்னிணைப்பு A இல் சொற் பொருள் விளக்கம் செய்யப்பட்டவாறு உள்ளன. அவ்வாறான ஒப்பந்தங்களை வழங்குபவர் ஒருவர் ஆரம்ப ஏற்பிசைவுக்குப் பின்னர் அவற்றினை (பந்தி 4.2.1 (அ) அல்லது (ஆ) பிரயோகிக்கப்படாதவிடத்து) கீழே தரப்பட்டுள்ள இரண்டு பெறுமதிகளிலும் உயர்ந்த பெறுமதியில் பிற்கால அளவீட்டை மேற்கொள்வார்:

(i) LKAS 37 ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள் நியமத்துக்கு அமைவாகத் தீர்மானிக்கப்பெற்ற தொகை மற்றும்

(ii) ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்த தொகையிலிருந்து (பந்தி 5.1.1 இனைப் பார்க்கவும்), பொருத்தமானவிடத்து, SLFRS 15 *வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்* எனும் நியமத்துக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்படும் திரள் வருமானத்தை கழிக்க வரும் தொகை.

(d) சந்தை வட்டி விகிதத்திலும் குறைந்த வட்டிக்கு கடனொன்றினை வழங்குவதற்கான கடமைப்பாடு. அவ்வாறான கடமைப்பாட்டினை வழங்கும் ஒருவர், ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், அவற்றினை (பந்தி 4.2.1 (அ) அல்லது (ஆ) பிரயோகிக்கப்படாதவிடத்து) கீழே தரப்பட்டுள்ள இரண்டு பெறுமதிகளிலும் உயர்ந்த பெறுமதியில் பிற்கால அளவீட்டை மேற்கொள்வார்:

(i) LKAS 37 ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள் நியமத்துக்கு அமைவாக தீர்மானிக்கப்பெற்ற தொகை மற்றும்

(ii) ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்த தொகையிலிருந்து (பந்தி 5.1.1 இனைப் பார்க்கவும்), பொருத்தமானவிடத்து, SLFRS 15 *வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்* எனும் நியமத்துக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்படும் திரள் வருமானத்தை கழிக்க வரும் தொகை.

(e) ….

**5.1 ஆரம்ப அளவீடு**

5.1.1 5.1.3 பந்தியின் நோக்கெல்லைக்கு அமைய வியாபார வருமதிகள் தவிர ஏனையவற்றுக்கு, ஆரம்ப அங்கீகாரத்தில், உரிமம் நிதிசார் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை அதன் சீர்மதிப்பில் அளவிட்டு, இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பு மேற்கொள்ளும் நிதி சொத்துக்கள் அல்லாதவிடத்து, நிதிச் சொத்து அல்லது பரிப்பினை சுவீகரிப்பதற்காக நேரடியாக சாட்டப்படக் கூடிய ஊடுசெயல் கிரயங்களில் அளவிடும்.

……

5.1.3 பந்தி 5.1.1 இல் உள்ள தேவைப்பாட்டைக் கருத்தில் எடுக்காது, ஆரம்ப ஏற்பிசைவில், ஒரு கணிசமான நிதியிடல் ஆக்கக்கூறைக் கொண்டிராத (SLFRS 15 *வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமான*த்துக்கு அமைவாகத் தீர்மானிக்கப்பட்ட) வியாபார வருமதிகளை ஊடுசெயல் விலையில் (SLFRS 15 இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி) அளவிட முடியும்

**5.2 நிதிச் சொத்துக்களின் பின்னைய அளவீட்டு**

5.2.1 ஆரம்ப ஏற்பிசைவின் பின், உரிமம் நிதிச்சொத்துக்களை பந்திகள் 4.1.1-4.1.5க்கு அமைவாக சீர்மதிப்பு அல்லது காலத் தேய்மானம் செய்யப்பட்ட பெறுமதியில் (LKAS 39 இன் பந்தி 9 மற்றும் AG5-AG8C இனைப் பார்க்கவும்) அளவிடும்.

….

**5.7 நயங்கள் மற்றும் நட்டங்கள்**

…

5.7.1.A *பங்கிலாபங்கள்* பின்வரும் சந்தர்ப்பங்களில் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

(a) பங்கிலாபம் பெறுவதற்கான உரிமத்தின் உரிமை நிலைநிறுத்தும் போது,

(b) பங்கிலாபத்துடன் தொடர்புடைய பொருளாதார நலன்கள் உரிமத்துக்கு உட்பாய்ச்சல் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு காணப்படும் பொழுது

(c) பங்கிலாபத் தொகை நம்பகரமான அளவிடக் கூடியதாக உள்ள போது

…

**உரிமையாண்மை சாதனங்களிலான முதலீடுகள்**

…

5.7.6 உரிமம் பந்தி 5.7.5 ல் குறிப்பிடப்பட்ட தேர்வினை மேற்கொண்டால், பங்கிலாபத்தில் இருந்தான இலாபம் அல்லது நட்டத்தினை ~~LKAS 18 நியமத்துக்கு அமைவாக, பங்கிலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமத்தின் உரிமை நிலைநிறுத்தப்படும் போது~~ பந்தி 5.7.1. அ விற்கமைய ஏற்பிசைவு செய்யும்.

**7.1. அமுலுக்கு வரும் திகதி**

……

7.1.4. SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம், 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, பந்திகள் 3.1.1, 4.2.1, 5.1.1, 5.2.1, 5.7.6, B3.2.13. B5.7.1, C5

மற்றும் C42 திருத்தப்பட்டதுடன் பந்தி C16 மற்றும் தொடர்புபட்ட தலைப்பு நீக்கப்பட்டுள்ளது. பந்தி 5.1.3 மற்றும் 5.7.1 மற்றும் பின்னிணைப்பு அ வுக்கான ஒரு சொற்பத விளக்கம் ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

பின்னிணைப்பு (ஊ) வுக்கான ஒரு சொற்பத விளக்கம் ஆகியன சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

***பங்கிலாபம்*** உரிமையாண்மை சாதனங்களை வைத்திருப்பவர்களுக்கு அவர்கள் வைத்திருக்கும் குறிப்பிட்ட வகை மூலதன சாதனத்தின் விகிதாசாரத்துக்கு ஏற்ப பகிரப்படும் இலாபம்.

**மாற்றப்பட்ட சொத்துக்களின் மீதான தொடர்ச்சியான தலையீடு**

B3.2.13 பந்தி 3.2.16 இன் கீழ் உரிமம் மாற்றப்பட்ட சொத்து மற்றும் அதனுடன் தொடர்புடைய பரிப்பு ஆகியவற்றை அளவிடும் முறைக்கான உதாரணங்கள் பின்வருமாறு.

*சகல சொத்துகளும்*

(a) மாற்றப்பட்ட சொத்தின் மீதான கொடுப்பனவுத் தவறுகை இழப்புக்களுக்காக உரிமமொன்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதமொன்று கொடுப்பனவினை மேற்கொள்வதாக அதன் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவுக்கு மாற்றப்பட்ட சொத்தின் ஏற்பிசைவு விலக்கலினை தடைசெய்யுமேயாகில், மாற்றப்படும் திகதியில் அந்த மாற்றப்படும் சொத்து (i) சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதி மற்றும் (ii) உரிமம் மீளச் செலுத்துமாறு கேட்கப்படக்கூடியதான மாற்றத்தின் போது பெறப்பட்ட பதிலிறுக்கியின் உச்சப் பெறுமதி (உத்தரவாத தொகை) ஆகிய இரண்டிலும் குறைந்த தொகையில் அளவிடப்படும். அதனுடன் தொடர்புபட்ட பரிப்பானது ஆரம்பத்தில் உத்தரவாதத் தொகையுடன் உத்தரவாதத்தின் சீர்மதிப்பினை (இது வழக்கமாக உத்தரவாதத்திற்காக பெறப்பட்ட பதிலிறுக்கியாகும்) கூட்டி வரும் தொகையில் அளவிடப்படும். அதன் பின்னர் உத்தரவாதத்தின் ஆரம்ப சீர்மதிப்பு இலாபத்தில் அனைத்து கடப்பாடுகளும் பூர்த்தி செய்யப்படும் பொழுது (SLFRS 15 கோட்பாடுகளுக்கு அமைய) சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதியானது சேத இழப்பு நட்டத்தினால் (ஏதுமிருப்பின்) குறைக்கப்படும்

...

**நயங்கள் மற்றும் நட்டங்கள் (பிரிவு 5.7)**

B5.7.1 பந்தி 5.7.5யானது வியாபாரத்துக்காக என வைத்திருக்கப்படாத உரிமையாண்மை சாதனம் ஒன்றிலான சீர்மதிப்பு மாற்றத்தினை ஏனைய முற்றடக்க வருமானத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான திருப்பி மீட்கப்பட முடியாத தேர்வு ஒன்றை மேற்கொள்வதை அனுமதிக்கிறது. இந்தத் தேர்வானது ஒவ்வொரு தனித்தனியான சாதனங்களின் அடிப்படையில் (அதாவது ஒவ்வொரு பங்காக) மேற்கொள்ளப்படுகிறது. ஏனைய முற்றடக்க வருமானங்களில் முன்னிலைப்படுத்தப்படும் தொகைகள் பின்னர் இலாப நட்டங்களுக்கு மாற்றப்பட மாட்டாது. இருப்பினும், உரிமம் திரண்ட இலாபம் அல்லது நட்டத்தை உரிமையாண்மைக்கு மாற்றலாம். அத்தகைய முதலீடுகளில் இருந்தான பங்கிலாபங்கள், குறித்த பங்கிலாபம் தெளிவாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுக் கிரயத்தின் மீட்பாக அடையாளம் காணப்பட்டாலன்றி, அது இலாப நட்டங்களில் பந்தி 5.7.6 க்கு இணங்க ஏற்பிரசவு செய்யப்படும்.

பின்னிணைப்பு C இல், பந்திகள் C5 மற்றும் C42 திருத்தப்பட்டுள்ளன. பந்தி C16 மற்றும் தொடர்புபட்ட தலைப்பு நீக்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட பகுதிகள் வெட்டப்பட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன், புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**SLFRS 3 வணிக இணைப்புக்கள்**

C5 பந்திகள் 16, 42, 53, 56 மற்றும் 58 (B) பின்வருமாறு வாசிக்குமாறு திருத்தப்படுகிறது, பந்தி 64A நீக்கப்பட்ட மற்றும் பந்தி 64D சேர்க்கப்பட்டுள்ளது

…

56 ஆரம்ப ஏற்பிசைவிற்கு பின்னரும் மற்றும் பரிப்பானது தீர்க்கப்படுகின்ற, நீக்கப்படுகின்ற அல்லது முடிவுறுகின்ற வரையும், சுவீகரிப்பவர் பின்வரும் உயர்மட்டத்தில் வணிக இணைப்பில் ஏற்பிசைவுசெய்யப்பட்ட நிகழ்தகு பரிப்பினை அளவிட வேண்டும்:

a. LKAS 37 நியமத்திற்கமைய ஏற்பிசைவு செய்யப்படும் தொகை

b. LKAS 18 வருமானம் SLFRS 15 நியமத்தின் கோட்பாடுகளுக்கமைய ஏற்பிசைவு செய்யப்பட்ட திரண்ட தேய்மானம். அவசியமாயின், ஆரம்பத்தில் குறைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகை.

இத் தேவைப்பாடானது SLFRS 9 நியமத்திற்கமைய கணிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்கு பிரயோகிக்கப்படுவதில்லை.

**LKAS 39 நிதிச் சாதனங்கள் : ஏற்பிசைவு மற்றும் அளவீடு**

…

C42 பின்னிணைப்பு A வில் பந்திகள் AG3 - AG4 பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்:

…

AG4 நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள் உத்தரவாதம் ………………… போன்ற பல்வேறுபட்ட சட்ட வடிவங்களை கொண்டிருக்கக்கூடும்

(a) வழங்குனர் பின்னர் அவற்றினை கீழ்வருவனவற்றுள் உயர்ந்த பெறுமதியில் அளவிடுவார்:

i. LKAS 37 க்கு அமைவாக தீர்மானிக்கப்பட்ட தொகை, மற்றும்

ii. ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையிலிருந்து, பொருத்தமான இடத்து ~~LKAS 18 க்கு~~ SLFRS 15 இன் கோட்பாடுகளுக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட ~~திரள்காலத்தேய்மானத்தினை~~ வருமானத்தினைக் கழிக்கவரும் தொகை (SLFRS 9 நியமத்தின் பந்தி 4.2.1 (c) யினைப் பார்க்கவும்)

(b)

| பந்தி 5.2.1 திருத்தப்பட்டுள்ளது. புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. |
|---|

**SLFRS 9 நிதிச் சாதனங்கள் (தளம்பற்காப்புக் கணக்கீடு மற்றும் SLFRS 9, SLFRS 7 மற்றும் LKAS 39 நியமங்களுக்கான திருத்தங்கள்)**

**5.2 நிதிச் சொத்துக்களின் பின்னைய அளவீட்டு**

5.2.1 ஆரம்ப ஏற்பிசைவின் பின், உரிமம் நிதிச்சொத்துக்களை பந்திகள் 4.1.1-4.1.5க்கு அமைவாக சீர்மதிப்பு அல்லது காலத் தேய்மானம் செய்யப்பட்ட கிரயத்தில் (LKAS 39 இன் பந்தி 9 மற்றும் AG5-AG8C இனைப் பார்க்கவும்)

| |
|---|
| பின்னிணைப்பு அ வுக்கான ஒரு சொற்பத விளக்கம் ஆகியன சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. |

***பங்கிலாபம்*** உரிமையாண்மை சாதனங்களை வைத்திருப்பவர்களுக்கு அவர்கள் வைத்திருக்கும் குறிப்பிட்ட வகை மூலதன சாதனத்தின் விகிதாசாரத்துக்கு ஏற்ப பகிரப்படும் இலாபம்.

| |
|---|
| பின்னிணைப்பு C இல், பந்திகள் C5 மற்றும் C38 திருத்தப்பட்டுள்ளன. பந்தி C21 மற்றும் தொடர்புபட்ட தலைப்புக்கள் நீக்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட பகுதிகள் வெட்டப்பட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன், புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. |

**SLFRS 3 வணிக இணைப்புக்கள்**

C5 பந்திகள் 16, 42, 53, 56 மற்றும் 58 (B) பின்வருமாறு வாசிக்குமாறு திருத்தப்படுகிறது, பந்தி 64A நீக்கப்பட்ட மற்றும் பந்தி 64D சேர்க்கப்பட்டுள்ளது

…

56 ஆரம்ப ஏற்பிசைவிற்கு பின்னரும் பரிப்பானது தீர்க்கப்படுகின்ற, நீக்கப்படுகின்ற அல்லது முடிவுறுகின்ற வரையும், சுவீகரிப்பவர் பின்வரும் உயர்மட்டத்தில் வணிக இணைப்பில் ஏற்பிசைவுசெய்யப்பட்ட நிகழ்தகு பரிப்பினை அளவிட வேண்டும்:

a. LKAS 37 நியமத்திற்கமைய ஏற்பிசைவு செய்யப்படும் தொகை, மற்றும்

b. ~~LKAS 18 வருமானம்~~ SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானங்கள்* நியமத்தின் கோட்பாடுகளுக்கமைய ஏற்பிசைவு செய்யப்பட்ட திரண்ட தேய்மானம். அவசியமாயின், ஆரம்பத்தில் குறைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகை.

இத் தேவைப்பாடானது SLFRS 9 நியமத்திற்கமைய கணக்கீடு செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு பிரயோகிக்கப்படுவதில்லை.

---

SLFRS 15 இனால் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக SLFRS 9 இல் ஏற்படும் மாற்றமானது (SLFRS 9, SLFRS 7 மற்றும் LKAS 39க்கான தளம்பற் காப்புக் கணக்கீடு மற்றும் திருத்தங்கள்) SLFRS 9 இன்மீது SLFRS 15 மாற்றத்தின் விளைவால் ஏற்படும் திருத்தங்களுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டும். இது ஏனெனில் SLFRS 9 (SLFRS 9, SLFRS 7 மற்றும் LKAS 39க்கான தளம்பற் காப்புக் கணக்கீடு மற்றும் திருத்தங்கள்) SLFRS 9 இன் திருத்தப்பட்ட அல்லது இலகுவான குறிப்புரைக்கு அவசியமான பந்திகளைக் கொண்டுள்ளது. ஆகவே ஒரு விளைவுள்ள பின்பற்றுகைத் திகதிப் பந்தியானது SLFRS 9 (SLFRS 9, SLFRS 7 மற்றும் LKAS 39க்கான தளம்பற் காப்புக் கணக்கீடு மற்றும் திருத்தங்கள்) இல் சேர்க்கப்படவில்லை, ஏனெனில் SLFRS 9 இல் சேர்க்கப்பட்டுள்ள விளைவுள்ள பின்பற்றுகைப் பந்தித் திகதியில் அது ஏற்கனவே உள்ளடக்கப்பட்டிருக்கும்.

**LKAS 39 நிதிச் சாதனங்கள் : ஏற்பிசைவு மற்றும் அளவீடு**

…

C38 பின்னிணைப்பு அ வில் பந்திகள் AG3- AG4 பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்:

…

AG4 நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள் உத்தரவாதம் ………………… போன்ற பல்வேறுபட்ட சட்ட வடிவங்களை கொண்டிருக்கக்கூடும்

(a) வழங்குனர் பின்னர் அவற்றினை கீழ்வருவனவற்றுள் உயர்ந்த பெறுமதியில் அளவிடுவார்:

i. LKAS 37 க்கு அமைவாக தீர்மானிக்கப்பட்ட தொகை, மற்றும்

ii. ஆரம்பத்தில் ~~ஏற்பிசைவு~~ செய்யப்பட்ட தொகையிலிருந்து, பொருத்தமான இடத்து ~~LKAS 18~~ க்கு SLFRS 15 இன் கோட்பாடுகளுக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட திரள்காலத்தேய்மானத்தினை வருமாதத்தினைக் கழிக்கவரும் தொகை (பந்தி 47 (இ) யினை பார்க்கவும்)

(b) ...

**LKAS 1 நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தல்**

| |
|---|
| பந்தி 34 திருத்தப்பட்டுள்ளதுடன் பந்தி 139N சேர்க்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட பகுதிகள் வெட்டப்பட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன், புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. |

**எதிரீடு செய்தல்**

34 ~~LKAS 18 வருமானம் என்ற நியமம் வருமானம் என்பதனை சொற்பொருள் விளக்கம் செய்வதுடன் இதனை~~ SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானங்கள்* நியமமானது உரிமத்தினால் ~~அனுமதிக்கப்படும் வியாபாரக் கழிவுகள் மற்றும் வியாபார அளவுத்தள்ளுபடிகள் ஏதுமிருப்பின் அவற்றினை கணக்கிற்கொண்டு பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள பதிலிறுக்கியின் சீர்மதிப்பில்~~ உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் மாற்றலினால் உரிமம் பெற்றுக் கொள்ளத்தக்கதாக உரித்தாகக்கூடிய பெறுமதியில் அளவிட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றது. உரிமமொன்று அதன் சாதாரண செயற்பாடுகளின் போது வருமானத்தினைப் பிறப்பிக்காத ஆனால் பிரதான காசுப்பிறப்பாக்க செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளும். உரிமம், அந்த ஊடுசெயல்கள் அல்லது ஏனைய நிகழ்வுகள் உள்ளடக்கத்தினை நன்கு பிரதிபலிக்கும் சந்தர்ப்பங்களில், அவ்வாறான ஊடுசெயல்களின் பெறுபேறுகளை அதே ஊடுசெயல்களினால் எழும் தொடர்புபட்ட வருமானத்திலிருந்து செலவினை கழித்து நிகரப்படுத்துவதன் மூலம் முன்னிலைப்படுத்தும். உதாரணமாக:

*(a)* முதலீடுகள் மற்றும் தொழிற்பாட்டுச் சொத்துக்கள் உள்ளடங்கலாக நடைமுறை சாரா சொத்துக்களின் விற்பனைகளிலிருந்து ஏற்படும் நயங்கள் அல்லது நட்டங்களை, விற்பனைப் பெறுவனவிலிருந்து சொத்தின் முன்கொணரற்தொகை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விற்பனைச் செலவுகள் கழிப்பதன் மூலம் முன்னிலைப்படுத்தும்.

*(b)* .............

**அமுலுக்கு வரும் திகதி**

139 N SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம், 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, பந்தி 34 திருத்தப்பட்டுள்ளது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பிரயோகிக்கும்.

**LKAS 2 இருப்புக்கள்**

| |
|---|
| பந்திகள் 2, 8, மற்றும் 37 திருத்தப்பட்டு, பந்தி 40E சேர்க்கப்பட்டுள்ளதுடன் பந்தி 19 நீக்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட பகுதிகள் வெட்டப்பட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன், புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. |

**நோக்கெல்லை**

2 இந்த நியமம் கீழ்வருவன தவிர்ந்த சகல தொக்குகளுக்கும் பிரயோகிக்கப்படும்:

(a) ~~நேரடியாக தொடர்புபட்ட சேவை ஒப்பந்தங்கள் உள்ளடங்கலாக நிர்மாண ஒப்பந்தங்களின் கீழ் ஏற்படும் புத்துருவாகும் வேலைகள் (LKAS 11 – *நிர்மாண ஒப்பந்தங்களைப்* பார்க்கவும்)~~ (நீக்கப்பட்டுள்ளது).

(b) ................

**சொற்பொருள் விளக்கங்கள்**

…

8 தொக்குகள், உதாரணமாக சில்லறை வியாபாரியினால் கொள்வனவு செய்யப்பட்டு மீள்விற்பனைக்காக வைத்திருக்கப்படும் வணிகப் பொருட்கள் அல்லது மீள்விற்பனைக்காக வைத்திருக்கப்படும் காணி மற்றும் ஏனைய ஆதனங்கள் உள்ளடங்கலாக கொள்வனவு செய்யப்பட்டு மீள்விற்பனைக்காக வைத்திருக்கப்படும் பொருட்களை உள்ளடக்குகின்றன. அத்துடன், தொக்குகள் உரிமத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் அல்லது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற புத்துருவாகும் வேலைகள் ஆகியவற்றினையும் உற்பத்திச் செயன்முறையில் உபயோகிப்பதற்காக வைத்திருக்கப்படும் மூலப்பொருட்கள் மற்றும் வழங்கல்களையும் உள்ளடக்கும். ~~சேவை வழங்குனர் ஒருவரைப் பொறுத்தமட்டில் தொக்குகள் பந்தி 19 இல் விபரிக்கப்பட்டவாறு, தொடர்புபட்ட வருமானத்தை இன்னும் ஏற்பிசைவு செய்யப்படாத, சேவைக் கிரயங்களை உள்ளடக்கும். (LKAS 18 வருமானம் எனும் நியமத்தினை பார்க்கவும்).~~ இருப்பு ஒன்றினை (அல்லது மற்றொரு நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட வகையில் சொத்து ஒன்றை) உருவாக்கத்தக்கதல்லாத, வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்றினை நிறைவு செய்வதற்காக ஏற்பட்ட கிரயங்கள் SLFRS 15 வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானங்கள் நியமத்துக்கு அமைவாக கணக்கீடு செய்யப்படும்.

**நிகர தேறுகைப் பெறுமதி**

29 தொக்குகள் வழக்கமாக ஒவ்வொரு உருப்படியாக நிகர தேறுகைப் பெறுமதிக்கு பதிவழிக்கப்படும். எவ்வாறாயினும், சில சூழ்நிலைகளில், ஒத்த அல்லது தொடர்புடைய உருப்படிகளை குழுமப்படுத்துதல் பொருத்தமானதாக இருக்கக்கூடும். இந்த நிலை, ஒரே நோக்கத்தினை அல்லது ஈற்றுபயோகத்தினைக் கொண்ட ஒரே உற்பத்தி வரிசையுடன் தொடர்புபட்டவையும், ஒரே பூகோளப்பகுதியில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தப்படுபவையும், மற்றும் அந்த உற்பத்தி வரிசையிலுள்ள ஏனைய உருப்படிகளிலிருந்து வேறாக்கி மதிப்பாய்வு செய்தல் நடைமுறைச் சாத்தியமற்றதுமான தொக்குகளுக்கு பொருந்தும். தொக்குகளை அவற்றின் வகுப்பாக்க அடிப்படையில், உதாரணமாக, முடிவுப்பொருட்கள் அல்லது ஒரு குறிப்பிட்ட தொழிற்பாட்டுப் பிரிவிலுள்ள சகல தொக்குகளும் என்ற அடிப்படையில் பதிவழிப்புச் செய்வது பொருத்தமானதல்ல. ~~சேவை வழங்குனர்கள் பொதுவாக வேறான விற்பனை விலை அறவிடப்படும் ஒவ்வொரு சேவை தொடர்பாகவும் கிரயங்களை ஒன்றுதிரட்டும். எனவே, அவ்வாறான ஒவ்வொரு சேவையும் வேறான உருப்படிகளாகக் கொள்ளப்படும்~~.

**வெளிக்காட்டல்கள்**

37 வைத்திருக்கப்படும் வெவ்வேறு வகையான தொக்குகளின் முன்கொணரற் தொகைகள் மற்றும் இந்தச் சொத்துக்களில் மாற்றங்கள் பற்றிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களை உபயோகிப்போருக்கு பயனுடையதாகும். தொக்குகளின் பொதுவான கைப்படுத்தல்களாவன வணிகப்பொருட்கள், உற்பத்தி வழங்கல்கள், பொருட்கள், புத்துருவாகும் வேலைகள் மற்றும் முடிவுபெற்ற பொருட்கள் ஆகியனவாகும். ~~சேவை வழங்குனரின் தொக்குகள், புத்துருவாகும் வேலைகள் என விபரிக்கப்படலாம்~~

**அமுலுக்கு வரும் திகதி**

40E SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம், 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, பந்தி 2, 8, 29 மற்றும் 37 திருத்தப்பட்டதுடன் பந்தி 19 நீக்கப்பட்டுள்ளது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

**LKAS 12 வருமான வரி**

பந்தி 59 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 98E சேர்க்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட பகுதிகள் வெட்டப்பட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன், புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**இலாபம் அல்லது நட்டத்தினுள் ஏற்பிசைவு செய்யப்பட்ட உருப்படிகள்**

……………..

59 வருமானம் அல்லது செலவினமானது ஒரு காலப் பகுதிக்குரிய கணக்கீட்டு இலாபத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வரிக்குரிய இலாபத்தில் (வரி நட்டம்) இன்னொரு காலப்பகுதியில் உள்ளடக்கப்படும் போதே அநேகமான பிற்போடப்பட்ட வரிக் கடன்பாடுகளும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் தோன்றுகின்றன. விளைகின்ற பிற்போடப்பட்ட வரியானது வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. உதாரணங்கள்:

(a) வட்டி, உரிமைப் பங்கீட்டுத் தொகை அல்லது பங்கிலாபம் என்பவற்றால் வருமானமானது நிலுவையாகப் பெறப்பட்டு ~~LKAS18 வருமானம் இன் பிரகாரம் காலப்பகிர்வு அடிப்படையில்~~ SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானங்கள்,* LKAS 39 *நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவு மற்றும் அளவீடு* அல்லது SLFRS 9 *நிதிச் சாதனங்கள்* நியமங்களுடன் பொருத்தமான வகையில் கணக்கீட்டு இலாபத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்தும், ஆனால் காசு அடிப்படையில் வரிக்குரிய இலாபத்தில் (வரி நட்டம்) உள்ளடக்கப்படல்: மற்றும்

(b) ............

**அமுலுக்கு வரும் திகதி**

**98 E** SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம், 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, பந்தி 59 திருத்தப்பட்டுள்ளது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

**LKAS 16 ஆதனம் பொறி மற்றும் உபகரணம்**

அறிமுகத்தில் பந்தி IN13 திருத்தப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட பகுதிகள் வெட்டப்பட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன், புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**ஏற்பிசைவு நீக்கல்: ஏற்பிசைவு நீக்கும் திகதி**

IN 13 SLFRS 15 *வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானத்தில்* ஒரு செயல்நிறைவேற்றுக் கடமை எப்பொழுது நிறைவு செய்யப்படுகிறது என்பதைத் தீர்மானிப்பதற்காக, உரிமம் ~~LKAS 18 *வருமானம்* நியமத்தின் மூலக்கூறுகள் நிறைவு செய்யப்படும்~~ பெறுபவர் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அந்த உருப்படியின் கட்டுப்பாட்டை பெற்றுக்கொள்ளும் திகதியில் முடிவுறுத்தல் செய்யும் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லல் பெறுமதியை ஏற்பிசைவு நீக்குதல் வேண்டும். ~~LKAS~~

~~16 நியமத்தின் முன்னைய ஏற்பாடுகள், உரிமம் முடிவுறுத்தல் செய்த ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லல் பெறுமதியை ஏற்பிசைவு நீக்கிய திகதியைத் தீர்மானிப்பதற்கான மூலக்கூறுகளைப் பயன்படுத்துமாறு தேவைப்படுத்தவில்லை.~~

பந்தி 69 மற்றும் 72 திருத்தப்பட்டுள்ளதுடன் பந்தி 81J சேர்க்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட பகுதிகள் வெட்டப்பட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன், புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**ஏற்பிசைவு நீக்கல்**

...

69 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் உருப்படி ஒன்றின் முடிவு செய்தலானது பல வழியில் நிகழலாம் (உதாரணம் விற்பனை மூலம், நிதிக் குத்தகையில் ஈடுபடல் அல்லது அன்பளிப்பு). ~~தீர்மானிப்பதில் உரிமம் பொருட்கள் அல்லது சேவைகளின் விற்பனை மூலமான வருமானத்தை ஏற்பிசைவு செய்வதற்கான LKAS 18 நியமத்தின் மூலப்பிரமாணங்களைப் பயன்படுத்தும்~~ ஒரு ஆதனம் பொறி மற்றும் உபகரண உருப்படியை முடிவு செய்யும் திகதியானது SLFRS 15 *வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்* நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைவாகப் பெறுபவர் அந்த உருப்படியின் கட்டுப்பாட்டை பெற்றுக்கொள்ளும் திகதி ஆகும். விற்று மீள் குத்தகை எடுப்பதில் LKAS 17 பிரயோகிக்கப்படும்.

72 ஆதனம் பொறி மற்றும் உபகரண உருப்படிக்கான ~~அகற்றல் மூலமான வருமதியாகவுள்ள கைமானம், ஏற்பிசைவு நீக்கல் மூலமான ஏற்படும் நயம் அல்லது நட்டங்களில் உள்ளடக்கப்படும். கொடுப்பனவு பிற்போடப்பட்டதாக இருப்பின், பெறப்பட்ட கைமானம் ஆரம்பத்தில் காசுக்கு சமமானதாக ஏற்பிசைவு செய்யப்படும்~~. SLFRS 15 ன் பந்திகள் 47-72 இன் ஊடுசெயல் விலையை நிர்ணயிப்பதற்கான தேவைப்பாடுகளுக்கு இணங்கத் தீர்மானிக்கப்பட்டு இருப்பின், அதன் கைமானத் தொகையானது முதன்முதலில் அதன் சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்படும். ~~கைமானத்தின் பெயரளவுப் பெறுமதி மற்றும் வட்டி வருமானமாக வருமதியின் பயனுறுதி வாய்ந்த வருமானமாக பிரதிபலிக்கப்பட்டு LKAS 18 நியமத்துக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட, காசுக்கு சமமான பெறுமதி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு~~ இலாபநட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கைமானத்தின் மதிப்பிடப்பட்ட தொகையிலான பிற்கால மாற்றங்கள் SLFRS 15 நியமத்தின் ஊடுசெயல் விலையிலான மாற்றங்களுக்கான தேவைப்பாடுகளுக்கு இணக்கமாகக் கணக்கிடப்படும்.

...

**அமுலுக்கு வரும் திகதி**

81J SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்*, 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, பந்தி 68A, 69 மற்றும் 72 திருத்தப்பட்டுள்ளது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

**LKAS 32 நிதிச்சாதனங்கள் : முன்னிலைப்படுத்தல்**

பந்தி 97Q திருத்தப்பட்டுள்ளது. புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**அமுலுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாற்றம்**

.....

**97Q SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம், 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, திருத்தப்பட்ட பந்தி AG21. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.**

| |
|---|
| பிரயோக வழிகாட்டியில் பந்தி AG21 திருத்தப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட உரை வெட்டிக் காட்டப்பட்டதுடன், புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. |

**நிதிசாரா உருப்படிகளைக் கொள்வனவு அல்லது விற்பனை செய்வதற்கான ஒப்பந்தங்கள் (பந்திகள் 8-10)**

.....

AG21 SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம் நியமத்தினால் தேவைப்படுத்தப்பட்டிருந்தால் தவிர, பௌதீக சொத்துக்களின் பெறுகை அல்லது வழங்கலை உள்ளடக்கும் எந்தவொரு ஒப்பந்தமும் தொடர்புபட்ட கொடுப்பனவுகள் பௌதீக சொத்துக்களை மாற்றும் திகதியில் இருந்து பிற்போடப் பட்டிருந்தாலன்றி, ஒரு தரப்பினருக்கு நிதிச் சொத்து மற்றும் மற்றைய தரப்பினருக்கு நிதிப் பொறுப்பு ஆகியவற்றினை ஏற்படுத்துவதில்லை. வியாபாரக் கழிவீட்டில் பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்வதிலான பொதுவான நடைமுறை இதுவேயாகும்.

**LKAS 34 இடைக்கால நிதி அறிக்கையிடல்**

| |
|---|
| அறிமுகத்தில் பந்திகள் 1-54 என்பது 1-55 என திருத்தப்பட்டுள்ளது. |

| |
|---|
| பந்திகள் 15B மற்றும் 16A ஆகியன திருத்தப்பட்டு பந்தி 55 சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. |

**முக்கிய நிகழ்வுகள் மற்றும் ஊடுசெயல்கள்**

...

15B கீழ்வரும் நிகழ்வுகள் மற்றும் ஊடுசெயல்கள் முக்கியத்தன்மை வாய்ந்தவையாகக் காணப்பட்டால், அவை தொடர்பான வெளிப்படுத்தல்கள் தேவைப்படுத்தப்படும். இந் நிகழ்வுகள் மற்றும் ஊடுசெயல்களின் பட்டியல் முழுமையானது அல்ல.

(a) .......

(b) நிதிச்சொத்துக்கள், ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள், அருவச் சொத்துக்கள், வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்கள் முலம் ஏற்படும் சொத்துகள் அல்லது ஏனைய சொத்துக்கள் ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் காலப் பெறுமதி இழப்புகளின் ஏற்பிசைவு மற்றும் சேத நட்டம் போன்ற அவ்வாறான ஏற்பிசைவுகளின் மீள்பெறுகை

(c) .............

**பிற வெளிப்படுத்தல்கள்**

**16A** 15-15C பந்திகளுக்கு ஏற்ப முக்கிய நிகழ்வுகள் மற்றும் ஊடுசெயல்களை வெளிப்படுத்துவதற்கு மேலதிகமாக, உரிமம் இடைக்கால நிதிக்கூற்றுக்களில் வேறு

எங்கேனும் வெளிப்படுத்தப்படாதவிடத்துப் பின்வரும் விடயங்களை அதன் இடைக்கால நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களில் உள்ளடக்கும். இத் தகவல்கள் சாதாரணமாக, நிதியாண்டு முதல் அறிக்கையிடும் திகதி வரையான அடிப்படையில் காணப்படும்.

(a) ...................

(j) SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானங்கள்* நியமத்தின் 114-115 பந்திகள் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானங்கள் தொடர்பான பிரிக்கப்பட்ட வருமானங்களைத் தேவைப்படுத்துகின்றன.

.............

## அமுலுக்கு வரும் திகதி

*55* SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்,* 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, திருத்தப்பட்ட பந்திகள் 15B மற்றும் 16A. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

## LKAS 36 சொத்துக்களின் சேத இழப்பு

| |
|---|
| பந்தி 2 திருத்தப்பட்டு 140L சேர்க்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட உரை வெட்டப்பட்டு, புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. |

### நோக்கெல்லை

2 இந்த நியமம் கீழ்வருவன தவிர்ந்த ஏனைய சகல சொத்துக்களினதும் சேத இழப்பு நட்டங்களை கணக்கீடு செய்தலில் பிரயோகிக்கப்படும்.

(a) ………..

(b) நிர்மாண ஒப்பந்தங்களிலிருந்து ~~ஏற்படும் சொத்துக்கள் (LKAS 11 நிர்மாண ஒப்பந்தங்கள் எனும் நியமத்தினைப் பார்க்கவும்)~~. SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானங்கள்* நியமத்திற்கு அமைவான ஒப்பந்த சொத்துக்கள் அல்லது ஒப்பந்தம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக அல்லது நிறைவு செய்வதற்காக ஏற்படும் கிரயங்களிலிருந்து உருவாகும் சொத்துக்கள்.

(c) …………..

## நிலைமாறல் ஏற்பாடுகள் மற்றும் அமுலுக்கு வரும் திகதி

............

140 L SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்,* 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, பந்தி 2 திருத்தப்பட்டது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

## LKAS 37 ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்

| |
|---|
| அறிமுகத்தில் பந்தி 1-99 என்பது 1-100 எனத் திருத்தப்பட்டுள்ளது. |

| |
|---|
| பந்தி 5 திருத்தப்பட்டு 100 சேர்க்கப்பட்டுள்ளதுடன் பந்தி நீக்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட உரை வெட்டப்பட்டு, புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. |

**நோக்கெல்லை**

5 வேறொரு நியமமானது நிகழ்தகு சொத்து அல்லது நிகழ்தகு பரிப்புகள், ஏற்பாடுகள் என்பவற்றின் குறித்த வகையுடன் உரிமமானது இந்நியமத்திற்குப் பதிலாக அந்நியமத்தினை பிரயோகிக்கின்றது. உதாரணமாக, சில வகையான ஏற்பாடுகளானது பின்வரும் நியமங்களில் குறிப்பிடப்படுகின்றது:

(a) ~~நிர்மாணவேலை ஒப்பந்தங்கள் (LKAS 11 நிர்மாண வேலை ஒப்பந்தங்களை பார்க்க)~~ நீக்கப்பட்டுள்ளது.

(b) ..........

(c) காப்புறுதி ஒப்பந்தங்கள் (SLFRS 4 இன் காப்புறுதி ஒப்பந்தங்களைப் பார்க்க) எனினும் SLFRS 4 இன் நோக்கெல்லைக்குள்ளான காப்புறுதி ஒப்பந்தங்களின் கீழான ஒப்பந்தக் கடப்பாடுகள் மற்றும் உரிமைகளிலிருந்து எழுகின்றவை தவிர்ந்த காப்புறுதி அளிப்பவரின் நிகழ்தகு சொத்துக்கள், நிகழ்தகு பரிப்புக்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இந் நியமமானது பிரயோகிக்கப்படுகின்றது.

(d) வணிக இணைப்பு ஒன்றில் சுவீகரிப்பவரின் நிகழத்தகு கைமானம் (SLFRS 3 வணிக இணைப்புக்கள் நியமத்தைப் பார்க்கவும்), மற்றும்

(e) வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம் (SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம் நியமத்தைப் பார்க்கவும்). எவ்வாறெனினும், SLFRS 15 ஆனது, வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களை அணுகுவதற்குஈ ஏற்படுத்துவதற்கு அல்லது செயலற்றுப் போவதற்கான பிரத்தியேக தேவைப்பாடுகள் எதனையும் கொண்டிராமையால், இந் நியமம் அவ்வாறான நிலைமைகளுக்குப் பிரயோகிக்கத் தக்கதாகும்.

...

**அமுலுக்கு வரும் திகதி**

100 SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்,* 2014 ஜூன் மாதம் வெளியிடப்பட்டது, பந்தி 5 திருத்தப்பட்டதுடன் பந்தி 6 நீக்கப்பட்டுள்ளது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

**LKAS 38 அருவச் சொத்துக்கள்**

பந்தி 3, 114 மற்றும் 116 ஆகியன திருத்தப்பட்டு பந்தி 130K சேர்க்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட உரை வெட்டப்பட்டு, புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**நோக்கெல்லை**

…

3 சிறப்பு வகையொன்றினைச் சார்ந்த அருவச் சொத்தொன்றினைப் பற்றி வேறொரு கணக்கீட்டு நியமம் எடுத்துரைக்குமேயாகில் உரிமமொன்று இந்த நியமத்திற்குப் பதிலாக அந்த நியமத்தினையே பிரயோகிக்கும். உதாரணமாக: இந்த நியமம் கீழ்வருவனவற்றிற்குப் பிரயோகிக்கப்பட மாட்டாது.

(a) உரிமமொன்றினால் அதன் சாதாரண வியாபார நடவடிக்கையின் போது விற்பனைக்காக வைத்துக் கொள்ளப்படும் அருவச் சொத்துக்கள். (LKAS - 2 தொக்குகள் மற்றும் LKAS-11 நிருமாண ஒப்பந்தங்களினைப் பார்க்கவும்).

(b) ......

(i) SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்* நியமத்துக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து எழும் சொத்துக்கள்.

…

**உபயோகத்திலிருந்து விலக்கலும் அகற்றுதலும்**

…

114 அருவச் சொத்து ஒன்று அகற்றப்படுதல் பல்வேறு வழிகளில் ஏற்படக்கூடும் (உதாரணமாக: விற்பனை மூலம், நிதிக்குத்தகைக்கு உட்படல் அல்லது அன்பளிப்பு மூலம்). ~~அவ்வகை அருவச் சொத்தொன்றின் நிர்ணயிப்பதில் உரிமம் LKAS-18 வருமானம் என்ற நியமத்தின் மூலப்பிரமாணங்களை பொருட்கள் விற்பனையில் இருந்து வருமானத்தை ஏற்பிசைவு செய்வதற்குப் பிரயோகிக்கும்.~~ அருவச் சொத்தொன்றின் அகற்றப்படல் திகதி என்பது SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்* நியமத்துக்கு அமைவாக செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஒன்று எப்போது நிறைவு செய்யப்படுகிறது என்பதைத் தீர்மானிப்பதற்கான மூலப் பிரமாணங்களுக்கு இணைவான வகையில் பெற்றுக் கொள்பவர் சொத்தின் கட்டுப்பாட்டைப் பெற்றுக் கொள்ளும் தினம் ஆகும். விற்று மீள் குத்தகை மூலமான முடிவு செய்தலுக்கு LKAS 17 நியமம் பிரயோகிக்கப்படும்.

...........

116 அருவச் சொத்து உருப்படிக்கான ~~அகற்றல் மூலமான வருமதியாகவுள்ள கைமானம், ஏற்பிசைவு நீக்கல் மூலமான ஏற்படும் நயம் அல்லது நட்டங்களில் உள்ளடக்கப்படும். கொடுப்பனவு பிற்போடப்பட்டதாக இருப்பின், பெறப்பட்ட கைமானம் ஆரம்பத்தில் காசுக்கு சமமானதாக ஏற்பிசைவு செய்யப்படும்.~~ SLFRS 15 ன் பந்திகள் 47-72 இன் ஊடுசெயல் விலையை நிர்ணயிப்பதற்கான தேவைப்பாடுகளுக்கு இணங்கத் தீர்மானிக்கப்பட்டு இருப்பின், அதன் கைமானத் தொகையானது முதன்முதலில் அதன் சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்படும். ~~கைமானத்தின் பெயரளவுப் பெறுமதி மற்றும் வட்டி வருமானமாக வருமதியின் பயனுறுதி வாய்ந்த வருமானமாக பிரதிபலிக்கப்பட்டு LKAS 18 நியமத்துக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட, காசுக்கு சமமான பெறுமதி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு~~ இலாபநட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கைமானத்தின் மதிப்பிடப்பட்ட தொகையிலான பிற்கால மாற்றங்கள் SLFRS 15 நியமத்தின் ஊடுசெயல் விலையிலான மாற்றங்களுக்கான தேவைப்பாடுகளுக்கு இணக்கமாகக் கணக்கிடப்படும்.

**அமுலுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறல் ஏற்பாடுகள்**

…………

130K SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம், 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, பந்தி 3, 14 மற்றும் 116 திருத்தப்பட்டுள்ளது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

**LKAS 39 நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவு மற்றும் அளவீடு**

அறிமுகத்தில் பந்திகள் IN5-IN6 திருத்தப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட உரை வெட்டப்பட்டு, புதிய உரை அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**நோக்கெல்லை**

IN5 இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் வெளிப்படுத்தப்படாத, நிகர அடிப்படையில் தீர்க்கப்பட முடியாத மற்றும் சந்தை வட்டிவீதத்திலும் குறைவான கடனுடன் தொடர்புபடாத கடன் பொறுப்புகளுக்கு ஒரு நோக்கெல்லை விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. சந்தை வட்டி வீதத்திற்குக் குறைவான வீதத்தில் கடன் ஒன்றை வழங்குவதற்கான கடப்பாடானது, ஆரம்பத்தில் சீர்மதிப்பில் அளவிடப்பட்டுப் பின்னர், கீழ்வருவனவற்றில் உயர்வான பெறுமதியில் மதிப்பிடப்படும்.

(a) LKAS 37 *ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்* நியமத்திற்கமைய ஏற்பிசைவு செய்யப்படும் தொகை, மற்றும்

(b) ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையில் இருந்து, பொருத்தமாக இருப்பின், ~~LKAS 18 *வருமானம்* நியமத்திற்கு~~ SLFRS 15 *வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமத்தின் கோட்பாடுகளுக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமானத்தின் திரண்ட காலத்தேய்மானப் பெறுமதியைக் கழித்த தொகை.

IN6 இந் நியமத்தின் தரவின் நோக்கெல்லையானது வழங்கப்பட்ட நிதி உத்தரவாத ஒப்பந்தங்களை உள்ளடக்கியுள்ளது. எனினும், நிதி உத்தரவாத ஒப்பந்தம் ஒன்றினை வழங்குபவர் குறித்த உத்தரவாத ஒப்பந்தங்கள் காப்பீட்டு ஒப்பந்தங்களாக வெளிப்படையாகக் கருதப்படுவதாகக் கொண்டு முன்னைய காலங்களில் காப்பீட்டு ஒப்பந்தங்களுக்கு பொருந்தும் கணக்கியல் முறையைப் பயன்படுத்தியிருப்பின், வழங்குபவர் இந்த நியமத்தினையோ அல்லது SLFRS 4 *காப்புறுதி ஒப்பந்தங்கள்* நியமத்தினையோ அவ்வாறான நிதி உத்தரவாத ஒப்பந்தங்களுக்குப் பிரயோகிக்கத் தேர்வு செய்யலாம். இந்த நியம்ததின் கீழ், ஒரு நிதி உத்தரவாத ஒப்பந்தம் ஆரம்பத்தில் சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்பட்டுப் பின்னர் அவற்றினை (a) LKAS 37 நியமத்திற்கமைய ஏற்பிசைவு செய்யப்படும் தொகை, (b) ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையில் இருந்து, பொருத்தமாக இருப்பின், ~~LKAS 18~~ ~~*வருமானம்*~~ நியமத்திற்கு SLFRS 15 *வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமத்தின் கோட்பாடுகளுக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமானத்தின் திரண்ட காலத்தேய்மானப் பெறுமதியைக் கழித்த தொகை ஆகியவற்றில் உயர்ந்த பெறுமதியில் அளவிடுவார்.

நிதியியல் சொத்துக்களை ஏற்பிசைவு செய்வதைத் தடுக்கும் அல்லது தொடர்ச்சியான ஈடுபாட்டிற்கு வழிவகுக்கும் நிதி உத்தரவாதம் ஒப்பந்தங்களின் பிற்கால அளவீட்டுக்கு வேறுபட்ட தேவைப்பாடுகள் பிரயோகிக்கப்படும். காப்பீட்டு ஒப்பந்தங்களாகக் காணப்படும் காரணத்தால் இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்டுக் காணப்படும் நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள் இந் நியமத்தின் நோக்கெல்லையின் பொதுவான விலக்களித்தல் காரணமாக இந் நியமத்தின் நோக்கெல்லைக்கு வெளியானவையாகவே கருதப்படுகின்றன.

| |
|---|
| பந்திகள் 2, 9, 43, 47 மற்றும் 55 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்திகள் 2A, 44A, 55A மற்றும் 103T சேர்க்கப்படுகின்றன. உரை நீக்கப்பட்டது. மற்றும் புதிய உரை கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. |

**நோக்கெல்லை**

**2** இந்த நியமம் கீழ்வருவன தவிர்ந்த சகல உரிமங்களினாலும் சகல வகையான நிதிச் சாதனங்களுக்கும் பிரயோகிக்கப்படும்:

(a) SLFRS 15 இல் SLFRS 9 க்கு அமைய கணக்கிடப்படுபவை எனக் குறிப்பிட்டுள்ளவை தவிர்ந்த, SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்* நியமத்திற்கு உட்பட்ட உரிமைகள் மற்றும் கடமைகள் கொண்ட நிதிச் சாதனங்கள்

2A சேத இழப்பீட்டை அங்கீகரிப்பதற்கான நோக்கங்களுக்காக இந்த நியமத்துக்கு ஏற்ப கணக்கிடப்படல் வேண்டும் என SLFRS 15 குறிப்பிடுகின்ற உரிமைகளுக்கு இந் நியமத்தின் காலப் பெறுமான இழப்பீட்டுத் தேவைப்பாடுகள் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

**சொற்பொருள் விளக்கங்கள்**

9 …

**ஏற்பிசைவு மற்றும் அளவீடு தொடர்பான சொற்பொருள் விளக்கங்கள்**

……………

“விளைவு வட்டி முறையானது” நிதிச் சொத்தொன்றின் அல்லது நிதிப்பரிப்பொன்றின் (அல்லது நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிப்பரிப்புக்களின் குழுமமொன்றின்) காலத்தேய்மானம் செய்யப்பட்ட கிரயத்தினை கணித்தலுடன், உரியகாலமீறாக வட்டி வருமானத்தினை அல்லது வட்டிச் செலவினை ஒதுக்கும் முறையொன்றாகும். விளைவு வட்டி விகிதமானது மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுக் கொடுப்பனவுகளை அல்லது பெறுவனவுகளை நிதிச்சாதனத்தின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலமீறாக அல்லது, பொருத்தமான இடத்து அதனிலும் குறைந்த காலமீறாக கழிவீடு செய்யப்படும் போது அது நிதிச்சொத்தின் அல்லது நிதிப்பரிப்பின் நிகர முன்கொணரற் தொகைக்கு சமமாக அமையும் வண்ணமான கழிவு விகிதமாகும். விளைவு வட்டி விகிதத்தினைக் கழிக்கும் போது, உரிமமொன்று நிதிச்சாதனத்தின் சகல ஒப்பந்தரீதியிலான உறுப்புரைகளையும் கவனத்திற் கொண்டு காசுப்பாய்வுகளை மதிப்பிடுவதுடன் (உதாரணமாக, முற்கொடுப்பனவு, அழைப்பு அல்லது அதனையொத்த தேர்வுரிமைகள்) எதிர்காலக் கடன் இழப்புக்களைக் கவனத்தில் கொள்ளாது. இந்தக் கணிப்பீடானது, விளைவு வட்டி விகிதத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைவதும் ஒப்பந்தத் தரப்பினருக்கு இடையே பெறப்படும் அல்லது செலுத்தப்படும் சகல கட்டணங்கள் அல்லது புள்ளிகள் (~~LKAS 18 வருமானம் நியமத்தின் பந்தி~~ **AG8A–AG8B** இனை பார்க்கவும்), ஊடுசெயற் கிரயங்கள் மற்றும் ஏனைய சகல பங்குவட்டங்கள் அல்லது கழிவுகளை உள்ளடக்கும். ஒத்த நிதிச்சாதனங்களின் குழுமமொன்றின் காசுப்பாய்வுகளும் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலமும் நம்பகரமாக மதிப்பிட முடியுமென்ற அசைக்க முடியாத எடுகோளின் அடிப்படையில் இவை அமைந்துள்ளன. எனினும் நிதிச் சாதனமொன்றின் (அல்லது நிதிச் சாதனங்களின் குழுமமொன்றின்) காசுப்பாய்வுகளை அல்லது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தினை நம்பகரமாக அளவிடுதல் சாத்தியமற்றதாக அமையும் அருமையான சந்தர்ப்பங்களில், உரிமமானது நிதிச்சாதனத்தின் (அல்லது நிதிச்சாதனங்களின் குழுமத்தின்) முழு ஒப்பந்தக்காலமீறாக ஒப்பந்த ரீதியிலான காசுப்பாய்வுகளை உபயோகிக்கும்.

“*ஏற்பிசைவு விலக்கல்*” என்பது உரிமத்தின் முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிப்பரிப்புக்களை நிதிநிலைக்கூற்றிலிருந்து நீக்குதல் ஆகும்.

*பங்கிலாபம்* என்பது உரிமையாண்மை சாதனங்களை வைத்திருப்பவர்களுக்கு அவர்களது உரிமையின் விகிதாசாரத்துக்கு ஏற்ப இலாபத்தினைப் பகிர்ந்தளித்தல் ஆகும்.

*சீர்மதிப்பு* என்பது அளவீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்களிடையே முறையான ஊடுசெயல் ஒன்றின் மூலம் சொத்து ஒன்றை விற்பதனால் பெறப்படக்கூடிய அல்லது பரிப்பு ஒன்றைத் தீர்ப்பதற்காக செலுத்த வேண்டிய விலை ஆகும். (SLFRS 13 நியமத்தைப் பார்க்கவும்)

**நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்களின் ஆரம்ப அளவீடு**

43 பந்தி 44 இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட வியாபார வருமதிகள் தவிர்ந்த நிதிச்சொத்தொன்றோ அல்லது நிதிப்பரிப்பொன்றோ ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்போது, உரிமமொன்று அவற்றினை அவற்றின் சீர்மதிப்பிலும், இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்பில் அமையாத நிதிச்சொத்து அல்லது நிதிப்பரிப்பினை பொறுத்தமட்டில், நிதிச்சொத்தின் அல்லது நிதிப்பரிப்பின் கொள்வனவு அல்லது வழங்குகையுடன் நேரடியாக தொடர்புபட்ட ஊடுசெயற் கிரயங்களை கூட்டிவரும் தொகையிலும் அளவிடும்.

....

44A பந்தி 43 இன் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொள்ளாது, கணிசமான நிதியிடல் ஆக்கக்கூறைக் கொண்டிராத வியாபார வருமதியொன்றை (SLFRS 15 க்கு இணங்க

நிர்ணயிக்கப்பட்டவாறாக) ஆரம்ப ஏற்பிசைவின் போது, அவற்றின் ஊடுசெயல் விலைகளில் (SLFRS 15 இல் சொற்பொருள் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது) அளவீடு செய்யும்.

...

**நிதிப் பரிப்புக்களின் பிற்கால அளவீடு**

47 ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், கீழ்வரும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த போது, சகல நிதிப் பரிப்புக்களையும் உரிமமொன்று விளைவுள்ள வட்டி விகித முறையினை உபயோகித்து காலத்தேய்மானம் செய்யப்பட்ட கிரயத்தில் அளவிடும்:

(a) ..................

(c) பந்தி 9 இல் சொற்பொருள் விளக்கப்பட்டவாறான நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள். அவ்வாறான ஒப்பந்தங்களை வழங்குபவர் ஒருவர் ஆரம்ப ஏற்பிசைவுக்குப் பின்னர் அவற்றினை (பந்தி 47 (அ) அல்லது (ஆ) பிரயோகிக்கப்படாத இடத்து) கீழே தரப்பட்டுள்ள இரண்டு பெறுமதிகளிலும் உயர்ந்த பெறுமதியில் அளவிடுவார்.

(i) LKAS 37 நியமத்திற்கமைய ஏற்பிசைவு செய்யப்படும் தொகை

(ii) ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையில் இருந்து, பொருத்தமாக இருப்பின், ~~LKAS 18 *வருமானம்* நியமத்திற்கு~~ SLFRS 15 *வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமத்தின் கோட்பாடுகளுக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமானத்தின் திரண்ட கடனழிவுப் பெறுமதியைக் கழித்த தொகை.

(d) சந்தை வட்டி விகிதத்திலும் குறைந்த வட்டிக்கு கடனொன்றினை வழங்குவதற்கான கடமைப்பாடு. அவ்வாறான கடமைப்பாட்டினை வழங்கும் ஒருவர், ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், அவற்றினை (பந்தி 47 (அ) பிரயோகிக்கப்படாதவிடத்து) கீழ்வருவனவற்றுள் உயர்ந்த பெறுமதியில் அளவிடுவர்:

(a) LKAS 37 நியமத்திற்கமைய தீர்மானம் செய்யப்படும் தொகை, மற்றும்

(b) ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையில் இருந்து, பொருத்தமாக இருப்பின், ~~LKAS 18 *வருமானம்* நியமத்திற்கு~~ SLFRS 15 *வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமத்தின் கோட்பாடுகளுக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமானத்தின் திரண்ட கடனழிவுப் பெறுமதியைக் கழித்த தொகை.

தளம்பற்காப்பு உருப்படிகளாக வகைப்படுத்தப்பட்ட நிதிப்பரிப்புக்கள் பந்திகள் 89-102 இல் கூறப்பட்ட தளம்பற் காப்பு கணக்கீட்டுத் தேவைப்பாடுகளுக்கு அமைவாக இருக்கும்.

**நயங்கள் மற்றும் நட்டங்கள்**

55 தளம்பற்காப்பு உறவுமுறையின் பகுதியாக அமையாத (பந்திகள் 89 - 102 இனை பார்க்கவும்) நிதிச்சொத்து அல்லது நிதிப்பரிப்பொன்றின் சீர்மதிப்பில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக ஏற்படும் இலாபம் அல்லது நட்டம், கீழ்வருமாறு ஏற்பிசைவு செய்யப்படும்.

***(a)*** **...**

***(b)*** விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதிச் சொத்தொன்றின் இலாபம் அல்லது நட்டம் சேத இழப்புக்கள் (பந்தி 67-70 இனை பார்க்கவும்) மற்றும் அந்நிய நாணயமாற்று இலாபம் அல்லது நட்டங்கள் (பின்னிணைப்பு (அ) பந்தி பிவ 83 இனை பார்க்கவும்), தவிர்ந்த சந்தர்ப்பங்களில், நிதிச்சொத்து ஏற்பிசைவு விலக்கல் செய்யப்படும்

வரையில், பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்வதுடன், ஏற்பிசைவு விலக்கல் மேற்கொள்ளப்படும் போது முன்னர் பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட திரள் இலாபம் அல்லது நட்டம், உரிமையாண்மையிலிருந்து இலாபம் அல்லது நட்டத்தில் மீள வகைப்படுத்தற் செம்மையாக்கம் ஒன்றாக மீள வகைப்படுத்தப்படும் (LKAS1 நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்துதலைப் பார்க்கவும்). எனினும், விளைவு வட்டிமுறையினை உபயோகித்து தீர்மானிக்கப்படும் வட்டி (பந்தி 9 இனை பார்க்கவும் ) இலாபம் அல்லது நட்டத்தில் ~~(“ LKAS18;”~~ இனை பாாக்கவும்) ஏற்பிசைவு செய்யப்படும். விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் உரிமையாண்மைச் சாதனத்தின் மீதான பங்கிலாபம், கொடுப்பனவினை ~~பெறுவதற்கான உ~~ரிமத்தின் உரிமை ஏற்படுத்தப்படும்போது (LKAS 18 இனை பார்க்கவும்) இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

55A இலாப~~ங்கள் மற்~~றும் நட்டங்களில் பங்கிலாபம் ஏற்பிசைவு செய்யப்படுவது:

(a) உரிமம் பங்குலாபகிதைப் பெறும் உரிமை நிலைநிறுத்தப்படும் போது,

(b) பங்கிலாபத்துடன் தொடர்புடைய பொருளாதார நலன்களின் உட்பாய்ச்சல் உரிமத்துக்கு பாய்வடைவதற்கான சாத்தியக்கூறு காணப்படும் போது,

(c) பங்கிலாபத் தொகை நம்பகமாக அளவிடக்கூடியதாக உள்ள போது.

**அமுலுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை**

103T SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம், 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, பந்திகள் 2, 9, 43, 47, 55, AG2, AG4 மற்றும் AG48 திருத்தப்பட்டதுடன் பந்திகள் 2A, 44A, 55A மற்றும் AG8A–AG8C சேர்க்கப்பட்டுள்ளன. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

பின்னிணைப்பு A இல் பந்திகள் AG4 மற்றும் AG48 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்திகள் AG8A-AG8C சேர்க்கப்படுகின்றன. நீக்கப்பட்ட உரை வெட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் புதிய உரை அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**நோக்கெல்லை (பந்திகள் 2–7)**

AG4 நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள் உத்தரவாதமளித்தல், சில வகையான நாணயக் கடிதங்கள், கடன் தவறுகை ஒப்பந்தம் அல்லது காப்பீட்டு ஒப்பந்தம் போன்ற பல்வேறு சட்ட வடிவங்களில் இருக்கலாம். அவற்றின் கணக்கீட்டு முறைமை அவற்றின் சட்ட வடிவத்தில் தங்கியிருப்பதில்லை. பின்வருவன சரியான கணக்கீட்டு முறைக்கான சில உதாரணங்களாகும் (பந்தி 2 (e)):

(a) வழங்குபவர் பின்வருவனவற்றில் உயர்ந்த பெறுமதியில் அளவிடுவார்:

(i) LKAS 37 நியமத்திற்கமைய ஏற்பிசைவு செய்யப்படும் தொகை, மற்றும்

(ii) ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையில் இருந்து, பொருத்தமாக இருப்பின், ~~LKAS 18 *வருமானம்* நியமத்திற்கு~~ SLFRS 15 *வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமத்தின் கோட்பாடுகளுக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமானத்தின் திரண்ட கடனழிவுப் பெறுமதியைக் கழித்த தொகை. (பந்தி 47(c) இனை பார்க்கவும்)

(b) …

(c) நிதி உத்தரவாதம் ஒப்பந்தமானது பொருட்களின் விற்பனை தொடர்பாக வழங்கப்பட்டால், உத்தரவாதம் மற்றும் பொருட்களின் விற்பனையிலிருந்தான வருமானத்தை எப்போது ஏற்பிசைவு செய்தல் வேண்டும் எனத் தீர்மானிக்கும் போது வழங்குநர் ~~LKAS 18~~, SLFRS 15 நியமத்தைப் பயன்படுத்துவார்..

**விளைவுள்ள வட்டிவீதம்**

…

AG8A விளைவுள்ள வட்டி முறையைப் பிரயோகிப்பதில், நிதிச் சாதனங்களின் விளைவுள்ள வட்டி விகிதத்தின் ஒரு பகுதியாக இருக்கும் கட்டணங்களை உரிமம் அடையாளம் காணும். நிதிச் சேவைகளுக்கான கட்டணத்தின் விபரமானது, குறித்த நிதிச்சேவையின் தன்மை மற்றும் கருத்து ஆகியவற்றைக் குறிப்பதில்லை. நிதிச் சாதனங்களின் விளைவுள்ள வட்டி விகிதத்தின் ஒரு பகுதியாக இருக்கும் கட்டணங்கள் நிதிச் சாதனம் சீர்மதிப்பில் அளவிடப்படாவிட்டால், இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும் சீர்மதிப்பு மாற்றங்களுடன் விளைவுள்ள வட்டி விகிதத்திலான ஒரு சீராக்கமாகக் கருதப்படும். அவ்வாறான நிலைமைகளில் கட்டணமானது சாதனம் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்படும் போதே வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

AG8B நிதிச் சாதனங்களின் விளைவுள்ள வட்டி விகிதத்தின் அவசியமான ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் கட்டணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

(a) நிதிச்சொத்து உருவாக்கம் அல்லது கையகப்படுத்துதல் தொடர்பாக உரிமத்தினால் பெறப்பட்ட ஒழுங்கமைத்தல் கட்டணம். இத்தகைய கட்டணங்கள் கடனாளியின் நிதி நிலைமை மதிப்பீடு, உத்தரவாதங்களை மதிப்பிடல் மற்றும் பதிவு செய்தல், பிணை மற்றும் பிற பாதுகாப்பு ஏற்பாடுகள், சாதனத்தின் விதிமுறைகளுக்கான பேச்சுவார்த்தை, ஆவணங்களை தயாரித்தல் மற்றும் செயலாக்குதல் மற்றும் ஊடுசெயல்களை நிறைவு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவை உள்ளடக்கியிருக்கலாம். இந்தக் கட்டணங்கள் முடிவில் உருவாகும் நிதிச் சாதனத்தின் ஈடுபாட்டை உருவாக்கும் ஒரு அவசியமான ஒருங்கிணைந்த பகுதியாகும்.

(b) கடனுக்கான கடப்பாடு இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு வெளியேயானதான உள்ளபோது, உரிமம் ஒரு குறிப்பிட்ட கடனீட்டு ஏற்பாட்டினுள் நுழைவதற்கான நிகழ்தகவு காணப்படும் போது உரிமத்தினால் கடனை ஒழுங்குசெய்வதற்காக பெறப்படும் கடப்பாட்டுக் கட்டணங்கள். இக் கட்டணங்கள் நிதிச் சாதனத்தைக் கையகப்படுத்துவதற்கான தொடர்ச்சியான ஈடுபாட்டுக்கான ஒரு இழப்பீட்டுக் கொடுப்பனவாகக் கருதப்படும். உரிமம் கடனை உருவாக்காது கடமை முடிவுக்கு கொண்டுவரின், கட்டணம் முடிவிலே வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

(c) காலப்பெறுமதி கழிக்கப்பட்ட கிரயத்தில் நிதிப் பரிப்புக்களை வழங்கும் போது பெறப்பட்ட உருவாக்கக் கட்டணம். இந்தக் கட்டணங்கள் நிதிப் பரிப்புடன் ஒரு ஈடுபாட்டை உருவாக்குவதற்கான ஒரு ஒருங்கிணைந்த அவசியமான பகுதியாகும். முதலீட்டு முகாமைத்துவ சேவைகள் போன்ற சேவைகளை வழங்குவதற்கான உரிமை தொடர்பான உருவாக்கக் கட்டணங்கள் மற்றும் ஊடுசெயல் கிரயங்கள் ஆகியவற்றிலிருந்து நிதிப் பரிப்புக்களுக்கான விளைவுள்ள வட்டி வீதத்தின் ஒரு பகுதியாக இருக்கும் கட்டணங்கள் மற்றும் கிரயங்களை உரிமம் வேறுபடுத்துதல் வேண்டும்.

AG8C நிதிச் சாதனங்களுக்கான விளைவுள்ள வட்டி வீதத்தின் ஒரு அவசியமான ஒருங்கிணைந்த பகுதியாக இல்லாத, SLFRS 15 இன் படி கணக்கீடு செய்யப்படும் கட்டணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

(a) கடன் ஒன்றின் சேவை வழங்கலுக்காக அறவிடப்படும் கட்டணம்

(b) கடனுக்கான கடப்பாடு இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு வெளியேயானதான உள்ளபோது, உரிமம் ஒரு குறிப்பிட்ட கடனீட்டு ஏற்பாட்டினுள் நுழைவதற்கான

நிகழ்தகவு காணப்படாத போது உரிமத்தினால் கடனை ஒழுங்குசெய்வதற்காக பெறப்படும் கடமைப்பாட்டுக் கட்டணங்கள்.

(c) கடனை ஒழுங்குபடுத்தி, கடனீட்டின் எந்தப் பகுதியையும் வைத்துக் கொள்ளாத போது (அல்லது ஏனைய பங்கேற்பாளர்களுக்கு ஒப்பான இடருக்கான அதே வட்டி விகிதத்தில் ஒரு பகுதியை தக்க வைத்துக் கொள்ளும் போது) பெறப்படும் கடன் கூட்டாக்கல் கட்டணங்கள்.

**மாற்றப்பட்ட சொத்துகளிலான தொடர்ச்சியான ஈடுபாடு**

AG48 பந்தி 30 இன் கீழ் ஒரு மாற்றப்பட்ட சொத்து மற்றும் அதனுடன் தொடர்புடைய பரிப்பு ஆகியவற்றை உரிமம் அளவிடும் முறைக்கான உதாரணங்கள் பின்வருமாறு:

***சகல சொத்துக்களும்***

*(a)* மாற்றப்பட்ட சொத்து ஒன்றிலான தவறுகை இழப்புக்களுக்கான கொடுப்பனவாக உரிமத்தினால் வழங்கப்பட்டிருந்த உத்தரவாதம் ஒன்று தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவில் மாற்றப்பட்ட சொத்தை ஏற்பிசைவு நீக்கம் செய்வதைத் தடுப்பின், மாற்றப்பட்ட சொத்து மாற்றப்பட்ட திகதியில் பின்வருவனவற்றில் குறைவான பெறுமதியில் அளவிடப்படும்: (i) சொத்தின் கொண்டு செல்லல் பெறுமதி மற்றும் (ii) உரிமம் மீளச்செலுத்தப்பட வேண்டிய தேவைப்பாட்டின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட தொகையின் (“உத்தரவாதத் தொகை”) உயர்ந்தபட்ச பெறுமதி. தொடர்புடைய பரிப்பு ஆரம்பத்தில் உத்தரவாதத் தொகையுடன் உத்தரவாதத்தின் சீர்மதிப்பு சேர்ந்த தொகையில் (இது பொதுவாக உத்தரவாதத்துக்காகப் பெறப்பட்ட கைமானம்) அளவிடப்படும். பிற்காலத்தில், கடமைப்பாடு திருப்தி செய்யப்பட்டதும் (~~LKAS 18 இனைப் பார்க்கவும்~~ SLFRS 15 இன் கோட்பாடுகளுக்கு அமைவாக) உத்தரவாதத்தின் ஆரம்ப சீர்மதிப்பீட்டுப் பெறுமதி இலாபநட்டங்களில் ~~காலவிகிதாசார அடிப்படையில்~~ ஏற்பிசைவு செய்யப்பட்டு, சொத்துக்களின் கொண்டு செல்லல் பெறுமதி சேத இழப்புக்கள் எவையேனும் இருப்பின், அவற்றினால் குறைக்கப்படும்.

*(b)* …

**LKAS 40 முதலீட்டு ஆதனம்**

| |
|---|
| பந்திகள் 9, 67 மற்றும் 70 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 85E சேர்க்கப்படுகின்றது. நீக்கப்பட்ட உரை வெட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் புதிய உரை அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. |

**ஆதனத்தை முதலீட்டு ஆதனம் அல்லது உரிமையாளரிடம் இருக்கும் ஆதனம் என வகைப்படுத்தல்**

**9** முதலீட்டு ஆதனமாக அமையாததும் அதன் காரணமாக இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்ட உருப்படிக்களுக்கான உதாரணங்கள் கீழ்வருமாறு:

(a) .............

(b) மூன்றாம் சாரார் சார்பாக நிர்மாணிக்கப்பட்டு அல்லது அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் ஆதனம் (LKAS11 நிர்மாண ஒப்பந்தங்கள் எனும் நியமத்தினைப் பார்க்கவும்) [நீக்கப்பட்டுள்ளது]

(c) ….

**அகற்றல்கள்**

......................

67 முதலீட்டு ஆதனம் ஒன்று விற்பனை மூலம் அல்லது நிதிக்குத்தகைக்கு உட்படல் மூலம் அகற்றப்படக்கூடும். ~~அவ்வகையான அருவச் சொத்தொன்றின் அகற்றப்படல் திகதியை நிர்ணயிப்பதில் உரிமம் LKAS-18 வருமானம் என்ற நியமத்தின் மூலப்பிரமாணங்களை பொருட்கள் விற்பனையில் இருந்து வருமானத்தை ஏற்பிசைவு செய்வதற்கும் LKAS-17 என்ற நியமத்தை விற்பனைசெய்து பின் குத்தகை எடுப்பதில் பிரயோகிக்கும்.~~ முதலீட்டு ஆதனம் ஒன்றின் அகற்றப்படல் திகதி என்பது SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்* நியமத்துக்கு அமைவாக செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஒன்று எப்போது நிறைவு செய்யப்படுகிறது என்பதைத் தீர்மானிப்பதற்கான மூலப் பிரமாணங்களுக்கு இணைவான வகையில் பெற்றுக் கொள்பவர் சொத்தின் கட்டுப்பாட்டைப் பெற்றுக் கொள்ளும் தினம் ஆகும். விற்று மீள் குத்தகை மூலமான முடிவு செய்தலுக்கு LKAS 17 நியமம் பிரயோகிக்கப்படும்.

..................

70 ஒரு முதலீட்டு ஆதனத்தின் ஏற்பிசைவு நீக்கத்தின் மூலம் ஏற்படும் இலாபம் அல்லது நட்டத்திற்கான ~~விற்பனை செய்யும் பொழுது மூலம் பெறப்படும் கைமானப் பெறுமதி ஆரம்பத்தில் அதன் சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்படும். அருவச் சொத்தின் கொடுப்பனவு பிற்போடப்பட்டால் பெற்ற பதிலிறுக்கி ஆரம்பத்தில் காசு விலைக்குச் சமமாக ஏற்பிசைவு செய்யப்படும். பதிலிறுக்கியின் பெயரளவு தொகைக்கும் சமமான காசுவிலைக்கும் இடையிலான வேறுபாடு LKAS- 18 இன் பிரகாரம் வட்டி வருவாயாக ஏற்பிசைவு செய்யப்படும். இது பெறவேண்டிய தொகையில் பயன்படு விளைவினை பிரதிபலிக்கும்.~~ SLFRS 15 நியமத்தின் பந்திகள் 47-72 இல் குறிப்பிட்ட ஊடுசெயல் விலையினைத் தீர்மானிக்கும் போதான மூலப் பிரமாணங்களுக்கு அமைவாக தீர்மானிக்கப்படும். இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்படும் மதிப்பீட்டுத் தொகைக்கான பிற்கால மாற்றங்கள் SLFRS 15 நியமத்தின் ஊடுசெயல் விலையிலான மாற்றங்களுக்கான பந்திகளுக்கு இணக்கமாகக் கணக்கீடு செய்யப்படும்.

**அமுலுக்கு வரும் திகதி**

85E SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம், 2014 ஜூன் மாதம் வெளியிடப்பட்டது, பந்தி 3(ஆ), 9, 67 மற்றும் 70 திருத்தப்பட்டுள்ளது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

**IFRIC 12 சேவை சலுகைகள் பற்றிய ஏற்பாடு**

"குறிப்புரைகள்" தலைப்பிற்குக் கீழ் LKAS 11 *நிர்மாண ஒப்பந்தங்கள்* மற்றும் LKAS 18 *வருமானம்* நியமங்களுக்கான குறிப்புரைகள் நீக்கப்பட்டுள்ளதுடன், SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமத்துக்கான குறிப்புரை சேர்க்கப்பட்டுள்ளது. பந்திகள் 13-15, 18-20 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 28 சேர்க்கப்படுகின்றது. நீக்கப்பட்ட உரை வெட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் புதிய உரை அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**ஏற்பாட்டுக் கைமானத்தின் ஏற்பிசைவு மற்றும் அளவீடு**

...............

13 செயற்பாட்டாளர் வழங்கும் சேவைகளுக்கான வருமானத்தை ~~LKAS 11 மற்றும் 18~~ SLFRS 15 க்கு இணக்கமாக ஏற்பிசைவு மற்றும் அளவீடு செய்தல் வேண்டும். ~~செயற்படுனர் ஒரே~~

~~ஒப்பந்தம் அல்லது ஏற்பாட்டின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட சேவைகளை வழங்கின் (அதாவது நிர்மாணம் அல்லது மேம்படுத்தல் சேவைகள் மற்றும் செயற்படுத்தல் சேவைகள்), பெறப்பட்ட கைமானம் தொகைகள் தனித்தனியாக அடையாளம் காணப்படத்தக்கதாக உள்ள போது, வழங்கப்பட்ட சேவைகளின் சார்பு சீர்மதிப்பின் அடிப்படையில் ஒருக்கீடு செய்யப்படும்.~~ கைமானத்தின் தன்மை அதன் பிற்கால கணக்கீட்டு முறையைத் தீர்மானிக்கும். நிதிச் சொத்தாகவும் அருவச் சொத்தாகவும் பெறப்பட்ட கைமானத்துக்கான பிற்காலக் கணக்கீட்டு முறைகீழே பந்திகள் 23-26 இல் விபரிக்கப்பட்டுள்ளது.

**நிர்மாண அல்லது மேம்படுத்தல் சேவைகள்**

14 SLFRS 15 க்கு இணங்க, கட்டுமானம் அல்லது மேம்படுத்தல் சேவைகள் தொடர்பான வருமானம் மற்றும் செலவுகளுக்கான கணக்குகளை செயற்பாட்டாளர் கணக்கிடுவார்.

**வழங்கப்படுபவரால் செயற்படுத்துபவருக்கு வழங்கப்பட்ட கைமானம்**

15 செயற்பாட்டாளர் நிர்மாண அல்லது மேம்படுத்தல் சேவைகளை வழங்கின், செயற்பாட்டாளரால் பெறப்பட்ட அல்லது பெறக்கூடிய கைமானமானது SLFRS 15 க்கு இணங்க ~~அதன் நியாயமான மதிப்பீட்டில்~~ அங்கீகரிக்கப்படும். கைமானமானது பின்வருவனவற்றுக்கான உரிமையாகக் காணப்படும்:

(a) …

….

18 செயற்பாட்டாளர் தமது சேவைகளுக்காக ஒரு பகுதி நிதிச் சொத்துக்களாகவும் ஒரு பகுதி அருவச் சொத்துக்களாகவும் செலுத்தப்பட்டிருந்தால், செயற்பாட்டாளரின் கணக்குகளில் ஒவ்வொரு ஆக்கக்கூறும் தனித்தனியாகக் கணக்கு வைக்கப்படல் வேண்டும். இரண்டு ஆக்கக்கூறுகளாகவும் பெறப்பட்ட அல்லது பெறத்தக்க கைமானம் SLFRS 15 க்கு இணங்க ~~பெறப்பட்ட அல்லது பெறப்பட வேண்டியுள்ள கைமானத்தின் சீர்மதிப்பில்~~ ஆரம்ப ஏற்பிசைவு செய்யப்படும்.

19 செயற்பாட்டாளருக்கு வழங்குபவர் வழங்கிய கைமானத்தின் தன்மையானது ஒப்பந்த விதிமுறைகள் இருப்பின் அதன் மூலமும் இல்லாவிட்டால் பொருத்தமான ஒப்பந்தச் சட்டம் மூலமும் தீர்மானிக்கப்படும். பந்திகள் 23-26 இல் விவரிக்கப்பட்டபடி கைமானத்தின் தன்மையானது பிற்காலக் கணக்கியலைத் தீர்மானிக்கிறது. எவ்வாறாயினும், இரண்டு வகையான கைமானங்களும் SLFRS 15 இன் படி நிர்மாண அல்லது மேம்படுத்தல் காலப்பகுதியில் ஒரு ஒப்பந்தச்சொத்து என வகைப்படுத்தப்படுகின்றன.

**செயற்பாட்டு சேவைகள்**

20 செயற்பாட்டாளர் ~~LKAS 18~~ SLFRS 15 க்கு இணங்க, வருமானம் மற்றும் செயல்பாட்டுச் சேவைகள் தொடர்பான செலவினங்களைக் கணக்கிட வேண்டும்.

**வழங்குபவரால் செயற்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட உருப்படிகள்**

27 பந்தி 11 இற்கு அமைய, சேவை ஏற்பாடுகளுக்காக வழங்குபவரினால் சேவை வழங்குநருக்கு அனுமதி வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு உருப்படிகள் செயற்பாட்டாளரது ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் என ஏற்பிசைவு செய்யப்படல் ஆகாது. மேலும் வழங்குபவர் செயற்பாட்டாளருக்கு அவர் விரும்பும் விதத்தில் வைத்திருக்கவும் பாவிக்கவும் சில வகையான உருப்படிகளுக்கு அனுமதி வழங்க முடியும். இத்தகைய சொத்துக்கள் சேவைகளுக்காக வழங்குபவரினால் செலுத்த வேண்டிய கைமானத்தின் ஒரு பகுதியாக இருந்தால், அவை LKAS 20 *அரசாங்க மானியங்கள்* நியமத்தில் சொற்பொருள் விளக்கப்பட்டவாறு அரச மானியங்கள் ஆகாது. அதற்குப் பதிலாக, SLFRS 15 இல் சொற் பொருள் விளக்கப்பட்டவாறு ஊடுசெயல் விலைகளின் பகுதியாக அவை கணக்கிடப்படுகின்றன.

**அமுலுக்கு வரும் திகதி**

…………….

28D SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம், 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, குறிப்புரைகள் பகுதி, தகவல் 2 இல் உள்ள அட்டவணை மற்றும் பந்திகள் 13-15, 18-20 மற்றும் 27 திருத்தப்பட்டுள்ளது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

**SIC-27 *குத்தகை ஒன்றின் சட்ட வடிவம் சம்பந்தப்பட்ட ஊடுசெயல்களின் சாராம்சத்தை மதிப்பிடல்***

**கருத்தொருமைப்பாடு**

…

8 உரிமம் ஒன்று பெறத்தக்க கட்டணத்தை எப்போது வருமானமாக ஏற்பிசைவு செய்வது என்பதைத் தீர்மானிப்பதற்கான ஒவ்வொரு ஒழுங்குகளுக்குமான தரவுகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு ~~LKAS 18 நியமத்தின் பந்தி~~ 20 SLFRS 15 நியமத்தின் ~~மூலப்பிரமாணங்கள்~~ தேவைப்பாடுகள் பிரயோகிக்கப்படல் வேண்டும். கட்டணங்களை உழைப்பதற்கு அவசியமான கணிசமான எதிர்கால செயல்நிறைவேற்றுக் கடமை வடிவிலான தொடர்ச்சியான ஈடுபாடு உள்ளதா, பேணப்பட்ட இடர்கள் உள்ளதா, கட்டணத்தை மீளச் செலுத்தும் இடர் முதலான காரணிகள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். ஏற்பாட்டின் ஆரம்பத்தில் கட்டணம் பெறப்பட்டிருக்க, முழு வருமானம் பெறப்பட்ட போதே வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட்டதை தனித்தனியாக நிரூபிக்கும் தவறான குறிகாட்டிகள் பின்வருமாறு:

(a) …

**அமுலுக்கு வரும் திகதி**

SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம், 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, பந்தி 5 மற்றும் குறிப்புரைகள் பகுதி திருத்தப்பட்டுள்ளது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

**SIC-32 அருவச்சொத்துக்கள் - வலைத்தள செலவுகள்**

**அமுலுக்கு வரும் திகதி**

…

LKAS 1 இன் திருத்தப்பட்ட பதங்கள் SLFRS முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பந்தி 5 திருத்தப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தங்களை 1 சனவரி 2009 இல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டுக்காலப் பகுதிகளுக்குப் பிரயோகிக்கும். உரிமம் LKAS 1 நியமத்தை ஒரு முந்தைய காலத்துக்குப் பிரயோகிப்பின், இத் திருத்தங்கள் அந்த முந்தைய காலத்துக்குப் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம், 2014 ஜீன் மாதம் வெளியிடப்பட்டது, பந்தி 6 மற்றும் இன் "குறிப்புரைகள்" பகுதி திருத்தப்பட்டுள்ளது. SLFRS 15 ஐப் பிரயோகிக்கும் போது உரிமம் இந்த திருத்தங்களைப் பயன்படுத்தும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.